அழியா அழகு

கி. வா. ஜகந்நாதன்

அமுத நிலையம் லிமிடெட்
1/45, இராயப்பேட்டை ஹைரோடு
சென்னை-14

உரிமை பதிவு

அமுதம்—258

முதற்பதிப்பு : ஜூன் 1959.

இரண்டாம் பதிப்பு : ஏப்ரல், 1978.

விலை ரூ. 7-50

உரிமை : வி. என். சாரிடீஸ்

அச்சிட்டோர் :

மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ், சென்னை-2.

முகவுரை

வேறு எதனையும் எண்ணாமல் தமிழின்பம் ஒன்றனையே எண்ணி இலக்கியக் கடலில் புகுபவர்களுக்குக் கம்பராமாயணம் அமுதத்தைப் போல இனிப்பது. "நம்பு பா மாலையாலே நருக்கின் றமுதம் ஈந்தான்" என்று கம்பனைப் பாராட்டியவர் உண்டு. கிறிஸ்தவ அன்பர்களும் இஸ்லாமிய சகோதரர்களும் கம்யூனிஸ்டுக் கட்சியினரும் கம்பராமாயணத்தில் இன்பம் காணுகிறார்கள். காரைக் குடியில் ஆண்டுதோறும் நடைபெறும் கம்பன் விழாவுக்குப் போனவர்கள் இந்த உண்மையை அறிதல் கூடும். வேற்று மதத்தினரும் கடவுளைப் பற்றிக் கவலைப்படாத கட்சியினரும் இதை இராமாயணமாகப் பார்ப்பதில்லை; தமிழ்ச் சுவைப் பிழம்பாகக் காணுகிறார்கள், அவர்கள் இராம பக்தர்கள் அல்லர்; தமிழ்ப் பக்தர்கள். அவர்களுக்கே இன்பம் தருவதென்றால் இதை இராமபிரான் கதையாகப் பக்தியோடு படிப்பவர்களுக்குப் பின்னும் இன்பம் கூடுத லாகவே உண்டாகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

தமிழ்நாட்டில் எந்த ஊருக்காவது ஒருவன் சென்று, "நான் தமிழ் படித்தவன்" என்றால், அங்குள்ளவர்கள், "எங்கே, கம்பராமாயணத்தில் ஒரு பாட்டுக்குப் பொருள் சொல்லுங்கள்" என்பார்கள். கம்பராமாயணம் படிக் காதவன் புலவன் அல்லன் என்பது அவர்கள் கொள்கை. கம்பராமாயணத்தை நாள் கணக்காக மாதக்கணக்காகப் பிரசங்கம் செய்து பொருளீட்டி இனிது வாழ்ந்தவர்கள் பலர்.

இருபதாவது நூற்றாண்டில் ஆங்கில அறிவு பெற் றதன் பயனாகப் புலவர்களும் அறிஞர்களும் கம்பன் கவிதை

யைப் புதிய ஆராய்ச்சிக் கண்கொண்டு சோதித்தார்கள். தமிழ்க் கண்ணோடு பார்த்தவர்களுக்கும் பக்திக் கண் கொண்டு பார்த்தவர்களுக்கும் அது போற்றி இன்புறத் தக்க காவியமாகத் தோன்றியது போலவே, ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்த்தவர்களுக்கும் அது சிறந்த சுவையும் பாத்திரப் படைப்பும் கட்டுக்கோப்பும் உடைய காவிய மணியாகத் தோன்றியது; மேல் நாட்டு ஆராய்ச்சிச் சூத்தி ரங்களைக் கொண்டு எடைபோட்டுப் பார்த்து மகிழ்ந்து, மக்களுக்குத் தங்கள் பாணியிலே கம்பன் கவிதைத் திறத்தை எடுததுச் சொல்லவும் எழுதவும் பலர் தலைப்பட்டார்கள்.

அமரர் வ. வே. சு. ஐயரவர்கள் கம்பனையும் ஹோம ரையும் தாந்தேயையும் விர்ஜிலையும் ஷேக்ஸ்பியரையும் மில்டனையும் ஒரே சங்கப் பலகையில் வைத்து ஒப்பு நோக் கினர். சில இடங்களில் கம்பன் எட்டின கொம்பை மற்ற வர்கள் எட்ட முடியவில்லை என்று கண்டார். தம் கருத்தை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதினர்.

அமரர் ரஸிகமணி டி. கே. சி. அவர்கள் தமிழை எப்படிச் சுவைப்பது என்பதைத் தெளிவாகக் காட்டியவர். அவர் கம்பன் கவிதையை ஆங்கிலங் கற்ற அறிஞர் உலகத் தில் விளையாடச் செய்தார். எழுத்துலகில் ஸ்ரீ பி ஸ்ரீ. அவர்கள் பல ஆண்டுகளாகக் கம்பனை உலாவரச் செய் திருக்கிறார். வேறு அறிஞர்கள் பலர் கம்பன் கவிதை நயத் தையும் காப்பியத் திறனையும் ஆய்ந்து எடுத்து எழுதியும் பேசியும் வந்திருக்கிறார்கள். அத்தகைய தொண்டுகள் இன்னும் நடந்துவருகின்றன. காரைக்குடியில் கம்பன் கவிதை அரியணை ஏறியது. இப்போது பல இடங்களிலும் கம்பன் விழா நடைபெற்றுவருகிறது. வரவரக் கம்பனுடைய கவிதையில் ஈடுபடும் மக்கள் பெருகிவருகிறார்கள்.

பல மேடைகளில் கம்பன் கவிச்சுவையைப் பற்றிப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததுண்டு. கம்பன் காப்பி

யத்தைப் பல வகையில் ஆராயவும், படித்து இன்புறவும் ஏற்ற வகையில் என் ஆசிரியப் பிரானுடைய அருளும் கிடைத்தது. பல புதிய விளக்கங்களையும் நயங்களையும் கருத்துக்களையும் மேடைகளில் பேசுகையில் கேட்ட பல அன்பர்கள் அவற்றை எழுத்து வடிவில் அமைக்கவேண்டும் என்று விரும்பினார்கள். கம்பராமாயணத்தை முறையாக முதலிலிருந்து கடைசி வரையிலும் ஆராய்ந்து விரிவான வகையில் பல துறைகளாகப் பகுத்து எழுத நேரம் ஏது? "கலைமகள்' பத்திரிகை வாயிலாக மாதந்தோறும் கம்பராமாயணத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி வந்தேன். 17 கட்டுரைகள் ஆனவுடன் இப்போதைக்கு நிறுத்தினேன். மீண்டும் எழுதும் எண்ணம் உண்டு.

வந்த கட்டுரைகளைப் புத்தக உருவில் கொண்டு வந்தால் பலருக்கும் பயன்படுமே என்ற எண்ணத்தால் அவற்றைத் தொகுத்து ஒழுங்குபடுத்தி வெளியிடலானேன். இதில் உள்ள கட்டுரைகள் ஒரு குறிப்பிட்ட திட்டத்தை அடிப்படையாக வைத்து எழுதியவை அல்ல. சொல் நயம், பொருளாழம், காப்பிய அமைதி, பாத்திரத்தின் பண்போவியம் ஆகியவற்றைச் சில சில இடங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

இதில் உள்ள பதினேழு கட்டுரைகளில் இரண்டு, வாத முறையில் அமைந்தவை. பரதனும் குகனும் சந்திக்கும் போது யார் யாரை வணங்கினார்கள் என்பதுபற்றி, "வந்தெதிரே தொழுதானை" என்ற பாட்டை வைத்துக்கொண்டு புலவர்கள் பல காலமாக வாதம் செய்து வருகிறார்கள். அந்தப் பாடலுக்குக் கம்பனுடைய பாடல்களாகிய அகச் சான்று கொண்டே பொருளை வரையறுக்க ஒரு கட்டுரையில் முயன்றிருக்கிறேன். காட்சிப் படலத்தில் வரும் ஒரு பாடலுக்கு, வேறு ஓரிடத்தில் உள்ள பாடலைக் கொண்டு சொல்லுருவத்தைத் தெளிந்து பொருள் கூறியிருக்கிறேன்.

இக்கட்டுரைகள் கலைமகளில் வெளியாகியபோது எனக்குத் தெரிந்தவர்களும் தெரியாதவர்களுமாகிய பலர் பலபடியாகப் பாராட்டிக் கடிதம் எழுதினர். அதனால், மேலும் மேலும் இத்தகைய கட்டுரைகளை எழுதவேண்டும் என்ற ஆர்வம் எனக்கு உண்டாயிற்று. பாராட்டியவர்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4—6—'59
'காந்தமலை'
சென்னை-28

கி. வா. ஜகந்நாதன்

குறிப்பு

இந்த நூலின் முதல் பதிப்புக் கலைமகள் காரியாலய வெளியீடாக வெளிவந்தது. இந்த இரண்டாம் பதிப்பு அமுத நிலைய வெளியீடாக வருகிறது. இதை முதல் முதலில் புத்தக வடிவில் வெளியிட்ட கலைமகள் காரியாலயத்தினருக்கு என் நன்றியறிவு உரியது.

4-4-78
சென்னை-28

கி. வா. ஜகந்நாதன்

பொருள் அடக்கம்

		பக்கம்
1.	வடிவு கண்டவர்	... 1
2.	உவகையின் உருவம்	... 15
3.	திருமுகச் செவ்வி	... 26
4.	அழியா அழகு	... 40
5.	மன மாற்றம்	... 55
6.	நாவாய் வேட்டுவன்	... 67
7.	தீராக் காதலன்	... 75
8.	விடை கொண்ட குகன்	... 85
9.	குகன் சீற்றம்	... 105
10.	குகன் மனமாற்றம்	... 123
11.	வியப்பும் உருக்கமும்	... 130
12.	குகன் பண்பு	... 138
13.	பரதனும் குகனும்	... 156
14.	விதியின் பிழை	... 171
15.	ஒரே நினைப்பு	... 188
16.	காந்த மாமணி	... 202
17.	கண்டதும் காணாததும்	... 214

வடிவு கண்டவர்

ஜனகனுடைய சபை: அவனுடைய குருவும் கோதம முனிவரின் புத்திரருமாகிய சதானந்தர் அருகில் வீற்றிருக்கிறார்; விசுவாமித்திர முனிவர் இராமனையும் லட்சுமணனையும் அழைத்து வந்திருக்கிறார். தாடகையை அழித்து அகலிகைக்கு முன்னையுருத் தந்துவிட்டு விசுவாமித்திரருடைய பாராட்டைப் பெற்று வந்திருக்கிறான் இராமன்.

தன்முன் அமர்ந்திருக்கும் இராமலட்சுமணர்களைக் கண்டு அவர்களுடைய அழகைக் கண்ணால் முகந்துண்ட ஜனகன், "இவர்கள் யார்? உரைத்தருள வேண்டும்" என்று முனிவரைக் கேட்கிறான், அம்முனிவர் சூரிய குலத்தின் பெருமையைக் கூறி, தசரதனுடைய முன்னோர் பெருமையையும், அச்சக்கரவர்த்தியின் சிறப்பையும் விரித்துரைத்து, இராமன் முதலிய நால்வருடைய அவதாரத்தையும் சொல்கிறார்.

அவர் சொல்லச் சொல்ல ஜனகனுக்கு இராமன்மேல் கண் பாய்கிறது.

கல்யாணம் ஆகாத கன்னிப் பெண் ஒருத்தியை வளர்க்கும் அவனுக்கு இன்னும் தக்க மாப்பிள்ளை கிடைக்கவில்லை. மலைபோன்ற வில் ஒன்று நடுவே கிடக்கிறது. அதை வளைக்கிறவனுக்குத்தான் அவளை மணம் செய்து கொடுப்பதாக நிபந்தனை போட்டிருக்கிறான். இதுவரையில்

அதை வளைத்தவர் இல்லை. சீதை தலை வணைத்துக் கழுத்தை நீட்டும் ஆடவன் இன்னும் வரவில்லை. இராமன் சீதைக்குக் கணவனுகும்படி நேரக் கூடாதா என்று ஆசைப்படுகிருன், ஜனகன். இராமனுடைய தோளைப் பார்க்கிருன்.

அறிவிற் சிறந்த முனிவராகிய விசுவாமித்திரர் அதைக் கவனிக்கிருர் "பார், நன்ருகப் பார்; இவனுடைய புய வலியை ஊடுருவிப் பார். அலைமயமாக இருக்கிற நீல நெடுங் கடலே இப்படி உருவெடுத்து வந்ததோ என்று தோன்றும் இந்த வீரனுடைய தோளின் செறிவையும் உயர்வையுமே நீ காணலாம் என்னுடைய கண்ணைக்கொண்டு பார்த்தால் இந்தத் தோள்களின் பெருமை நன்ருக விளங்கும். அவை ஒரு கதையையே சொல்லும்!"

அலைஉருவக் கடல்உருவத்து
ஆண்டகைதன் நீண்டுயர்ந்த
நிலைஉருவப் புயவலியை
நீஉருவ நோக்கையா!

"இந்தத் தோள்களில் தாடகை வதக் கதையை நான் காண்கிறேன். இரும்பு காய்ச்சும் உலையைப் போல இருந்தன அந்த அரக்கியின் கண்கள். கனலை உமிழும் அந்தக் கண் பட்ட இடமெல்லாம் பாழ்தான். அவள் மேலே இராமன் ஓர் அம்பை விட்டான். அவளுடைய வயிரக் குன்றக் கல்லையொத்த மார்பிலே அது தைத்தது தைத்ததா? அன்று, குத்தி உள்ளே சென்றது. சென்று அங்கே தங்காமல் ஊடுருவிப் போய் முதுகின் வழியே வந்தது. அப்பால் ஒரு மலையை ஊடுருவிச் சென்றது. அப்போதும் அதன் வேகம் குறையவில்லை. அருகில் இருந்த பச்சை மரத்தையும் உருவி மண்ணுக்குள் புகுந்து கொண்டது. இவன் தோளின் வலிமை அது. என் கண்ணுலே கண்ட காட்சியை நான் சொல்கிறேன்."

உலையுருவக் கனல்உமிழ்கண்
தாடகைதன் உரம்உருவி
மலைஉருவி மரம்உருவி
மண்உருவிற் றொருவாளி.[1]

[உலை உருவக் கனல் உமிழ் கண் - உலையில் உள்ள பெருங் கனலை உமிழும் கண், உரம் - மார்பு.]

விசுவாமித்திரர், மேலே அந்த அரக்கியின் மக்களில் ஒருவன் ஓரம்பால் வான் புக்கான் என்றும், மற்றொருவன் போன இடம் தெரியவில்லை என்றும் கூறி, இராமனுடைய புயவலியைச் சொல்கிறார்.

பிறகு சுருக்கமாக அகலிகையின் சாபத்தைத் தீர்த்த தாள்வலியைச் சொல்கிறார்.

கோதமன்தன் பன்னிக்கு
முன்னைஉருக் கொடுத்ததிவன்
போதுநின்ற தெனப்பொலியும்
பொலங்கழற்கால் பொடிகண்டாய்![2]

[பன்னி - பத்தினி; மனைவி. பொலங்கழற்கால்-பொன்னாலாகிய வீரகண்டையை அணிந்த அடி.]

இவ்வாறு விசுவாமித்திரர் இராமபிரானுடைய வீரச் செயலையும் அருட்செயலையும் ஜனகனது அவையிலே எடுத்துரைத்தார் அதைக் கேட்டோர் பலர்

இராமன் வில்லை வளைப்பான் என்று விசுவாமித்திரர் கூறவே ஜனகனுக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. சிவதனுசைப் பல வீரர்கள் கொண்டுவந்து வைக்கிறார்கள். இராமனுடைய அழகை நேரிலே பார்த்தும் அவனுடைய பெருமையை விசுவாமித்திரர் வாயிலாகக் கேட்டும்

---

1. குலமுறை கிளத்து படலம், 26.
2. ஷை 29.

அவனிடம் மனம் ஈடுபட்ட மாதர்கள், "ஐயோ! இந்த வில்லை எதற்காக இங்கே கொண்டு வந்தார்கள்? பேசாமல் இந்தக் கட்டழகனுக்குச் சீதையைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து விடலாமே! நம் மன்னருக்கு இது தெரிய வில்லையே!" என்று அங்கலாய்க்கிறார்கள். அவர்கள் விருப் பத்திற்காக, உறுதிமொழியைத் தளரவிட முடியுமா?

இராமன் வில்லின் அருகே செல்கிறான், கம்பன் அவன் செல்வதை அழகாக ஒரு பாட்டில் நான்கு உவமைகளை வைத்து வருணிக்கிறான்.

பெண்கள் தமக்குத் தோன்றியவற்றைச் சொல்ல, நல்லவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய, தேவர்கள் உவகையடைய, இராமன் எழுந்து வில்லினிடம் செல்கிறான். வானத்தை முட்டும்படியாகத் துள்ளும் சிங்கமும் பெரிய இடபமும் பொன்மலையும் யானையும் நாணும்படியாக நடந் தானும்,

தோகையர் இன்னன சொல்லிட நல்லோர்
ஓகை விளம்பிட உம்பர் உவப்ப
மாக மடங்கலும் மால்விடை யும்பொன்
நாகமும் நாகமும் நாண நடந்தான. [1]

[தோகையர் - மயிலைபோன்ற மகளிர். இன்னன - இத் தகைய வார்த்தைகளை. ஓகை - மகிழ்ச்சி ஆரவாரம். உம்பர் - தேவர், மாகம் - வானம். மடங்கல் - சிங்கம். மால்விடை - பெருமையையுடைய ஏறு. பொன் நாகம் - பொன்மலை. நாகம் - யானை.]

தான் இருந்த இடத்திலிருந்து இராமன் வில் இருந்த இடத்துக்கு நடக்கிறான். அந்தச் சமயத்தில் கம்பன் நான்கு நிலைகளை நமக்குக் காட்டுகிறான்: சிங்கத்தைப்போன்ற நிலை ஒன்று, மால் விடையின் நிலை ஒன்று, பொன்மலையின்

1. கார்முகப். 82.

தோற்றம் ஒன்று, யானையின் நிலை ஒன்று. இந்த நான்கும் நான்கு வேறு நிகழ்ச்சிகளைச் சித்திரிப்பவை. சினிமாப் படக்காரர்கள் அதற்குள் நூறு படம் எடுத்து விடுவார்கள். கம்பனோ நான்கு முக்கியமான கட்டங்களில் நான்கு படங்களை எடுத்துத் தருகிறான்.

இருந்த இடத்திலிருந்து இராமன் எழுந்தான்; வானத்தை முட்டும்படியாகக் குதித்து ஒரு சிங்கம் எழுந்தது போல இருந்தது. பின்பு கம்பீரமாக நடையிட்டான்; மால்விடை மிடுக்கு நடை போடுவதுபோல இருந்தது. வில்லின் அருகில் சற்றே நின்றான்; மேரு மலைதான் நிற்கிறதோ என்று தோன்றியது. அடுத்தபடி வில்லை எடுக்க அவன் கை நீண்டது; அப்போது தன் துதிக்கையை யானை நீட்டுவது போலத் தோற்றம் அளித்தான். இந்த நான்கு நிலைகளையும் சுருக்கமாக,

மாக மடங்கலும் மால்விடை யும்பொன்
நாகமும் நாகமும் நாண நடந்தான்

என்பதில் கம்பன் காட்டிவிட்டான்.

அடுத்தபடி இராமன் கையால் வில்லை எடுத்தான். அப்புறம் என்ன செய்தான் என்று கவனிப்பதற்கு முன்பே படீர் என்ற ஒலி கேட்டது. வில் ஒடிந்து போயிற்று.

கடுப்பினில் யாரும் அறிந்திலர்: கையால்
எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார். [1]

[கடுப்பு - வேகம். இற்றது - ஒடிந்த ஒலியை.]

விசுவாமித்திரர் முன்பு சொன்னது அத்தனையும் உண்மை என்பதற்கு இதைவிடச் சாட்சி வேறு எதற்கு? இராமன் தாடகையைக் கொன்ற தோள்வலியை முதலிற் சொன்னார்; அது முதல் அத்தியாயம். பின்பு

---

1. கார்முகப். 34.

அகலிகைக்கு முன்னையுருக் கொடுத்த தாள்வலி; அது இரண்டாம் அத்தியாயம். பின் வில்லை ஒடித்த அவன் கை வலிமையை யாவரும் நேரே கண்டார்கள்; அது மூன்றும் அத்தியாயம்.

சீதையை இராமன் திருமணம் செய்துகொள்வதென்று நிச்சயமாயிற்று. ஊர் முழுவதும் இதே பேச்சு. பிள்ளையின் தகப்பனார் தாயார் இல்லாமல் கல்யாணம் நடத்தலாமா? ஜனகனுக்கு என்னவோ உடனே திருமணத்தை முடித்து விட வேண்டும் என்று ஆசை. விசுவாமித்திரரைப்பார்த்து "இராமன் உங்கள் புதல்வன்தானே? விரைவில் இப்போதே ஒரு நாளில் மணம் முடித்துவிடலாமா? அந்த அரசனையும் இங்கே அழைக்க வேண்டுமா? உங்கள் விருப்பம் யாது?" என்று கேட்கிறான்.

> "உரைசெய்எம் பெரும, உன் புதல்வன் வேள்விதான்
> விரைவின்இன் றொருபகல் முடித்தல் வேட்கையோ?
> முரசெறிந் ததிர்கழல் முழங்கு தானைஅவ்
> வரசையும் இவ்வழி அழைத்தல் வேட்கையோ?" [1]

[வேள்வி - மணம். பகல் - நாள். தானை - சேனை. வேட்கை - விருப்பம்.]

"தசரதன் வரட்டும்" என்றார் முனிவர். சக்கரவர்த்திக்குத் திருமணப் பத்திரிகை போகிறது.

2

தசரதன் வந்துவிட்டான். அவனைச் சந்திக்க இராமன் புறப்படுகிறான். மிதிலை வீதி வழியே அவன்

1. கார்முகப்.65.

செல்லும்போது அவனுடைய பேரெழிலைக் கண்டு மடந்தைமார் மயங்குகின்றனர். இந்தக் காட்சிகளை உலாவியற் படலம் என்ற பகுதியில் விரிவாகச் சொல்கிறான் கம்பன். காப்பியங்களில் தலைவன் உலா வருவதை வருணிப்பது மரபு. அந்த மரபை இந்த இடத்தில் கம்பன் பயன்படுத்திக் கொள்கிறான். தனித் தனியே மகளிர்பால் உண்டான மெய்ப்பாடுகளையும் அவர்கள் செயல்களையும் பல பாடல்களில் கவிஞன் சொல்கிறான். ஒரு பாட்டில் தொகுத்துச் சொல்கிறான். அது தமிழ்நாட்டில் நிறைய அடிபடும் பாட்டு.

தோள்கண்டார் தோளே கண்டார்;
தொடுகழல் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்;
தடக்கைகண் டாரும் அஃதே!
வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத்து அன்னான்
உருவுகண் டாரை ஒத்தார். [1]

[தொடுகழல் - கட்டிய வீரகண்டையையுடைய. அஃதே- அதனையே கண்டார். ஊழ் - முறை.]

இராமனுடைய தோளையும் தாளையும் கையையும் தனித்தனியே கண்டவர்கள் அதனதன் பேரெழிலிலே ஆழ்ந்து அப்படியே நின்றுவிட்டார்கள். தம்முடைய கண்ணினால் அளந்து எல்லை காணாமல் அந்த எழிற் கடலிலே ஆழ்ந்து போனார்கள். ஒன்றின் அழகை முழுவதும் கண்டபிறகல்லவா மற்றொன்றைக் காண இயலும்? தோள் முதலியவற்றில் ஒவ்வொன்றும் தன்னிடம் வாங்கிக்கொண்ட கண்களைப் பிறிதொன்றிற் செல்லாதவாறு தன் எல்லையற்ற அழகினால் தடுத்து நிறுத்திவிட்டது.

---

1. உலாவியற். 19.

இந்த நிலைக்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று, காண்பார் கண்ணுக்கு ஆற்றல் குறைவாக இருப்பது; மற்றொன்று, காணப்படும் பொருளுக்குக் கண்டு முடிவடையும் எல்லை இல்லாமல் இருப்பது. அவர்கள் கண்ணைக் குற்றம் சொல்ல முடியுமா? அவர்கள் 'வாள் கொண்ட கண்ணார்'; கூரிய பார்வையை உடையவர்கள். எந்தப் பொருளையும் தெள்ளத் தெளியக் கூர்ந்து காணும் கண்கள் அவை. அவற்றைப் பெற்றிருந்தும் அவர்களால் இராமன் வடிவு முழுவதையும் காண முடியவில்லை.

வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்?

என்ற கேள்வியிலேயே அவர்கள் கண்ணுக்குக் குறை ஏதும் இல்லை என்ற கருத்தை வைத்திருக்கிறான் கவிஞன். இராமன் வடிவந்தான் காணும் அளவுக்கு மேற்பட்டதாக இருக்கிறது.

இந்த நிலையில் இராமனைக் கண்ட மகளிருக்கு ஓர் உவமை கூறுகிறான் கவிஞன்.

ஊழ்கொண்ட சமயத்து அன்னான்
உருவுகண் டாரை ஒத்தார்.

"முறையாக அமைந்த சமயங்களில் அன்னவனுடைய சொரூபதரிசனத்தைக் கண்ட அன்பர்களை ஒத்தனர்' என்று அவன் சொல்லும்போது, அவர்களைச் சிறப்பிக்கின்றானா, குறை கூறுகிறானா? குறை கூறியதாகவே கருதுவர் பெரும்பாலோர்.

"வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்?" என்று நிறுத்தி யிருந்தால் குறையாகக் கொள்ள இடமுண்டு. பின்னால் சொன்ன உவமை குறையாகக் கருதவில்லை என்பதையே காட்டுகின்றது. இதைச் சற்றுக் கவனிக்கலாம்.

கம்பன் சமரசவாதி. எல்லாச் சமயமும் இறைவனைக் காணும் வழிகள் என்று எண்ணுபவன்.

நணிநின்ற சமயத்தோர்
எல்லோரும் நன்றென்னத்
தனிநின்ற தத்துவத்தின்
தகைமூர்த்தி நீயாகில் [1]

என்றும்,

ஆயாத சமயமும்நின்
அடியவே அயலில்லை [2]

என்றும் பாடுகிறவன் அவன். இராமனை மும்மூர்த்தி களும் ஒன்றிவந்த மூர்த்தி யென்றும், பரம்பொருளே கருணை வடிவாக வந்த நாயகனென்றும் போற்று பவன். அவனை எல்லாச் சமயத்தும் நின்று அவரவர் களுக்குரிய வழிபடு கடவுளாக இருக்கிறான் என்பதைக் கம்பன் புலப்படுத்தும் இடங்களில்,

ஊழ்கொண்ட சமயத்து அன்னான்
உருவுகண் டாரை ஒத்தார்

என்பதும் ஒன்று. ஊழ்கொண்ட சமயம் என்பதற்கு, வேத முறைப்படி அமைந்த சமயங்கள் என்று பொருள் கொள்ள வேண்டும். ஊழ் - முறை.

அவ்வச் சமயத்தில் உள்ளவர்கள் தங்கள் தகுதிக்கு ஏற்ப இன்பம் பெறுகிறார்களே யன்றித் துன்பம் அடைவதில்லை. வெவ்வேறு சமயத்தில் நின்று தம் மரபுக்கு ஏற்ற உருவத்தை வணங்குவது முறையே யன்றித் தவறு அன்று: 'ஊழ்கொண்ட சமயம்' ஆதலின் அந்த முறை நல்ல பயனையே தர வேண்டும்.

---

1. விராதன் வதை, 52.
2. ௸ 54.

இறைவனுடைய முழுத் தன்மையையும் தாம் வழிபடும் உருவத்திலே காணுமல் இருக்கலாம். ஆயினும் அவர்கள் இன்பம் பெறுவதில் தடை இல்லை.

கங்கைநீர் எடுத்து வரலாம் என்று பல மங்கைமார் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு போகிருர்கள். ஒருத்தி குடமும் ஒருத்தி தவலையும் ஒருத்தி பானையும் ஒருத்தி செம்பும் எடுத்துச் செல்கின்றனர், யாவரும் தாம் கொண்டு சென்ற பாத்திரங்களை நிறைத்துக் கொண்டு வருகிருர்கள். அவர்கள் பாத்திரங்கள் பூரணமாயின. ஆனல் கங்கையைப் பூரணமாக அவர்கள் கொண்டுவரவில்லை. யாருமே கொண்டுவருவதில்லை, அவரவர்கள் தம் பாத்திரம் நிறைந்ததென்று இன்புறலாம்.

அவ்வண்ணமே வெவ்வேறு உருவத்தில் பரம்பொருளை முறையாக வழிபடுகிறவர்கள் மன நிறைவு பெறுகிருர்கள். அவர்களுடைய அன்புக்கு இலக்கான உருவங்கள் வேறு வேருனலும் அவர்கள் அடைகின்ற அநுபவம் நிறைந்தது; ஒரே தன்மையது.

இந்த உவமையை மிதிலை நகரில் இராமனைக் கண்ட பெண்களின் நிலையோடு பொருத்திப் பார்க்கலாம். இராமனுடைய தோளைக் கண்டவர்கள், தாளைக் கண்டவர்கள், தடக்கையைக் கண்டவர்கள் யாவரும் ஒரு வகை மனநிறைவை எய்திஞர்கள். அவர்களுக்கு இன்ப அநுபவம் உண்டாயிற்று. அவர்கள் கண்ட அங்கங்களில் வேறுபாடு இருந்தாலும் அடைந்த அநுபவத்தில் வேறுபாடு இல்லை. யாவரும் தம் முன் நின்ற பேரழகைக் கண்ணல் நுகர்ந்து ஆழ்ந்து தம்மை மறந்து இன்புற்றனர். முறையில் வேறுபட்டாலும் அநுபவத்தில் யாவரும் ஒரு தகையினரே என்பதைச் சொல்லவந்த கம்பன், உவமை வாயிலாக, எந்தச் சமயமானுலும் முறையாகப் புகுவாருக்கு,

இறைவன் திருவருள் அநுபவம், வேறுபாடின்றி ஒத்து நிற்கும் என்ற சமரசக் கருத்தையும் வற்புறுத்துகிறான்.

3

மகளிர் இராமனைக் கண்டதைச் சொல்லும்போது தோள், தாள், கை என்ற மூன்றையும் சொன்னான் கம்பன். தோள், கை, தாள் என்றால் இறங்குமுகமான முறை என்றும், தாள், கை, தலை என்றால் ஏறுமுகமென்றும் சொல்லலாம், இங்கே அப்படி இல்லை. இந்த முறை வைப்புக்குப் பொருத்தம் இருக்கிறதா என்று ஆராய வேண்டும்.

இராமனுடைய பெருமையை விசுவாமித்திரர் வாயிலாகவும் நேரிலும் உணர்ந்துகொண்டவர்கள் அவர்கள். முக்கியமாகத் தாடகை வதம் செய்த தோள்வலியும், அகலிகை சாபம் போக்கிய அடியருளும், சீதையை மணக்க வில்லை ஒடித்த கரத்தின் பண்பும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த மூன்று நிகழ்ச்சிகளில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றில் ஈடுபாடு மிகுதி. அப்படி ஈடுபட்டவர்களை வரலாறு நிகழ்ந்த முறையிலே வைக்கிறான் கம்பன். தாடகை வதத்தை எண்ணித் தோள்வலியைப் போற்றியவர்கள் கதையின் முதல் அத்தியாயத்தைப் படித்தவர்களைப் போன்றவர்கள். அவர்கள் தோளைக் கண்டார்கள் என்று கூறுவதில் ஓர் அமைவு இருக்கிறதல்லவா? இப்படியே தாளையும் தடக்கையையும் கண்டவர்களை அடுத்தடுத்து வைக்கிறான் புலவன்.

வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்

என்ற கேள்விக்கு விடை, "யாரும் இலர்" என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. ஆனால் ஒருத்தி இருக்கிறாள்.

அவள்தான் சீதை. இராமனுடைய வடிவு முழுவதையும் காணும் ஆற்றலும் உரிமையும் அவள் ஒருத்திக்குத்தான் உண்டு. மற்ற மகளிரின் அநுபவம் வேறு; அவள் அநுபவம் வேறு. மற்றவர்கள் கண்ட முறை வேறு; அவள் கண்ட முறை வேறு.

ஒரு பெரிய மாளிகை. அதைப் பார்க்கவேண்டும் என்றெண்ணிச் சிலர் அதை அணுகுகிறார்கள். அதன் ஒரு பக்கமாக வந்து சுவரின் உயரத்தையும் உறுதியையும் காண்கின்றனர் சிலர். வேறு ஒரு பக்கத்திலிருந்து வந்து அந்தப் பக்கத்து அமைப்பைக் கண்டு களிக்கின்றனர் சிலர். இப்படி வெவ்வேறு கோணத்தில் நின்று பலர் பார்க்கிறார்கள். அவர்கள் அந்த மாளிகையின் பெருமையை ஓரளவே உணர முடியும். அதன் வடிவு முழுவதையும் உணர இயலாது.

ஆனால் வேறு ஒருவன் அந்த மாளிகையின் வாசற் பக்கம் வருகிறான். வாசலைக் கண்டு உள்ளே நுழைகிறான். அவன் ஒருவனே மாளிகையை முற்றக் காணமுடியும். வெளியில் ஒவ்வொரு பக்கத்தில் நின்று பார்க்கிறவர்கள் காண முடியாத நலங்களை அவன் கண்டு களிக்கலாம்.

தோளையும் தாளையும் கரத்தையும் கண்ட மகளிர் முன்னே சொன்னவர்களைப் போன்றவர்கள்; இராம லாவண்யம் முழுவதையும் காணும் தகுதியில்லாதவர்கள். அவர்கள் கண்ட மூன்றும் மாளிகையின் பக்கங்கள். அதன் வாயிலைப் போல இருப்பது ஒன்று உண்டு. அதனை அவர்கள் காணவில்லை. காண்பதற்குரிய உறுதியும் தகுதியும் உரிமையும் அவர்கள்பால் இல்லை. அந்த வாயில் எது? அதுதான் கண்.

சீதையும் இராமனைக் கண்டாள். அந்தக் காட்சியைக் கம்பன் முன்னே சொல்லியிருக்கிறான். மங்கையர்க் கினிய மருந்தாக இருக்கும் சீதை தன் கன்னி மாடத்தே நின்றாள்.

இராமனும் இலக்குவனும் விசுவாமித்திர முனிவரைத் தொடர்ந்து வீதி வழியே சென்றார்கள். அப்போது இராமன் சீதையைப் பார்த்தான்; அந்த வண்ணத் திருமாளிகையின் வாயிலாகிய கண்களைப் பார்த்தான். அவளும் இராமனுடைய கண்களைப் பார்த்தாள்.

எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழி
கண்ணொடு கண்ணிணை கௌவி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறா துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள் [1]

[நலம் - குணமும் அழகும். இனையள் நின்றுழி - இப்படி நிற்கிற போது. அண்ணல் - இராமன்.]

இராமன் முதலில் பார்க்கப் பின்பு சீதை பார்த்தாள். இதுவே முறை. சீதை இராமனுடைய கண்களைப் பார்த்தாள். இருவரும் பார்த்த பார்வை வெறும் பார்வை அன்று. கண்கள் ஒன்றை ஒன்று கௌவி உண்டன. அப்பால், உணர்ச்சி ஒன்றியது.

பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினார். [2]

கண்ணெனும் வாயில் வழியே புகுந்து இருதய சிங்காசனத்தில் ஏறிக்கொண்டார்கள், அப்புறம் ஒருவர் ஒருவருக்கு உரியவர் ஆகிவிட்டனர்.

மிதிலைப் பெண்கள் வாள்கொண்ட கண்ணார்; சீதையும் வாட்கண் நங்கைதான். இருசாரார் கண்களிலும் வேறுபாடு இல்லை, ஆனால் இராமன் அந்தப் பெண்களைப் பார்க்கவில்லை. சீதையைப் பார்த்தான். அவர்களும் அவன்

1. மிதிலைக் காட்சி. 35
2. ஷ. 37.

தோளேயும் தாளேயும் தடக்கையையும் பார்த்தார்களே யன்றிக் கண்ணேப் பார்க்கவில்லே. பார்க்கும் பாக்கியம் சீதைக்கே இருந்தது. வேறு ஒருவருக்கும் அந்த உரிமை இல்லே. அதனுல் வடிவினே முடியக் கண்டவள் அவள் ஒருத்தியேதான்.

ஐயனே அகத்துவடி வேயல புறத்தும்
கைவனே திருத்துபு கடைக்கணின் உணர்ந்தாள் [1]

என்று அவள் திருமணத்தின்போது இராமனது வடிவு முழுதுணர்ந்த காட்சியைச் சொல்கிருன் கவிஞன்.

இந்த எண்ணங்களே யெல்லாம் சிந்தையில் தேக்கிக் கொண்டு மிதிலே மகளிர் செயலேச் சொல்லும் பாட்டைப் பார்க்கலாம்.

தோள்கண்டார் தோளே கண்டார்;
தொடுகழற் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்;
தடக்கைகண் டாரும் அஃதே;
வாள்கொண்ட கண்ணுர் யாரே
வடிவினே முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத்து அன்னுன்
உருவுகண் டாரை ஒத்தார்.

கம்பன் இராமனுடைய எழிலின் பெருமையை இதன் கண் கூறினுன் என்று சொல்வதா? மகளிர் தாம் அறிந்து கொண்ட முறையில் அவன் அழகைக் கண்டார்கள் என்பதை உணர்த்துகிருன் என்பதா? பல சமயங்களும் அருளநுபவம் பெறுவதில் ஒப்பானவை என்ற சமரசக் கருத்தைப் புலப் படுத்துகிருன் என்பதா? சீதையின் பெருமையையும் உரிமையையும் நுட்பமாகக் குறிப்பிடுகிருன் என்பதா? எல்லாவற்றையும் சேர்த்துச் சொல்வதுதானே முறை?

1. கோலங்காண். 37.

உவமையின் உருவம்

மனிதனுடைய உள்ளத்தே தோன்றும் உணர்ச்சிகளை அவனுடைய முகம் குறிப்பாகப் புலப்படுத்தும். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற பழஞ் சொல்லை நாம் கேட்டிருக்கிறோம். முகத்தில் தெரிவது மட்டும் அன்று; உடம்பிலும் தெரியும். ஒருவனுக்குச் சினம் உண்டாகிறது. அப்போது அவன் கண் சிவக்கிறது; உடம்பு பதறுகிறது; சொற்கள் வேகமாக வருகின்றன. இவை சினத்தின் விளைவாகத் தோன்றுபவை. கோபத்தினால் அவன் வெடிபடப் பேசும்போது அவனுடைய மொழியை உணர்ந்தவனுக்குத் தான் அவன் சினம் கொண்டுள்ளான் என்பது தெரியும் என்பது இல்லை. அம்மொழியைத் தெரிந்து கொள்ளாதவர்களும் அவனுடைய பேச்சின் ஒலியிலிருந்தும் படபடப்பிலிருந்தும் அதனை உணர்ந்து கொள்வார்கள்.

வாயிலிருந்து வரும் சொற்கள் அவ்வம் மொழி பேசுவோரிடம் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் முனகல், அழுகை, சிரிப்பு ஆகிய ஒலிகள் மனித குலத்துக்கே பொதுவானவை. அப்படியே படபடப்பு, கண் சிவத்தல் முதலிய அடையாளங்களும் பொதுவானவையே, உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சிகளை உடம்பில் உள்ள உறுப்புக்கள் இயற்கையாகவே வெளிப்படுத்துகின்றன. இவற்றை மெய்ப்பாடு என்பார்கள். மெய்யிலே தோன்றுவது என்பது அதன் பொருள். பாவம் என்று வடமொழியிலே

சொல்லுவார்கள்; சத்துவம், விறல் என்று சொல்வதும் உண்டு.

பேசுகின்ற பேச்சைவிடப் பேசாத பேச்சாகிய மெய்ப் பாடுகள் நுட்பமானவை. உள்ளத்தில் எழும் உணர்ச்சி அலைகள் உடம்பிலே வந்து மோதும்போது உண்டாகும் அறிகுறிகள் அவை.

இவ்வாறு உண்டாகும் மெய்ப்பாடுகளிலும் இரண்டு வகை உண்டு. ஒருவகை நினையாமல், தடுக்க முடியாமல் எழுவன. மற்றொரு வகை நினைத்து எழுவன; அதனால், தடுக்கக் கூடியவை. கோபம் வந்தால் கண் சிவப்பதும் உடம்பு பதறுவதும் தடுக்க முடியாதவை. வைவது நினைத்துச் செய்வது; தடுக்கக்கூடியது. குழந்தையைக் கண்டு அன்பினால் முகமும் கண்ணும் மலர்வது இயற்கை; தடுக்க முடியாதது. அணைத்து முத்திட்டுக் கொஞ்சுவது ஓரளவு செயற்கை; நினைத்துச் செய்வது; தடுக்கக்கூடியது. தடுக்கக் கூடியதானாலும் அந்தச் செயலும் தொடர்ந்து நடைபெறுவதே பெரும்பான்மையான வழக்கம்.

பக்தி, உவகை, துயரம். வீரம், அருவருப்பு என்று மனித மனத்தில் உண்டாகும் உணர்ச்சிகளின் அறிகுறி களாகிய மெய்ப்பாடுகளை வடமொழியிலும் தென் மொழியிலும் சுவையைப்பற்றிக் கூறும் இலக்கண நூல்கள் விரித்து உரைக்கின்றன. உலக நிகழ்ச்சிகளிலும் இலக்கியங்களிலும் புலப்படுபவற்றை ஆராய்ந்து தொகுத்து அந்த இலக்கணங்களை அமைத்திருக்கிறார்கள். நாடக நூல்களில் அபிநயங்களைப்பற்றிய பகுதியிலும் மெய்ப் பாடுகள் வரும்.

ஓர் உணர்ச்சி மிகுதியானபோது முதலில் அதனை உடையவன் தனக்கு இயல்பாக உள்ள நிலையை இழந்து விடுகிறான். அப்பால் அவ் வுணர்ச்சியின் விளைவான மெய்ப்

பாடுகள் அவனை ஆட்கொள்கின்றன. அதற்குமுன் அவனுடைய பேச்சு, செயல், குணம் இவை வேறாக இருக்கும். அந்த உணர்ச்சியின் வசப்பட்டபோது அவை வேறாகத் தோன்றும்.

பெருங் கவிஞர்கள் தம்முடைய காப்பியங்களில், சொல்ல இயலாத உணர்ச்சியின் உருவத்தை இத்தகைய மெய்ப்பாடுகளால் நுட்பமாகக் காட்டுவார்கள். எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி காட்டமாட்டார்கள். மெய்ப்பாடுகளில் பொதுவானவை சில உண்டு. அவற்றோடு சூழ்நிலைக்கும் உணர்ச்சியுடையவரின் நிலைக்கும் ஏற்பச் சில மெய்ப்பாடுகளில் வேறுபாடு காணப்படும். உணர்ச்சிக்கு உருவம் இல்லையானாலும் அந்தப் பாத்திரப் படைப்பைப் பார்த்தால், 'இதுதான் இந்த உணர்ச்சிக்கு வடிவமோ!' என்று வியப்படையும்படி இருக்கும். கம்பன் இந்த வித்தகம் நிரம்பப் பெற்றவன். அதைப் பார்க்கலாம்.

2

பல காலமாகச் சீதையின் மணத்தை எதிர்பார்த்து நிற்கிறார்கள், அவளுடைய தோழியரும் பிறரும். சிவபிரானுடைய வில் மலைபோலக் கிடக்கிறது. அதை வளைத்தவனைத்தான் சீதை மணம் புரிந்து கொள்வாள். "இது எப்போது யாரால் நடைபெறும்?" என்று ஏங்கினார்கள் அவர்கள். அத்தகைய சமயத்தில் இராமன் வந்தான். அவன் வில்லை இறுத்தான்; அதனால் யாவரும் இன்பக் கடலில் மூழ்கினர்.

இராமன் மிதிலையில் புகுந்து வரும்போதே அவனும் சீதையும் ஒருவரை ஒருவர் கண்டனர். அவர்கள் உள்ளம் கலந்தன. சீதை இராமனையே நினைந்து, காதலால்

வெதும்பிக் கொண்டிருக்கிறாள். அவளுடைய நிலையைக் கண்ட தோழிமார்கள் அவளைப் படுக்கையிலிருந்து எழுப்பி ஒரு பளிங்கு மாடத்துக்கு அருகில் உள்ள தாமரைப் பொய்கைக் கரைக்கு அழைத்துச் செல்கிறார்கள். அங்கே சந்திரகாந்தக் கல்லிலிருந்து ஊறிய குளிர்ந்த நீரைத் தெளித்து ஒரு படுக்கையில் அவளை இருக்கச் செய்கிறார்கள்.

அங்கும் அவளுடைய மனம் அமைதி பெறவில்லை. இராமபிரானுடைய திருவுருவத்தையும் அவன் மேனி அழகையும் நினைந்து நினைந்து காதல் நோய் மிக்குச் சாம்புகிறாள். சீதையின் கூற்றாகக் கம்பன் பல பாடல்களை அங்கே சொல்கிறான்.

அவள் அவ்வாறு இருக்க, அரசவையில் இராமன் வில்லை ஒடித்த மகிழ்ச்சிச் செய்தி அலைமோதுகிறது. அங்கிருந்து அதைப் பல தோழிமார் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வில் ஒடிந்து விழுந்தவுடன் யாவரும் உவகை மயமாக நிற்கின்றனர். அப்போது ஒரு தோழி, நீலமாலை என்னும் பெயருடையவள், இந்தக் களிப்புக்கு உரிய செய்தியைச் சீதைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று வருகிறாள்.

சீதையுடன் நம்மை இருக்கச் செய்து அவள் நிலையையும் பேச்சையும் காட்டிய கம்பன் இப்போது நம் கவனத்தை வேறொரு பக்கத்துக்குத் திருப்புகிறான். காதல் மயக்கத்தில் ஆழ்ந்திருக்கும் சீதையோடு ஒன்றிப் போன நமக்கு, இராமனை அரசவையில் நிறுத்திவிட்டு வந்தது இப்போது நினைவுக்கு வருகிறது. நீலமாலையினிடம் நம் கவனத்தைத் திருப்புகிறான் கவிஞன்; அவள் சீதையிடம் வந்து இராமன் வில்லை ஒடித்த செய்தியைச் சொல்லப் போகிறாள்.

நீலமாலை வரும் செய்கை, சீதையைக் கண்ட போது நிகழும் நிகழ்ச்சி என்பவற்றை ஒவ்வொரு பாடலால் சொல்லிவிட்டு அவள் கூறும் செய்தியை நான்கு பாட்டுக்களில் அமைக்கிறான். ஆக, நீலமாலை என்னும் பாத்திரம் ஆறே பாடல்களில் தன் உருவத்தைக் காட்டுகிறாள். அவளை நாம் முன்பும் கண்டதில்லை; பின்பும் காணப்போவதில்லை. இப்போதுதான் வருகிறாள்.

அவள் சிறிய பாத்திரமே ஆனாலும் பெரிய செயலைச் செய்கிறாள். துயரமே உருவமாகக் கிடந்த சீதையிடம் உவகையே உருவமாக வந்து செய்தியைச் சொல்கிறான். சீதைக்கும் இராமனுக்கும் இடையே தோன்றிய காதலுக்கு அவள் வாய் மொழி உரம் ஊட்டுகிறது. அந்த நிகழ்ச்சி கதையில் ஒரு சிறிய திருப்பத்தைக் காட்டுகிறது. ஆகையால் சீதையின் காதல் நோய்ப் புலம்பலால் நம்மை மறக்கச் செய்த கம்பன், ஒரு பீடிகை போட்டு நம்மை விழிக்கச் செய்கிறான்.

என்றுகொண்டுள் நைந்துநைந்
திரங்கிவிம்மி விம்மியே
பொன்திணிந்த கொங்கைமங்கை
இடரின்மூழ்கு போழ்தின்வாய்க்
குன்றமன்ன சிலைமுறிந்த
கொள்கைகொண்டு குளிர்மனத்
தொன்றும்உண்கண் மதிமுகத்
தொருத்திசெய்த துரைசெய்வாம்.

[பொன் திணிந்த - பசலை செறிந்த. மங்கை - சீதை. சிலை - வில், கொள்கை - கருத்து; இங்கே செய்தி. உண் கண் - மையையுண்ட கண்களையுடைய.]

பாட்டில் முன் இரண்டடி நாம் நின்ற இடத்தையும் பின் இரண்டடி இனிக் கவனிக்க வேண்டியதையும் நினைப்பூட்டுகின்றன. தான் காட்டப் போகிற பாத்திரத்தின் பேரைக்கூட இந்தப் பாட்டில் கவிஞன் சொல்லவில்லை. ஆனால் அவளுக்கு இராமன் வில்லை ஒடித்த செய்கை உள்ளத்தைக் குளிர்வித்ததென்றும் அதனால் விழிகள் விரிய முகம் மலர அவள் வருகிறாள் என்றும் புலப்படுத்துகிறான். 'குளிர் மனத்து ஒன்றும் உண்கண் மதிமுகத்து ஒருத்தி' என்று சொல்கிறான் அல்லவா? இனி அந்தப் பாத்திரம் இயங்குகிறது.

நீலமாலை வேகமாக ஓடி வருகிறாள். அவள் கழுத்தில் அணிந்த வடங்கள் பல நிற மணிகளை உடையவை. காதில் அணிந்த குழைகளும் மணிகளால் ஆகியவை. அவை இப்போது அசைந்து மின்னுகின்றன. பல வண்ணங்களைக் காட்டுதலால் வானவில்லைப் போல ஒளிர்கின்றன. விரைவாக வருவதனால் ஆபரணம், ஆடை, குழல் எல்லாம் ஒன்றோடு ஒன்று பிணைந்துகொள்கின்றன; சிக்கிக் கொள்கின்றன. இடையில் ஆடை, மேல் ஆடை என்று அவள் அணிந்திருக்கிறாள். அவள் குழல் கட்டுத் தளர்ந்து சோர்கிறது. அரை குலையத் தலை குலைய ஓடி வருகிறாள். உவகை, பெரும் புயலைப் போல அவள் உள்ளத்தே அடிக்கிறது. சீதைக்கு மணவாளன் வரவேண்டுமே என்று ஏங்கின ஏக்கத்தை அவள் உள்ளம் அல்லவா அறியும்? மின்னல் நுடங்குவது போல வருகிறாள்; விரைவில் வருகிறாள். மேகம் போன்ற கூந்தலும் வானவில் போன்ற அணிகலன்களும் தோன்ற, அவள் உடம்பு மின்னலைப் போல விட்டு விளங்குகிறது. அவள் கண் மட்டும் அந்த வேகத்திலும் நன்றாகத் தெரிகிறது. நீண்ட கண் அது; விசாலமான கண்.

வடங்களும் குழைகளும் வான வில்லிடத்
தொடங்குபு கலைகளும் குழலும் சோர்தர
நுடங்கிய மின்என நொய்தின எய்தினாள்
நெடுந்தடங் கிடந்தகண் நீல மாலையே.

[தொடங்குபு: தொடக்கு என்பது எதுகை நோக்கி மெலிந்தது; சிக்கி என்பது பொருள். கலைகளும் - ஆடைகளும். சோர்தர - அவிழ. நுடங்கிய - அசைந்த. நொய்தின்- விரைவில். தடம் - விசாலம்.]

முக்கியமான திருப்பங்களில் கம்பன் பாட்டின் சந்தத்தை மாற்றுவான். இங்கும் எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகப் பாடி வந்தவன், நிகழ்ச்சியின் வேகத்தைப் புலப்படுத்த நாற்சீரே யுள்ள கலிவிருத்தமாகப் பாடத் தொடங்குகிறான்.

நீலமாலை சீதையை அணுகிவிட்டாள். அவள் உவகை என்னும் வெள்ளத்தில் மிதக்கிறாள். உவகையே வடிவாக நிற்கிறாள். சீதையின் தோழிகளில் அவள் ஒருத்தி. சீதையிடம் இடம் காலம் அறிந்து மரியாதையுடன் பேசிப் பழகுகிறவள். மற்றச் சமயமானால் மெல்லச் சீதையை அணுகி அவள் அடியை வணங்கி அவள் குறிப்பை அறிந்து "என்ன செய்தி?" என்று அவள் கேட்க, இனிய மொழிகளால் சொல்ல வேண்டியதைச் சொல்லும் பழக்கம் உள்ளவள். இப்போதோ அந்தக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய நீலமாலையா அவள்? உவகையினால் தன் நிலையை மறந்து ஓடி வந்திருக்கிறாள். வழக்கம்போல வந்து அடி வணங்கினாளா? இல்லை.

வந்தடி வணங்கிலள்.

இன்னது செய்தாள் என்று சொல்லி அவள் உவகை நிலையைப் புலப்படுத்தப் போகிறான் கவிஞன். அதற்கு முன் இது செய்திலள் என்பதனாலும் அதனை உணர்த்துகிறான்.

கவிஞனும் ஓவியனும் பல குறிப்புகளைத் தம் காவியத்திலும் ஓவியத்திலும் காட்டுவார்கள். ஆனாலும் ஓவியனையும் விஞ்சிக் கவிஞன் மேற்செல்லும் ஆற்றல் படைத்தவன். ஓவியன் இருப்பதைக் காட்டுவான்; நடப்பதைக் காட்டுவான். இல்லாததையும் நடவாததையும் காட்ட அவனால் இயலாது; கவிஞனோ அவற்றையும் காட்டுகிறான்.

ஒன்றும் விளையாமல் ஒரே பொட்டலாக உள்ள நிலத்தை ஓவியன் எழுதுகிறான். அதைப் பார்க்கும் நமக்கு அது பொட்டல் என்று தெரியுமே அன்றி அந்தக் காட்சியிலே அழகு தோன்றாது; கவனம் செல்லாது. ஓவியன் எழுதிக் காட்ட அங்கே ஒன்றும் இல்லை. கவிஞனோ, 'அங்கே அருவி இல்லை; பயிர் இல்லை; பச்சை இல்லை; மேடு இல்லை, பள்ளம் இல்லை; மனிதன் இல்லை; விலங்கு இல்லை; மலை இல்லை; மடு இல்லை' என்று அழகாக இல்லாதவற்றைச் சொல்லிச் சில நேரம் அவ்விடத்தில் நம்மை நிறுத்தி விடுவான்.

அவ்வாறே நீலமாலை செய்ததைச் சொல்வதற்கு முன் அவள் செய்யாததைச் சொல்லி, உவகை என்ற உணர்ச்சி அவளை ஆட்கொண்டு தன்னை மறக்கச் செய்தது என்பதை நுட்பமாகப் புலப்படுத்துகிறான்.

வந்தடி வணங்கிலள்.

அவள் வணங்கவில்லை; சரி. பின் என்ன செய்தாள்? அவள் என்ன செய்ய வந்தாள்? இராமன் வில் ஒடித்த நற்செய்தியைச் சொல்லத்தான் அவ்வளவு வேகமாக ஓடி வந்தாள். செய்தியினால் விளையும் உவகை சீதையைச் சார்வதற்குள் அவளே அதில் மூழ்கிவிடுகிறாள். வந்து நின்றவள் அதைச் சொன்னாளா? சொல்லவில்லை, ஏதோ கா கூ என்று சத்தம் போட்டாள்!

வழங்கும் ஓதையள்.

ஓதை என்பதற்கு ஆரவாரம் அல்லது ஓசை என்று பொருள். அவள் தன்னை மறந்து ஏதோ சத்தம் போடு கிருளே ஒழிய வார்த்தையாக ஒன்றும் சொல்லவில்லை. அங்கே நிகழ்ந்த நிகழ்ச்சியினாலே பிறந்த உவகை, வெள்ள மாகப் பரந்துவிட்டது. சீதையின் முன் நிற்கையில் அது பின்னும் கரை கடந்து பொங்குகிறது. அதற்கு ஓர் எல்லை தோன்றினால்தானே அவள் தன் உணர்வு பெறுவாள? அந்தமிலா உவகை வடிவாக நிற்கிருள்.

அந்தமில் உவகையள்.

சத்தமிடுகிருள்; ஆடுகிருள்: பாடுகிருள். அவளுக்கு உவகை என்னும் பித்தமே பிடித்து விட்டது.

வந்தடி வணங்கிலள்; வழங்கும் ஓதையள்:
அந்தமில் உவகையள்; ஆடிப் பாடினள்

ஆவேசம் வந்தவளைப்போல அவள் செய்யும் ஆரவாரமும் ஆட்டமும் பாட்டமும் அவள் உள்ளத்தில் பொங்கிய உவகையின் மெய்ப்பாடாக வருபவை.

சீதை அவளைப் பார்க்கிருள். அவளுக்கு மனித உள்ளத்தின் இயல்பு நன்ருகத் தெரியும். 'இவள் பழைய நீலமாலையாக வரவில்லை. உவகையே உருவமாக வந்திருக் கிருள். இவள் சிந்தையில் கரை கடந்து பொங்கும் உவகையே இப்படி இவளை ஆட்டிவைக்கிறது. அதற்குக் காரணமாக ஏதோ ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது' என்று ஊகித்துக் கொள்கிருள். மெல்ல, "ஏ, சுந்தரி உன் சிந்தையில் உள்ள மகிழ்ச்சியையும் அதற்குக் காரணமாக நிகழ்ந்த செய்கையையும் சொல் அம்மா" என்று கேட்கிருள்.

சிந்தையுள் மகிழ்ச்சியும் புகுந்த செய்தியும்
சுந்தரி! சொல்என.

[புகுந்த - நிகழ்ந்த. சுந்தரி; விளி; சீதை என்றும் கொள்ளலாம். என - என்று சீதை சொல்ல.]

வேகமாகச் சுழலும் பம்பரத்தை ஒரு சிறு கோல் கொண்டு தொட்டால் அது சற்றே இடம் மாறிச் சுழலும். அப்படி ஆயிற்று, நீலமாலையின் நிலை. தன்னை மறந்த அவளைச் சீதை, "சுந்தரி!" என்று அழைத்து இவ்வுலகத்து நினைவுக்குக் கொணர்ந்தாள். அப்போதுதான் அந்தத் தோழிக்குத் தன் உணர்வு வந்தது. எதைச் செய்ய வேண்டுமென்று வந்தாளோ அதையே செய்யாமல் ஆடிப் பாடி நின்ற பேதைமையை உணர்கிறாள், உவகைமயமாய் நின்றவள். தான் தோழி என்பதையும் முன் இருப்பவள் தன் தலைவியாகிய சீதை என்பதையும் உணர்கிறாள். 'அடடா! என்ன காரியம் செய்தோம்! உவகைவெறி மூண்டு ஒரு கூத்தையே ஆடிவிட்டோமே!' என்ற எண்ணம் வருகிறது. சீதையை வணங்க வேண்டியவள் அது செய்யாமல் நின்றதையும் எண்ணுகிறாள். துயில் நீங்கியவளைப் போலவும் ஆவேசம் அடங்கியவளைப் போலவும் அமைதி பெற்று, தான் முதலில் செய்யவேண்டியதை இப்போது செய்யலானாள். சீதையைத் தொழுது, சொல்ல வேண்டிய செய்தியைச் சொல்லத் தொடங்கினாள்

தொழுது சொல்லுவாள்.

வந்து அடி வணங்காமல் ஓசை செய்து ஆடிப் பாடியவள் உவகையின் உருவமாகிய பெண், இப்போது உவகையை உள்ளத்தே அடக்கிய நீலமாலை ஆகிவிட்டாள். அப்போது வணங்காதவள், இப்போது தொழுதாள். அப்போது சொல்லாதவள், இப்போது சொல்லலானாள்.

உவகை என்னும் உணர்ச்சி முதலில் தன்னை மறக்கச் செய்து, இயல்பான நிலையை மாற்றிப் பல மெய்ப்பாடுகளைத் தோற்றுவித்தது. கண்டவுடன் வணங்க வேண்டியவள், சீதையின் சொல்லால் தன் நிலை பெற்ற பிறகே தொழுதாள்; செய்தியைச் சொல்லத் தொடங்கினாள்.

வந்தடி வணங்கிலள்: வழங்கும் ஓதையள்;
அந்தமில் உவகையள்; ஆடிப் பாடினள்;
'சிந்தையின் மகிழ்ச்சியும் புகுந்த செய்தியும்
சுந்தரி சொல்'எனத் தொழுது சொல்லுவாள்.

கம்பன் படைத்த பெரிய பாத்திரங்களின் உருவத்தைப் பல இடங்களில் பல கோணங்களில் பார்க்கிறோம். அவன் படைக்கும் சிறிய பாத்திரமும் உயிருடையதாக, உணர்வுடையதாக, அற்புத சித்திரமாக. ஓவியனையும் ஏமாற்றும் இயல்புள்ளதாக அமைந்து விடுகிறது. நீலமாலையின் உருவம் அத்தகையது தானே?

"அவள் என்ன சொன்னாள்?" என்று கேட்கிறீர்கள்? அதைப்பற்றி இப்போது நமக்குக் கவலை இல்லை.

திருமுகச் செவ்வி

அயோத்தி மாநகரம் முழுவதும் இராமனுடைய முடிசூட்டு விழாவுக்கு உரிய அலங்காரங்கள் நடைபெறுகின்றன. மக்கள் யாவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருக்கின்றனர். இத்தகைய நிலையில் கைகேயி, இரவில் தசரதனோடு வாதிட்டுத் தனக்குரிய வரம் இரண்டைப் பெற்றுக் கொள்கிறாள். தசரதன் துயரம் மீதூர்ந்து மயங்கிக் கிடக்கிறான்.

விடிந்தது. சுமந்திரன் தசரதனைப் பார்க்கச் சென்று காணாது கைகேயியின் அந்தப்புரத்திற்கு வந்து தன் வரவைச் சொல்லி அனுப்பவே, கைகேயி அவனைக் கண்டு இராமனை அழைத்துவரச் சொல்கிறாள். பெண்டிரிற் கூற்றமன்ன அவள், "பிள்ளையைக் கொணர்க" என்றவுடன், சுமந்திரன் உண்மையை உணராமல், எழுந்த பேருவகை பொங்கப் பொருக்கெனச் சென்று இராமனை அணுகி, "மன்னரும் முனிவரும் மற்றவர்களும் எல்லோரும் மிக்க இன்பத்தோடு உன்னை எதிர்பார்த்து நிற்கின்றார்கள், உன் சிற்றன்னை உன்னை அழைத்துவரச் சொன்னாள். பொன் மகுடம் சூட விரைவில் வருவாயாக" என்கிறான். அது கேட்ட இராமன் தேரில் ஏறித் தன் சிற்றன்னையின் இருப்பிடத்துக்குச் செல்கிறான்.

இராமன் வந்ததை அறிந்த கைகேயி, அவன் காட்டுக்குப் போகவேண்டும் என்ற செய்தியைத்

தசரதன் சொல்லமாட்டாமையின் தானே சொல்வதாக வருகிறாள்:

நாயகன் உரையான் வாயால்,
நான்இது பகர்வேன் என்றுத்
தாயென நினைவான் முன்னே
கூற்றெனத் தமியள் வந்தாள்.

அவளைக் கண்டவுடன் மண்ணுற வணங்கி, வாயைக் கையால் பொத்தி, ஆடையைக் கையால் மடக்கிக் கொண்டு நெகிழ்ந்து நிற்கிறான் இராமன். இரும்பினால் இயைந்த நெஞ்சையுடைய கைகேயி அவனைப் பார்த்து, "உன் தந்தையார் கூறிய ஒன்றை உனக்கு உரைக்க வேண்டும்" என்கிறாள். "என் தந்தையார் ஏவ நீங்கள் சொல்வது ஒன்று உண்டானால் எனக்கு வந்த பேறுதான் என்னே! நான் உய்ந்தேன். தந்தையும் தாயும் நீங்களே. நீங்கள் சொல்வதுபோல நடக்க ஆயத்தமாக இருக்கிறேன். பணியுங்கள்" என்று இராமன் கூறுகிறான். அப்போது அவள் கூறுவதாகக் கம்பன் அமைத்திருக்கும் பாடல் தமிழர்களுக்குப் புதிதன்று.

" ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித்
தாங்கரும் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப்
புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வாஎன்
றியம்பினன் அரசன் " என்றாள்.

"இந்த உலகமெல்லாம் பரதனே ஆள, நீ காட்டுக்குச் சென்று பதினான்கு ஆண்டுகள் இருந்துவிட்டு வா" என்று அவள் சொல்கிறாள்.

அன்று இராமனுக்கு முடிசூட்டு விழா நடகக வேண்டும். அயோத்தி மாநகரமும் கோசல நாடும் அதை எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கின்றன. ஒவ்வொருவரும் தம் தலையில் முடிகவிக்கப்போவது போன்ற உவகையில் மூழ்கியிருக்கிறார். இராமனுக்கும் இந்தக் கணம் வரையில் தான் முடி சூடவேண்டிய நாள் இது என்ற நினைவு இருந்து வருகிறது. சிற்றன்னையைக் காண வரும் போது அவனிடம் சுமந்திரன்,

"பொற்றட மகுடஞ் சூடப்
போதுதி விரைவின்"

என்று சொல்லியிருக்கிறான்.

இந்த நிலையில், "நீ காட்டுக்குப் போகவேண்டும்" என்ற கட்டளை இராமன் காதில் விழுகிறது. 'அரசன் இயம்பினன்' என்று கைகேயி சொல்வதில் ஆழ்ந்த குறிப்பு இருக்கிறது. யாரும் புறக்கணிக்காமல் பணிந்து ஒழுகு வதற்குரிய அரசனது ஆணை அது என்பதை நினைப்பூட்டு கிறாள். அந்த வார்த்தையில் வேடிக்கையோ விளையாட்டோ யாதும் இல்லை.

வேறு ஒருவன் அந்த நிலையில் இருந்தால், "ஆ!" என்று மூர்ச்சை போட்டு விழுந்திருப்பான்; அலறி யிருப்பான்; இருதயம் வெடித்து இறந்தும் போகலாம். சற்றே முரடனாக இருந்தால் கைகேயியினிடம் தன் கோபத்தைக் காட்டியிருப்பான். இராமன் எல்லோரையும் போன்றவன் அல்லவே! அவன் என்ன செய்தான்? அவனிடம் என்ன மெய்ப்பாடுகள் உண்டாயின? கம்பன் சொல்கிறான்.

* * *

இராமாயணக் கதையில் இது ஒரு முக்கியமான திருப்பம். இராமன், தசரதன் திட்டம் செய்தபடியே

மணிமுடி சூடியிருந்தால் மேலே கதை நடக்க இடம் இல்லை. அவன் காட்டுக்குப் போகத்தான் வேண்டும். இதுவரையில் அதற்குரிய அறிகுறி யாதும் உண்டாக வில்லை. கொடுமனக் கூனி தோன்றும்போது இந்தத் தலைமையான நிகழ்ச்சிக்கு அரங்கு ஏற்பாடாகிறது. பின்னால் நிகழவேண்டிய நிகழ்ச்சிகள் உருவாவதற் குரிய கரு ஓர் இரவில் கைகேயியின் அந்தப்புரத்தில் தோன்றுகிறது. விடிந்தவுடனே அதன் வேலை தொடங்கி விடுகிறது. விடிந்தும் விடியாத அந்தக் காலையில் இராமன் மகுடஞ் சூடும் காட்சிக்காக அமைந்திருந்த களமே மாறிவிடுகிறது. அதற்கென்று பலர் கூடி ஏற்படுத்தியிருந்த வண்ணப் பூங்கோயிலைக் கைகேயி தன் சொல்லால் எரித்து விடுகிறாள்; திரையைப் போட்டு விடுகிறாள். இனி எதிர்பாராத காட்சிகள் வரப் போகின்றன. இராமன் இந்தத் திருப்பத்தில் நிற்கிறான்.

இது மிகவும் முக்கியமான இடம். கம்பன் இராமனுடைய நிலையை - முகத்தில் தோற்றிய பாவத்தை — தனியே எடுத்துச் சொல்ல வருகிறான்; அப்படிச் சொல்லு முன் அவனுக்குள் ஒரு கிளர்ச்சி எழுகிறது

கவிஞன் கவிதையைப் படைத்த பிறகு அந்தக் கவிதை இன்பத்தை நாம் நுகர்கிறோம். அவன் கவியாக உருவாக்கும் உணர்ச்சிகள் முதலில் அவன் உள்ளத்தில் கருவாக நிற்கின்றன. அவை உருவாகும் வரையில் கவிஞன் ஒரு பெரிய இன்ப வேதனையை அடைகிறான். பிறருக்குத் தன் கவிதையிலே வடித்துச் சொல்வதற்கு முன் அவனே அந்த உணர்ச்சியில் ஆழ்கிறான்; இன்புறு கிறான். அந்த அந்தப் பாத்திரங்களாக நின்றும், அவர் களுக்குப் புறம்பே நின்றும் இன்புறுகிறான். அவனுடைய உள்ளமெனும் மேடையில் நிகழும் உணர்ச்சிக் கூத்தின்

ஓவியத்தையே அவன் சொல்லிலே வடித்துத் தருகிறான். அவன் தான் பெற்ற உணர்ச்சி இன்பத்தையே நாமும் பெறும்படி செய்கிறான். ஆனால் அவன் அடைந்த இன்பம் அத்தனையும் அப்படியே நமக்கு வந்து விட்டன என்று சொல்ல இயலாது. தாயும் தந்தையும் குழந்தையைக் கொஞ்சி விளையாடுகிறார்கள். அவர்கள் அடையும் இன்பத்துக்கு ஈடே இல்லை. ஆயினும் தாய் பெறும் இன்பம் ஒரு மாற்று உயர்வாகவே இருக்கும்.

'செவிக்குத் தேனென இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயக'னான கம்பன் இராம காதையைப் படைப்பதற்கு முன் தன் உள்ளத் திரையில் இராமாயணத்தைக் காண்கிறான்; கேட்கிறான்; அநுபவிக்கிறான். என்றோ நடந்த இராமகதை, எப்படியோ நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அவன் உள்ளத்தே மீட்டும் உருவெடுக்கின்றன. அதே இராமன், அதே கதை என்று சொல்வதற்கில்லை, கம்பன் தன் அன்புக்கும் அறிவுக்கும் புலமைக்கும் ஏற்ற வகையில் இராமகாதையின் வித்தை உள்ளத்திலே பதியவைக்கிறான். அது பூரித்து வளர்கிறது; கதையின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அவன் தன் அகக்கண்ணால் காணுகிறான்; அதில் ஊறுகிறான்; இன்புறுகிறான். பின்பே கவியுருவில் தருகிறான். அப்படித் தரும்போது அவன் தான் பெற்ற உணர்ச்சியை அந்தக் கவிதை அப்படியே காட்டுகிறதா என்று பார்க்கிறான். சொல்லிறந்த ஒன்றை அவன் சொல்லி விட்டான் என்று நாம் கொண்டாடுகிறோம். அவனோ, "நான் சொல்ல வேண்டியது முழுவதையும் சொல்ல முடியவில்லையே!" என்று அங்கலாய்க்கிறான்.

கைகேயின் சுடுசொல்லைக் கேட்ட இராமன் எவ்வாறு இருந்தான் என்பதைச் சொல்ல வரும் போது அவன் திருமுகச் செவ்வியை முதலில் சொல்ல முயல்கிறான் கம்பன். அது அப்போது எப்படி இருந்தது? அந்தக் காட்சியை

மூவரே கண்டார்கள். ஒருத்தி கைகேயி; மற்றொருவர் கடவுள்; பின்னும் ஒருவன் கம்பன் கைகேயி கண்டும் காணுத குருடி. கடவுளோ கண்டும் சொல்லாத ஊமை கம்பன் ஒருவனே கண்டதைச் சொல்ல முந்துகிறான். தான் மிகவும் நன்ருகச்சொல்லி விட்டதாக யாரேனும் எண்ணிக்கொண்டால் என் செய்வது என்ற அச்சமோ, நம்மால் முழுவதையும் உள்ளவாறு சொல்ல முடியவில்லையே என்ற இரக்கமோ, தெரியவில்லை; சொல்ல வேண்டியதைச் சொல்வதற்கு முன் ஒரு பீடிகை போட்டுக்கொள்கிருன். தன்னுடைய ஆற்றலுக்கு அகப்பட்டதன்று அது என்பதைக் குறிப்பிடுகிருன்.

'நான் என் உள்ளத்தே கண்ட காட்சியை, அதனாற் பெற்ற உணர்ச்சியை, அப்படியே என்னல் சொல்ல முடியவில்லை. அப்பொழுது நான் அநுபவ உலகில் இருந்தேன். இப்பொழுது சொல் உலகுக்கு வந்து விட்டேன். அப்பொழுது அடைந்த அநுபவத்தை இப்பொழுது சொல்லால் கோலம் செய்வது எளிய காரியமா? என்னைப் போன்ற எல்லோருக்குமே இது இயலாதது' என்று அவன் சொல்லியிருப்பான், நம்மைப்போல வெற்று வார்த்தையை அடுக்குபவனுக இருந்தால். ஆனலும் அத்தனையையும் சில சொற்களிலே வைத்துத் தன் ஆற்றுமையை உணர்த்தியே விடுகிருன்.

இப்பொழுது எம்மனோரால்
இயம்புதற்கு எளிதே?

'அப்பொழுது பெற்ற அநுபவத்தை இப்பொழுது சொல்லால் வடிக்க முயலும் என்னைப் போன்றவர்களால் சொல்லுவதற்கு எளிதா அது?' என்று கேட்கிருன். அவன் சொல்லத்தான் போகிருன். மற்றவர்கள் சொல்ல முடியாத வகையில் சொல்லியே விடுகிருன். ஆனலும் அப்படி அவன் சொல்லுவதற்கு அதிக மதிப்பை உண்டாக்கி விடுகிருன், இந்தப் பீடிகையினல்.

2

கம்பன் இராமனுடைய திருமுகச் செவ்வியைச் சொல்லுகிறான். 'எங்களால சொல்ல முடியாது' என்ற முன்னுரையுடன் அந்தச் சொல்லோவியத்தை நீட்டுகிறான்.

இப்பொழு தெம்ம னோரால்
இயம்புதற் கெளிதே? யாரும்
செப்பருங் குணத்தி ராமன்
திருமுகச் செவ்வி நோக்கின்,
ஒப்பதே முன்பு பின்பு அவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா!

'இராமனுடைய திருமுகச் செவ்வியைப் பார்த்தால் அது அலர்ந்த செந்தாமரையின் செவ்வியை வென்று விட்டது' என்பது இதில் உள்ள கருத்து. 'அன்றலர்ந்த தாமரை' என்று கேட்ட பழக்கத்தால் 'அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றது' என்று கூட்டிப் பொருள் கொள்வர் சிலர். 'உணரக் கேட்ட அப்பொழுது' என்று கூட்டுவதே பொருத்தம். அப்பொழுது என்பதை அலர்ந்த என்பதோடு கூட்ட இலக்கணம் இடந்தராது. இனி இதன் பொருளைச் சற்றே ஆராய்வோம்.

இராமனுடைய திருமுகச் செவ்வியை மூன்று காலங்களில் பார்க்கிறான் கவிஞன். கைகேயின் சுடுசொல்லைக் கேட்டதற்கு முன் ஒரு நிலை; கேட்ட பொழுது ஒரு நிலை; கேட்ட பின்பு ஒரு நிலை. இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் என்ற மூன்றில் மிகவும் நுட்பமானது நிகழ்காலம். எதிர்காலமாக இருப்பது இறந்த காலம் ஆவதற்கு நடுவில் உள்ள இடைகழி அது. அது மிகவும் சுருக்கமானது. அதைச் சுட்டுவதற்குள் அது இறந்த காலமாக மாறிவிடும். இராம

னுடைய திருமுகச் செவ்வியின் திறத்திலும் அவ்வாசகம் உணரக் கேட்ட அப்பொழுது இருந்த நிலை நுட்பமானது: அதற்கு முன்பு ஒரு நிலை, பின்பு ஒரு நிலை; ஆகிய இரண்டு நிலைகளும் பலர் அறியும் தன்மையை உடையன. அலர்ந்த தாமரை மலரை அந்த இரண்டு நிலைகளிலும், அதாவது கைகேயி உரைத்த சுடுசொல்லைக் கேட்பதற்கு முன்பும், அதைக் கேட்டதற்குப் பின்பும் இராமனுடைய திருமுகம் ஒத்திருந்தது. ஆனால் அவள் கூறிய வாசகத்தைக் கேட்ட அப்பொழுது செந்தாமரையை வென்று விட்டதாம். 'அப்படி யானால் இராமன் அவள் கூறியவற்றைச் சரியாகக் கேட்க வில்லையோ?' என்ற ஐயத்துக்கு இடம் இல்லை. அவள் வார்த்தைகளின் பொருளையும் அவற்றினூடே தோற்றும் அவளுடைய உள்ளக் கிடக்கையையும் நன்றாக உணர்ந் தான்;, அவ்வாசகம் உணரக் கேட்டான்.' இராமனுடைய திருமுகம் முன்பும் பின்பும் தாமரையை ஒத்திருக்க, அச் சுடு சொல்லைக் கேட்டபோது பொலிவு மிகப் பெற்றுத் தாமரையின் அழகையே வென்றுவிட்டது.

…………….யாரும்
செப்பருங் குணத்தி ராமன்
திருமுகச் செவ்வி நோக்கின்,
ஒப்பதே முன்பு, பின்பு; அவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா!

ஒப்பதே முன்பு; அதன் பின்பு அவ்வாசகம் உணரக் கேட்ட அப்பொழுது என்று பிளபாக்கிய அப்பொழுது எனக் கூட்டியும் பொருள் உரைக்கலாம். ஆனால் அதில் இந்தச் சிறப்பு இல்லை.

முன்பு அவன் திருமுகம் தாமரையை ஒத்திருந்தது என்பதற்குப் பல மேற்கோள்கள் கூறலாம்.

இராமன் கடலிலே நீருண்ட மேகம் தன்பால் தாமரை மலர்ச்சி பெற்றதுபோலத் தோன்றுவதாகக் கம்பன் ஓரிடத்தில் பாடுகிறான். அவனுடன் மேருமலையைப் போல இலக்குவன் வருவானும்.

> கடல்வரும் முகில்ஒளிர் கமலம தலரா
> வடவரை யுடன்வரு செயலென, மறையும்
> தடவுதல் அறிவரு தனிமுத லவனும்
> புடைதரும் இளவலும் எனநிகர் புகல்வார். [1]

தனக்கு எதிரே வரும் மக்களை வலியச் சென்று இராமன் முகமலர்ச்சியுடன் சௌக்கியம் விசாரிப்பானும். இந்தச் செய்தியைச் சொல்லும்போது, 'முகமாகிய தாமரை மலர் கருணையினால் விளங்கப் பேசுவான்' என்று கம்பன் பாடுகிறான். 'முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா' [2] என்பது ஓர் அடி. அங்கே முகமலர் என்ற தொடர், 'ஒப்பதே முன்பு' என்று சொன்னதற்குச் சான்று பகரும்.

இனி, பின்பும் தாமரை அம்முகத்துக்கு ஒப்பாக நின்றது என்பதற்கும் அகச்சான்று உண்டு.

அசோக வனத்தில் இராமனைப் பிரிந்திருந்த சீதை தனியிருந்து முன்னை நிகழ்ச்சிகளை எண்ணி எண்ணி வெதும்புகிறாள், பழைய நினைவுகள் ஒன்றன் பின் ஒன்றாக அவள் அகக்கண்ணில் தோன்றுகின்றன.

இதோ இராமன் வந்து முன்னே நிற்கிறான் தன் தந்தையார் தனக்கு முடிசூட்ட எண்ணியிருக்கும் செய்தியைச் சொல்கிறான். அவள் உள்ளம்

1. திருவவதாரப் படலம். 134
2. ஷை 135

மகிழ்ருள். அடுத்த காட்சி: அவன் மரவுரி புனைந்து கொண்டு வந்து நிற்கிருன். 'நான் காட்டுக்குப் போய்விட்டு வருகிறேன்' என்கிருன். அவள் மனம் மாழ்குகிருள்.

இந்த இரண்டு காட்சிகளையும் இப்போது மீட்டும் நினைவுக்குக் கொண்டுவருகிருள். உவகைச் செய்தியைச் சொன்னபோது அவன் முகம் தாமரையை ஒத்திருந்தது. காட்டுக்குப் போகும் செய்தியைச் சொன்னபோதும் அவள் அந்த முகத்தைப் பார்த்தாள். என்ன வியப்பு! அதில் சிறிதும் வாட்டம் தோன்றவில்லை. அதே பொலிவோடு தாமரையை ஒத்த மலர்ச்சியோடு அத் திருமுகம் விளங்கியது. அதை இப்போது நினைக்கிருள்,

மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருந்த முகத்தினை உன்னுவாள். [1]

இரண்டு சமயங்களிலும் முகம் அலர்ந்த செந் தாமரையினை ஒத்திருந்தது. பகல், இரவு என்ற வேறுபாட்டால் மலர்தலும் கூம்புதலும் உடையது தாமரை. அப்படி இல்லாத தாமரை ஒன்றை உவமையாகக் கூற எண்ணினுள்; சித்திரத்துச் செந்தாமரையைக் கூறினுள். அதையன்றி, அலர்ந்த செந்தாமரை அவன் திருமுகத்துக்கு ஒப்பாக இருந்தது என்ற செய்தியில் வேறுபாடில்லை.

கைகேயியின் சுடுசொல்லைக் கேட்பதற்கு முன்பும், கேட்டுத் தன்பால் வந்து செய்தி சொல்லிய சமயமாகிய பின்பும் இராமன் முகம், 'அலர்ந்த செந்தாமரை ஒத்திருந்த' தகைமையைச் சீதை உணர்ந்தாள்.

1. காட்சிப். 20.

ஆனால் இடையிலே கைகேயி சொன்ன வாசகத்தைக் கேட்ட அப்பொழுது, அந்த முகம் தாமரையை வென்று பொலிவுற்றதை அவள் கண்டிலள்.

மேலே சொன்ன பாட்டினால்,

திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பு

என்பதில் உள்ள முன்பு, பின்பு என்ற நிலைகளை வேறு வேறாகவும், 'அவ்வாசகம் உணரக் கேட்ட அப்பொழுது' என்ற நிலையை வேறாகவும் பிரித்து உணர்வதே சிறப்பெனவும், முன்னே சொன்ன இரண்டு நிலைகளிலும் திருமுகச் செவ்வி தாமரையை ஒத்திருந்ததென்றும், கேட்ட அப்பொழுது வென்றதென்றும் கொள்வது பொருத்தமெனவும் விளங்குகிறதல்லவா?

3

கைகேயியின் சொற்களைக் கேட்டபோது இராமன் முகம், தன் இயற்கையான பொலிவினும் சிறந்து விளங்கியது. இது காண்பதற்கரிய காட்சி. அதனால் கம்பன், 'அம்மா!' என்ற சொல்லைப் பாட்டின் இறுதியில் வைத்து அந்த வியப்பைப் புலப்படுத்துகிறான்:

அலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா!

அவ்வாறு அம் முகம் பொலிவு பெற்றதற்குக் காரணம் என்ன? தாமரையின் பொலிவில்கூட இப்படி வியப்பதற்குரிய தன்மை ஒன்று உண்டு. தாமரை மலர் மெல்லியது; தண்ணியது; அது வெப்பத்துக்கு மாறான இயல்பை உடையது. ஆயினும் கோடைக் காலத்தில் நண்பகலில் அம்மலர் நன்றாக விட்டு விளங்கும். பனிக்குக்

கருகுமேயன்றி வெயிலுக்கு வாடாதது அது. அந்த வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் அதற்கு எங்கிருந்து வந்தது? அதன் இதழ்களில் அந்த வன்மை இல்லை. பூம்பொய்கையில் இருக்கும் தாமரைக்குத்தான் வெயிலிற் பொலிவுறும் பொற்பு உண்டு. தனியே பறித்து வைத்தால் வாடும்.

அதன் பொலிவுக்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்தால் உண்மை விளங்கும். பூவையும் இதழையும் விட்டு அப்பூ மலர்ந்த தண்டைப் பற்றிச் சென்றால் கொடி தட்டுப்படும். கொடியையும் பற்றிச் சென்றால் அதன் கிழங்கைக் காணலாம். அந்தக் கிழங்கு, தண்மை நிறைந்த சூழ்நிலையில் சேற்றுக்குள் இருக்கிறது. வெளியிலே உள்ள தட்ப வெப்பங்கள் அந்தக் கிழங்கைச் சார்வதில்லை. அதன்பாலுள்ள உரந்தான் நீரின்மேல் மிதக்கும் தாமரைக்குச் சுடுகின்ற வெயிலில் பின்னும் விட்டு விளங்கும் பொலிவைத் தருகிறது.

இராமனுடைய முககமலத்தின் பொலிவுக்கு மூலம் எது என்பதை ஆராய்ந்தால் அங்கும் ஒரு கிழங்கு இருப்பதை உணரலாம். நளவெண்பாவில் ஒரு பாட்டு;

மெய்த்திருவந் துற்றாலும்
வெந்துயர்வந் துற்றாலும்
ஒத்திருக்கும் உள்ளத்
துரவோனே

என்பது அது. 'நலம் விளைந்தாலும் தீங்கு விளைந்தாலும் இரண்டையும் ஒன்றாகக் கருதி ஒத்திருக்கும் உள்ளத் திண்மை படைத்தவனே' என்பது இதன் பொருள். இந்த இரண்டு நிலைகளிலும் ஒத்து நிற்கும் இயல்பு உள்ளத்தின் உரத்தில் விளைவது; அதைச் சம நிலை என்று கூறுவர். இராமனுடைய இருதயக் கிழங்கின்

உரம் அவனுடைய முகத்துக்குப் பொலிவை ஊட்டுகிறது. அகத்தின் மலர்ச்சி - துன்பத்திலும் இன்பத்திலும் ஒரு படியாக இருக்கும் மலர்ச்சி - முகத்தில் வெளியாகிறது.

அகம் சிறந்தவன் இராமன். அகத்தின் சிறப்பு, குணநலங்களால் அமைவது; குணங்களில் சிறந்தவன் இராமன். அவனுடைய அகமலர்ச்சியாகிய குணச் சிறப்பை உணர்ந்தவர்களுக்கு அவன் முகமலர்ச்சிக்குக் காரணம் தெரியும். சுடுவெயிலில் மிக்குப் பொலிவது தாமரை; சுடுசொல்லின் முன் அதனினும் மிக்குப் பொலிந்தது இராமன் திருமுகம். இதற்குக் காரணம் அவனுடைய உள்ளச்சிறப்புக்குரிய பண்புகள். அந்தப் பண்புகளை எடுத்துச் சொல்லல் இயலாது. அகப் பொலிவாகிய மூலமும் சொல்வதற்கரியது; முகப் பொலிவாகிய விளைவும் சொல்வதற்கரியது.

அவன் திருமுகச் செவ்விக்குக் காரணம் அவனுடைய அகச் செவ்வியாகிய குணங்கள் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்த எண்ணிய கம்பன்,

யாரும், செப்பருங் குணத்தி ராமன்
திருமுகச் செவ்வி நோக்கின்

என்று கூறுகிறான். குணத்தைச் சொல்ல முடிந்தால் இதையும் சொல்ல இயலும். அதுவும் செப்பரியது. ஆதலால் இதுவும்,

இப்பொழு தெம்ம னோரால்
இயம்புதற் கெளிதே?

என்பது எவ்வளவு பொருத்தம்!

கம்பன், தான் அகக்கண்ணில் கண்டுணர்ந்த காட்சியைச் சொல்வதற்குமுன் தான் நுகர்ந்த அளவுக்கு அதனைச் சொல்லால் வடிக்க இயலாது என்று இரங்குகிறான். இது

இந்தப் பாட்டில் உள்ள முதல் கருத்து. இராமனுடைய திருமுகத்தை முன்பு, பின்பு, அப்பொழுது என்று மூன்று நிலைகளில் கண்டு, தாமரையை ஒத்திருந்த நிலைகள் இரண்டு, வென்ற நிலை ஒன்று என்று கூறுகிறான். இது இரண்டாவது கருத்து. அவ்வளவு பொலிவு உண்டாவதற்குக் காரணம் இராமபிரானுடைய அகமலர்ச்சியாகிய அருங் குணம் என்று குறிப்பாகப் பெற வைத்திருக்கிறான்; இது மூன்றாவது கருத்து. இந்த மூன்று கருத்துக்களையும் நினைக்கச் செய்த பாட்டு முழுவதும் வருமாறு:

இப்பொழு தெம்ம னோரால்
இயம்புதற் கெளிதே? யாரும்
செப்பருங் குணத்தி ராமன்
திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு, பின்பு; அவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா! [1]

[எம்மனோரால் - என் இனத்தவர்களால். எளிதே - எளிதாகுமா? செவ்வி - அழகு. முன்பு ஒப்பதே, பின்பு ஒப்பதே. அவ்வாசகம் - கைகேயி சொன்ன வார்த்தை. உணரக் கேட்ட - அவள் சொன்ன சொல் ஒவ்வொன்றையும் தெளிவாக உணரும்படி கேட்ட. கேட்ட என்ற பெயரெச்சம் அப்பொழுது என்பதில் உள்ள பொழுது என்பதைக் கொண்டு முடிந்தது. முன்பு பின்பு அலர்ந்த செந் தாமரையினை ஒப்பதே; அப்பொழுது வென்றது என்று கூட்ட வேண்டும்.]

1. கைகேயி சூழ்வினைப் படலம், 108

அழியா அழகு

இராமனும் சீதையும் இலக்குவனும் அயோத்தி மாநகரத்தை விட்டுத் தமக்கு விதித்த காட்டு வாழ்க்கை வாழப் புறப்பட்டு விட்டார்கள். நாட்டைக் கடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

அயோத்தியில் இராமனுடைய பிரிவினாலும் தசரதனுடைய மரணத்தினாலும் யாவரும் உயிர் இல்லாத உடம்புகளாகத் தோன்றுகின்றனர். எங்கும் ஒளியே இல்லை. துயர வெள்ளத்தில் ஊர் மூழ்கிக் கிடக்கிறது. அந்த வெள்ளத்தில் நம்மைத் தோய்த் தெடுக்கிறான் கம்பன்.

இராமனை நகருக்கு வெளியே அனுப்பிவிட்டு, நகரின் அவலக் காட்சிகளைக் காட்டி நம்மைக் கண்ணீரும் கம்பலையுமாக நிறுத்திய கம்பன், 'இந்தச் சோகக் கதை போதும்; இனிமேல் இரவோடு இரவாகப் போன நம்பியின் கதையைக் கவனிப்போம். அதுதானே நாம் நடத்த வேண்டிய கதை? இங்கேயே தேங்கி நிற்கலாமா?' என்பவனைப்போல ஒரு பாட்டுப் பாடித் தைலமாட்டு படலத்தை முடிக்கிறான்.

வெள்ளத் திடைவாழ் வடவனலை
அஞ்சி வேலை கடவாத
பள்ளக் கடலின் முனிபணியால்
பையுள் நகரம் வைகிடமேல்

வள்ளல் தாதை பணிஎன்னும்
வானோர் தவத்தால் வயங்கிருளின்
நள்ளிற் போன வரிசிலைக்கை
நம்பி செய்கை நடத்துவாம். [1]

அயோத்தி மாநகரத்தில் துயரக் கடல் கொந்தளிக்கிறது. வசிட்டருடைய கட்டளையால் அக்கடல் கரை கடவாமல் வெறும் கொந்தளி போடு நிற்கிறது. கடலுக்கு நடுவே வடவாமுகாக்கினி என்ற நெருப்பு இருக்கிறதாம். அது எப்போதும் எரிந்து கொண்டிருப்பதனால்தான் கடலின் நீர் கரையைக் கடக்காமல் அளவிலே அடங்கி இருக்கிறதாம். இப்படி ஒரு வழக்கு உண்டு. இதை உவமையாக்குகிறான் கம்பன். வடவனலுக்கு அஞ்சிக் கரையைக் கடவாத கடலைப்போல, வசிட்ட முனிவரது கட்டளையால் துயரில் ஆழ்ந்த நகரம் எல்லை கடவாது நின்றதாம். வடவைக் கனலைப் போல அவனும் ஒரு ஞானக்கனல் அல்லவா?

முனிவன் கட்டளையின்படி நகரம் இருக்க, தன் தந்தையின் கட்டளையின்படி இராமன் நகரை விட்டுச் சென்றான். தந்தையின் கட்டளையா அது? அந்த உருவத்தில் வானோர் செய்த தவம் வந்தது அதன் வலிமையால் யார் ஏது சொல்லினும் நில்லாமல் இராமன் நள்ளிருளில் புறப்பட்டு விட்டான். 'அப்படிப் போன நம்பியின் செயல்களை இனித் தொடர்ந்து சொல்வோம்' என்று சொல்கிறான் கம்பன்.

இந்தப் பாட்டோடு அயோத்தி நிகழ்ச்சிகளை இப்போதைக்கு நிறுத்தி, இராமனோடு நம்மை அழைத்துச் செல்கிறான் கவிஞன். அப் பெருமானைக் கங்கைக் கரைக்கு அழைத்துச் சென்று குகனோடு நட்புச் செய்ய வைத்துச் சித்திர கூடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும்.

---

1. தைலமாட்டு படலம். 89

இப்போது கங்கைக் கரையை அடையப் போகிறான் இராமன். புதிய படலம், 'கங்கைப் படலம்' என்ற பெயரோடு தொடங்குகிறது.

அதன் முதல்பாட்டைச் சற்று விரிவாக ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

2

நாடகத்தில் யாவும் பாத்திரங்களின் கூற்றாக அமையும்; காவியத்திலோ கவிஞன் கூற்றும் பாத்திரங்களின் கூற்றும் விரவி வரும். கவிஞன் கூற்றிலும் இரண்டு வகை உண்டு. கதையோடு தொடர்பாக நிகழ்ச்சிகளைச் சொல்லிக் கொண்டு போவது ஒரு வகை. கதையைச் சற்றே நிறுத்தி, உலகுக்கு உபதேசம் செய்வது, தன் உணர்ச்சியை வெளியிடுவது முதலிய வகையில் பாடுவது ஒருவகை. முன்னதைக் கதையின் அகமென்றும், பின்னதைக் கதையின் புறமென்றும் சொல்லலாம். கம்பன் பல இடங்களில் இந்த இரண்டு முறைகளையும் மேற்கொண்டு பாடியிருக்கிறான்.

கங்கைப்படலத்தின் முதற்பாட்டில் முதல் இரண்டடி கதை நிகழ்ச்சியைச் சொல்வன. பின் இரண்டடி கம்பன் தன் உணர்ச்சியை வெளியிடுவன.

> **வெய்யோன்ஒளி தன்மேனியின்**
> **விரிசோதியின் மறையப்**
> **பொய்யோஎனும் இடையாளொடும்**
> **இளையானொடும் போனான்;**
> **மையோ,மரகதமோ, மறி**
> **கடலோ, மழை முகிலோ!**
> **ஐயோ! இவன் வடிவென்பதொர்**
> **அழியா அழகுடையான்.**

முன் இரண்டடி இராமன் சீதையோடும் இலக்குவனோடும் போவதைச் சொல்கின்றன. பின் இரண்டடி கம்பன் நின்று நிதானித்து இராமன் அழகை அநுபவித்த உணர்ச்சியை வெளியிடுகின்றன. உற்சவமூர்த்தி எழுந்தருளும்போது வீட்டு வாயிலில் நிறுத்திக் கற்பூர ஆரத்தி செய்வது போல இருக்கிறது இது. புது நாகரிக உவமையாகச் சொல்லப்போனால், ஊருக்குப் புறப்பட்டுப் போகிறவர்களை நிறுத்தி வைத்து ஒரு படம் பிடித்துக் கொள்வது போல இருக்கிறது என்று சொல்லாம்.

'கதிரவனது ஒளி தன்னுடைய மேனியினிடத்தில் விரிந்து பரவுகின்ற நீல வண்ணச் சோதியில் மறைந்துபோக, இடை இவளுக்கு உண்டு என்பது பொய்யோ என்று ஐயுறுமளவுக்கு மெலிந்த இடையையுடைய சீதையோடும், இளையவனாகிய இலக்குவனோடும் (இராமன்) போனான்' என்பது முற்பகுதியில் வரும் செய்தி.

வெய்யோன்ஒளி தன்மேனியின்
விரிசோதியின் மறைய,
பொய்யோஎனும் இடையாளொடும்
இளையானொடும் போனான்.

கம்பன் இராமனுக்கு அருகிலே நின்று பரிவோடு பார்க்கிறான் போலத் தோன்றுகிறது. இராமனுடைய அழகை விளக்கெடுத்துக் காட்டுவது போலக் கதிரவன் காட்டுகிறான். ஆனால் அவனுடைய கதிர்கள் வெம்மையுடையன அல்லவா? 'அவை இந்தத் திருமேனியில் படலாமா?' என்று அங்கலாய்க்கிறானோ கவிஞன்? கதிரவனுக்கு வேறு பெயர் அவன் நினைவுக்கு வரவில்லை; 'வெய்யோன்' என்கிறான். ஆனாலும் அவன் ஒளியே இராமனைக் காட்டுகிறது.

அந்த ஒளியால் இராமன் மேனி விளக்கம் பெறுகிறதா? இல்லை, இல்லை. நீல நிறத்துக்கு ஒரு பெருமை உண்டு. மற்ற நிறங்கள் வேறு வண்ணம் தம்மோடு கலந்தால் மாறு படும். நீலம் அப்படி எளிதில் மாருது.

'ஆகாது உண்டது நீலம் பிறிது'

என்பது பழமொழி. மேலே விரிந்த வானமும், ஆழ்ந்து பரந்த கடலும் எல்லாவற்றையும் தம்முள் அடக்கிக் கொண்டு நீலப் பெரும்பரப்பாக இருக்கின்றன. இராமன் மேனியும் தன்மேலே விழும் செங்கதிரவனுடைய கதிர்களை மடக்கி விட்டது; அவை அந்த நீலப் பெருஞ் சோதியில் மறைந்து விட்டன. ஒருபால் கருஞாயிறு: மற்ருருபால் செஞ்ஞாயிறு. கருஞாயிற்றின் திருமேனிச் சோதியில் செஞ்ஞாயிற்றின் ஒளி மறைந்து போயிற்று.

வெய்யோன்ஒளி தன்மேனியின்
விரிசோதியின் மறைய.

எதிரே கதிரவன். அவன் ஒளி தன்மேலே பட முதலில் இராமன் செல்கிருன். அடுத்தபடி பொய்யோ எனும் இடையாளாகிய சீதை இந்தக் கருஞாயிற்றின் நிழல்போலச் செல்கிருள். அவளுக்குப் பின் காவலாக இலக்குவன் போகிருன். மூவரும் அடுத்தடுத்துச் செல் வதைப் பாட்டினுல் அறிகிருேம். முன்னும் பின்னும் நம்பியும் தம்பியும் செல்ல இடையாளாகச் சீதை செல்லுகிருள்.

பொய்யோஎனும் இடையாளொடும்
இளையானொடும் போனன்.

3

போனவன் யார்? அவன் அழியா அழகு உடையவன். அந்த அழகைச் சிறிது கண்ணுரக் கண்டு வாயாரப் பாட

ஆசை பிறக்கிறது கவிஞனுக்கு. போகிற போக்கிலே நெடுநேரம் நிறுத்தி வைத்துப் பல பாடல்களைச் சொல்ல விருப்பம் இல்லை. சீதையும் இராமனும் ஒருவர் அழகை மற்றவர் பார்த்து மகிழ்வதாகக் கதையை நடத்தப் போகிறான். அதற்குள் இராமன் பெருவனப்பைத் தன் கண்ணாரப் பார்த்துவிட அவனுக்கு ஆசை; இரண்டு அடி களிலே அதைச் சாதிக்க முற்படுகிறான்.

இராமலாவண்யத்தை எப்படிச் சொல்வது? கவிஞன் ஒரு பொருளை வருணிப்பதற்குப் பல வகை உபாயங்கள் உண்டு. அவற்றில் மிகவும் ஆற்றல் பெற்றது உவமை. இங்கே உவமைகளைக் கொண்டு இராமனது பேரழகை அளந்துவிட எண்ணுகிறான்.

அவன் திருமேனிக்கு எதை உவமையாகச் சொல்லலாம்? அது கரிய வண்ணமுடையதானாலும் உள்ளங் கவரும் தன்மையுடையது. உள்ளத்தை மயக்குவதும் கருநிறம் உள்ளதுமாக உள்ள பொருள் ஒன்று அவன் நினைவுக்கு வருகிறது. அதுதான் மை. வசிய மை இருக்கிறதல்லவா? அதை உவமையாகச் சொல்ல எண்ணுகிறான். அது போதுமோ போதாதோ என்ற ஐயமும் இருக்கிறது. ஆகையால் மை ஒன்றையே சொல்லி வரையறுத்து விடும் துணிவு அவனுக்கு இல்லை. இருந்தாலும் சொல்லிப் பார்க்கலாம் என்று தொடங்குகிறான்.

மையோ!

ஒன்றை ஆசையுடன் செய்கிறோம். செய்த பிறகு அதைப் பின்னும் நன்றாகச் செய்யவேண்டும் என்று தோன்றுகிறது. குழந்தைக்கு அலங்காரம் செய்கிறோம். ஓர் உடையைப் போடுகிறோம். அது ஓரளவு அழகாக இருந்தாலும் இன்னும் அழகாக இருக்க வேண்டும் என்ற

ஆசையால் பின்னும் ஒன்றை அணிகிறோம் ஆடைகள் அதிகமாக வகைவகையாக நம்மிடம் இருந்தால் இந்த இரண்டோடு நிற்பதில்லை, மற்றொன்று, வேறொன்று, பிறிதொன்று என்று ஒன்றைவிட ஒன்று சிறப்பாக இருக்கிறதென்று எண்ணி மாற்றி மாற்றி அணிவோம். இது மனித இயல்பு.

கம்பன் இப்படித்தான் செய்கிறான். மையை உவமையாக்கினான். துணிவாகச் சொல்லாமல், 'மையோ!' என்று ஐய உணர்வோடு சொன்னான். அவனுக்குத் திருப்தி உண்டாகவில்லை. 'மைக்கு ஒளி ஏது? அது சிமிழில் அடங்குவதாயிற்றே! அதையா சொல்வது?' என்று அவன் நினைத்திருக்கக் கூடும். ஒளியுடையதும் மதிப்புடையதுமாக வேறு ஒன்றைச் சொல்லவேண்டும் என்று விரும்பினான். அவனுக்கு இப்போது மரகதம் நினைவுக்கு வந்தது. 'ஆம்; சுடர் விடும் திருமேனிக்கு இதுதான் சரி' என்று எண்ணிச் சொல்ல வந்தான், அப்போதும் ஐயம் விடவில்லை.

மரகதமோ!

என்றான்.

உறியிலே உள்ள தின்பண்டத்தைத் தாய் அறியாமல் எடுக்க விரும்புகிறான் குழந்தை. அது அவனுக்கு எட்டும் உயரத்தில் இல்லை. 'எப்படி அதை எடுப்பது?' என்று தெரியாமல் திண்டாடுகிறான். கடைசியில் பக்கத்தில் இருந்த ஒரு முக்காலியை எடுத்துப் போட்டு அதன்மேல் ஏறி நின்று பார்க்கிறான்; உறி எட்டவில்லை. மறுபடியும் கீழே இறங்கி உயரமான மணை ஒன்றை எடுத்து முக்காலியின்மேல் வைத்து மீண்டும் மேலே ஏறி அண்ணாந்து பார்க்கிறான். இப்போதும் எட்டவில்லை. அருகில் கொப்பரை, தவலை என்று உள்ளவற்றை அடுக்குகிறான்.

கம்பனும் அப்படியே செய்கிறான். இராம லாவண்யம் என்னும் அமுத கலசத்தை எட்டிப் பிடிக்கும் ஆவலோடு எதை எதையோ அடுக்கு கிறான். முதலில் மைப்படிக்கட்டுப் போட்டு ஏறிப் பார்த்தான்; இராமலாவண்யம் எட்டவில்லை. அடுத்த படி மரகதப் படிக்கட்டுப் போட்டான்; இப்போதும் எட்டவில்லை. 'மரகதமும் சிறிய அளவிலே அடங்கு வதுதானே? எல்லையின்றி விரிந்து கிடப்பது இவன் அழகு. அவரவர் தம் தம் நிலையிலிருந்து வெவ்வேறு வகையில் இவன் அழகைக் கண்டு இன்புறுகிறார்கள். ஆயினும் இவன் அழகை முற்றும் கண்டவர்கள் இல்லை. இந்தப் பேரழகுக்கு எல்லையற்ற ஒன்றை அல்லவா உவமை சொல்ல வேண்டும்?' என்று தோன்றியது. நீலப் பெரும்பரப்பாகிய கடல் அவன் உளக்கண்ணில் தோன்றியது. பல பல கோணங்களில் நின்று பார்க்கிறவர் களுக்கு வெவ்வேறு வகையில் அலையெறியும் அவன் அழகுக்கு, அலைமறியும் கடல்தான் தக்க உவமை என்று ஒரு கணம் நினைத்தான்; நினைத்தவுடன் சொன்னான்; சொல்லும் போதே இது போதாதோ என்ற ஐயமும் உடன் குரல் எழுப்பியது

மறிகடலோ!

என்றான்.

மையால் படிக்கட்டுப் போட்டு எட்டாமல், மரகதத் தால் படியிட்டும் எட்டாமல், மறிகடலால் படி அமைத்தும் எட்டாமல் இராமலாவண்யம் இன்னும் எட்டாப் பழ மாகவே இருக்கிறது.

கம்பன் விடவில்லை. கடலைச் சொன்னது முழுத்திருப் தியை அளிக்கவில்லை. 'கடல், தான் இருக்கும் இடத்துக்கு வந்து காண்பவர்களுக்குத்தானே காட்சி அளிக்கிறது? இவனோ தன்னை நாடுவார் உள்ள இடத்துக்குத் தானே

போகிறானே. கானும் கடலும் மலையும் கடந்து செல்ல இருக்கிறானே!' என்ற நினைவு உண்டாயிற்று. பல இடங்களுக்கும் சென்று காட்சி அளிக்கும் பொருள், கரிய பொருள், நல்ல பொருள், உயர்ந்த பொருள், ஏதேனும் உண்டா? ஆம், மழை பெய்யும் நிலையில் உள்ள கருமுகில் அவனுக்கு முன் நின்றது. இதுவே தக்க உவமை என்று உறுதி செய்தான்.

மழை முகிலோ!

என்றான்.

அப்போதும் அவனுக்கு மன நிறைவு பிறக்கவில்லை. மைப்படிக்கட்டேறி, மரகதப்படிக்கட்டேறி, மறிகடற் படிக்கட்டேறி, மழைமுகிற் படிக்கட்டும் ஏறியாயிற்று; இராமலாவண்யம் இன்னும் கைப்படவில்லை. கம்பன் இப்போது சளைத்துவிட்டான். குழந்தை எல்லாவற்றையும் அடுக்கி வைத்துப் பார்த்தும் உறி எட்டாவிட்டால் இரண்டு கையையும் விரித்து, 'ஐயோ!' என்கிறது. அதுபோல இப்போது கம்பன் இருக்கிறான். இத்தனை உவமை சொல்லியும் எட்டாத அழகை எப்படிச் சொல்வது!

மையோ! மர கதமோ! மறி
கடலோ! மழை முகிலோ!

ஒன்றும் சரிப்படாமல் இளைத்து ஏங்கி ஏமாந்து அலுத்து நிற்கிற கம்பனாகிய குழந்தையும்,

ஐயோ!

என்று கையை விரிக்கிறது!

மையோ! மர கதமோ! மறி
கடலோ! மழை முகிலோ!
ஐயோ! இவன் வடிவுஎன்பதோர்
அழியாஅழ குடையான்!

4

கம்பன் தோல்வியுற்ருன் என்று சொல்லத் தோன்று கிற தல்லவா? இல்லை. அவன் இங்கேதான் வென்ருன். உவமையினுல் அளவிட முடியாத இராமனது பேரழகை உணர்ச்சிச் சித்திரமாகக் காட்டிவிட்டான், சொல்வளம் படைத்த கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பன் தன் சொல்லின் எல்லைக்குள்ளே அகப்படுத்தாத பொருள் இல்லை. அவ னுக்கே அகப்படாமல் இருந்தது இராமன் வனப்பு. அதைச் சொல்வலையிலே பிடிக்க முடியாதபோது, அதனினும் சிறந்த உணர்ச்சி வலையில் பிடித்து விட்டான். அந்த உணர்ச்சியைக் காட்டும் அடையாளந்தான், 'ஐயோ' என்ற சொல். அறிவு தலைப்பட்டால் சொல் வரும்; அநுபவம் தலைப்பட்டால் உணர்ச்சி எழும்; சொல் அடங்கும் 'இராமன் அழகைச் சொல்லால் சிறை செய்ய ஒண்ணுது; அநுபவத்தால் நுகர்ந்து உணர்ச்சி வயப்படலாம்' என்ப தைக் கம்பன் நமக்குக் குறிப்பாக உணர்த்துகிருன்; அதை அப்படிச் சொல்லாமல், தன் சொல் நழுவுவதையும், உணர்ச்சி விஞ்சித் தழுவுவதையும் இந்தப் பாட்டிலே நாடகக் காட்சி யைப் போலத் தோன்றும்படி அமைத்து விட்டான்.

சிறந்த இசைக் கச்சேரி நடைபெறுகிறது; பலவகை மக்கள் கேட்கிருர்கள். 'ஆ! என்ன அருமையாகப் பாடு கிருர்! இந்தப் பைரவியின் ஆரோகண அவரோகணம் எவ்வளவு கச்சிதமாக அமைகிறது! இந்தப் பிடியில்தான் ராக மூர்ச்சனை தெரிகிறது' என்கிருர் ஒரு ரசிகர். 'இதோ இந்தக் கீர்த்தனையைத்தான் இவர் பாடப் போகிருர்' என் கிருர் வேறு ஒருவர். 'அடே! மூன்று சுவரங்களுக்குள் அற்புதமாகச் சஞ்சாரம் செய்கிருரே!' என்கிருர் மற்ருெரு வர். இவர்களுக்கு நடுவிலே ஒருவர், 'த்லஸா. த்லஸா, ஐயோ!' என்று குழைகிருர். இத்தனை பேர்களிலும் பரம

ரசிக சிகாமணி யார்? 'ஐயோ!' என்ருரே, அவர்தாம். மற்றவர்களின் அறிவு சொல்லாகப் பேசுகிறது. அவரோ உணர்ச்சி வசப்பட்டு, அந்த உணர்ச்சியை, 'ஐயோ!' என்று வெளியிடுகிருர்.

கம்பன் இப்போது சொல்லால் கவிபாடும் நிலையை மீறி உணர்ச்சியை வடிக்கும் நுட்ப நிலைக்கு வந்து, 'ஐயோ!' என்கிருன். அங்கேதான் அவன் இராமலாவண்யத்தைச் சொல்லாமல் சொல்லி விடுகிருன். கல்லாலின் கீழிருந்து வாயாலே சொல்லாமலே சின்முத்திரையினுல் ஞான உபதேசம் செய்த தென்முகக் கடவுளை, 'சொல்லாமற் சொன்ன துரை' என்று ஒருவர் போற்றுகிருர். இங்கே கம்பனும் இராமலாவண்யத்தைச் சொல்லாமற் சொன்ன துரையாகவே காட்சி அளிக்கிருன். அவன் சொல்கிருன்; ஆனுல் அகராதியிலே பொருள் காணும் சொல்லாலே சொல்லவில்லை; உணர்ச்சியை விளக்கும் ஐயோ என்னும் அடையாளச் சொல்லாலே சொல்கிருன்.

ஐயோ! இவன் வடிவென்பதோர்
அழியா அழகுடையான்.

5

அந்த ஒரு சொல், 'ஐயோ!' என்னும் சொல், இராமன் அழகை அளவிட்டுச் சொல்லாமல் அநுபவத்தால் உணரச்செய்யும் சொல்லாக, எதுகையில் நின்று விளக்குகிறது அந்தச் சொல் நமக்குப் புதியது அன்று, நாமும் எத்தனையோ முறை அதைச் சொல்கிருேம். ஆனுல் நாம் அதைப் பயன்படுத்துவதற்கும் கம்பன் பயன் படுத்துவதற்கும் எத்தனை வேறுபாடு! நாம், 'ஐயோ!' என்ருல் அதைக் கேட்கிறவர்களுக்கு, 'தேளோ, பாம்போ?' என்கிற எண்ணந்தான் எழும்; திருடனே என்று அஞ்சுவர்;

தலைவலியோ காய்ச்சலோ என்று ஐயப்படுவார்கள். அதே சொல்லைக் கம்பன் இராமனது பேரழகைக் காட்டும் உணர்ச்சிக் குறியாகக் கவியில் பதித்து அழகு செய்து விட்டான். இங்கே எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒருவர் தம்முடைய குழந்தையின் பிறந்த நாள் கொண்டாட்டத்தைச் சுருக்கமாகக் கொண்டாடினர். ஐந்தாறு நண்பர்களை அழைத்து, மாலையில் சிற்றுண்டி அளித்தார். மேசை போட்டு அதன்மேல் அழகான பூவேலை செய்த துணியை விரித்துச் சிற்றுண்டி வகைகளைப் பீங்கான் பாத்திரங்களில் வைத்துப் பரிமாறச் செய்தார். பீங்கான் கிண்ணங்களும் தட்டுக்களும் வண்ணமும் அலங்காரங்களும் உடையனவாக இருந்தன.

விருந்து அருந்தப் போகும் சமயம் வீட்டுக்காரர் குழந்தை அங்கே வந்தது. மேசையின்மேல் விரித்திருந்த துணியைக் கண்டபோது அதற்கு அதனிடம் ஆசை உண்டாயிற்று. ஓடி வந்து அதை இழுத்தது. இதை யாரும் கவனிக்கவில்லை. தடுப்பதற்குள் துணியை இழுத்து விட்டமையால் மேசைமேல் இருந்த பீங்கான் கிண்ணங்களிற் பல கீழே விழுந்து உடைந்து விட்டன.

வீட்டுக்காரர் ஓடிவந்து குழந்தையை எடுத்துக் கொண்டார். பீங்கான் உடைசல்கள் அதன் காலைப் பொத்துவிடுமே என்ற பயம்! அங்கே வந்திருந்த கட்டிடக் கலையறிஞர் ஒரு சிறிய துண்டில் அந்த உடைசல்களை யெல்லாம் பொறுக்கி எடுத்துக்கொண்டார். இடத்தைச் சுத்தம் செய்த பிறகு வேறு பாத்திரங்களில் சிற்றுண்டிகளை வழங்கினார்கள். விருந்து முடிந்தது.

சில மாதங்கள் கழித்து அந்தக் கட்டிடக் கலையறிஞர் தாம் ஒரு சிறிய வீடு கட்டி யிருப்பதாகவும் அதற்கு வர

வேண்டுமென்றும் விருந்தளித்த நண்பரை அழைத்தார். அவர் அங்கே சென்றபோது தம் குழந்தையையும் அழைத்துக்கொண்டு போயிருந்தார். அவர் வீட்டையெல்லாம் பார்த்து மகிழ்ந்து பேசிக் கொண்டிருந்தார். அவருடைய குழந்தையோ வீட்டிலுள்ள கூடத்தில் குதித்து விளையாடிக் கொண்டிருந்தது. கூடத்தின் நடுவே தளத்தில் பூம்பொய்கையைப் போல ஒரு சித்திரம். தாமரை மலர்களும் அன்னங்களும் அப்பொய்கையில் இருந்தன. குழந்தை ஆசையோடு அந்தத் தாமரையின்மேல் கால் வைத்து, 'பூ, பூ' என்று குதித்துக் கொண் டிருந்தது.

அப்போது குழந்தையின் தந்தையும் அந்தக் கட்டடக் கலைஞரும் அங்கே வந்தனர். தளத்திலுள்ள சித்திரத்தை வந்தவருக்குக் காட்டிய கலைஞர், "உங்கள் வீட்டில் அன்று பொறுக்கிக் கொண்டேனே, அந்த உடைசல்களைக் கொண்டு செய்தது இது" என்றார்.

"என்ன!" என்று வியப்பில் ஆழ்ந்தார், குழந்தையின் தந்தை.

ஆம், உடைந்த பீங்கான் சில்களில் அந்த அந்த நிறத்துக்கு ஏற்றவற்றை அங்கங்கே பதித்து அந்தச் சித்திரக்கோலத்தை அமைத்திருந்தார் கலைஞர். எந்தச் சில்லின்மேல் குழந்தை கால் வைத்தால் இரத்தம் வரும் என்று தந்தை அஞ்சினாரோ அதே உடைசல்களின்மேல் இப்போது அக் குழந்தை நடனமாடிக்கொண்டிருந்தது. அந்தக் குழந்தைக்குப் பாத்திரத்தை உடைக்கத்தான் தெரிந்தது. உடைத்த துண்டுகளை ஒன்றாக்கிப் பதிக்கும் வகையில் பதித்து அழகுபடுத்தி விட்டார் கலைஞர்.

நாமும் எத்தனையோ சொற்களை உடைக்கிறோம். அவற்றால் பிறர் உள்ளத்தில் புண் உண்டாக்குகிறோம். கவிஞனோ அதே சொற்களைத் தக்கபடி கவிகளில் பொருத்தி

அழகுபடுத்திவிடுகிறுன். செருப்புக்கும் தேளுக்கும் திருட னுக்கும் கொலைகாரனுக்கும் அஞ்சி, 'ஐயோ!' என்று நாம் கூவுகிறேம். கம்பன் அதே சொல்லை அழகாகப் பதித்து இராமலாவண்யத்தை நுகரும் வண்ணம் செய்து விட்டான். அதை உணர்ச்சியுலகத்துக்குரிய வண்ணச் சொல் ஆக்கி விட்டான்.

இராமனுக்கு வடிவு வேறு, அழகு வேறு என்பது இல்லை. அழகே அவனுக்கு வடிவாகி விட்டது. அதற்கு மையையும் மரகதத்தையும் மழைமுகிலையும் மறிகடலையுமா உவமை சொல்வது?

ஐயோ! இவன் வடிவென்பதோர்
அழியா அழகுடையான்

என்பதில் கம்பன், உணர்ச்சியை உருவாக்கி நம் உள்ளத்தில் இன்ப ஊற்றைப் புகுத்துகிறுன்.

இப்போது பாட்டு முழுவதையும் பார்க்கலாம்:

வெய்யோன்ஒளி தன்மேனியின்
விரிசோதியின் மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும்
இளையானொடும் போனான்;
மையோமர கதமோ! மறி
கடலோ! மழை முகிலோ!
ஐயோ! இவன் வடிவுஎன்பதோர்
அழியாஅழ குடையான்!

'இவன் வடிவு மை முதலியனவோ! ஐயோ! என்று சொல்லும் வண்ணம் அழியாத அழகு படைத்தவனாகிய இராமன் போனான்' என்று வாக்கியம் முடியும்.

இராமனுடைய அழகு அழியா அழகு. அது புறக் கண்ணால் காணும் அழகாக இருந்தால் அழிந்து விடும்.

அகக் கண்ணால் காண்பது அது. அதைக் கம்பன் கண்டு சொல்கிறான்.

இந்தப் பாட்டில் முன் இரண்டடி அவ்வளவு முக்கியம் அல்ல; கதைத் தொடர்ச்சியை அவை சொல்கின்றன. அடுத்த இரண்டு அடிகளும், கம்பன் தனி நின்று அகக்கண்ணால் இராமன் அழகை நுகர்கிறான் என்பதையும், அதனைச் சொல்லால் சொல்ல முயல்கிறான் என்பதையும், சொல் நழுவும்போது உணர்ச்சி தழுவி நின்று அவனுக்கு வெற்றியைத் தருகிறது என்பதையும், ஐயோ என்பது அந்த உணர்ச்சியைக் குறிக்கும் அடையாளச் சொல்லாக நிற்கிறது என்பதையும் புலப்படுத்துகின்றன.

மன மாற்றம்

ஒரு நிலையில் இருந்த மனம் அதற்கு நேர் எதிரான நிலைக்கு மாறுவதென்றால் அது எளிதில் நிகழ்வ தன்று. சூழ்நிலையின் வலிமையால் அந்த மாற்றம் நிகழும். நிலம் பிளந்து பூகம்பம் உண்டாவதற்கு முன் நிலத்துக் குள்ளே மறைவாகப் பல இயக்கங்கள் நடைபெறும். அவை முதிர்ந்து பின்பு நில நடுக்கமாக விளையுமாம். அப்படியே ஒருவருடைய மனம் மாறுவதற்கு முன் அதற்குக் காரண மான இயக்கங்கள் அவரை அறியாமல் மனத்தின் அடியில் நிகழும்; பின்பு அது வெளிப்படையாக உருவெடுக்கும்.

காப்பியக் கவிஞர்கள் இத்தகைய மனமாற்றத்தை அழகாகச் சித்திரித்திருக்கிறார்கள். கம்பன் படிப்படியாக மனம் மாறிவரும் போக்கை நுட்பமாகக் காட்டுகிறான். இரண்டு உதாரணங்களைப் பார்ப்போம்.

1

ஒன்று கைகேயியின் மனமாற்றம். இது இராமாயணக் கதையில் மிகவும் முக்கியமானது. கைகேயியின் மனம் மாறாவிட்டால் இராமனுடைய கதை இவ்வளவு பரந்து விரிந்து நிலவ இடமே இல்லாமற் போயிருக்கும். இதனைக் கம்பனே சொல்கிறான்.

இரக்கம் இன்மைஅன் றேஇவ்
வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப்
பருகுகின் றதுவே?

இவ்வாறு கைகேயி இரக்கமின்றி மாறுவதற்கு முன் தூய நெஞ்சினளாகவே இருந்தாள். இராமனையே தன் மகனாக எண்ணி அன்பு செய்தாள். கம்பன், கதைப் போக்கில் இந்த உண்மையைப் புலப்படுத்துகிறான்.

இராமனுக்கு முடிசூட்டுவதென்பது நிச்சயமாயிற்று. நகரம் முழுவதையும் அலங்காரம் செய்து கொண்டிருந் தார்கள் மக்கள். இந்தச் செய்தியை முதல் முதல் மந்தரை கைகேயிக்கு அறிவித்தாள். அந்தக் கொடுமனக் கூனி விரும்பாத செயல் இது. அதனால் கைகேயியின் உள்ளத்தில் பொறாமையை எழுப்பும் வகையில் செய்தியைச் சொன்னாள்.

கூனி வந்தபோது கைகேயி பாற்கடலில் பவள வல்லி யைப்போல அணையின்மேல் கிடந்தாள். அவள் காலைத் தீண்டிக் கும்பிட்ட கூனி நஞ்சைக் கக்கத் தொடங்கினாள்.

"நன்றாயிருக்கிறது உன் தூக்கம்! தன்னை விழுங்கும் பாம்பு அணுகும்போதும் ஒளி வீசிக் கொண்டிருக்கும் சந்திரனைப்போல, பெரிய துன்பம் உன்னை அணுகிக்கொண் டிருக்கவும், அதுபற்றி வருந்தாமல் தூங்குகின்றாயே!" என்றாள்.

கைகேயி அதைக் கேட்டு, "எனக்கு என்ன துன்பம் வந்தது? என் குழந்தைகள் சௌக்கியமாக இருக்கிறார்கள். அவரவர்கள் அறநெறி திறம்பாமல் வாழ்கிறார்கள். இப்படி இருக்க, எனக்கு எந்த இடர் வரும்?" என்று கூறினாள் அதுமட்டும் அன்று. "புகழ்வதற்கரிய நல்ல மக்களைப் பெற்ற யாவரும் துயரத்தை நீத்து நன்மையைப் பெறு வார்கள். உலகத்துக்கெல்லாம் வேதம்போல நலம் பயக்கும்

இராமனைப் பிள்ளையாகப் பெற்ற எனக்கு இடர் உண்டாகுமோ?'' என்றும் கேட்டாள்.

''பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உராவரும் துயரைவிட் டுறுதி காண்பரால்;
விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்தஎற் கிடர்உண் டோ?'' என்றாள்.

[பராவரும் - புகழ்வதற்கரிய. பயக்க - பெற்றதனால். உராவரும் - சுழலும். உறுதி - நன்மை. எற்கு - எனக்கு]

இங்கே கைகேயி இராமனைத் தன் பிள்ளையாகவே வைத்துப் பேசுகிறாள். அவன் தனக்கு வரும் இடையூற்றைப் போக்கி இன்பம் தரும் புதல்வன் என்ற எண்ணம் அவள் கருத்தில் அழுந்தப் பதிந்திருக்கிறது. இராமனிடம் அவளுடைய அன்பு எவ்வளவு ஆழமாக இருந்திருக்க வேண்டும்! இதனைப் புலப்படுத்தவே கம்பன் அடுத்த பாடலின் தொடக்கத்தில், 'ஆழ்ந்த பேரன்பினாள்' என்று கூறுகிறான். இராமனைத் தன் மகனாகச் சொன்னது சம்பிரதாயத்துக்கோ உபசாரத்துக்கோ அன்று; அந்த வார்த்தை ஆழ்ந்த அன்பின் விளைவாக வருவது. அந்த அன்பு அவள் உள்ளத்தினூடே ஆழமாக வேரூன்றி நிற்கிறது. இதனைத் தான், 'ஆழ்ந்த பேரன்பினாள்' என்ற தொடர் குறிக்கிறது.

கூனி இதைக் கேட்டுச் சும்மா இருப்பாளா? ''உன் வாழ்வு போயிற்று. புத்திசாலியாகிய கோசலை தன் அறிவுத் திறமையால் வாழ்வு பெற்றாள்'' என்று வேறு பிரித்துப் பேசினாள்.

ஆழ்ந்தபே ரன்பினாள் அனைய கூறலும்
சூழ்ந்ததீ வினைநிகர் கூனி சொல்லுவாள்:
''வீழ்ந்தது நின்நலம்; திருவும் வீந்தது;
வாழ்ந்தனள் கோசலை மதியினால்'' என்றாள்.

[அனைய - அந்தச் சொற்களை. சூழ்ந்த - சுற்றிய. நலம் - நன்மை. வீந்தது - அழிந்தது.]

இராமனுக்கு வந்த வாழ்வு கோசலைக்குரியது என்றும் பரதனுக்கு வந்த இழிவு கைகேயிக்கு உரியதென்றும் வேறுபடுத்திக் காட்ட வருகிறாள் கூனி. கைகேயி, கோசலை வாழ்ந்தனள் என்பதை மட்டுக் காதில் வாங்கிக்கொண்டாள். "அப்படியா? அவள் வாழட்டும். அவளுக்கு முன்பே நல்ல வாழ்வு இருக்கிறதே. சக்கரவர்த்தியைக் கணவனாகவும் பரதனைப் பிள்ளையாகவும் பெற்றதைவிடப் பெரிய வாழ்வு அவளுக்கு என்ன இருக்கிறது?" என்றாள்.

அன்னவள் அவ்வுரை
உரைப்ப ஆயிழை,
"மன்னவர் மன்னனேல்
கணவன், மைந்தனேல்
பன்னரும் பெரும்புகழ்ப்
பரதன், பார்தனில்
என்இதன் மேல்அவட்
கெய்தும் வாழ்வு?" என்றாள்.

[ஆயிழை - கைகேயி. கணவன் மன்னவர் மன்னனேல், மைந்தன் பரதனேல்.]

கைகேயி, பரதன் தன் மகன் என்பதை மறந்து, அவன் கோசலையின் மகன் என்றே எண்ணியிருந்தாள். இராமனைத் தன் மகனென்றும், பரதனைக் கோசலை மகனென்றும் எண்ணியிருக்கும் கைகேயியினிடம் தான் சொல்ல வந்த செய்தியைச் சொன்னாள் கூனி.

அவள் பேச்சில் நஞ்சு இருக்கிறது. 'ஒரு பெண்ணைக் கொலை செய்த இராமன் நாளைக்கு முடிசூடப் போகிறான்' என்று தோற்றும்படி அவள் கூற்று இருக்கிறது.

அதைக் கேட்டவுடன் கைகேயிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. ஒரு முத்துமாலையை எடுத்துக் கூனிக்குத் தந்தாள். அவள் அதை வீசி எறிந்து வைதாள். பல பிதற்றினாள். தன் கோபத்தைக் கக்கினாள். பிறகு தன் நச்சுப் பேச்சை வீசினாள், படிப்படியாகக் காரணங்களைக் காட்டினாள். கோசலை நல்ல நிலையை அடையக் கைகேயி இழிந்த நிலையை அடையப் போகிறாள் என்பதை எடுத்துக் காட்டினாள். பரதனை நினைந்து இரங்கினாள்.

அவள் கூறியவற்றைக் கேட்கக் கேட்கக் கைகேயிக்குக் கோபம் பொங்கி வந்தது. அவளை நோக்கி, "என்ன பைத்தியக்காரப் பேச்சுப் பேசுகிறாய்? நீ எனக்கு நல்லவள் போலவும் பரதனுக்கு நல்லவள் போலவும் பேசுகிறாயே! நீ இருவருக்கும் நல்லவள் ஆகமாட்டாய். உனக்கே நீ நல்லவளாக இல்லையே! ஏதோ மனசுக்குத் தோன்றுவனவற்றையெல்லாம் வந்து சொல்லுகிறாயே! உன் பொல்லாத விதி தான் உன்னைத் தூண்டி விட்டது போலும்! போடி! புத்தி கெட்டவளே!" என்று சீறினாள்.

"எனக்கு நல்லையும் அல்லைநீ;
என்மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை; அத்
தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லை; வந்து
ஊழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை;
மதியிலா மனத்தோய்!"

என்பது அவள் கூற்றாகக் கம்பன் அமைக்கும் பாட்டு.

இது கைகேயியின் கோபத்தை வெளியிடுகிறது. 'மதியிலா மனத்தோய்!' என்பது அந்தக் கோபத்தை நன்றாகக் காட்டுகிறது. ஆனால் அவளுடைய அடிமனத்தில்

மாற்றம் நிகழத் தொடங்கி விட்டது என்பதையும் கம்பன் நுட்பமாக இப் பாட்டில் காட்டியிருக்கிருன். மந்தரையை வைது கூறும் கைகேயி, 'நீ யாருக்கும் நல்லவள் ஆகமாட்டாய்' என்று சொன்ஞள். பரதனைப் பற்றிச் சொல்லுகையில், '**என் மகன் பரதன்** தனக்கு நல்லையும் அல்லை' என்று கூறினுள். இதுகாறும் இராமனைத் தன் மகனென்றும், பரதனைக் கோசலை மகனென்றும் எண்ணிய எண்ணத்தினூடே ஒரு விரிசல் வந்து விட்டது. பரதன் தன் மகன் என்ற நினைவு அவளை அறியாமலே அவளைப் பற்றிக் கொண்டது. அவள் கூறிய வாய் மொழியில் அவளுடைய சினம் நன்ருகத் தெரிந்தாலும் அதனூடே மறைவாக அவளுடைய உள்மனத்தே நிகழும் மாற்றமும் நுட்பமாகப் புலனுகின்றது. மனத்தின் ஆழத்தில் தோற்றிய அந்த நுட்பமான மாற்றத்தை, '**என் மகன் பரதன்**' என்ற பேச்சுக் காட்டுகிறது.

மேலே, 'உன் நாக்கை அறுக்காமல் விடுகிறேன்; போ நீ' என்று கைகேயி கடிந்து கொண்டாள். ஆயினும் கூனி, தன் சூழ்ச்சி பலிக்கத் தொடங்கிவிட்டது என்பதை உணர்ந்து கொண்டாள். சிறிதே விரிசல் தோன்றினுல் பிறகு பிரிப்பது எளிதல்லவா? கைகேயி எவ்வளவு வைதாலும் அதைப் பொருட்படுத்தாமல் மேலும் பல நியாயங்களைக் கூறி, அவள் உள்ளத்தை அடியோடு மாற்றி விட்டாள். இராமனைக் காட்டுக்குப் போகும்படி செய்யும் அளவுக்குக் கைகேயி மாறிவிட்டாள்.

இந்த மாற்றத்தைப் படிப்படியாகத் தோற்றுவிக்கிருன் கம்பன். 'இராமனைப் பயந்த எற்கு' என்றும், கோசலைக்குப் '**பன்னரும் பெரும் புகழ்ப் பரதன் மைந்தன்**' என்றும் சொன்னவளே. '**என் மகன் பரதன்**' என்று சொல்லும் அளவுக்கு மனம் மாறி, பின்பு மந்தரையிடம், "இந்த உலகத்தை நீதான் என் மகனுக்குத் தந்தாய்' என்று

கூறித் தழுவிக் கொள்கிருள்; ஆரமும் பொருளும் வழங்கு கிருள்.

உரைத்த கூனியை உவந்தனள்
உயிருறத் தழுவி
நிரைத்த மாமணி ஆரமும்
நிதியமும் நீட்டி,
" இரைத்த வேலைசூழ் உலகம்என்
ஒருமகற் கீந்தாய்;
தரைக்கு நாயகன் தாய்தனி
நீ' எனத் தணியா. [1]

[நிரைத்த - வரிசையாக வைத்த. இரைத்த - முழங்கிய வேலை - கடல். தரைக்கு நாயகன் என்றது பரதனை.]

இப்போது அவள் நீட்டிய ஆரத்தையும் நிதியத்தையும் முன்னே தந்த மூத்து மாலையைப் போலக் கூனி எறிவாளா? அவள் எண்ணம் பலித்து விட்டதல்லவா?

2

வேறு ஓர் இடம். இராமன் சீதையுடனும் இலக்குவனுடனும் காட்டுக்குப் புறப்பட்டுவிட்டான். கங்கைக் கரையை வந்தடைந்தான். அங்கே குகன் தன் கூட்டத்தோடு வந்து அவனைக் கண்டான். இராமனைக் காணுவதற்குக் கையுறைகளோடு வந்தவன் அவன்.

இராமனைக் கண்ணிஞல் ஆர்வத்துடன் பார்த்து, மண்ணுற வணங்கி எழுந்து வாய் புதைத்து நின்ருன். "உட்கார் அப்பா" என்று இராமன் சொல்ல, அவன் அமர மனமின்றி நின்றுகொண்டே இருந்தான். இராமனிடத்தில் அவனுக்கு எல்லையில்லாத அன்பு

1. மந்தரை சூழ்ச்சி · 83

உண்டாயிற்று. தான் கொண்டு வந்த கையுறைகளை முன்னே வைத்து, "தேனும் மீனும் தேவரீர் அமுது செய்வதற்கு ஏற்றபடி நல்ல முறையில் கொண்டு வந்தேன். திருவுள்ளம் எப்படியோ?" என்று மெல்லக் கூறினான். காட்டுக்கு அரசன் ஆதலின் தேனும், கங்கைக் கரைக்கு உரியவன் ஆதலின் மீனும் அவனிடம் மிகுதியாக உண்டு. அவற்றைக் கொண்டுவந்தான்.

இராமன் அவற்றைப் பார்த்தான். தேன் மட்டும் இருந்தால் அதனை ஏற்றுக்கொண்டிருப்பான். அதனுடன் மீனும் அல்லவா இருக்கிறது? ஆயினும் குகனுடைய வஞ்சகம் அறியா அன்பை அப் பெருமான் நன்கு உணர்ந்து கொண்டான், குழந்தையைப் போலத் தன்னிடம் உள்ளவற்றைக் கொண்டு வந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைந்தான்.

அருகில் வயசு முதிர்ந்த மாதவர்கள் இருந்தார்கள். அவர்கள் மீனைக் கண்டு சற்றே அருவருப்பு அடைந்திருக்கக் கூடும். அவர்களைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தபடியே இராமன் குகனுக்குத் தன் அன்பைப் புலப்படுத்தினான்.

இருத்தினண் டென்ன லோடும்
இருந்திலன்; எல்லை நீத்த
அருத்தியன்; "தேனும் மீனும்
அமுதினுக் கமைவ தாகத்
திருத்தினென் கொணர்ந்தேன்; என்கொல்
திருவுளம்?" என்ன, வீரன்
விருத்தமா தவரை நோக்கி
முறுவலன் விளம்ப லுற்றான். [1]

1. கங்கைப். 41.

[இருத்தி - உட்காருவாயாக. அருத்தி - அன்பு. திருத்தினான் - ஒழுங்காக்கி. முறுவலன் - புன்சிரிப்புடையவனாகி.]

குகனை நோக்கி இராமன் உசிதமாகப் பேசினான். அவனுடைய அன்பைப் பாராட்டினான். ஆனால் அவன் அளித்தவற்றை உண்ணவில்லை. "உள்ளத்தின் அன்பால், அந்தச் சிறந்த அன்பு வெளிப்படக் கொண்டு வந்தவை இவை என்றால் அமுதத்தைவிடச் சிறந்தன என்றே கொள்ளவேண்டும். மிக்க பரிவோடு ஏற்றுக் கொண்டனவானால் தூயவை; எங்களுக்கும் உரியவை. அன்பை உணர்ந்து கொண்ட அளவில் இவற்றை நாம் உண்டவர்களே ஆகி விட்டோம் அல்லவா?" என்று நயமாக இராமன் பேசுகிறான்.

"அரியதாம்! உவப்ப உள்ளத்
தன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால்
அமிர்தினும் சீர்த்த அன்றே?
பரிவினில் தழீஇய என்னின்
பவித்திரம்; எம்ம னோர்க்கும்
உரியன; இனிதின் நாமும்
உண்டனம் அன்றோ?" என்றான். [1]

[அரிய - அரியவை. சீர்த்த - சிறப்புடையவை. பரிவு - அன்பு. தழீஇய - ஏற்றுக்கொண்டவை. பவித்திரம் - தூயவை.]

'பரிவினில் தழீஇய என்னின் பவித்திரம்; எம்மனோர்க்கும் உரியன' என்று இராமன் கூறும் போது, 'இவை இயல்பிலே பவித்திரம் அற்றனவானாலும் பரிவோடு ஏற்றுக் கொண்டால் பவித்திரம் ஆவன. இவை எம்மனோர்க்கு உரியன அல்லவானாலும் அன்பு கருதி எமக்கும் உரியன ஆயின' என்ற குறிப்பும் அதனூடே ஒலிக்கிறது.

1. கங்கைப். 42.

மேலே, இராமனும் குகனும் பேசினார்கள். மறு நாள் காலையில் தோணிகளைக் கொண்டுவந்து தங்களை ஆற்றுக்கு அக்கரையில் சேர்க்கவேண்டும் என்று இராமன் சொன்னான். இராமனுடைய கதையைக் கேட்டுக் குகன் வருந்தினான். அன்று இரவு குகன் அவர்களுடன் தங்கினான்.

மறுநாள் விடிந்தது. "நீ போய் நாவாய்களைக் கொண்டு வா" என்று இராமன் குகனிடம் சொன்னான். அப்போது குகன், "நீங்கள் இங்கேயே தங்கிவிடுங்கள். நானும் என் தோழரும் உங்களுக்கு ஏவல் செய்து வாழ்வோம். உங்களுக்கு வேண்டிய வசதிகள் யாவும் இங்கேயே கிடைக்கும்" என்று சொன்னான்.

முதல் முதலில் இராமனைச் சந்தித்தபோது இருந்த குகன் காட்டு வாழ்க்கையை உடையவன். அன்பிலே சிறந்திருந்தவனாயினும் இராமனுடைய பழக்க வழக்கங்களைத் தெரிந்துகொள்ளாதவன். ஆதலின் தேனும் மீனும் கொண்டுவந்து வைத்தான். இப்போதோ அந்தக் குகன், 'இராமன் மீன் நுகராத கருணையாளன்' என்பதை உணர்ந்து கொண்டான். இராமன் நயமாகப் பேசிய பேச்சினாலும், அவனுடன் ஓர் இரவு பழகிய பழக்கத்தினாலும் அவன் தெளிவு பெற்றான். இப்போது பேசும் குகன் மனத்தெளிவு பெற்ற குகன். இந்த மாற்றம் நிகழ்ந்ததைக் கம்பன் அவனுடைய பேச்சிலே காட்டுகிறான்.

"இங்கேயே தங்கினால் உங்களுக்கு வேண்டிய உணவுகள் உள்ளன. எங்கள் உயிர் உள்ள மட்டும் உடன் இருந்து உபசாரம் செய்வோம். விளையாட்டாகப் பொழுதைக் கழிக்கலாம். காடு இருக்கிறது. நீராடக் கங்கை இருக்கிறது. நான் இருக்குமட்டும் நீங்கள் இங்கே இருக்கலாம், வாருங்கள்" என்று அழைத்தான் குகன்.

"தேன்உள, தினைஉண்டால்;
தேவரும் நுகர்தற்காம்;
ஊனுள துணைநாயேம்
உயிருள; விளையாடக்
கான்உள; புனலாடக்
கங்கையும் உளதன்றோ?
நான்உள தனையும் நீ
இனிதிரு; நடஎம்பால்." [1]

[ஊன் உளதுணை - உடம்பு இருக்குமளவும். கான் - காடு. நான் உளதனையும் - நான் இருக்கு மட்டும். நட எம்பால் - எம் இடத்துக்கு வா.]

இதில் முதலில் உள்ள,

"தேன்உள தினைஉண்டால்;
தேவரும் நுகர்தற்காம்"

என்ற அடியே குகனுடைய தெளிவைக் காட்டுகிறது. 'தேனும் மீனும் அமுதினுக்கு அமைவதாகத் திருத்தினேன்' என்று முதல் நாள் சொன்ன குகன் இன்று மாறிவிட்டான். 'தேன் உண்டு, தினை உண்டு' என்று சொன்னதோடு கூட, 'எது பவித்திரம் என்பதைத் தெரிந்துகொண்டேன்' என்று குறிப்பிப்பவனைப் போல, 'தேவரும் நுகர்தற்கு ஆம்' என்று அதற்குச் சிறப்பைத் தருகிறான்.

இராமன் தான் போகவேண்டிய அவசியத்தைக் கூறினான். அப்பால் அவர்கள் தோணி ஏறிக் கங்கையைக் கடந்தார்கள். கரை கடந்தவுடன் மறுபடியும் குகன் ஒரு விண்ணப்பம் செய்துகொண்டான். 'நானும் உங்களுடன் வருகிறேன்' என்று அன்புடன் சொன்னான்.

1. கங்கைப். 55.

"காட்டிலே வழிகளைத் தேடிக் கண்டு பிடிக்க எனக்குத் தெரியும். நல்ல உணவுகளைக் கொண்டு வரத் தெரியும். நீங்கள் தங்குவதற்கு ஏற்ற உறைவிடத்தைச் சமைப்பேன். ஒரு கணமும் உங்களைப் பிரியாமல் வாழ்வேன். நானும் உடன்வரத் திருவுள்ளம் பாலிக்க வேண்டும்" என்று கெஞ்சுகிறான்.

"நெறியிடை நெறிவல்லே
    நேடினன் வழுவாமல்
நறியன கனிகாயும்
    நறவிவை தரவல்லேன்" [1]

என்று பேசினான்.

இங்கும் இராமனுக்கு எது இனிய உணவு என்பதைத் தெளிந்த உணர்வோடு பேசுகிறான். 'கனியும் காயும் தேனும் கொண்டுவந்து தருவேன்' என்று சொல்கிறான். அதிலும் முன் இருந்த அவனது மனநிலை மாறியது புலனாகிறதல்லவா?

---

1. கங்கைப். 64.

நாவாய் வேட்டுவன்

இராமன் அயோத்தியை விட்டுக் காட்டுக்குப் போய் மூன்று தம்பிகளைப் பெற்றான். ஒருவன் வன வேடனாகிய குகன்; மற்றொருவன் குரக்கினத்தரசனாகிய சுக்கிரீவன்; பின்னும் ஒருவன் அரக்கனாகிய விபீடணன். இயல்பாகத் தன்னுடன் பிறந்த மூன்று தம்பிகளுடன் தன் குணங்களில் ஈடுபட்ட இந்த மூவரையும் தம்பியாகவே கொண்டான் இராமன்.

அயோத்தியைப் பிரிந்து அந்த நகரத்தின் எல்லையைத் தாண்டிக் கங்கைக் கரையை அணுகியவுடனே குகன் எதிர்ப்படுகிறான். இராமனுடைய வனவாசத்தில் முதல் ஊதியமாகக் குகனுடைய நட்புக் கிடைக்கிறது. குகனும் இராமனிடம் ஈடுபட்டு விடுகிறான்.

புதுத்தம்பிகள் மூவராலும் இராமனுக்கு உதவி கிடைக்கிறது. அந்த மூன்றுமே கதையின் முடிவாகிய இராவண வதத்துக்குத் துணை நிற்கின்றன. அயோத்தியை விட்டுச் சென்ற இராமனுடைய வனவாசம் கங்கையின் தென்கரையிலிருந்து தொடங்குகிறது. இராமன் மேற்கொண்ட தவவாழ்க்கையின் தொடக்கத்தில் குகன் வந்து அவனைக் கண்டு இராமனையும் இலக்குவனையும் சீதையையும் நாவாயில் ஏற்றித் தென்கரைக்கு கொண்டு வந்து சேர்க்கிறான். இராவணவதத்துக்கு இராமனுடைய தென்றிசைப்

பயணம் மிகவும் இன்றியமையாதது. அதற்கு உதவு கிறான் குகன். பின்பு சுக்கிரீவன் குரங்குப் படைகளுடன் தானும் படைத்துணை யாகிறான். விபீடணனோ பல இரகசியங்களைத் தெரிவிக்கிறான்.

குகன் செய்த உதவி சிறியதாயினும் அது கைம்மாறு உதவாத உதவியாக இருக்கிறது. சுக்கிரீவனும் விபீடண னும் தம் தமையன்மாருடைய நாட்டைப் பெற்றார்கள். குகன் புதியதாக எதையும் பெற்றிலன். இராமனுடைய நட்பு ஒன்றையே பெறற்கரும் பேறாக எண்ணி இன்புற்றான்.

கம்பன் அவனுடைய இயல்புகளை இராமன் முன் வைத்தும், பரதன் முன் வைத்தும் நமக்குத் தெரிவிக் கிறான். இராமனோடு நம்மைக் கங்கைக்கரைக்கு அழைத்துச் சென்று, அங்கே குகனையும் வருவித்துக் காட்டுகிறான்; அவனுடைய தோற்றம், பேச்சு, செயல், எண்ணம் ஆகிய வற்றை ஓவியம்போல விளக்குகிறான்.

வேடனாகிய அவனுடைய இயல்புகளைச் சொல்வதற்கு முன்னால் இராமனை முனிவர்களிடையே விருந்தாளியாக இருக்கச் செய்கிறான். வால்மீகியில் இவ்வாறு இல்லை என்பார்கள்.

குகனுடைய புறத்தோற்றம் கடுமையானது; ஆனால் உள்ளமோ அன்பு மயமானது. அவன் இயல்புகளை நேரே சொல்வதைவிட, முனிவர்கள் இராமனை வரவேற்று உபசரிப்பதாகச் சொல்லிப் பிறகு அவன் வருகையைச் சொல்வதில் வேறுபாட்டு நயம் இருக்கிறது. முனிவருடைய உபசாரத்தையும் அன்பையும் ஏற்றுக்கொள்ளும் இராமன் நாவாய் வேட்டுவனுடைய அன்பையும் உணர்ந்து, உவகை அடைகிறான். "நீ என் தம்பி" என்று சொல்லும் அளவுக்கு அவனுடைய கருணை விஞ்சி நிற்கிறது.

அயோத்தியை விட்டுப் பிரிந்து வந்த இராமன் இடையில் உள்ள காட்சிகளையெல்லாம் கண்டும் சீதைக்குக் காட்டியும் வழி நடந்து கங்கைக் கரையை அணுகினான். அப்போது அவனுடைய வரவை அறிந்த முனிபுங்கவர்கள், 'எங்கள் செல் கதி வந்தது' என்று இன்புற்று வந்து மொய்த்தனர்; களிக்கூத்தாடினர்; பிறகு தம்முடைய தவப்பள்ளிக்கு அழைத்துக்கொண்டு சென்றனர். காய்களும் கிழங்குகளும் கனிகளும் தேடிக் கொண்டு வந்து, "தோன்றலே, நீ இந்தக் கங்கையில் நீராடித் தீயோம்பி அமுது செய்ய வேண்டும்" என்று வேண்டினார்கள். அப்படியே இராமனும் சீதையும் நீராடினர். செய்ய வேண்டிய கடன்களை முறைப்படி செய்தபிறகு இராமன் அம் முனிவர்கள் அளித்த விருந்தை நுகர்ந்து இன்புற்றான்.

அந்தச் சமயத்தில் குகன் வந்தான். அவன் ஆயிரம் ஓடங்களை உடையவன். எப்போதும் வில்லை ஏந்தி யிருப்பவன். கல் திரண்டாற்போன்ற தோளை உடையவன்.

கையில் குறிஞ்சி நிலத்திற்குரிய துடியை அவன் வைத்திருந்தான். நாய்கள் அவனைச் சுற்றி நின்றன. காலில் தோற்செருப்பை அணிந்திருந்தான். இருட்டைப்போன்ற நிறத்தை உடையவன். அவன், பல ஏவலராகிய வீரர் கூட்டத்தோடு வந்தான்.

தமிழ்நாட்டில் குறிஞ்சி நிலத்தில் வாழ்பவர்களாகிய வேட்டுவர்களுக்குத் தெய்வம் முருகன். இங்கே கங்கைக் கரை வேட்டுவனுடைய பெயர் குகன் என்பது. அது முருகனுடைய திருநாமம். பொதுவாக இந்த நாட்டில் வேட்டுவர் யாவருக்குமே முருகன் குலதெய்வம் என்று தெரிகிறது.

தொடையளவுக்குக் கரிய சல்லடத்தை அணிந்திருந்தான் குகன். உயர்ந்த உருவத்தை உடையவன் அவன்.

அரையில் தோலுடையைத் தாழ விட்டு உடுத்திருந்தான். அந்த ஆடையின் மேல் அரைப் பட்டிகையாகப் புலி வாலைக் கட்டியிருந்தான். பற்களைப் போல உள்ள சோழிகளைக் கோத்து அணிந்திருந்தான். அவன் தலைமயிர் இருட்டைத் தொடுத்தாற்போலக் கருகருவென்று இருந்தது. அவன் நெற்றிப் புருவம் நெல்லைத் தொடுத்து வைத்தாற் போல் இருந்தது. முன்கை உரோமமோ பனஞ் செறும்பு போலத் தோன்றியது. அவன் தடமார்பு பாறையைப் போல விளங்கியது. உடம்பு, இருட்டுக்கு எண்ணெயைப் பூசினதுபோல மின்னியது.

அவன் இடையில் கச்சோடு உடைவாள் கட்டியிருந்தான். அவன் பார்வை பாம்புப் பார்வையாகத் தோன்றியது. அவன் பேச்சைக் கேட்டால் அறிவுடையவர் பேசுவதுபோல இல்லை; பித்தர் பேச்சைப் போல இருந்தது. அவன் இடை வச்சிராயுதம் போன்றது.

தேனும் ஊனும் மீனும் உண்ணுவதால் அவன் வாயில் அந்த நாற்றம் அடித்தது. முகத்தில் புன்னகை உண்டா? சிறிதும் இல்லை. அவனுக்குக் கோபம் வரவேண்டும் என்பது இல்லை; சும்மா பார்த்தால் போதும்; 'தீ எழ நோக்குவான்.' அவன் குரலெடுத்து உரப்பினானால் கூற்றுவனும் அஞ்சுவான்.

கங்கைக்கு அருகில் சிருங்கிபேரம் என்னும் காட்டூருக்கு அவன் தலைவன். அவன் இராமனைக் காணுவதற்காக வந்தான். பார்த்தால் அஞ்சத்தக்க உருவமுடையவனானாலும் அவனுடைய அறிவும் குணமும் பின்னாலே விளங்குகின்றன. பெரியவர்களைக் காண வரும்போது கையில் ஏதேனும் கொண்டுபோக வேண்டும் என்பதை அவன் அறிந்திருக்கிறான். வேடர் தலைவனாகிய அவனைப்

பார்க்க வரும் வேடர்கள் கையுறைகளோடு வருவதை அவன் உணர்ந்திருப்பான் அல்லவா?

இராமனுடைய நாகரிக வாழ்க்கையை அவன் அறியான். ஆனால் அவனிடம் அன்பு பூண்டு வந்தான். தேனும் மீனும் கையுறையாகக் கொண்டு வந்தான்.

இராமன் தங்கியிருக்கும் இடத்தை அணுகிய போது தன்னுடன் வரும் வேடர்களை அப்புறத்தில் நிறுத்திவிட்டு, தான் வைத்திருந்த வில்லையும் வாளையும் வைத்துவிட்டுக் கையுறைகளோடு வந்தான். சிறிதும் தளர்வு இல்லாத மனத்தோடு, இராமனைக் காணப்போகிறோம் என்ற ஊக்கமும் அப்பெருமானிடம் உள்ள அன்பும் உந்தத் தவப்பள்ளியின் வாயிலை நண்ணினான்.

கம்பன் குகனுடைய ஆடை, அணி, படை ஆகியவற்றைச் சொல்வதைப் பார்த்தால் அவனை முரட்டு வேடன் என்றுதான் எண்ணத் தோன்றும். விரதத்தால் இளைத்த மேனியும் அருளொழுகும் கண்ணும் உடைய முனிவர், காயும் கிழங்கும் கனியும் அளிக்க உண்டு இராமன் இருந்த செவ்வியில், அவர்களுடைய தோற்றத்துக்கு முற்றும் மாறான தோற்றத்தைப் பெற்றவனாகக் குகன் வருகிறான். நச்சரவைப்போல நடுக்கஞ் செய்யும் பார்வையும், சீற்றமின்றியும் தீ யெழ நோக்கும் இயல்பும், கூற்றமும் அஞ்சக் குமுறும் குரலும் உடைய அவனிடத்தில் இராமனிடம் ஈடுபடுவதற்கு ஏற்ற பண்புகள் இரண்டு இருக்கின்றன; அவன் பிச்சராம் அன்ன பேச்சினன்; அன்பினன்,

தவப்பள்ளியின் வாசலில் போய் நின்று கூவ எண்ணினான் போலும்; பெரியவர்கள் இருக்கும் இடத்தில் நினைத்தபடி பேசக்கூடாதென்ற பண்பு தெரியாதவன். அவன் கூவா முன்னம் இலக்குவன் வந்தான். "நீ யார் அப்பா?" என்று கேட்டான். உடனே அன்போடு வணங்கினான்.

இலக்குவனைக் கண்ட குகன் அவனையே இராமன் என்று எண்ணிவிட்டான். "தேவா, நின் கழல் சேவிக்க வந்தேன்; நாவாய் வேட்டுவன், அடியேன்" என்றான்.

> கூவா முன்னம் இளையோன் குறுகி, "நீ
> ஆவான் யார்?" என, அன்பின் இறைஞ்சினன்;
> "தேவா! நின்கழல் சேவிக்க வந்தனென்;
> நாவாய் வேட்டுவன் நாய்அடி யேன்" என்றான். [1]

இலக்குவன் அவனைப் பார்த்தான். அவன் பேச்சையும் கேட்டான். தூரத்தில் நிற்கும் அவன் கூட்டத்தையும் கண்டான். குகனிடம் நல்ல எண்ணம் அவனுக்கு உண்டாகி விட்டது.

தோற்றத்திலிருந்து குகனுடைய பணிவு தெரியாது. ஆனால் அவன் தன் குழாத்தினரைத் தனியே நிறுத்திவிட்டு, வில்லையும் வாளையும் வைத்துவிட்டு வந்ததில் அவன் பணிவு தெரிந்தது; அவன் பேசத் தொடங்குவதற்கு முன் இறைஞ்சியதில் அந்தப் பணிவு பின்னும் நன்றாகத் தெரிந்தது; அவன் பேச்சிலோ அது மிக நன்றாக வெளியானதோடு அந்தப் பணிவுக்குக் காரணம் அன்பு என்பதும் புலனாயிற்று; "நின்கழல் சேவிக்க வந்தனென்" என்றதிலும், "நாய் அடியேன்" என்றதிலும் பணிவும் அன்பும் மணந்தன.

இலக்குவன், "நீ இங்கே நில்" என்று சொல்லிவிட்டு உள்ளே புகுந்து இராமனைத் தொழுது சொல்லத் தொடங்கினான். "உன்னைக் காணும்பொருட்டு வந்திருக்கிறான். நிமிர்ந்து நிற்கிற கூட்டமாகிய சுற்றத்தோடு வந்திருக்கிறான். உள்ளம் தூயவன். தாயினும் நல்லவன். மோதுகிற நீரை உடைய கங்கையில் உள்ள நாவாய்களுக்குத் தலைவன்; குகன் என்பவன்" என்று தெரிவித்தான்.

---

1. கங்கைப். 38.

''நிற்றிஈண்டு'' என்று புக்கு,
நெடியவற் றொழுது தம்பி,
''கொற்றவ, நின்னைக் காணக்
குறுகினன், நிமிர்ந்த கூட்டச்
சுற்றமுந் தானும்; உள்ளம்
தூயவன்; தாயின் நல்லன்;
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்கு
இறைகுகன் ஒருவன்'' என்றான். [1]

குகனுடைய வணங்கிய தோற்றமும் பணிந்த மொழியும் அவன் உள்ளத்தூய்மையை எடுத்துக் கூறின. ஆதலால், ''உள்ளம் தூயவன்'' என்றான். ''தாயின் நல்லன்'' என்று சொல்லுவதற்கு ஏதேனும் காரணம் இருக்க வேண்டும். குகன் இராமனுக்குக் கையுறையாகக் காட்டில் கிடைக்கும் பல்வேறு பொருள்களைக் கொண்டு வந்திருக்கலாம். அவற்றைக் கொண்டுவர வில்லை. அவன் உணவுப் பொருள்களையே கொண்டு வந்திருக்கிறான். தன் குழந்தைக்குப் பசிக்குமே என்று எண்ணுவது தாயின் சிறப்பியல்பு. அவன் கையில் ஏந்தி வந்திருக்கும் பண்டங்களைக் கண்ட இலக்குவனுக்கு இந்தப் பண்பு நினைவுக்கு வந்தது. ஆதலின், ''தாயின் நல்லன்'' என்றான்,

இராமன், இலக்குவன் கூறியதைக் கேட்டு, ''அவனை அழைத்து வா'' என்று கூற அப்படியே அவன் குகனை, ''வருக'' என்று சொன்னான், குகன் இராமனைக் காணும் பரிவு மிக்கவனாக விரைந்து உள்ளே புகுந்தான்.

முதலில் இலக்குவனைக் கண்டபோதே அவன் தோற்றத்தைக் கண்டு வியந்து, ''தேவா!'' என்றவன் இப்போது உள்ளே சென்று இராமனைக் கண்டான்; கண்ணாரக் கண்டான். அவன் திருமேனி அழகைக்

1. கங்கைப். 89

கண்டு அவன் உள்ளம் உருகியது. இருண்ட குஞ்சி மண்ணுறும்படியாகக் கீழே விழுந்து பணிந்தான்; அவன் உள்ளம் குழைந்ததுபோலவே உடம்பும் குழைந்தது. மேனி வளைத்து வாய் புதைத்து நின்றான்.

அண்ணலும் விரும்பி, "என்பால்
அழைத்திநீ அவனை" என்றான்;
பண்ணவன் "வருக" என்னப்
பரிவினன் விரைவிற் புக்கான்;
கண்ணனைக் கண்ணின் நோக்கிக்
கனிந்தனன்; இருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி
வளைத்துவாய் புதைத்து நின்றான். [1]

[அண்ணல் - இராமன். அழைத்தி - அழைப்பாயாக. பண்ணவன் - இலக்குவன். கண்ணனை - கரிய நிறமுள்ள இராமனை; கண்போன்ற இராமனை என்றும் சொல்லலாம். புதைத்து - மூடி]

குகனுக்கு நிமிரும் இடத்தில் நிமிர்ந்து, பணியும் இடத்தில் பணியத் தெரிகிறது. அவனுடைய அன்பும் பணிவும் அவனுடைய உரையிலும் செயலிலும் ஒரு காலைக்கொருகால் மிகுதியாகி வருகின்றன.

---

1. கங்கைப். 40.

தீராக் காதலன்

வாய் புதைத்துப் பணிவுடன் நின்ற குகனைக் கண்ட இராமன், "நீ அமர்க" என்றான். குகன் இராமனைக் கண் கொண்டு காணும் ஈடுபாட்டில், 'அவன் முன்னே நாம் உட்காருவதா?' என்று எண்ணினான், ஆதலின் இராமன் சொன்னதைக் கேட்டு அவன் உட்காரவில்லை.

மெல்லத் தன்னுடைய அன்பைப் புலப்படுத்திக் கொண்டே, "தேவரீர் உண்பதற்கு ஏற்றவாறு தேனும் மீனும் கொணர்ந்தேன். திருவுள்ளம் யாதோ?" என்று கேட்டான். அவனிடம் உண்டான மெய்ப்பாடுகள் அவனுடைய பேரன்பைப் புலப்படுத்தின. 'எல்லை நீத்த அருத்தியன்', அளவில்லாத ஆர்வமுடையவன் என்பதை அவனுடைய தோற்றமே எடுத்துரைத்தது. அவனுக்குத் தான் எத்தனை ஆசை! இராமனுக்கு இவை உணவாகும் என்று எண்ணித் தேனையும் மீனையும் கொண்டு வந்தான். அந்த இரண்டும் அவன் வாழும் இடத்திலும தொழில் செய்யும் இடத்திலும் கிடைப்பவை. ஆதலின் அவற்றைக் கையுறையாகக் கொண்டு வந்தான். 'இராமன் இவற்றை உண்பானா?' என்று அவன் யோசிக்கவில்லை.

இராமன் அவன் தோற்றத்தையும் சொல்லையும் கண்டான், கேட்டான். "எங்கள் ஆசாரத்துக்கு மீன் உதவாது" என்று சொன்னானா? இல்லை. அவனுடைய மாசு மறுவற்ற அன்பை நன்றாக உணர்ந்து கொண்டவன்

இராமன். ஆனாலும் அவன் கையில் வைத்திருந்த மீனைப் பார்க்கையில் அவனுக்குச் சற்றே நகை தோன்றியது. உடன் இருந்த முனிவர்கள் எப்படி நினைப்பார்களோ! ஆதலின் அவர்களைப் பார்த்துப் புன்னகை பூத்த இராமன், குகனைப் பார்த்துச் சில வார்த்தைகள் சொல்லலானான்.

" இருத்தி ஈண்டு" என்ன லோடும்
இருந்திலன்; எல்லை நீத்த
அருத்தியன்; "தேனும் மீனும்
அமுதினுக் கமைவ தாகத்
திருத்திளென் கொணர்ந்தேன்; என்கொல்
திருவுளம்?" என்ன, வீரன்
விருத்தமா தவரை நோக்கி
முறுவலன் விளம்ப லுற்றான்.

[இருத்தி - உட்காருவாயாக. அருத்தியன் - ஆர்வத்தை உடையவன். திருத்தினென் - சித்தம் செய்து; முற்றெச்சம். வீரன் - இராமன். விருத்த மாதவரை-முதிய முனிவர்களை.]

இராமன் குகனுடைய அன்பை உணர்ந்தவன்; ஆனால் அவன் கொணர்ந்ததை ஏற்க முடியாதவன். 'இது வேண்டாம்' என்றால் அந்த வேடர் தலைவனது மனம் புண்படும். ஆதலின் இராமன் அவன் உள்ளம் உவக்கவும், தன் வழக்கத்துக்கு மாறாகாதபடியும் நயமாகப் பேசினான். "மனமார அன்பு வைத்து ஆர்வம் வெளிப்படக் கொண்டு வந்தவை இவை; ஆதலின் இவை அரியவை; அமுதத்தைவிடச் சிறந்தவை. இவை தூயவையே. எங்களுக்கும் இவை உரியனவே. நாமும் இவற்றை உண்டவர்களே ஆகிவிட்டோம் அல்லவா?" என்றான்.

1. கங்கைப் படலம், 41

மீனைக் கண்ட மாதவர்களின் உள்ளத்துள்ளே அருவருப்பு உண்டாகி யிருக்க வேண்டும். 'இவை தூயன அல்ல' என்ற நினைப்பு அவர்களுக்கு இருப்பதை உணர்ந்தே இராமன் புன்முறுவல் பூத்தான். குகன் செய்தது பேதைமைச் செயல் என்று இராமன் எண்ணியிருந்தால் அவனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்திருப்பான். அப்படிச் செய்யவில்லை. 'விருத்த மாதவரை நோக்கி முறுவலன்' என்றே கம்பன் பாடுகிறான். அவர்கள் உள்ளத்திலே ஓடிய எண்ணங்களை உணர்ந்துகொண்ட இராமன், அவர்கள் குகனுடைய அன்பை அறியாமல் இருக்கும் அறியாமையை எண்ணியே முறுவல் பூத்திருக்க வேண்டும். அவர்கள் வாயாலே சொல்லாததை உணர்ந்து இராமன் விடை சொல்வது போலச் சொல்கிறான்.

"இவை எங்கும் எளிதில் கிடைக்கும்; அரிய பொருளல்ல" என்று ஒருவர் சொல்ல அதை மறுத்துச் சொல்பவனைப் போல, "அரிய தாம்" என்று ஆரம்பிக்கிறான் இராமன்.

" அரியதாம் உவப்ப உள்ளத்து
அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால்
அமிர்தினும் சீர்த்த அன்றே!"

'அரிய' என்று சொன்னாலே போதுமாக இருக்க, 'அரிய தாம்' என்று வற்புறுத்துவதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டும். முனிவர்களின் உள்ளத்தே தோன்றிய ஐயத்தைத் தெளிவிக்கும் பொருட்டே அவ்வாறு சொன்னான் இராகவன். அரிய என்று சொன்னதோடு அமையாமல், "அமிர்தினும் சீர்த்த" (அமுதத்தைவிடச் சிறப்புடையன) என்று சொன்னான். அதற்குக் காரணத்தையும் எடுத்துக் காட்டினான். அங்கேதான் குகனுடைய அன்பின் திறத்தை

இராமன் நன்கு உணர்ந்துகொண்டான் என்பது புலனாகிறது. குகன் உள்ளன்போடு தேனும் மீனும் கொண்டு வந்தான். அன்பில் பலவகை உண்டு. காதல் என்பது அன்பிலே விளைந்த கொழுந்து. காதலுக்கு வரையறை இல்லை. 'அகன்றிட்டாள் அகிலத்தார் ஆசாரத்தை' என்று அப்பர்சுவாமிகள் அந்தக் காதலின் வேகத்தைப் பாடுவார். அதுபோல வேறு ஒன்றையும் நோக்காத வேகமுடையது குகனது அன்பு. அந்த வேகமுள்ள நிலையில்தான் அதற்குக் காதல் என்ற பெயர் உண்டாகிறது. குகனிடம் அன்பு இருந்தது என்று சொன்னால் போதாது; உள்ளத்தில் ஆழ்ந்த அன்பு அது; அப்படிச் சொன்னாலும் போதாது. உள்ளத்து அன்பினால் அமைந்த காதல் அது. அந்தக் காதல் நன்றாகத் தெரியும்படி தேனும் மீனும் கொண்டுவந்தான். அவன் இது ஆகுமோ, ஆகாதோ என்று எண்ணாமல் தான் அரியனவென்று உண்ணுபவற்றை ஏந்தி வந்திருந்தான். குடுமித்தேவருக்கு ஊனை ஊட்டக் கொண்டுசென்ற கண்ணப்பனுடைய அன்புக்கு எத்தனை வேகம் இருந்ததோ, அத்தனை வேகம் குகனுடைய அன்புக்கும் இருந்தது. இவற்றை எண்ணியே இராகவன்,

> ''உள்ளத்து
> அன்பினால் அமைந்த காதல்
> தெரிதரக் கொணர்ந்த என்றால்
> அமிர்தினும் சீர்த்த அன்றே?''

என்று கேட்டான். அதோடு நிறுத்தினானா? குகன் அன்புடன் கொண்டுவந்தான்; அந்த அன்பை உணர்ந்தால்தான் அவன் கொணர்ந்தவற்றின் அருமை தெரியும். கொண்டு வந்த பொருளைப் புறக்கண்கொண்டு பார்ப்பதோடு நின்றால் அருவருப்புத் தோற்றும். ஆனால் கொண்டுவந்தவன் உள்ளத்தை, அதில் தோன்றிய அன்பை, அந்த அன்பால் விளைந்த காதலை அகக்கண் கொண்டு பார்த்தால்தான்

அவை அரியன என்றும், அமுதினும் சீருடையன என்றும் தெரியவரும். அப்படிப் பார்க்கும் பார்வை வேண்டும்; அந்தப் பார்வைக்கு மூலமாக இருப்பது அன்பை உணரும் பரிவு. குழந்தை அழுக்காக இருக்கிறதென்று காணும் போது அயலார் அதை அணுக மாட்டார்கள். ஆனால் பரிவுடைய தாயோ அதை அணைப்பாள். குகனுடைய காணிக்கையைப் பரிவுடன் நோக்கும் இயல்புடையாருக்கு அது மீனாகத் தோற்றாது; அவன் உள்ளப் பெருங்காதலின் அடையாளம் என்றே தோற்றும். அவன் உள்ளம் தூயவன் என்று, எதையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் இலக்குவனே சொன்னபோது, இராகவன் அந்தத் தூய்மையைக் கண்டுகொள்ள மாட்டானா? அந்த உள்ளத் தூய்மைக்குச் சின்னம் இந்தக் கையுறை என்று எண்ணினால் இவையும் தூயன என்றே தோன்றும். அப்படி எண்ணும் பரிவு இராமனிடம் இருந்தது.

ஆதலின்,

"பரிவினில் தழீஇய என்னில்
பவித்திரம்"

என்றான். "பரிவோடு ஏற்றுக்கொண்டால் இவை தூயன வாம்" என்ற பேச்சில் ஒரு சிந்தனை இருக்கிறது. பரிவோடு ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவை தூயன அல்ல என்றே தோன்றும். முனிவர்களுக்கு அப்படித் தோன்றின. அவர்கள் எண்ணத்தை அறிந்தே, எந்தக் கண்கொண்டு காணவேண்டும் என்பதை அறிவுறுத்தினான் இராமன்.

'இவை வேடர்கள் உன்பன; நமக்கு உரியன வாகுமோ?' என்று முனிவர்கள் எண்ணினார்கள். ஆதலின், "அரியவை தாம்; அமுதைவிடச் சிறந்தன; பவித்திரம்" என்று சொன்னதோடு நில்லாமல், "எம்மனோர்க்கும் உரியன" என்று இராமன் சொன்னான். அப்படிச் சொன்னபோது முனி

வர்கள் நிச்சயம் திடுக்கிட்டிருக்க வேண்டும். "வேடர்களுக்கு மாத்திரமன்று; நம்மைச் சேர்ந்தவர்களுக்கும் உரியன" என்று உம்மைச் சேர்த்துச் சொன்னான் இராமன். 'நமக்கு ஆகுமா?' என்ற ஐயப்பாட்டுக்குத் தெளிவுபோல இருக்கிறது அது.

குகனுடைய அன்பினால் அமைந்த காதலை இராமன் பரிவோடு உணர்ந்துகொண்டான். அந்த வேடன் கொணர்ந்த தேனையும் மீனையும் ஏற்றுக் கொண்டானா? முனிவர்கள், 'ஏற்றுக்கொள்வானோ?' என்று எண்ணித் திகைத்திருக்கலாம்.

குகனுடைய அன்பையும் அதை உணரும் முறையையும் எடுத்துச்சொன்ன இராமன், "இவற்றை நாம் உண்டவர்களே ஆகிவிட்டோம் அல்லவா, இவற்றின் பெருமையை உணர்ந்து கொண்டதனால்?" என்று சொல்லி மிகவும் நாகரிகமாகத் தன் பேச்சுக்கு முடிவு கட்டிவிடுகிறான்.

" அரியதாம் உவப்ப உள்ளத்து
அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால்
அமிர்தினும் சீர்த்த அன்றே!
பரிவினில் தழீஇய என்னிற்
பவித்திரம்; எம்ம னோர்க்கும்
உரியன; இனிதின் நாமும்
உண்டனம் அன்றோ?" என்றான், [1]

[அரியதாம் - அரியனவே. சீர்த்த-சிறப்பை உடையன. பரிவு - அன்பை உணரும் இரக்கம். தழீஇய - ஏற்றுக் கொண்டவை. பவித்திரம் - தூயவை.]

---

1. கங்கைப். 42

பிறகு இராமன், "நாங்கள் இங்கே இன்று தங்கி, நாளைக்குக் கங்கையைத் தாண்டிச் செல்ல வேண்டும். நீ உன் கூட்டத்தாரோடு உன் ஊர் சென்று இனிது தங்கி விட்டு, எங்களுக்கு வேண்டிய நாவாய்களோடு நாளை விடியலில் வா" என்று குகனை நோக்கிச் சொன்னான்.

இராமனுக்கு அருகில் முதலில் வந்தபோது அவனுடைய திருமேனி எழிலில் ஈடுபட்டான் குகன். அப்போது அவனால் ஒன்றும் பேச முடியவில்லை. முதலில் இராமனே பேசினான். பிறகு தான் கொணர்ந்த கையுறையைப் பற்றிக் குகன் கூறினான். அப்போதுதான் இராமன் குகனுடைய உள்ளன்பிலே விளைந்த காதலைப் பாராட்டினான். இப்போது குகன் தன் எண்ணங்களைச் சொல்லும் துணிவு பெற்றான். 'நீ நாளைக்கு வா' என்றவுடன் குகன் பேசலானான்.

'இனிமேல் ஒரு கணமும் இராமனைப் பிரியக் கூடாது' என்ற எண்ணம் அவனுக்கு வந்து விட்டது. பிரிய முடியாது என்றே தோன்றியது. ஆகவே, "ஊருக்குப் போய்வா" என்று இராமன் சொன்னது அவனுக்குப் பொறுக்க வில்லை. "இந்த உலகத்துக்கே தலைவனாகிய செல்வன் நீ; உன்னை மரவுரியோடு இந்தக் கோலத்தில் காண்கிறேன் நான். எனக்கு உன்னிடம் தக்க வகையில் அன்பு இருக்கு மானால், இந்த நிலையில் உன்னைப் பார்த்த கண்களைப் பிடுங்கி எறிந்திருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யவில்லை. கண்களோடு நிற்கிறேன். அத்தனை அன்பு இல்லாத கள்வன் நான். இந்தத் துன்பத்தோடு என் ஊருக்கு வேறு போய் இருப்பதா? நான் என் வீட்டுக்குப் போகமாட்டேன்' இங்கிருந்தபடியே ஏவல் செய்வேன்" என்று உள்ளம் நைந்து சொன்னான் குகன்.

கார்குலாம் நிறத்தான் கூறக்
காதலன் உணர்த்து வான்: "இப்
பார்குலாம் செல்வ! நின்னை
இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யான்;
இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன்; ஆன தைய
செய்குவன் அடிமை" என்றான். [1]

[கார்குலாம் நிறத்தான் - இராமன். காதலன் - குகன்' பார்குலாம் செல்வ - பாராகிய நிரம்பிய செல்வத்தை உடையவனே. ஈர்கிலா - பிடுங்கிவிடாத. இன்னலின் - துன்பத்தோடு. இருக்கை - இருப்பிடம். தீர்கிலேன் - போக மாட்டேன். ஆனது அடிமை செய்குவன் - என்னால் ஆன ஏவலைச் செய்வேன்.]

'உள்ளத்து அன்பினால் அமைந்த காதல் உடையவன்' என்று இராமன் தெரிந்து கொண்ட பிறகு குகனை எப்படி அழைப்பது? கம்பன், 'காதலன்' என்று குகனைக் குறிக்கிறான். கிராதர்வேந்தன், எயினர்கோன் என்று அவன் தலைமையைச் சொல்லத் தெரிந்தவன் கம்பன். இங்கே குகனுடைய காதல பேசுகிறது. இராமனிடம் அவனுக்கு இருந்த அன்பின் வேகம் பேசுகிறது. தன் நலத்தை மறந்து தன்னால் காதல் செய்யப் பெறுபவர் நலத்தையே நினையும் காதல் பேசுகிறது. ஆதலின், 'காதலன் உணர்த்துவான்' என்று கவிச்சக்கரவர்த்தி சொல்கிறான்.

இராமனுக்கும் குகனுக்கும் முன்பே பழக்கம் உண்டென்று வால்மீகி முனிவர் கதையை அமைத்திருக்கிறார். கம்பன் அப்படிச் சொல்லவில்லை. இப்போதுதான் முதல் முதலில் சந்திப்பதாக அப்புலவர் கோமான் அமைத்தான்.

1. கங்கைப். 44

இராமன் பெருமையைக் குகன், கேள்வியால் உணர்ந்திருக்கலாம். ஆனால் இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு அன்பைப் பரிமாறிக்கொண்டது இப்போதுதான்.

கண்டபோதே இராமனுக்குக் குகனுடைய உள்ளம் தெரிந்து விட்டது. அவனுடைய உள்ளன்பை முனிவர்கள் உணரும்படி சொல்லி விட்டான். இப்போது அவன் இங்கேயே இருந்து அடிமை செய்வேன் என்பதைக் கேட்ட போது இராமன், அந்த அன்பைத் தன்னோடு சேர்ந்தவர்களும் உணர வேண்டும் என்று எண்ணினான். குகன் சொன்னதைக் கேட்டவுடன் இராமன் சீதையையும் இலக்குவனையும் பார்த்தான். அந்த நோக்கம் இராமனுடைய உள்ளத்தை அவர்களுக்கு உணர்த்தியது. அவன் உள்ளத்தே, 'இவன் தீராத காதலுடையவன்' என்று எண்ணும் எண்ணத்தை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள், இராமன் எண்ணத்தைக் கருணையினாலே மலர்ந்த அவனுடைய கண்கள் காட்டின. உடனே திரும்பிய அக்கருணைக் கண்ணன், "யாதினும் இனிய நண்ப, இருத்தி ஈண்டு எம்மொடு" என்றான்.

கோதைவிற் குரிசில் அன்னான்
கூறிய கொள்கை கேட்டான்;
சீதையை நோக்கித் தம்பி
திருமுகம் நோக்கித் தீராக்
காதலன் ஆகும் என்று
கருணையின் மலர்ந்த கண்ணன்.
"யாதினும் இனிய நண்ப!
இருத்திஈண் டெம்மொடு" என்றான். [1]

[கோதைவில் குரிசில் - மாலையை அணிந்த வில்லையுடைய இராமன். அன்னான் - குகன். இருத்தி - தங்குக.]

1. கங்கைப். 45

குகன் இராமனிடம் கொண்ட காதலை மூன்று இடத்தில் சொல்லிவிட்டான் கம்பன். முதலில், 'அன்பினால் அமைந்த காதல்' என்று இராமன் சொல்வதாகச் சொன்னான். பின்பு கவியின் கூற்றாக, 'காதலன் உணர்த்துவான்' என்றான். இப்போது, 'தீராக் காதலன்' என்று இராமன் உள்ளத்தில் உள்ள குறிப்பிலே வைத்துச் சொன்னான்.

'எனக்கு இனிய பொருள் ஏதாயினும் அதனினும் இனிய நண்பனே!' என்று குகனுடைய அன்பைக் கண்டு கருணை பொங்கிய இராமன் சொல்லும்போது, அந்த வேடனிடம் இராமனுக்கு அந்த ஒரு நாளில் பெருகிய அன்பின் உரம் நன்றாகத் தெரிகிறது.

அவன் நாலாம் தம்பி ஆவதற்கு நிலைக்களம் உருவாகி வருகிறது.

விடைகொண்ட குகன்

"யாதினும் இனிய நண்ப, இருத்தி ஈண்டு" என்று இராமன் சொன்னதைக் கேட்ட குகனுக்கு உவகை பொங்கியது அவனைப் பிரியாமல் வாழும் வாழ்க்கைக்கு அது தொடக்கம் என்று அவன் நினைத்தானோ?

இராமன் அடியைத் தொழுதான் குகன். இரவு அங்கே தங்குவதென்று முடிவான பிறகு அதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யவேண்டும் அல்லவா? உடன் வந்திருந்த தன் தோழர்களை அவ்விடத்தைச் சுற்றிக் காவல் இருக்கச் செய்தான். ஒருவரா, இருவரா? அவர்கள் வெள்ளம்போலப் பரந்து நின்றார்கள், அக்காலத்தில் கங்கையை அடிக்கடிப் பலர் கடந்துகொண்டே இருந்தார்கள் போலும்! அவ்வளவு பேரையும் கரையேற்றத் தோணிகளும் ஆட்களும் அவனிடம் இருந்தது வியப்பன்று.

யாவரையும் சூழ இருந்து காவல் புரியும்படி சொல்லிவிட்டுக் குகன் கையில் வில்லை ஏந்திக் கொண்டு நின்றான்.

அடிதொழு துவகை தூண்ட
    அழைத்தனன், ஆழி யன்ன
துடியுடைச் சேனை வெள்ளம்
    பள்ளியைச் சுற்ற ஏவி,
வடிசிலை பிடித்து வாளும்
    வீக்கிவாய் அம்பு பற்றி
இடியுடை மேகம் என்ன
    இரைத்தவண் காத்து நின்றான்.[1]

---

1. கங்கைப். 46

[உவகை தூண்ட - மகிழ்ச்சி மேல் ஓங்க. சேனை வெள்ளத்தை அழைத்து ஏவி. அழைத்தனன்: முற்றெச்சம். வடிசிலை - நன்றாகச் செய்யப்பட்ட வில். வீக்கி - கட்டி. இரைத்து - ஒலித்து.]

இராமன் தன் நாட்டை விட்டு இந்தத் தவக்கோலத்தோடு புறப்பட்டதற்கு உரிய காரணம் இன்னதென்று தெளிவாகக் குகன் தெரிந்துகொள்ள வில்லை. இராமனைக் கண்டபோது உண்டான உணர்ச்சியும், அவனோடு பேசி அங்கேயே தான் தங்க இசைவு பெற்றதனால் உண்டான எழுச்சியும் இப்போது ஒருவாறு அடங்கி நிற்க, அவன் மனம் இந்தத் திறத்தில் எண்ணமிட லாயிற்று. 'அரசக் கோலத்தை மாற்றித் தவக்கோலத்தைச் சாத்திக் கொள்வதற்குக் காரணம் யாதாயிருக்கும்?' என்று யோசித்தான்.

அருகில் துயரமே வடிவமாக நின்றான் இலக்குவன். 'இராமன் நாடாளாமல் காடாளும்படி ஆயிற்றே!' என்ற பருவரல் அவனிடம் நிரம்பி யிருந்தது. அதன் அடியில் பரதனிடத்தும் கைகேயியினிடத்தும் மூண்ட கோபக்கனல் பதுங்கி யிருந்தது. குகன் அவனைப் பார்த்து, "ஐயனே, இப்பெருமான் திருநகரை நீங்கிக் காடு நோக்கி வந்த காரணத்தைத் தெரிவித்தருள வேண்டும்" என்று கேட்க, அவன் அந்த வரலாற்றைச் சொன்னான்.

இலக்குவன் தன் மனப்பாங்குக்கு ஏற்றபடியே அந்தச் செய்தியை உரைத்திருப்பான். அதைக் கேட்ட குகனுக்கும் மிக்க பரிவும் துன்பமும் உண்டாயின. முடிசூட்டு விழா நிகழவேண்டிய நாளில் நகரை நீங்கி நடக்கவேண்டி யிருந்ததே என்பதை எண்ணிய போது அவன் உள்ளம் இரங்கியது. இருகண் நீர் அருவியாக வழிந்தது, இராமன் குணம் நிறைந்தவன் என்பதை இதற்குள் அவன் நேரில் உணர்ந்து கொண்டான். பிறருடைய உள்ளத்தை அறியும்

பேராளன் என்பது அவனுக்கு நன்ருகப் புலனுயிற்று. அவன் திருநகர் தீர்ந்ததுபற்றி முதலில் இரங்கினுலும், பின்பு திருநகர் அவனை இழந்து நிற்றலை எண்ணுகையில் அவனுக்குக் கோசல நாட்டின் துர்ப்பாக்கியம் அது என்ற நினைவு தோன்றியது. 'ஆம், இவனை அரசனுக அடைவதற்குத் தவஞ் செய்தாள் நிலமகள்; அத்தவம் இவன் அரசகுமாரனுகப் பிறக்கும் அளவுக்குத்தான் பலித்தது. அதன் முழுப் பயனையும் அவள் பெறவில்லை. பெருநிலக் கிழத்தி நோற்றும் பெற்றிலள் போலும்!' என்று எண்ணினுன். இப்படி ஒன்றன்மேல் ஒன்ருக எண்ண அப்போது நேரமும் தனிமையும் இருந்தன அவனுக்கு.

> "திருநகர் தீர்ந்த வண்ணம்
> மானவ தெரித்தி" என்னப்
> பருவரல் தம்பி கூறப்
> பரிந்தவன் பையுள் எய்தி
> இருகண்ணீர் அருவி சோரக்
> குகனும்ஆண் டிருந்தான், 'என்னே!
> பெருநிலக் கிழத்தி நோற்றும்
> பெற்றிலள் போலும்!' என்ன. [1]

[திருநகர் - அயோத்தியை. மானவ - மக்களுட் சிறந்தவனே. தெரித்தி - தெரிவிப்பாயாக. பருவரல் - துயரத்தையுடைய. தம்பி - இலக்குவன். பையுள் - துன்பம். நோற்றும் - இவனைத் தன்பால் வந்து பிறக்கும்படி தவஞ் செய்தும். பெற்றிலள் - அதன் முழுப்பயனையும் பெற்ருள் இல்லை.]

இப்போது சூரியன் மறைந்தான். இராமனும் சீதையும் அவ்விரவில் அங்கே, தருப்பைப்புல்லையே படுக்கையாக விரித்து அதன்மேல் துயில்கொண்டனர். அவர்கள் அருகில்

1. கக்கைப். 46.

வில்லை ஏந்தியபடியே சற்றும் இமையைக் கொட்டாமல் இலக்குவன் காவல் புரிந்து நின்றான்.

அந்த இரவில் குகனைச் சேர்ந்தவர்கள் யானையின் கூட்டத்தைப் போலச் சற்றே விலகி நின்றும் சுற்றிக் கொண்டும் காவல் புரிந்தார்கள். அவர்களுடைய தலைவனாகிய குகனோ வில்லில் அம்பைப் பூட்டிக்கொண்டு நின்றான். அவன் நெஞ்சு வெம்பி இரங்கியது. இலக்குவனைப் போலவே அவனும் விழித்துக்கொண்டே நின்றான். இலக்குவன் உறங்காமல் நின்று காவல்புரிவதைக் கண்டபோதும், தனக்குத் தலைவனாகிவிட்ட இராமனுடைய நிலைமையை எண்ணிய போதும் அவனுக்குத் துயரம் பொங்கியது. அதற்கு அடையாளமாகக் கண்கள் நீரைக் கக்கின. கருகருவென்று நின்ற அவன் உருவம், அந்த இருளில் அருவி பொழியும் குன்றைப் போலத் தோன்றியது.

இராமனுடைய எழிலையும் குணத்தையும் பகலில் உணர்ந்த குகன் இவ்விரவில் இளையவனாகிய இலக்குவனது பண்பையும் உணர்ந்து கொண்டான் அது மட்டும் அன்று, உடன் பிறந்த தம்பியாகிய அவன் தன் அண்ணன்மாட்டு வைத்த அன்பினால் அவனைப் பார்த்துக் கொண்டு, உறங்காமல் விழித்து நிற்க, புதிய அன்பு பூண்ட குகனும் அவனைப்போலவே இமை கொட்டாமல் விழித்து நின்றான். அவன் இராமனைப் பார்த்ததோடு இலக்குவனையும் பார்த்துக் கொண்டு நின்றான். இராமன் பண்பையும் அவனிடம் அன்பு பூண்டவன் பண்பையும் அவன் ஒருங்கே இப்போது பார்த்தான்.

விடிந்தது. காலையில் ஆற்றவேண்டிய கடன்களை யெல்லாம் ஆற்றினான் இராமன். பின்பு குகனைப் பார்த்து, "நாங்கள் அக்கரை சேர்வதற்கு ஏற்ற நாவாயைக் கொண்டுவா" என்றான். நாவாயில் ஏறிக் கங்கையைக் கடந்து காட்டுக்குப்

போகும் அவனுடைய நோக்கம் குகனுக்குத் தெளிவாயிற்று. அப்போது அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. தீராக் காதலனாகிய அவனுக்குத் தான் இப்போது இராமனைப் பிரிந்து வாழ்வது இயலாத காரியம் என்று தோன்றி விட்டது. ஆகவே அப்போது இராமனிடம் ஒரு விண்ணப் பத்தைச் செய்து கொண்டான்.

அதை வாயால் உடனே சொல்ல முடியவில்லை. உணர்ச்சி மிகுதியால் அவன் வாயிலிருந்து சொற்கள் புறப் படுவதற்கு முன் கண்ணிலிருந்து நீர் புறப்பட்டது 'இவன் நம்மைப் பிரிந்து போய் விடுவானே!' என்ற எண்ணந்தான் இத்தகைய வருத்தத்துக்குக் காரணம்.

நீலமலரையும் காயாமலரையும் கடலையும் மேகத்தையும் நினைப்பூட்டும் நீல நெடுமேனி படைத்த இராமனைக் காணுந்தோறும் அந்தத் தோற்றத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டான் குகன். இராமனைப் பிரியமாட்டாத உள்ளத்தோடு அவனையும் சீதையையும் அடி பணிந்து தன் எண்ணத்தைச் சொல்லத் தொடங்கினான்.

ஏவிய மொழிகேளா
இழிபுனல் பொழிகண்ணன்,
ஆவியும் உலைகின்றான்,
அடியிணை பிரிகில்லான்,
காவியின் மலர்காயா
கடல்மழை அனையானைத்
தேவியொ டடிதாழாச்
சிந்தனை உரைசெய்வான். [1]

[ஏவிய - நாவாய் கொணர்க என்று சொன்ன. உலை கின்றான் - குலைகின்றான், காயா - காயாம்பூ. தாழா - வணங்கி.]

1. கங்கைப். 53

இராமனுடைய அடியிணையைப் பிரியும் ஆற்றல் இல்லாதவன் ஆகிவிட்டான் குகன். பிரிகில்லான் - பிரியும் ஆற்றல் அற்றவன். 'நாவாய் கொணருதி' என்ற சொல் இராமனிடமிருந்து வந்தது; அது அடுத்தபடி நிகழ வேண்டிய நிகழ்ச்சியைக் காட்டியது. ஆனால் தீராக் காதலனாகிய குகனுக்கு அதற்குப் பின் நிகழ இருக்கும் நிகழ்ச்சியும் உள்ளத்திலே தோன்றியது. கங்கையைக் கடப்பதோடு நிற்பானா இராமன்? அதற்கு மேல் குகனுடைய எல்லையையும் அல்லவா கடந்து செல்லப் போகிறான்? "கொண்டுவா, பிரம்பை!" என்று தண்டிப்பவன் கூறும் போதே அப்பிரம்பால் அடியுண்ணும் அநுபவத்தை எண்ணிக் குழந்தை புலம்புவதுபோல, "கொண்டு வா நாவாயை" என்றவுடன் பின்பு நேரப்போகும் பிரிவுதான் குகனுடைய உள்ளத்தே குடிகொண்டு உறுத்தியது. அதனால் இராமன், 'நாவாயைக் கொணர்க' என்று ஏவினாலும், 'நான் உன்னைப் பிரிந்து போகப் போகிறேன்' என்ற பொருளை உடையதாகவே அது குகனுக்குத் தோன்றியது. அதனால்தான் அம்மொழியைக் கேட்டவுடனே, அவன் கண் புனலைப் பொழிந்தது; அவன் ஆவி உலைந்தது; அவன் கண்முன் நின்ற பேரெழிற் பிழம்பான நீலவண்ணனைக் கண்ணீரிடையே கண்டு, 'இனி இக்காட்சி மறையுமே!' என்று சாம்பிக் காலில் விழுந்தான்.

குகன் விண்ணப்பம் செய்துகொள்ள லானான்.

பல காலம் உடனுறைந்து இராமனை வளர்த்த தாயின் அன்பு பொய்யாகிவிட்டது. இந்த ஒரு நாளில் உறவு பூண்ட குகன் அன்பு உண்மையானதா? நேற்று நிகழ்ந்ததையும் இன்று நிகழ்வதையும் இணைத்து ஒப்புநோக்குவது மனிதனுக்கு இயல்புதானே? இராமன் அவ்வாறு நினைக்காவிட்டாலும், இப்படி யாரும் நினைக்கக்கூடும் என்பதைக் குகன் எண்ணிப் பார்த்தான்.

"இன்று தோன்றி நாளை மறையும் அன்பு அன்று என் அன்பு. என்னுடன் சேர்ந்தவர்களும் பொய்யான முறை இல்லாதவர்கள். ஆதலின் நான் சொல்வது சம்பிரதாயத்துக்கு அன்று. உண்மையாகவே சொல்கிறேன்" என்று முதலில் பீடிகை போட்டுக்கொண்டு தொடங்கினான்.

"பொய்ம்முறை இலரேம்."

[நாங்கள் பொய்யான உறவுமுறை இல்லாதவர்கள்.]

காட்டுக்குப் போகவேண்டும் என்று சிற்றன்னை பெற்ற வரத்தை நிறைவேற்ற வந்தவன் இராமன். அவன் காட்டுக்குப் போனால்தான் கடமையைச் செய்தவனாவான். இப்போது குகன் அவனைத் தன்னுடன் தங்கிவிடும்படி விண்ணப்பித்துக்கொள்ளப் போகிறான். அது இராமன் மேற்கொண்ட விரதத்துக்கு இழுக்கல்லவா? காட்டிலே போய் வாழ வேண்டியவன் இடையிலே தங்கலாமா?

இந்தக் கேள்விக்கு முதலில் விடையிறுப்பவனைப் போலக் குகன் பேசினான். "தாங்கள் இங்கே தங்குவதனால் தங்கள் விரதம் குலையாது. காட்டுக்குப் போக வேண்டும் என்பதே தங்கள் கடைப்பிடி. இந்த இடமும் வனந்தான்; ஆதலின் இங்கே தங்குவதனால் தங்கள் விரதம் குலைய வழி இல்லை" என்பதை அடுத்தபடி குறிப்பாகத் தெரிவித்தான்:

"புகலிடம் வனமேயால்."

[எங்களுக்குப் புகலிடமாக இருப்பது காடுதான்.]

வனமே என்று ஏகாரம் போட்டுச் சொன்னான். காட்டிலே வாழப் புறப்பட்டுக் கங்கைக் கரையில் வாழலாமா என்ற ஐயத்தை நீக்குவதற்காக.

'தங்களுடைய விரதமும் நிறைவேறும்; எங்களுடைய வேட்கையும் தீரும்' என்பவனைப் போலப் பேசினான் வேடர் தலைவன்.

"நாங்கள் எதனாலும் குறைவில்லாதவர்கள். மிக்க வலிமையை உடையோம். எந்தக் குற்றேவலை யும் எந்த முறையிலே செய்யவேண்டுமோ, அப்படியெல்லாம் செய்வோம். தங்களுடைய திருவடிக்கு ஏவல் செய்பவர்கள் என்ற முறையைப் பாராட்டி எங்கள் ஊரில் தங்கவேண்டும். ஒரு நாள், இரு நாள் அல்ல; நெடுங்காலம் தங்கவேண்டும்" என்றான்.

"பொய்ம்முறை இலரேம்; எம்
புகலிடம் வனமேயால்;
கொய்ம்முறை உறுதாரோய்!
குறைவிலெம்; வலியேமால்;
செய்முறை குற்றேவல்
செய்குதும்; அடியோமை
இம்முறை உறவென்ன
இனிதிரு, நெடிதெம்மூர்." [1]

[கொய்ம்முறை உறுதாரோய் - முறையாகக் கொய் தலையுடைய மாலையை அணிந்தவனே; மாலையைக் கட்டி அது ஒழுங்காக இருப்பதற்காகக் கத்தரிப்பது வழக்கம். செய்குதும் - செய்வோம். இம்முறை - நாங்கள் ஏவலர், நீ அந்த ஏவலை ஏற்றுக்கொள்பவன் என்ற முறையுடையது. உறவு என்ன - இவர்கள் உறவு என்று எண்ணி.]

குகன் பல பேர்களை வைத்து வேலை வாங்கி ஆட்சி புரியும் பொறுப்புடையவன். இராமனுடைய பெருமையை உணர்ந்தவன். அவனை, 'எங்கள் ஊரில் தங்கிவிடு' என்று அன்பின் மிகுதியால் சொல்லிவிட்டு, பின்பு யானையைக்

1. கங்கைப். 54

கட்டித் தீனிபோடுவது போன்ற சங்கடத்தில் மாட்டிக் கொள்ளல் கூடும். குகன் அப்படி எண்ணவில்லை. தான் கூறுவதை உணர்ந்தே கூறினான். அவன் அவற்றை எண்ணியே பேசினான் என்பதைப் பேச்சினிடையே உள்ள குறிப்புகள் புலப்படுத்துகின்றன.

தன் பேச்சில் நம்பிக்கையை உண்டாக்க, 'பொய்ம் முறை இலரேம்' என்றான். இராமன் விரதம் குலையாது என்பதை உணர்த்த, 'புகலிடம் வனமேயால்' என்றான். அவன் வாழ்க்கைக்கு ஏற்ற பொருள்கள் அங்கே கிடைக் கும் என்பதை உணர்த்த, 'குறைவிலெம்' என்றான். வேறு வகையான பொருள்கள் வேண்டுமாயின் அவற்றைக் கொணர்வதற்கும், இடையூறு ஏதேனும் நேர்ந்தால் பாது காப்பதற்கும் உரிய ஆற்றல் தங்களிடம் உண்டென்பதை உணர்த்த, 'வலியேமால்' என்றான். 'காட்டரசனுக்கு அவன் ஏவலர்கள் செய்யும் குற்றேவல் வகைக்கும் நாட்டர சனுக்குரிய குற்றேவல் வகைக்கும் வேறுபாடு உண்டு; அவற்றை நான் நன்கறிந்திருக்கிறேன். அந்த முறை தவறாமல் இங்கே நாங்கள் ஏவல் புரிவோம்' என்பதைப் புலப்படுத்த, 'செய்முறை குற்றேவல் செய்குதும்' என்றான்.

அங்கே தங்குவதற்கு என்ன உரிமை இருக்கிறதென்ற கேள்விக்கு, 'நம்மிடையே ஓர் உறவு உண்டு' என்று விடை கூற வருகிறான். 'நாங்கள் உபசாரம் செய்கிறோம்; தாங்கள் அதனைப் பெறுகிறீர்கள் என்ற முறையில் அமைந்ததன்று இந்த உறவு. நாங்கள் ஏவலர்கள்; தாங்கள் எங்களுக்குத் தலைவர். இந்த உறவே தாங்கள் தங்கும் உரிமையைத் தருவது' என்று தெரிவிப்பதற்காக, "அடியோமை இம் முறை உறவென்ன" என்றான். "நெடிது எம் ஊர் இரு" என்று சொல்லுகிறான் குகன், 'இந்தப் பதினான்கு ஆண்டு

களும் இங்கேயே தங்கிவிட வேண்டும்' என்றே அவன் ஆசைப்பட்டான், 'எவ்வளவு காலம் ஓரிடத்தில் தங்குவது?' என்ற கேள்விக்கே இடம் இல்லை. 'அடியேமாகிய எங்களிடையே தலைவனாகிய நீ எவ்வளவு காலமும் இருக்கலாம்' என்பதைக் குறிப்பிப்பானைப் போல, "இனிதிரு நெடிது எம்மூர்" என்றான்.

மேலும் குகன் பேசினான். அந்தப் பேச்சில் இராமனுடைய பழக்க வழக்கங்களைக் கவனித்துத் தெரிந்து கொண்ட அறிவு பளிச்சிடுகிறது. தேனையும் மீனையும் கொண்டுவந்தவன் இப்போது மீனை மறந்தான். "தேவரும் நுகர்தற்குரிய தேனும் தினையும் இங்கே உண்டு; எம் உடலில் உயிருள்ள அளவும் நாங்கள் பாதுகாக்க இருக்கிறோம்; விளையாடக் காடு இருக்கிறது; புனலாடக் கங்கை இருக்கிறது; நான் உள்ளவரையில் எம்பால் தாங்கள் இருக்கலாம்" என்றான்.

> "தேன்உள தினைஉண்டால்;
> தேவரும் நுகர்தற்காம்;
> ஊன்உள துணைநாயேம்
> உயிருள; விளையாடக்
> கானுள; புனலாடக்
> கங்கையும் உளதன்றே?
> நானுள தனையும் நீ
> இனிதிரு; நடஎம்பால்." [1]

"இங்கே மிக மெல்லிய தோல் இருக்கிறது; துகிலைப் போலவே நன்றாக இருக்கும்; அதை அணிந்து கொள்ளலாம். இன்பத்தைத் தரும் மஞ்சங்களைப் போலப் பரண்கள் உள்ளன; அவற்றில் துயிலலாம். தனித்துப் பல இடங்கள் - குடிசைகள் - உள்ளன. எவ்வளவு நெடுங்

1. கங்கைப். 55. 'மனமாற்றம்' என்ற கட்டுரையில் இப்பாட்டின் பொருள் நயங்களை முன்பே பார்த்தோம்.

தூரத்தில் உள்ள பொருளேனும் கொண்டுவர வேகமாக ஓடும் கால்கள் எங்களுக்கு இருக்கின்றன. இடையூற்றுக்கு அஞ்சமாட்டோம்; அதை விலக்கும் வில்லைக் கையிலே பிடித்திருக்கிறோம். வானுலகத்தின் மேலுள்ள பொருளாக இருந்தாலும் விரைவிலே கொண்டு வந்து விடுவோம்:"

"தோல்உள துகில்போலும்;
சுகமுள தொடர்மஞ்சம்
போல்உள பரண்; வைகும்
புரைஉள; கடிதோடும்
கால்உள; சிலைபூணும்
கையுள; கலிவானின்
மேலுள பொருளேனும்
விரைவொடு கொணர்வேமால்." [1]

[துகில் - நுண்ணிய நூலால் ஆன ஆடை. தொடர் மஞ்சம் - கயிற்றுற் கட்டிய கட்டில். பரண், மஞ்சம்போல் உள. வைகும் - தங்கும். புரை - குறுகலாக உள்ள இடம்; இங்கே இலைக்குடில். சிலை - வில். கலி - முழங்கும்.]

"தங்கள் ஆணையின் வழி நடப்பதற்கு இங்கே ஆயிரக் கணக்கில் சிலைவேடர்கள் இருக்கிறார்கள். தேவரைப் போன்ற வலிமையை உடையவர்கள் அவர்கள். இங்கே ஒரு நாள் எம் குடிலில் தாங்கள் தங்கினாலே நாங்கள் உய்வை அடைவோம். அப்படியிருக்க, நெடிது தங்கினால் அதற்குமேல் வேறு நல் வாழ்வே எங்களுக்கு வேண்டியது இல்லை:"

"ஐயிரு பத்தோடைந்
தாயிரர் உளர் ஆணை
செய்குநர் சிலைவேடர்;
தேவரின் வலியாரால்;

1. கங்கைப். 56

உய்குதும் அடியேம்எம்
குடிலிடை ஒருநாள்நீ
வைகுதி எனின்; மேல்ஓர்
வாழ்விலை பிறிது'' என்றான்.[1]

[ஐயிருபத்தோ டைந்தாயிரர் - நூற்றிருபத்தைந்தாயிரம் பேர். ஐந்து லட்சம் பேர், முப்பதாயிரம் பேர் என்றெல்லாம் பொருள் கூறலாம். பல ஆயிரம் பேர் என்று தெரிவிக்கவே இப்படிச் சொன்னான். ஒரு நாள் தங்கினால் உய்வோம். மேல் - அதற்குமேல் ஆனால், வேறு இனிய வாழ்வே இல்லை.]

'நீ எம்முடன் ஒரு நாள் தங்கினாலே அது காரணமாக வேறு ஒரு நல்ல கதியில் நல்ல வாழ்வு எங்களுக்கு உண்டாகும். அதற்குமேல் நீ இங்கேயே தங்குவாயானால் உன்னோடு உறையும் வாழ்வே நாங்கள் அடையும் கதியாக ஆகிவிடும்' என்ற பொருள்படக் குகன் பேசினான்.

இராமன் எல்லாவற்றையும் கேட்டான். 'உனக்கும் விரதம் கெடாமல், சுகமும் குறையாமல், எங்களுக்கும் பயன் அதிகமாகும்படி இங்கே தங்கவேண்டும்' என்று குகன் படிப்படியாக எடுத்துச் சொன்னதை உளங்கொண்டான். அவன் அருள் மிக்கவன் ஆனான். புன்முறுவல் பூத்தான். "வீரனே, புண்ணிய நதிகளை ஆடிப் புனிதர்களை வழிபட்டுச் சில நாட்களில் வந்துவிடுகிறோம்'' என்றான்.

தான் இவ்வளவு சொல்லியும் இராமன் அவ்வாறு சொல்லவே, அவன் மேலே செல்வதையே விரும்புகிறான் என்பதைக் குகன் உணர்ந்துகொண்டான். ஆகவே அவன் இராமன் ஏவலைச் செய்ய முந்தினான். நாவாயைக் கொண்டு

---

1. கங்கைப். 57

வந்தான், இராமன் முனிவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு சீதையோடும் இலக்குவனோடும் அதில் ஏறினன், மெய் உயிர் அனையானாகிய குகன், நாவாயைச் செலுத்த அது அக்கரையை அடைந்தது. கரையில் இறங்கிய இராமன் குகனைப் பார்த்து, "சித்திர கூடத்துக்குப் போகும் வழி எது? சொல்" என்றான்.

அப்போதும் குகனுக்குப் பிரிவுத்துன்பம் பொங்கியது. "நாவாய் கொணர்க" என்றபோது உண்டான துயரம் இப்போது மீண்டும் தலை காட்டியது. இப்போதும் ஒரு விண்ணப்பத்தைச் சொல்ல முந்தினான்.

இராமன்பால் குகனுக்கு உள்ள அன்பை இங்கே கம்பன் பக்தி என்ற சொல்லால் குறிக்கிறான். ஆத்ம சமர்ப்பணம் செய்யும் இராமபக்தன் ஆகிவிட்டான் குகன், 'பத்தியின் உயிர் ஈயும் பரிவினன்' என்கிறான் கவிஞன். "இந்த அடிமை ஒன்று சொல்ல விழைகிறேன்" என்று இராமனை அடிபணிந்து குகன் சொல்லத் தொடங்கினான்:

அத்திசை உற்றைஐயன்
அன்பனை முகம்நோக்கி,
"சித்திர கூடத்திற்
செல்நெறி பகர்" என்னப்
பத்தியின் உயிர்ஈயும்
பரிவினன், அடிதாழா,
"உத்தம! அடிநாயேன்
ஓதுவ துளது" என்றான். [1]

[ஐயன் - இராமன். அன்பன் - குகன். நெறி - வழி]

மறுபடியும் அவன் சொல்வதற்கு என்ன இருந்தது? இராமனைப் பிரிவதற்கு மனம் பொருந்தாமல் இருந்தான்

1. கங்கைப். 63

குகன். ஆதலின், இங்கே இரு என்றான். அந்த வேண்டு கோள் பலிக்கவில்லை, இராமனைப் பிரியாமல் இருக்க மற்றொரு வழி இருக்கிறதே! அவனோடு குகன் போகலாம் அல்லவா? இந்த எண்ணத்தை அந்தப் பக்தன் வெளி யிடலானான்.

"வழியிடையே எது நல்ல வழி என்று முன் சென்று விரைவில் தேடி வருவேன். உரியகாலத்தில் நறுமணமும் சுவையும் உள்ள கனியையும் காயையும் தேனையும் கொண்டு வந்து கொடுப்பேன். தாங்கள் தங்குவதற்கு ஏற்ற இருப் பிடங்களை அமைப்பேன். ஒரு நொடிப்பொழுதும் உங்களைப் பிரியாமல் இருப்பேன். நாயினேன் உங்களுடன் வரும் பாக்கியம் பெற்றால் இவ்வளவும் நிகழ வாய்ப்பு இருக்கும். அருள வேண்டும்" என்று கெஞ்சினான்.

" நெறியிடை நெறிவல்லே
நேடினென் வழுவாமல்,
நறியன கனிகாயும்
நறவிவை தரவல்லேன்;
உறைவிடம் அமைவிப்பேன்;
ஒருநொடி வரைஉம்மைப்
பிறிகலன், உடன்ஏகப்
பெறுகுவென் எனின்நாயேன்." [1]

[நெறியிடை - பல வகையான கவர்த்த வழிகளி னிடையே. வல்லே - விரைவில். நேடினென் - தேடிக் கண்டுபிடித்து. நறவு - தேன். உறைவிடம் - தங்கும் இடம். நொடிவரை - நொடியளவு நேரம். உடன் ஏகப் பெறுகுவென் எனின், நாயேன் தரவல்லேன், அமைவிப்பேன், பிறிகலன் என்று கூட்டுக.]

1. கங்கைப். 64

"ஊனும் உறையுளும் திருவுள்ளத்துக்கு உகப்பாகச் செய்வேன்" என்ருன். மீனும் தேனும் முன்பு கொணர்ந்தவன் இராமனுடைய இயல்பை அறிந்து கொண்டமையால் இங்கும், 'கனியும் காயும் தேனும் தருவேன்' என்ருன்.

இராமனுடன் வருவதற்கு இசைவு கிடைத்து விட்டதென்ருல் குகன் இவ்வளவுதானு செய்வான்? ஏதாவது தீங்கு நேர்ந்தால் அவற்றைப் போக்குவான். எந்தக் காடு இராமன் தங்குவதற்கு ஏற்ற தூய்மையை உடையதென்று தேடிக் கண்டுபிடித்து வருவான். என்ன பொருள் வேண்டுமோ, அதையும் தேர்ந்து கொண்டுவந்து தருவான். எந்த வேலையானுலும் செய்வான். இருட்டாக இருந்தாலும் காட்டினூடே நுழைந்து செல்வான்.

இவற்றைக் குகன் சொன்னுன். காட்டு வாழ்க்கை இராமனுக்குப் புதிது; ஆனுல் குகனுக்குப் பழையது. அவனுக்கு அங்கே உள்ள நலம் தீங்குகள் எல்லாம் நன்ருகத் தெரியும். ஆகவே அவற்றை ஒவ்வொன்ருக அடுக்கிச் சொன்னுன்.

"மலைமேலே சென்று கவலைக்கிழங்குகளைத் தோண்டி வருவேன். நெடுந்தூரம் செல்வேன். நல்ல நீர் எங்கிருந்தாலும் கொண்டுவந்து தருவேன். எனக்குப் பாதுகாப்பாகப் பல வில்கள் இருக்கின்றன. எதற்கும் அஞ்சமாட்டேன். பகலும் இரவும் உங்கள் திருவடிகளைப் பிரியாமல் இருப்பேன்."

" கல்லுவன் மலைமேலும்
கவலையின் முதல்யாவும்;
செல்லுவன் நெறிதூரம்;
செறிபுனல் தரவல்லேன்;

வில்லினம் உளென்; ஒன்றும்
வெருவலன்; இருபோதும்,
மல்லினும் உயர்தோளாய்!
மலரடி பிரியாதேன்," [1]

[கல்லுவன் - தோண்டுவேன். கவலை - ஒரு கொடி. முதல் - கிழங்கு. வில் இனம் - பல விற்கள். வெருவலன் - அஞ்சேன்.]

"ஏதோ என் ஆற்றலை விரித்துரைப்பானைப் போலச் சொன்னாலும், தங்களைப் பாதுகாக்கும் திறமை உடையவன் என்ற எண்ணத்தால் இவைகளை நான் சொல்லவில்லை. தங்களுக்கு அடியேன் செய்யும் குற்றேவல் வகைகளையே சொன்னேன். தங்களைப் பாதுகாக்க நான் யார்? தங்கள் தோள்வலியை நான் நன்கு உணருவேன்" என்று உணர்த்துவானைப் போல, இடையே, 'மல்லினும் உயர்தோளாய்!' என்று விளிக்கிறான். மற்போர் செய்வார் தோளைவிடப் பருமையும் வலிமையும் படைத்தது இராமன் தோள்.

இவ்வளவும் செய்வது எதற்காக? அவனைப் பிரியாமல் இருப்பதற்காக. அதனால், 'மலரடி பிரியாதேன்' என்று இறுதியில் வைத்துப் பேசினான்.

மேலும் அவன் ஒன்று கூறினான். "என்னை உடன் வரப் பணிப்பதோடு, தங்கள் திருவுள்ளத்துக்கு உகப்பானால் என் சேனையையும் வரப் பணித்தால் உடன் கொண்டுவருவேன். இரவும் பகலும் விட்டு நீங்காமல் உடன் தங்குவேன். யாரேனும் பகைவர்கள் வந்தால் அவர்களோடு போரிடுவேன்; பகைவர் வலியரானால் என்னையே முதற்பலியாகக் கொடுப்பேன். என்னிடத்தில்

1. கங்கைப். 66

பழிக்குரிய ஒரு செயலும் இல்லை. ஆகவே இத்துணை காரணங்களால் நானும் உடன் வருகிறேன்.''

" திருவுளம் எனின்,மற்றென்
சேனையும் உடனேகொண்டு
ஒருவலென், இருபோதும்
உறைகுவன்; உளரானுர்
மருவலர் எனின்முன்னே
மாள்குவன்; வசையில்லேன்;
பொருவரு மணிமார்பா!
போதுவென் உடன்''என்றான். [1]

[ஒருவலென் - நீங்காமல். மருவலர் உளரானுர் எனின் - பகைவர் உண்டானல். போதுவென் - வருவேன்]

''உங்களோடு இருந்து வாழ்வதையே வாழ்வாகக் கருதுகிறேன். உங்களுக்குத் தீங்கு வருமாயின், அது கண்டு சும்மா இரேன். அது என் வலிமைக்கு அடங்காதென்றால் என் உயிரையும் ஈவேன்'' என்றான். சுமித்திரை இலக்குவனைப் பார்த்து, 'நீ இராமனுடன் போ' என்றபோது.

" மன்னும் நகர்க்கே இவன்வந்
திடின் வா; அதன்றேல்
முன்னம் முடி'' [2]

என்றாள். குகன் சுமித்திரை கூறியதைக் கேட்டவன் அல்லன். ஆனால் அவன், சிந்தனையாலும் அன்பாலும் இலக்குவனோடு ஒத்த தம்பியாகும் தகுதியுடையவன். ஆதலின், அவள் அங்கே இலக்குவனுக்குச் சொன்னதை இங்கே குகன் சொல்கிறான்.

---

1. கங்கைப். 67
2. நகர்நீங்கு. 151

இவ்வாறெல்லாம் பன்னிப் பன்னிப் பரிவும் அன்பும் பின்னிப் பின்னிப் பேசும் குகனுடைய பேச்சில் உளம் பறிகொடுத்தான் இராமன். 'முன்னே மாள்குவன்' என்ற வார்த்தைகள் குகனுடைய தீராக்காதலின் சிறப்பை நன்ருகப் புலப்படுத்தின. இராமன் தன் அருள்கனிந்த திருவாக்கினுல் குகனைத் தம்பியாக ஏற்றுக்கொண்டான்.

இராமன் முதலில் குகனைத் தீராக்காதலன் என்று தேர்ந்து, 'யாதினு மினிய நண்ப' என்ருன். பின்பு அவன் தன் வலிமையையும் ஏவல் திறத்தையும் பற்றிச் சொன்னபோது, 'வீர!' என்ருன். இப்போது, 'என் உயிர் அனையாய்! என்று கூறுகிருன்.

"என்உயிர் அனையாய்நீ;
இளவல்உன் இளையான்; இந்
நன்னுத லவள்நின்கேள்"[1]

என்ற கருணை வாசகம் இராமன் திருவாக்கிலிருந்து புறப்பட்டது. இந்த வாசகத்தைச் சீதையும் ஆழ்வார்களும் மிகமிகப் போற்றினுர்கள். இவ்வாசகம் வருவதற்கு இராமன், குகனுடைய அரிய பண்பையும் பக்தியையும் உணர்ந்து உருகியதே காரணம்.

"முன்புளெம் ஒருநால்வேம்;
முடிவுள தெனஉன்னு
அன்புள; இனிநாம்ஓர்
ஐவர்கள் உளராளேம்"[2]

என்று அவனைச் சகோதரனுக இராமன் ஏற்றுக் கொண்டான்.

---

1. கங்கைப். 68
2. ,, 69

"நீ துயருருதே. மீட்டும் வடக்கே வரும்போது நான் இங்கே வருகிறேன். உன் நலந் தீங்குகள் என்னுடையன அல்லவா? உன் சுற்றம் என் சுற்றம்; இவற்றைக் காப்பது உன் கடமை. நான் ஏவுகிறேன். அதன்படி இங்கே இரு" என்ருன்.

"என்கிளை இதுகாஎன்
ஏவலின் இனிதென்ருன்.'[1]

அறிவாளஞகிய இராமன் குகனைச் சிக்கவைத்து விட்டான். "என் ஏவலைச் செய்யும் முறையே நம் உறவு என்று சொன்ஞயே; நான் இப்போது ஏவுகிறேன். என் சுற்றமாகிய இக்கிளையை இங்கே இருந்து பாதுகாப்பாயாக!" என்று சொன்னபோது குகனுக்குப் பேச வழி இல்லை,

அவன் பணித்த மொழியை மீற இயலாத நிலையில் அகப்பட்டுக் கொண்டான் குகன். ஆனலும் பிரிவிஞல் உண்டான துக்கம், நியாயத்தைப் பார்க்குமா? அவன் பருவரல் நீங்க வழியில்லை. ஏதோ தீர்க்க இயலாத நோயால் பற்றப்பட்டவனைப்போன்ற நிலையில் இருந்தான், இராமனைப் பிரிந்து விடை பெற்ருன். இராமனும் பிறரும் புறப் பட்டார்கள்.

பணிமொழி கடவாதான்;
பருவரல் இகவாதான்;
பிணியுடை யவனென்னும்
பிரிவினன், விடைகொண்டான்;

---

1. கங்கைப். 71

அணியிழை மயிலோடும்
ஐயனும் இளையோனும்
திணிமரம் நிறைகானில்
சேணுற நெறிசென்றார்.

[பணிமொழி - பணித்த சொல். பருவரல் இகவா தான் - துயரம் நீங்காதவன். அணியிழை மயில் - சீதை. திணிமரம் - செறிந்த மரங்கள்]

இராமன் கட்டளைக்கு அடங்கித் தீராத ஏக்கத்துடன் குகன் நின்று விட்டான். இராமன் தன் காட்டு வாழ்க்கையின் முதல் அத்தியாயத்திலேயே ஒரு தம்பியைப் பெற்று அவனுடைய சிறந்த அன்பினை உணர்ந்து கொண்டான்.

குகன் சீற்றம்

கம்பராமாயணத்தில் வரும் குகன், உணர்ச்சி உருவாக இருக்கிறான். சிலருக்குக் கோபம் வந்தாலும் ஒரேயடியாக வரும்; வருத்தம் வந்தாலும் உச்ச நிலையில் வரும்; வியப்புணர்ச்சி தோன்றினாலும் மிகுதியாக இருக்கும். குகன் அத்தகைய மனப்பாங்குடையவன். இராமனைக் கண்டபோதே உணர்ச்சி வசப்பட்டு, "உன்னை இப்படிக் கண்ட கண்களைப் பிடுங்கிக் கொள்ளாமல் இருக்கிறேனே!' என்று அங்கலாய்த்தான், இராமனிடத்தில் உண்டான அன்பு, மிக விரைவில் உரம் பெற்றது.

இராமனை ஆற்றைக் கடத்திவிட்ட பிறகு குகனைப் பரதனோடு வைத்துக் காட்டுகிறான் கம்பன். குகப் படலம் என்னும் பகுதியில் குகனும் பரதனும் சந்திக்கும் நிகழ்ச்சி விரிவாக வருகிறது. அதில் பரதனுடைய பெருமையே சிறப்பாக மணக்கிறது. ஆயினும் அந்தப் பெருமை வெளிப்படக் குகன் ஒரு கருவியாகிறான்.

குகப்படலத்தில் குகனுடைய உணர்ச்சி இருவேறு திசையில் ஓங்கி நிற்கிறது. முதலில் கோபக் கோலத்தில் குகன் காட்சியளிக்கிறான். பிறகு பரதனிடம் அளவற்ற மதிப்பை வைக்கும் நிலைக்கு மாறி நிற்கிறான்.

இலக்குவன் வாயிலாக, இராமன் காட்டுக்குப் போக நேர்ந்த வரலாற்றைக் கேட்டவன் குகன். ஆகவே கைகேயியினிடமும் பரதனிடமும் அவனுக்கு அப்போதே சினப்பொறி முளைத்தது. அது வளர்வதற்குரிய செவ்வி ஒன்று நேர்ந்தது. பரதனும் கங்கைக் கரைக்கு வந்தான்.

பரதன், இராமனை மீட்டும் அழைத்துச் சென்று அயோத்தி மன்னன் ஆக்கிவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு புறப்பட்டான். தானும் மரவுரி புனைந்து சத்துருக்கனனுடனும் தாய்மார்களுடனும் ஊரிலுள்ள பலருடனும் புறப்பட்டுவிட்டான். கங்கைக்கரையை அணுகியது கூட்டம். வடகரையில் கூட்டம் வந்ததைத் தென் கரையிலிருந்தே குகன் பார்த்தான். கூட்டத்தின் முன் புழுதிப் படலம் தோன்றியது. இராமனைக் காட்டுக்கு அனுப்பக் காரணமாக இருந்தவன் என்ற நினைவினால் குகனுடைய எண்ணத்தில் பரதன் தாழ்ந்தவனாக, வஞ்சகமுள்ளவனாக இருந்தான். ஆகவே, பரதன் பெரிய சேனையுடன் இராமன் மேல் படையெடுத்து, மீண்டு வராமல் அவனைத் துரத்த வருவதாகவே எண்ணிக்கொண்டான். இதனால் அவனுக்கு அளவுக்கு மிஞ்சிய கோபம் வந்தது.

அப்படை கங்கையை அடைந்த ஆயிடைத்
துப்புடைக் கடலின்நீர் சுமந்த மேகத்தை
ஒப்புடை அண்ணலோ டுடற்ற வேகொலாம்
இப்படை எடுத்ததென் றெடுத்த சீற்றத்தான். [1]

[பரதனோடு வருகிற கூட்டம் கங்கையின் வடகரையை அடைந்த அச்சமயத்தில், 'தூய்மையுடைய கடலின் நீரை உண்டு சுமந்த கருமேகத்தை ஒப்பான இராமனோடு போரிடவே இந்தப் படை எடுப்போ?' என்று பொங்கி எழுந்த கோபத்தை உடையவனானான் குகன்.]

இராமனை நினைக்கும்போதெல்லாம் குகனுக்கு அவனுடைய அழகிய திருமேனி அகக்கண்முன் வந்து நிற்கிறது. 'கடலின் நீர் சுமந்த மேகத்தை ஒப்புடை அண்ண'லாகப் பார்க்கிறான். இதற்குமுன் குகனுக்கு வேறு வேறு வகையில்

1. குகப்படலம், 6.

உறவினரும் பகைஞரும் இருந்தனர். அவன் இராமனுடைய அன்புக்கு ஆளான பிறகு அவன் நலந்தீமைகள் இராமனோடு இணைந்தே அமைந்து விட்டன. இராமனுக்கு நண்பர்கள் அவன் நண்பர்கள்; இராமனுக்குப் பகைவர்கள் அவன் பகைவர்கள்.

குகன் இராமனிடம் அன்பு உள்ளவன் ஆகிவிட்டதனால் பரதனைக் கண்டு சினக்கிறான். அவன் உணர்ச்சி வசப்படுபவன் ஆதலால் ஆற அமர யோசித்துத் தெளியும் இயல்பு அவனிடம் இருக்கவில்லை. ஆகவே, பரதன் ஏன் அப்படிப் படையெடுத்துவர வேண்டும் என்று யோசிக்கவில்லை. பரதனும் இராமனிடம் அன்புடையவன்; குகனும் அத்தகையவன்தான். ஆனால் குகன் பரதனுடைய அன்பை உணரவில்லை.

ஒரு வீட்டில் ஒரு பசு கன்றை ஈன்றிருக்கிறது. அந்த வீட்டுக்கு அயலூரிலிருந்து ஒரு முதியவர் வந்திருக்கிறார். அவருக்கு வீட்டுக்காரன் புதிதாக ஈன்ற கன்றையும் பசுவையும் காட்டுகிறான். முதியவர் பசுவின் இயல்பை உணர்ந்தவராகையால், கன்றுக்குட்டி சேய்ப்பாலை அதிகமாக ஊட்ட விடக் கூடாது என்று சொல்கிறார், வடிகஞ்சியைக் கொடுக்கலாம் என்றும் யோசனை சொல்கிறார். ஒரு மூங்கிலை இரண்டாக வெட்டி அதன் நுனியை மூக்குடையதாக்கிக் கன்றுக் குட்டிக்குக் கஞ்சியூட்டும் பாலோடைபோலச் செய்கிறார். கஞ்சியும் மூங்கிலுமாக அவரே கன்றுக்குட்டிக்கு ஊட்டச் செல்கிறார். அப்போது பசுமாடு அவரை முட்டவருகிறது. அந்தக் கிழவர் கன்றின்மேல் உள்ள அன்பினால் கஞ்சி ஊட்டச் செல்கிறார். பசுவும் கன்றின் மேல் உள்ள அன்பினால்தான் முட்டவருகிறது. ஓர் அன்பை மற்றோர் அன்பு உணர்ந்து கொள்ளவில்லை.

பசுவினிடம் வெறும் அன்பு இருக்கிறதேயன்றி அறிவு இல்லை; அதனால், யோசித்துத் தெளிந்து முதியவரின் அன்பை உணருகின்ற பான்மை அதற்கு இல்லை. அந்தப் பசுமாட்டின் நிலையில் இருந்தான் குகன். பரதனை முட்ட வரும் பசுவைப்போல் ஆரவாரித்தான். அவன் நின்ற நிலையைக் கம்பன் நான்கு பாடல்களில் சொல்கிறான்.

'குகன் என்னும் பெயருடையவன்; கூற்றுவனுடைய ஆற்றலைப் பெற்றவன்; கூட்டமாக வந்த வலிமையுடைய சேனையைத் துகளைப் போல் அலட்சியமாகப் பார்க்கிறவன்; அவன் வாயிலே அந்த அலட்சியத்தால் வந்த சிரிப்பு; கண்களில் கோபக்கனல்; நாசியில் அதன் புகை, புருவமாகிய வில்லை வளைத்துக் கோபத்தோடு நின்றான். அவனுடைய ஏவலர்கள், யமன் பல உருவத்தை எடுத்து வந்தாற்போல இருந்தார்கள், வில் வித்தையிற் சிறந்தவன் அவன்.''[1]

அவன் தன் இடையில் உடைவாளைக் கட்டியிருக்கிறான். வாயை மடித்துக் கடித்துக் கொள்கிறான்; கோபம்! பேச்சு வெட்டென்று வருகிறது. கண்ணை விழித்தால் கனல் கொப்புளிக்கிறது. உடுக்கையை அடித்துக் கொண்டும் கொம்பை ஊதிக்கொண்டும் நிற்கிறான். போர் கிடைத்திருக்கிறதென்று பூரிக்கும் தோளையுடையவனாக இருக்கிறான்.

கட்டிய சுரிகையன்; கடித்த வாயினன்;
வெட்டிய மொழியினன்; விழிக்கும் தீயினன்;
கொட்டிய துடியினன்; குறிகக்கும் கொம்பினன்;
கிட்டியது அமர்எனக் கிளர்ந்த தோளினன்.[2]

---

1. குகப் படலம், 7-9
2. ,, 9

[சுரிகையன் - உடைவாளை உடையவன், வெட்டிய - கடுமையாகப் பேசும், துடி - உடுக்கை, குறிக்கும் - ஊதும், கிளர்ந்த - உயர்ந்து வீங்கிய.]

வருகிற கூட்டம் பெரிதாகத் தோன்றுகிறது. முன்னே உள்ள புழுதியைப் பார்த்தாலே அப்படி ஊகிக்கும் படி இருக்கிறது. அதைப் பார்க்கிறான். "எவ்வளவு பெரிய படையாக இருந்தால் என்ன?" என்று அலட்சிய மாகப் பேசுகிறான். "இத்தனை படையும் எலிக் கூட்டம்; நான் பாம்பு" என்கிறான்.

அருகில் அவனுடைய தோழர்கள் நிற்கிறார்கள். அவர்களைப் பார்த்து, "யார் வந்தாலும் சரி; ஓடத்தை விடாதீர்கள். இங்கே வருகிறவர்களைப் பிடியுங்கள்" என்று சொல்லும்போது அவன் சினம் கனன்று பொங்குகிறது; தென் கரையில் நின்றபடியே அவன் பேசலானான்.

அவன் பேச்சைப் பத்துப் பாட்டுக்களால் கம்பன் விரித்து அமைக்கிறான், அவனுடைய வெட்டிய பேச்சுக்கு ஏற்றபடி சந்தத்தை மாற்றுகிறான்.

2

"அஞ்சன வண்ணன்என் ஆருயிர்
நாயகன் ஆளாமே
வஞ்சனை யால்அர செய்திய
மன்னரும் வந்தாரே!
செஞ்சரம் என்பன தீஉமிழ்
கின்றன; செல்லாவோ?
உஞ்சிவர் போய்விடின் நாய்குகன்
என்றெனை ஓதாரோ?"[1]

1. குகப் படலம், 14

என்று தொடங்குகிறது அவனுடைய சீற்றக் குமுறல். பரதனுக்கும் குகனுக்கும் நேர்முகமான பகை யாதும் இல்லை. இராமன் என்னும் கண்ணாடி வழியே பார்க்கும் நிலை வந்த பிறகு இராமனுக்குப் பகைவனாகத் தோற்றிய பரதன் அவனுக்கும் பகைவனாகிறான். அதனால் பரதனைக் கண்டவுடன் குகனுக்கு இராமன் நினைவுதான் வருகிறது. இராமன் நினைவோடே உலகம் முழுவதையும் பார்க்கும் வகையில் குகன் மாறியிருக்கிறான் அல்லவா? ஆதலின் இராமனை முதலில் நினைக்கிறான் அவனுடைய அஞ்சன வண்ணத் திருமேனியில் ஈடுபட்டவன் ஆதலின் அந்த அழகை நினைக்கிறான். அவனிடம் இப்போது, தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் சமர்ப்பித்தவன் குகன், இராமன் அயோத்திக்கு நாயகன், உலகுக்கு நாயகன், குகனுடைய ஆருயிர்க்கு நாயகன். அந்த நாயகன் அல்லவா ஆளவேண்டும்? என்ன நேர்மை அற்ற நிலை! அவன் ஆளவில்லை. அவன் ஆளாமல் நாட்டைக் கைவிட்டதற்குக் காரணம் என்ன? போரிலே வென்றோ, இரந்தோ பெறாமல் வஞ்சனையால் ஒருவன் அதைப் பெற்றுக்கொண்டான். சீ! அவனும் ஒரு மன்னனா? இப்படி எண்ணும்போது அவனுடைய பேச்சில் இழிவு தொனிக்கிறது. மரியாதையாகச் சொல்லும் வார்த்தையைச் சில சமயங்களில் அதற்கு உரியவர் அல்லாதவர்களிடத்தும் கோபத்தால் சொல்வது உலக இயல்பு. பள்ளிக்கூடம் போகாமல் அலைந்து திரிந்துவிட்டு மாலையில் பையன் வீட்டுக்கு வந்தால், "பெரியவர் ஊரெல்லாம் சுற்றிவிட்டு வருகிறார்!" என்று தந்தை சொல்கிறார். அது மரியாதைப் பேச்சா? அந்த மரியாதை யுருவத்தில் கோபம் குமுறுகிறது.

குகன் பரதனைப்பற்றி அவ்வாறுதான் பேசுகிறான்.

"வஞ்சனை யால்அர செய்திய
மன்னரும் வந்தாரே!"

என்கிறுன். மன்னரும் என்ற சொல்லில் உள்ள பன்மை, மதிப்பைக் காட்டவில்லை; இளிவரலைக் காட்டுகிறது. மன்னரும் என்ற உம்மையும் அதை மிகுதிப்படுத்திக் காட்டுகிறது.

"வஞ்சனையினுல் அரசைக் கைப்பற்றிக்கொண்ட இவர்களை நான் சும்மா விடுவேனு? என்னிடம் படைக் கலம் இல்லையா? இதோ செஞ்சரங்கள் உள்ளன; தீயைக் கக்கிக் கொண்டிருக்கின்றன; இவை போக மாட்டாவா?" என்று தன் ஆயுத வலிமையை எடுத் துரைக்கிறுன். அம்புக்குரிய இலக்கணங்கள் யாவும் அமைந்த சரத்தைச் செஞ்சரம் என்கிறுன். அது விட்டவுடன் தன் வேலையை முடிக்கும் திறமுடைய தென்பதை உணர்த்த, "தீ உமிழ்கின்றன" என்கிறுன்.

கடைசி அடியில் உலகியலை எண்ணிப் பேசு கிறுன்.

> "உஞ்சிவர் போய்விடின் நாய்குகன்
> என்றெனை ஓதாரோ?"

"இவர்கள் உயிர் பிழைத்துக் கங்கையைக் கடந்து போய் விட்டால், குகன் நாய் என்று சொல்ல மாட்டார் களா உலகத்தார்?" என்று கேட்கிறுன்.

'நாயை இங்கே கம்பன் கூறக் காரணம் என்ன? நாய் நன்றியுடைய தாயிற்றே! அதனை இங்கே சொல்லலாமா?' என்று தோன்றலாம். நாய் நன்றி யுடையதென்பது உண்மைதான். ஆனல் அது தனக்கு யார் இரை போட் டாலும் வாலை ஆட்டும். 'இராமன் வந்தபோது அவன் ஏதோ நன்மை செய்தான். நாய்போலக் குழைந்து வாலை ஆட்டி ஞன். பிறகு பரதன் வந்தபோது அவன் ஏதேனும் ஆசை காட்டியிருப்பான். இறைச்சித் துண்டு போட்ட திருட

னுக்கும் வாலாட்டும் நாயைப்போல இவன் மயங்கிப் போய் வழி விட்டிருப்பான்' என்று உலகத்தார் எண்ணுவார்களாம்.

வடகரையிலிருந்து வரும் படைகள் தென் கரைக்கு வரவேண்டுமானால் குகனுடைய துணைவேண்டும். அவன் ஓடம் விட்டால்தான் கங்கையைக் கடக்க இயலும். 'என் கையில் இருக்கிறது சாவி. என்னை விட்டு இவர்கள் எங்கே போவார்கள்?' என்ற எண்ணம் அவனுக்கு இருக்கிறது.

கங்கையை அவர்களால் கடக்க முடியுமா? அது ஆழமான ஆறு. இருந்தாலும் நீந்திக் கடக்கலாம் என்றாலோ நீண்ட அலைகள் ஆளைச் சுருட்டிக் கை தளரச் செய்யும். ஆகையால் அந்த ஆழ நெடுந்திரை ஆறு கடந்து அவர்களால் செல்ல முடியாது.

> **''ஆழ நெடுந்திரை ஆறு**
> **கடந்திவர் போவாரோ?''**

ஓடத்தில் ஏறிப் போகவேண்டுமானால் குகன் அவர்களை ஏற்றிவிட வேண்டும். ஒருகால் அவர்களுடைய படைப் பலத்தைக் கண்டு அவன் அஞ்சி ஏற்றிவிட்டால் அவர்கள் கடக்கலாம். அது நடக்கக் கூடியதா? யானையோடு வரும் பெரிய படையானால் என்ன? அவன் வில்லைக் கையிலே பிடித்த வீரன் அல்லவா?

> **''வேழ நெடும்படை கண்டு**
> **விலங்கிடும் வில்லாளோ?''**

[விலங்கிடும் - வழி விலகி இடங்கொடுக்கும்.]

இவ்வளவு சினம் பரதன்மேல் வருவதற்குக் காரணம், இராமன் குகனையும் தோழன் என்று கூறி ஆட்கொண்ட கருணை. அவன் சொன்ன ஒரு சொல் மாறாத சொல்; உலகம்

பெறும் சொல். இராமன் ஏதேனும் ஒன்று சொல்வானுல் அதைக் காப்பாற்றுவான். ஒரு சொல், ஒரு வில், ஓர் இல் என்று அவனை அன்பர்கள் பாராட்டுவார்கள். ஆகவே அவனுடைய மாருத ஒப்பற்ற, 'நீ தோழன்' என்ற சொல்லைக் குகன் தன் நெஞ்சில் வைத்துப் பேணுகிருன். அதை நினைக்க நினைக்க அவனுக்குப் பெருமிதம் உண்டாகிறது. அதற்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டாமா? இராமனுடன் காட்டுக்குள் சென்று அவனுக்குப் பாதுகாப்பாக இருப்பதாக வீறு பேசினவன் குகன். அந்த வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கவில்லை. இப்போது, இருந்த இடத்தில் இருந்தபடியே ஒரு கைங்கரியம் செய்ய இடம் கிடைத்திருக்கிறது. பரதனையும் உடன் வருபவர்களையும் கங்கையைக் கடக்கவிடாமல் செய்து விடலாம். அப்படி இன்றி அவர்களுக்குப் பயந்து வழிவிட்டு விட்டால், நாளைக்கு உலகம் என்ன சொல்லும்? "இந்த அறிவற்ற முட்டாளாகிய குகன் இருந்ததனுல் அல்லவா அவர்கள் கங்கையைக் கடந்தார்கள்? அவன் செத்துப்போயிருக்க லாகாதா?" என்றல்லவா இழித்துக் கூறும்?

"ஆழ நெடுந்திரை ஆறு
    கடந்திவர் போவாரோ?
தோழமை என்றவர் சொல்லிய
    சொல்ஒரு சொல் அன்ருே?
வேழ நெடும்படை கண்டு
    விலங்கிடும் வில்லாளோ?
ஏழைமை வேடன் இறந்திலன்
    என்றெனை ஏசாரோ?" [1]

கேள்விகளை ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்குகிருன். அவற்றில் அவனுடைய கோபம் நன்ருக ஒலிக்கிறது. மேலும் பேசுகிருன்.

1. குகப்படலம், 15

குகன், கோபக்கனலில் குமுறிச் சொற்குழம்பை வாரி வீசுகிருன்.

"அவன், நம்முடைய மதிப்பிற்குரிய தலைமையனுயிற்றே என்று எண்ணவில்லை. மதிப்பும் மரியாதையும் தெரியா விட்டால் போகிறது. அச்சமாவது இருக்கவேண்டாமா? வலிமை மிக்க புலியனைய தம்பி ஒருவன் அவனுடன் இருக் கிருன் என்ற நினைவும் இவனுக்கு இல்லை. என்னை எளிதிலே இகழ்ந்து செல்ல இயலுமா? முதலில் இந்த எல்லையாகிய கங்கைக்கரையைக் கடந்த பிறகல்லவா அது நடக்க முடியும்? அரசராக இருந்தால் அவர்கள்மேல் வேடர்கள் அம்புவிட் டால் பாயாதோ? அவர்கள் மார்பில் தைக்காதோ?

"இந்த மண்ணுலகை ஆள்பவர்களுக்குப் பழி, பாவம், பகை, நண்பு என்பவற்றை எண்ணும் இயல்பே இல்லைபோல் இருக்கிறது! நடந்ததைப் பற்றிக் கவலையில்லை. அவை யெல்லாம் கிடக்கட்டும். எனக்கு ஆருயிர்த் தோழமை என்ற பெரும் பேற்றைத் தந்த பெருமான்மேல் இவர்கள் படை யெடுத்துச் செல்வது, இந்தச் சேனையையும் தங்கள் ஆருயி ரையும் என்னிடமிருந்து தப்புவித்துக்கொண்டு போன பிறகுதானே? அது எங்கே நிகழப்போகிறது?

"என்னுடைய உயிர்த்துணைவனுகிய இராமபிரான் தவவாழ்க்கையை ஆள, இவன் உலகத்தை ஆள்வானே? அப்படிச் செய்ய நான் விட்டு விடுவேனே? இவனை எதிர்த்து இங்கேயே வீழ்த்தாமல் என் உயிரைக் காப்பாற்ற அந்த உயிர் என்ன அமுதமா? இவனை எதிர்த்துத் தொலைத் துப் புகழ் பெற்ற பிறகுதான் மாய்வேன். தோழமை பூண்ட அவர்களோடு நானும் காட்டுக்குப் போயிருந்தால் இவர்கள் கங்கையைத் தடையின்றிக் கடந்து விடுவார்கள்.

இங்கேயே இருந்தது நல்லதாகப் போய் விட்டது! என்னுடைய கடமையை இன்றே கழிப்பேன்.''[1]

இவ்வாறு சீற்றம் பொங்க நின்ற குகன் இது வரையில் தானே பேசிக்கொண் டிருந்தான். பிறகு தன் அருகில் நின்ற தன் துணைவர்களைப் பார்த்துப் பேசலானான்.

''யானையும் குதிரையும் நெருங்கிய இந்தப் பெரிய படை சூழ வரும் இவர்கள் வாள்வலியை இந்தக்கங்கையைக் கடந்த பிறகல்லவா காட்ட வேண்டும்? என்னைப்போலவே கோபம் கொண்டுள்ள வேடர்களே, ஓடங்களைத் துறையிலிருந்து விலக்கிவையுங்கள். நம்முடைய தலைவனாகிய இராமபிரானுக்கு முன்னாலே நாம் நம் உயிரை விடும்படி நேர்ந்தாலும் அது நன்றல்லவா?

''முன்பு போன வீரர்களாகிய இராம இலக்குவர்களுக்கு இந்தப் படை எந்த மூலை? இந்த இரை போதாது. எனக்குந்தான் சரி, இது ஒரு பொருளா? இந்தச் சேனை கிடக்கட்டும். தேவரே வந்தாலும் வில் என்னும் மேகத்திலிருந்து சோனைமாரியாக அம்புகளைப் பொழிந்து, குடர்களெல்லாம் சூறைக்காற்றில் அடிபடுவனபோலப் பறக்க, சுடருகின்ற வாள் முதலிய படைக்கலங்களோடு படையினர் படவும், சிறந்த யானைகள் வீழவும் சேனைக் கூட்டத்தை நான் சாய்த்துவிட மாட்டேனா?''

குகனுடைய பேச்சில் வரவரக் கோபம் மிகுதியாகிறது. ஓசை வெடித்துவருகிறது, கம்பனுடைய சொல்லாட்சியும் சந்தமும் அந்த மிடுக்கை ஒலியினாலேயே புலப்படுத்துகின்றன.

---

1. குகப்படலம், 16 - 8

"போன படைத்தலை வீரர் தமக்கிரை
போதா; இச்
சேனை கிடக்கிடு; தேவர் வரிற்சிலை
மாமேகம்
சோனை படக்குடர் சூறை படச்சுடர்
வாளோடும்
தானை படத்தனி யானை படத்திரள்
சாயேனோ?"[1]

[படைத்தலை வீரர் - படையின் தலைவராகிய சிறந்த வீரர்; இராம இலக்குவர்கள். கிடக்கிடு - கிடக்கட்டும். சிலை மா மேகம் - வில்லாகிய பெரிய மேகம். தானை - சேனை. திரள் - படைக்கூட்டம்.]

இராமன் காட்டுக்குச் செல்வதற்கு என்ன காரணம் என்பதைக் குகன் இலக்குவன் வாயிலாக அறிந்தவன். அவன், தான் கேட்டவற்றை ஒருவாறு மனத்திலே காட்சிகளாகப் பதிவு செய்து வைத்திருக்கிறான். அவை நேரே கண்டவை அல்ல; இலக்குவன் வாய்மொழியால் உணர்ந்தவற்றின் விளைவு. "கைகேயியே தன் கையில் மரவுரியைக் கொண்டு வந்து இராமனுக்குக் கொடுத்தாள்" என்று இலக்குவன் சொன்னது இப்போது நினைவுக்கு வருகிறது. அந்தக் காட்சியை அகக்கண்ணில் காணுகிறான். அவனுடைய ஆருயிர் நாயகனாகிய இராமனுக்கா மரவுரி? சே! என்ன கொடுமை! — குகன் பல்லைக் கடித்துக்கொண்டிருக்கவேண்டும்.

"தன்முன் பணிவாக நின்ற பிரான், பிறருக்கு வாரி வாரி வழங்கும் வள்ளல் ஆகிய என் அன்பன் இராமன் உடுக்க நீண்ட மரவுரியை அன்று நீதி நேர்மை பாராமல் கொடுத்தாளே, அவளுடைய

1. குகப்படலம், 20.

மைந்தர் பலத்தை இதோ இன்று பார்க்கப் போகிறேன். அவர்களுக்குப் பலமாக இருக்கும் இந்தப் படைகளை என் அம்பாலே கொன்று குவிக்கிறேன், பாருங்கள். அப்படிக் குவித்த நிணங்களையுடைய பிணக்குவியலை இந்தக் கங்கை கொண்டு போய் அலைகடலிலே போட்டுக் கடலைத் தூர்த்து விடாதா?"

" நின்ற கொடக்கைஎன் அன்பன் உடுக்க
நெடுஞ்சீரை
அன்று கொடுத்தவள் மைந்தர் பலத்தைஎன்
அம்பாலே
கொன்று குவித்த நிணங்கொள் பிணக்குவை
கொண்டோடித்
துன்று திரைக்கடல் கஙகை மடுத்திடை
தூராதோ? ' [1]

[சீரை - மரவுரி. பலம் - படைகளை. குவை - குவியல். துன்று - செறித்த.]

இவ்வாறு பேசியவன் சற்றே நிதானிக்கிறான். பரதனுடைய படையோடு போர் செய்யும் அவசியம் வந்து விட்டதானால் தன்னுடன் இருக்கும் படை வீரர்களுடைய துணை வேண்டும்; அவர்களுக்கும் தன் கருத்தைத் தெளிவாக விளக்கினால் நலம் என்று குகன் எண்ணுகிறான்.

குகனுக்கு இராமனிடத்தில் உள்ள அன்பு அவனுடைய துணைவர்களுக்கும் இருக்கும் என்று சொல்வதற்கு இல்லை, ஆகவே பொதுநிலையில் நின்று பேசுபவனைப்போல் அவர்களுக்கு விளக்குகிறான்.

---

1. குகப்படலம். 21.

"அதோ ஆடுகிற கொடிகளுடன் படை வருகிறது. பாருங்கள். அந்தப் படை அறத்துக்கு எதிரான படை; அறத்தைப் பகைத்தவர் அறம் உடையோரைத் துரத்திவிட எடுத்த படை. அந்தப் படையால் அறத்துக்கு ஊறு நேர்ந்தால், எல்லோருக்குமே தீங்கு உண்டாகிவிடும். ஆகையால் அந்த ஆடுகொடிப்படையை நாம் சாட வேண்டும், அறத்தவரே ஆளும்படி நிலை நாட்ட வேண்டும்; அதனால் நம்முடைய சாதிக்கே பெரும்புகழ் உண்டாகும். 'பெரிய மன்னர்கள் எல்லாம் அறத்தை மறம் சாட முற்பட்டபொழுது சும்மா இருந்தார்கள். அத்தகைய செவ்வியில் வேட்டுவச் சாதி முன் வந்தது; அறத்துக்கு எதிரான மறப்படையைச் சாடி அறத்தவரே ஆளும்படி இந்த நிலத்தில் அவர்கள் கையில் ஒப்பித்தது' என்று உலகம் நம் புகழைக் கூறும். அந்தப் புகழை நீங்கள் விரும்பி அடையமாட்டீர்களா?" என்று முதலில் ஒரு கேள்வி கேட்டு, அவர்களுடைய புகழாசையைத் தூண்டு கிறான். அறம் ஆளவேண்டும் என்ற நியாயத்தையும், வேட்டுவச்சாதி புகழ் அடைய வேண்டும் என்ற ஆசையையும் ஒருங்கே இணைத்துச் சொல்கிறான்.

" ஆடு கொடிப்படை சாடி அறத்தவ
ரே ஆள
வேடு கொடுத்தது பார்எனும்இப்புகழ்
மேவீரோ?'

[சாடி - அழித்து. வேடு - வேட்டுவச் சாதி. பார் - பூமியை, அறத்தவரே ஆள அவர்களுக்குப் பாரைக் கொடுத்தது வேட்டுவச் சாதி என்ற புகழ்.]

மறத்தவர் மாய, அறத்தவர் ஆளவேண்டும் என்ற முறையைக் குகனுடைய துணைவர்களில் சிலர் தெரிந்து கொண்டிருப்பார்கள். நீதியை விரும்பும் நெஞ்சினர் சிலரே இருக்க முடியும். மற்றவரில் பலர் புகழை விரும்பும் இயல் பினராக இருப்பார்கள். நம்முடைய சாதிக்கு இந்தப் புகழ் கிடைப்பதாக இருந்தால், ஒரு கை பார்க்கவேண் டியதுதான் என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாகும்.

இனி, மற்றவர்களில் குகனிடம் அன்பும் நம்பிக்கையும் உடையவர்கள் பலர் இருப்பார்கள். அவர்களுக்குக் குகன் இந்த நிகழ்ச்சியைத் தன்னோடு தொடர்புபடுத்திச் சொல் கிறான்.

"இராமன் என் நாயகன். அவன் தன் நாட்டை இவர்களுக்குக் கொடுத்துச் சென்றான். அப்படி இருந்தும் அவன்மேல் இவர்கள் படையெடுப்பது எவ்வளவு கொடுமை!" என்று அடுத்தே கூறுகிறான்.

நியாயத்தை மதிப்பாரும், புகழாசை பூண்பாரும், தன்பால் பேரன்பு உடையாருமாக உள்ளவர்களுக்கு இனி வரும் போரிலே ஊக்கம் உண்டாகும் வகையில் பேசிய குகன் இறுதியில் ஒன்று சொல்கிறான். அவன், தன்னுடன் பழகும் மக்கள் இயல்பை நன்கு உணர்ந்திருந்தவன் என் பதை அது தெளிவாக்குகிறது.

குகனுடைய துணைவர்குழுவில் உடம்பு வலிமை யுள்ளவர்களே யாவரும். ஆனால் அவர்களுடைய மன இயல்பு ஒரே நிலையில் இராது. மிகவும் தாழ்ந்த நிலையில் பண்படாத உள்ளம் படைத்த முரடர்களும் இருத்தல் கூடும். அவர் களுக்கும் ஊக்கம் உண்டாக்க வேண்டும் என்பது குகனு டைய எண்ணம்.

மிக்க இழிநிலையிலுள்ள மக்கள் பிறருடைய நலத்தைச் சிறிதும் கருதமாட்டார்கள்; தம் நலமே கண்ணாக இருப்

பார்கள். அயல் வீட்டில் கொலை நடந்தாலும் ஏனென்று கேட்கமாட்டார்கள். ஆனால் தம் காலை ஒருவன் மிதித்துவிட்டால் போதும்; உடனே அவன் தலையை வாங்க முந்துவார்கள் இத்தகைய நிலையில் உள்ளவர்களையும் 'உசுப்பிவிட' வேண்டும் என்று குகன் நினைத்தான்போலும்! அவர்களுக்கும் உறைக்கும்படி இப்போது நிகழ இருப்பதை எடுத்துக் காட்டுகிறான்.

"சிலர், 'இந்த வழக்கு யாருக்கும் யாருக்குமோ இடையில் நிகழ்வது' என்று நினைக்கலாம். அப்படி அன்று. நம்முடைய சொந்த உரிமை பறிபோகும் நிலை வந்திருக்கிறது. ஒருவன் தன் நாட்டை வேறு ஒருவனுக்குக் கொடுத்து விட்டுப் போனான். அப்படிப் போனவன் எனக்கு வேண்டியவன். அவன் இங்கே வந்து நம்முடைய ஆட்சிக்கு அகப்பட்ட காட்டில் வாழச் சென்றான். நாம் ஆளும் காட்டில் அவன் நம்முடைய அன்பனுகையால் வாழ்கிறான். இப்போது இவன், என் நாயகனைத் துரத்த வருகிறான். தன்னுடைய சொந்த நாட்டை இவனுக்குத் தந்துவிட்டு வந்தவன் அவன். அவன் இப்போது இருக்கும் இடத்துக்கும் இவனுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. இது நம்முடையது; நம் ஆட்சிக்கு உட்பட்டது; நாம் ஆளும் காடு. இதையும் அவனுக்குக் கொடுக்கக் கூடாது என்று இவன் படையெடுத்து வந்திருக்கிறான். நாம் ஆளும் காட்டுக்குள் அவனை வாழ விடாமல் துரத்த இவன் யார்? இவனுக்கு என்ன உரிமை இருக்கிறது? இதனால் நம் உரிமை பறிபோக வில்லையா?" என்ற பொருளை அமைத்துப் பேசுகிறான். கம்பனுடைய பாடலில் இரத்தினச் சுருக்கமாக அந்த வாதம் அமைந்திருக்கிறது.

"நாடு கொடுத்தஎன் நாயக னுக்கிவர்
நாம்ஆளும்
காடு கொடுக்கில ராகி எடுத்தது
காணீரோ?"

[நாயகனுக்கு - இராமனுக்கு. கொடுக்கிலராகி கொடுக்க மனம் இல்லாதவராகி. எடுத்தது - படை எடுத்து வந்ததை.]

'நாம் ஆளும் காடு' என்பதில்தான் இந்த வாதத்தின் உயிர் நிற்கிறது. எத்தனை கீழ்மகனாக இருந்தாலும், "அப்படியா? இந்தப் பயல் நம்முடைய காலையா மிதிக்க வந்து விட்டான்?" என்று சீறி எழுவான் அல்லவா?

அறநினைவு, புகழாசை, தலைவன்பால் அன்பு, தன்னலத்துக்கு ஊறு வந்தால் சீறும் இயல்பு என்ற இந்த நான்கு இயல்புடையவர்களையும் ஊக்கும் பொருட்டுக் குகன் கூறுவதாக அமைந்த இந்தப்பாட்டு மிகமிகச் சிறந்த பாடல்.

"ஆடு கொடிப்படை சாடி 'அறத்தவ
 ரே ஆள
வேடு கொடுத்தது பார்'எனும் இப்புகழ்
 மேவீரோ?
நாடு கொடுத்தஎன் நாயக னுக்கிவர்
 நாம் ஆளும்
காடு கொடுக்கில ராகி எடுத்தது
 காணீரோ?" [1]

அடுத்தது கோபக்கூற்றின் கடைசிப் பகுதி.

"பெரிய முனிவர்களுக்கு நண்பனாகி வனத்தினிடை வாழும் மன்னனாகிய இராமன் சீற்றம் கொள்வான் என்பதைச் சிறிதும் மனத்தில் எண்ணாமல், இவர்கள் போர்க்களத்தில் என்முன் எதிர்ப்படுவார்களானால், ஏழு கடலளவு படையாக இருந்தாலும் பசுமாட்டின் முன் சிக்கிய இளம் பயிரைப் போல இப்பொழுதே நாசமாகிவிடாதா?" என்று குமுறுகிறான்.

1. குகப்படலம், 22

"மாமுனி வர்க்குற வாகி வனத்திடை
யேவாழும்
கோமுனி யத்தகும் என்று மனத்திறை
கொள்ளாதே
ஏமுனை உற்றிடில் ஏழு கடற்படை
என்றாலும்
ஆமுனை யிற்சிறு கூழ்என இப்பொழு
தாகாதோ?"[1]

[கோ - அரசன்; இராமன். இறை - சிறிதளவாவது.
ஏ - அம்பு. ஏமுனை - அம்பினாற் போர் செய்யும் களம்.
முனையில் - முன்னிலையில். சிறுகூழ் - இளம் பயிர்.]

குகனுடைய சீற்றக் குமுறலைக் கம்பன் பத்துப் பாடல்களில் சொல்லுகிறான். ஒருவருக்கு மற்றொருவர்மேல் கோபம் வந்தால், கோபமுடையார் பேச்சு அடுத்தடுத்துக் கேள்விகளாகவே வரும் அந்த வினாக்கள் அம்புபோல ஒன்றன்பின் ஒன்றாக வரும். இந்த இயல்பைக் குகனுடைய பேச்சிலும் காணலாம். ஒவ்வொரு பாட்டும் வினாக்கள் நிறைந்ததாக இருக்கிறது. பத்துப் பாடல்களிலும் இருபது கேள்விகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்குகிறான். கோப உணர்ச்சிக்கு ஏற்ற சந்தம் வேறு, சுவையை மிகுவிக்கிறது.

1. குகப்படலம், 22

குகன் மனமாற்றம்

குகன் தென்கரையில் நின்றான். அக்கரையில் - வடகரையில் - பரதன் வந்துகொண்டிருந்தான், கூட்டத்தோடு. அந்தக் கூட்டத்துடன் வரும் சுமந்திரன் பரதனை அணுகிக் குகனைப் பற்றிச் சொன்னான், சிறந்த மந்திரி ஆதலின், இப்போது குகனுடைய உதவி இன்றியமையாதது என்பது புலப்படும்படியாகக் கூறினான். அவன் கங்கையின் இருகரைக்கும் தலைவன் என்றும், அளவற்ற ஓடங்களை உடையவன் என்றும் கூறியதோடு இராமனுக்குத் தோழன் என்பதையும் சொன்னான். அதைக் கேட்ட பரதன், "அப்படியா! என் தமையனுக்குத் தோழனா? அப்படியானால் அவன் எனக்குத் தமையனே. நானே அவனைப் போய்ப் பார்க்கிறேன்" என்று வேகத்துடன் புறப்பட்டுக் கங்கைக் கரையை அடைந்தான்.

சத்துருக்கனன் உடன்வர மிக்க அன்போடு ஒரு குன்று எழுந்து சென்றாற்போன்ற கோலத்தோடு கங்கைக்கரையை அடைந்து நின்றான் பரதன். இப்போது தூளிபடலம் இல்லை. சுற்றியுள்ள படை அவன் உருவத்தை மறைக்க வில்லை. பரதனுடைய உருவமும் இளவலுடைய உருவமும் தெளிவாகக் குகனுக்குத் தெரிகின்றன. குகன் பார்த்தான்; பரதனுடைய திருமேனி நிலையை உணர்ந்தான்; அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

குகன் இதுவரையில் சினத்தால் தன் மனத்தில் பரதனைக் கற்பனை செய்துகொண்ட முறையே வேறு. அவன் இராமனை மீட்டும் ஓட்டுவதற்காகவே படையுடன்

வருகிறான் என்றல்லவா நினைத்தான்? அந்த எண்ணத்துக்கு ஏற்ற நிலையில் பரதன் இருப்பான் என்று அவன் எதிர் பார்த்தான். ஆனால் இப்போது அவன் காணுவது என்ன?

என்றெழுந்த தம்பியொடும்
எழுகின்ற காதலொடும்
குன்றெழுந்து சென்றதெனக்
குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினான்;
திருமேனி நிலை உணர்ந்தான்;
துன்றுகரு நறுங்குஞ்சி
எயினர்கோன் துண்என்றான்.[1]

[என்று - நானே அவனைப் போய்க் காண்பேன் என்று கூறி, தம்பி - சத்துருக்கனன். நின்றவனை - நின்ற பரதனை. குஞ்சி - தலைமயிர். எயினர்கோன் - வேடர் தலைவனாகிய குகன். துண் என்றான் - திடுக்கிட்டான்.]

அவன் உள்ளத்தே படைத்துக் கொண்ட உருவத்துக்கும் இப்போது கண்ணாலே காணும் தோற்றத்துக்கும் ஒரு தொடர்பும் இல்லை. இது நேர்மாறாக இருந்தது. அதனால்தான் திடுக்கிட்டான்.

பரதன் போர்க்குரிய கவசத்தை அணிந்து அதற்கேற்ற ஆடைகளைப் புனைந்து கொண்டு வருவான் என்று எண்ணினான் குகன். ஆனால் அவன், தானும் மரவுரியைக் கட்டிக் கொண்டு, துயரத்தால் கீழே விழுந்து புரண்டதனாலோ நெடுந்தூரம் நடந்து வந்ததனாலோ புழுதி படிந்த திருமேனியோடு வந்தான். பகைவனாகிய பரதன், கனல் கொப்புளிக்கும்

1. குகப்படலம், 28.

கண்களும் கடுமை கொப்புளிக்கும் முகமும் உடையவனாக வருவான் என்று நினைத்தான் குகன். அந்த முகம் எப்படி இருந்தது? பொலிவிழந்திருந்தது. அழகாக, சாந்தமாக, அன்பு கொப்புளிப்பதாக இருப்பதுதான் இப்போது துயரத்தால் மங்கி இருந்தது. தனக்குரிய கலைகளை இழந்த மதியைப்போல அம்முகம் தோற்றம் அளித்தது. ஒளி இழந்த அந்த முகத்தைத்தான் குகன் இப்போது கண்டான்.

வற்கலையின் உடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலை இல் மதிஎன்ன
நகைஇழந்த முகத்தானை,

[வற்கலை - மரவுரி. கலை - கிரணம், நகை - ஒளி.]

முகம் ஒளி இல்லாமல் இருப்பது மட்டும் அன்று அது பரதனுடைய உள்ளத்தையும் எடுத்துக் காட்டியது. எல்லையில்லாத துயரக்கடலை உள்ளடக்கி வைத்திருந்தான் பரதன். அது புறம்பொசிந்து முகத்திலே அலையோடியது. கல்லும் கனியும்படி கனிந்து நெகிழ்ந்து வாடும் துயரமுடையவனாகத் தோற்றினான். இந்தக் கோலத்தில் குகன் பரதனைக் கண்டான்.

கற்கனியக் கனிகின்ற
துயரானைக் கண்ணுற்றான்.

தன்னுடைய எண்ணத்துக்கு நேர்மாறாகக் கற்கனியக் கனிகின்ற துயரான் நிற்பதைக் கண்டான் குகன். அவனுக்கு வெலவெலத்துப் போயிற்று, "இவனை விட்டேனா பார்!" என்று குதித்த அவனுடைய நெஞ்சமும் இளகி விட்டது. அவனை அறியாமலே அவன் கையில் இருந்த வில் நழுவிக் கீழே விழுந்து விட்டது, இன்னது செய்வது என்று

அறியாத ஒருவகை வேதனை அவனை ஆட்கொண்டது. நின்ற இடத்தை விட்டு அசையாமல் மரம்போல நின்ற படியே நின்று விட்டான்.

வற்கலையின் உடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலையில் மதிஎன்ன
நகைஇழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற
துயரானைக் கண்ணுற்றான்;
வில்கையினின் றிடைவீழ
விம்முற்று நின்றொழிந்தான். [1]

[விம்முற்று - வேதனையை மேற்கொண்டு. நின்றொழிந்தான் - நின்றபடியே நின்றுவிட்டான்; வேறு ஒன்றும் செய்யவில்லை.]

நின்றபடியே தன் எண்ணமெல்லாம் மாறிப் பரதனைப் பார்த்தான். அவனுக்கு இப்போது மற்றோர் அதிர்ச்சி உண்டாயிற்று. ஆம், கண்ணை அகலத் திறந்து பார்த்தான்.

குகன் இராமபிரானைக் கண்டது முதல் அவனது திருமேனி யழகு அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. தன் உள்ளத்தே அன்று முதல் அவனது படத்தை மாட்டிக்கொண்டு விட்டான். இப்போது எதிரே நின்ற உருவத்துக்கும் தன் அகத்தே வைத்துப் பூசிக்கும் உருவத்துக்கும் ஒப்புமை இருப்பது தெரிந்தது. அதனோடு, பக்கத்தில் நிற்கும் சத்துருக்கனனுடைய உருவத்தில் இலக்குவனுடைய அங்க அடையாளம் இருந்தது. 'இதென்ன!

1. குகைப்படலம், 29.

இந்த நம்பி என் நாயகனைப்போலவே இருக்கிறான்! அயலில் நிற்பவன் என் நாயகனுடைய தம்பியைப் போலவே இருக்கிறானே!' என்று அவன் எண்ண மிட்டான்.

'அதே தோற்றம்; அதே மரவுரி. ஆனால் அந்த உருவத் துக்கும் இதற்கும் வேறுபாடு இருக்கிறது. அவன் மலர்ந்த முகத்தோடு இருந்தான். இவனோ தன் துன்பத்துக்கு முடிவே இல்லை என்று எண்ணும் நிலையில் இருக்கிறான். கைகளில் ஆயுதம் தாங்கி வருவான் என்றல்லவா நினைத் தோம்? அந்தக் கைகள் எங்கே? ஓ! இதோ தலைமேல் இருக்கின்றன. இராமன் சென்ற திசையை நோக்கித் தொழுது கொண்டிருக்கிறான். இவனையா நாம் பொல்லா தவன் என்று நினைத்தோம்? இவனையா இராமனைத் துரத்த வருகிறான் என்று நினைத்தோம்?'

குகனுக்குத் தன்னிடத்திலேயே கோபம் வந்தது. 'என்ன பேதைமை! அப்பெருமான் ஒரு நாள் இங்கே வந்தான். தன் அன்பைக் காட்டினான். நீ என் தம்பி என்றான். இந்த ஒரு நாள் உறவே என் உள்ளத்தைக் கனிவித்து இப்படி ஆக்கிவிட்டதே! இதோ முன்னே நிற்கும் இந்த நம்பி, அவனுடன் பிறந்து அவனுடன் விளையாடி அவனுடன் உண்டு அவனுடன் உறங்கி அவனுடன் பல காலம் பயின்ற உண்மைத் தம்பி அல்லவா? எம்பெருமான் பின் பிறந்தவர்கள் தவறு செய்வார்களா? இதனை இந்தப் பேதையேன் மறந்துவிட்டேனே!' என்று கழிவிரக்கம் கொண்டான்.

" நம்பியும்என் நாயகனை
ஒக்கின்றான்; அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்;
தவவேடம் தலைநின்றான்;

துன்பம்ஒரு முடிவில்லை;
திசைநோக்கித் தொழுகின்றான்;
எம்பெருமான் பின்பிறந்தார்
இழைப்பரோ பிழைப்பு?' என்றான். [1]

பரதனிடம் தான் எதிர்பார்த்த போர்க்கோலம் இல்லை என்று உணர்ந்த பொழுதே குகனுடைய மனம் மாறத் தொடங்கியது; அதற்கு அடையாளமாக அவன் கையில் இருந்த வில் நழுவியது. அதற்கு மேலும் பரதனுடைய திருவுருவத்தில் இராமனுடைய தோற்றத்தை நினைவூட்டும் அடையாளங்களைக் கண்டபோது, அவன் இராகவன் தம்பி என்ற நினைவு நன்றாகப் பதிந்தது. அப்போது, 'நாம் என்ன பைத்தியக்காரத்தனம் செய்தோம்!' என்ற இரக்கம் எழுந்தது.

"இப்படி அவன் வருவதற்குக் காரணம் என்ன?'—குகனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. "ஏதோ ஒரு துன்பம் இவனுக்கு உண்டாகி யிருக்கிறது இவன் இராமனிடம் பகை பாராட்டுகிறவன் அல்லன்; சிறிதும் குறையாத அன்பு உடையவன்தான். அவன் மேற்கொண்ட தவ வேடத்தையே இவனும் மேற்கொண்டிருக்கிறான். அதற்குக் காரணம் இன்னதென்று தெரியவில்லை. அவன் உள்ளக் கருத்தை நான் போய்ப் பார்த்துத் தெரிந்துகொண்டு வருகிறேன். நீங்கள் வழியைப் பாதுகாத்து இருங்கள்'' என்று தன் ஏவலர்களிடம் கூறிவிட்டுக் குகன் ஓர் ஓடத்தில் ஏறிக்கொண்டு பரதனைச் சந்திப்பதற்காகத் தனியே வரலானான்.

"உண்டிடுக்கண் ஒன்றுடையான்;
உலையாத அன்புடையான்;
கொண்டதவ வேடமே
கொண்டிருந்தான்; குறிப்பெல்லாம்

1. குகப்படலம், 30

கண்டுணர்ந்து பெயர்கின்றேன்;
காமின்கள் நெறி'' என்றுத்
தண்துறைஓர் நாவாயில்
ஒருதனியே தான்வந்தான்; [1]

[உண்டாகிய இடுக்கண்; இடுக்கண் - துன்பம். உலையாத - அழியாத. குறிப்பு - கருத்து பெயர்கின்றேன். திரும்பி வருகிறேன். காமின்கள் - காவல் செய்யுங்கள்" நெறி - வழியை. நாவாய் - ஓடம். தான் - குகன்.]

இராமனுக்குப் பகைவனாகப் பரதனை உள்ளத்தே பாவித்துச் சீற்றம் பொங்கக் குதித்த குகன் இப்போது பரதனது துயர்க்கோலத்தையும் இராமனுடைய திருவுருவ ஒப்புமையையும் கண்டு கோபம் அடங்கி, தான் எண்ணியது தவறு என்ற இரக்கம் உந்த அவனைச் சந்திக்க வந்தான். இப்போது அவன் உள்ளத்தில் ஒரு கேள்வி நின்றது: ''இவன் பகை மேற்கொண்டு வரவில்லை என்பது தெளிவாகிறது. அப்படியானால் இவ்வாறு வரக் காரணம் என்ன?'' என்பதே அந்தக் கேள்வி.

1. குகப்படலம், 31

வியப்பும் உருக்கமும்

ஒருதனியே நாவாயில் வந்த குகன் பரதன் முன் சென்று தொழுதான். பரதன், தலைவணங்கினான். உடனே குகன் பரதனுடைய திருவடியில் வீழ்ந்து பணிந்தான். பரதன் அவனை எடுத்து மிக்க அன்போடு தழுவிக்கொண்டான்.

குகனுக்கு, "இந்தத் துயரக் கோலத்தோடு இந்தப் பெருமான் வரக் காரணம் என்ன?" என்ற கேள்வி நெஞ்சில் இருந்துகொண்டிருந்ததல்லவா? பரதனைப் பார்த்தால் இராமனைப் போன்ற தாமரைச் செங்கணானாக இருக்கிறான். அவனுடைய திண்ணிய தோள்கள் இரும்புத் தூண்களிலும் வலியனவாக இருக்கின்றன. யாரேனும் வலிமையுள்ள பகைவன் அவனை நாட்டைவிட்டு ஓட்டியிருக்க முடியாது. பரதன் வலிமையில்லாதவன் அல்லன். "அப்படியானால் இவன் வந்த காரணந்தான் யாது?"

குகன், பரதனிடமே இந்தக் கேள்வியைக் கேட்டான். "எழுவினும் உயர்ந்த தோளை யுடையவனே இப்படி வந்ததற்குக் காரணம் யாது!' என்று கேட்கிறான்.

> **தழுவின புளினர் வேந்தன்**
> **தாமரைச் செங்க ணானை**
> **"எழுவினும் உயர்ந்த தோளாய்,**
> **எய்தியது என்னை?" என்ன [1]**

[தழுவின - பரதனால் தழுவப்பெற்ற. புளினர் வேந்தன் - வேடர்க்கு அரசனான குகன். தாமரைச் செங்கணானை -

---

1. குகப்படலம், 32

பரதனை. எழு - இரும்புத் தூண். என்னை - என்ன காரணத்தால். என்ன - என்று குகன் கேட்க]

அதற்குப் பரதன் விடை கூறினான். அந்த விடையில் அவனுடைய பணிவும் இராமன்பால் அவனுக்கு இருந்த அன்பும் நேர்மையும் புலனாகின்றன. "அரசை இழந்து இராமன் காட்டுக்கு வந்து விட்டான். நான் மீட்டும் அவனுக்கே அதைக் கொடுப்பதற்காக அழைத்துச் செல்ல வந்திருக்கிறேன்" என்று பரதன் சொல்லியிருக்கலாம். அப்படிச் சொன்னால், அவன், தான் ஏதோ ஒரு பெரிய காரியத்தைச் செய்ய வந்திருப்பதைச் சொன்னதாக முடியும். ஆகவே அப்படிச் சொல்லவில்லை. "என் தந்தை முன்னுள்ள பெரியவர்களின் மரபினின்றும் வழுவிவிட்டான். அந்த வழுவைப் போக்குவதற்காக அரசனை அழைத்துவரப் புறப்பட்டேன்" என்று சொன்னான்.

"முழுதுல களித்த தந்தை
முந்தையோர் முறையி னின்றும்
வழுவினன் அதனை நீக்க
மன்னனைக் கொணர்வான்" என்றான்.[1]

"உலகம் முழுவதையும் பாதுகாத்த தந்தை பழைய மரபினின்றும் வழுவினான்" என்று வழக்கைக் கூறி, அந்த வழக்கைத் தீர்க்க அரசனை அழைத்து வருவதற்குப் புறப்பட்டதாக அல்லவா சொல்கிறான்? இராமன் எங்கே இருந்தாலும் அயோத்திக்கு அரசன்தான் என்ற எண்ணத்தோடு இராமனை என்று சொல்லாமல், "மன்னனைக் கொணர்வான்" என்று கூறினான் பரதன்.

குகன், கற்பனையிலும் பரதன் இவ்வளவு உத்தமனாக இருப்பான் என்று நினைக்கவில்லை. பரதன் கொடியவன்

1. குகப்படலம், 33

என்று முதலில் தோற்றிய எண்ணம் அவனுடைய துயரக் கோலத்தைக் கண்டவுடன் மாறியது. அவனை அணிமையிலிருந்து பார்க்கையில் இராமனுக்கும் அவனுக்கும் உள்ள ஒப்புமை புலனாயிற்று. அப்போது குகனுடைய கோபம் போனதோடு மட்டுமன்றி இரக்கமும் உண்டாயிற்று. 'இராமனை அவன் ஓட்ட வரவில்லை; மீட்டும் அரசனாக நாட்ட வந்திருக்கிறான்' என்ற செய்தியைக் கேட்டானோ இல்லையோ, அவன் வியப்பில் ஆழ்ந்தான்; உடனே உருகினான். பெருமூச்சு விட்டான். கீழே மறுபடியும் வீழ்ந்து பரதன் காலைப் பற்றிக்கொண்டான். பொய் சிறிதும் இல்லாத உள்ளத்தனாகிய அவன் பரதனைப் பார்த்துப் பேசலானான்:

கேட்டனன் கிராதர் வேந்தன்
கிளர்ந்தெழும் உயிர்ப்ப னாகி
மீட்டும்மண் அதனில் வீழ்ந்தான்
விம்மினன் உவகை வீங்கத்
தீட்டரும் மேனி மைந்தன்
சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன் பொய்யில்
உள்ளத்தன் புகல லுற்றான். [1]

[கிராதர் வேந்தன் - வேடர்க்கு அரசன். உயிர்ப்பனாகி - பெருமூச்சை உடையவனாய். முன்பே ஒருமுறை பரதனுடைய அடியில் வீழ்ந்து பணிந்தவனாதலால் இப்போது மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான் என்றார். வீங்க - மிக. தீட்டரும் - சித்திரத்தில் எழுத இயலாத. மைந்தன் - பரதனுடைய.]

அவன் விம்மினான்; இராமன் மீட்டும் அயோத்திக்கு வந்துவிடப் போகிறான் என்ற எண்ணத்தால் அவனுக்கு உண்டான மகிழ்ச்சிக்குக் கங்கு கரையே இல்லை. "இப்படி

1. குகப்படலம், 34

யும் ஒருவன் உலகில் இருப்பானு!'' என்று எண்ணி அவன் நெஞ்சம் உருகியது.

உணர்ச்சி வசப்படுபவனுகிய குகன் இப்போது பேசினுன். அவன் தொடக்கத்தில் ஒரு கோடியில் நின்று பரதனைப் பகைவனுக எண்ணிக் கோபக் கனலைக் கக்கினுன். இப்போதோ மறுகோடியில் கிடந்து உருகுகிறுன். ஊசலை எத்தனைக்கு எத்தனை ஒரு பக்கத்தில் உந்தித் தள்ளுகிருேமோ, அத்தனைக்கு அத்தனை அது மறுகோடியிலும் செல்லும். குகனது உணர்ச்சி, முன்பு இருந்த நிலைக்கு நேர் எதிரே நெடுந்தூரம் சென்றுவிட்டது.

இப்போது அவன் பேசும் பேச்சு மிகைபோலத் தோற்றலாம். அதனுல் கம்பன் இங்கே அவன் உணர்ச்சி வசப்பட்டவனுதலின் அப்படிப் பேசுவதுதான் இயல்பு என்பதைப் புலப்படுத்துகிருன். ''பொய்யில் உள்ளத்தன் புகலலுற்ருன்'' என்கிருன் கம்பன். ''இராமனிடம் கங்குகரையில்லாத அன்புடையவனுகிய குகன் இப்படிச் சொல்வானு? இது ஏதோ முகமனுன வார்த்தை என்று எண்ணக்கூடாது'' என்பதற்காகவே அவ்வாறு அணைகோலிக் கொள்கிருன் கவிஞன். குகன் என்ன சொன்னுன் என்பதைக் கேட்கலாம்:

> ''தாய்உரை கொண்டு தாதை
> உதவிய தரணி தன்னைத்
> தீவினை என்ன நீத்துச்
> சிந்தனை முகத்தில் தேக்கிப்
> போயினை என்ற போழ்து
> புகழினேய் தன்மை கண்டால்
> ஆயிரம் இராமர் நின்கேழ்
> ஆவரோ தெரியில் அம்மா!'' [1]

[கேழ் - ஒப்பு.]

1, குகப்படலம். 35

"ஆயிரம் இராமர்கள் உனக்கு ஒப்பாவார்களா?" என்று கேட்டு, "அம்மா!" என்று வியப்பில் ஆழ்ந்தான். இராமன் காட்டுக்குப் போனதையும், பரதன் இப்போது போவதையும் குகன் ஒப்பிட்டுப் பார்த்தான். இராமன் காட்டுக்குப் போனமையால் அரசை அடியோடு இழந்து விடவில்லை. இடையிலே சில ஆண்டுகள் அரசனாக ஆளா விட்டாலும் எப்படியும் அரசாட்சி அவனை விட்டுப் போகாது. அவன் மீண்டு வரத்தான் போகிறான். சில காலம் காட்டுக்குப் போய்வருவதனால் இராமன் தன் உரிமையை முற்றும் பறி கொடுத்தவனாகவில்லை. அவன் செய்த தியாகம் சில காலத்துக்கே இருப்பது.

ஆனால் பரதன் செய்த தியாகமோ? இரகு குலத்தில் தலைமகனாகப் பிறந்தாலன்றிக் கிடைக்காத பதவி அது. அதையும் கைகேசி முயன்று அவனுக்காகப் பெற்றிருக்கிறாள். தாதையும் பரதனுக்கு அரசைக் கொடுப்பதுபற்றித் தடை சொல்லவில்லை. அவ்விருவரும் அநுகூலமாக இருக்க, கிடைத்தற்கரிய ஆட்சி வந்து நிற்கிறது. பரதன் அப்போது, "இது தீவினை; நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது" என்று மறுத்தான். அதனை நீத்தான்; இராமன் வனஞ்செல்லும் நிலை வந்துவிட்டதே என்று மனம் அழுங்க, அந்தத் துயரத்தை முகம் பறைசாற்ற, அவனும் காட்டுக்குப் புறப்பட்டுவிட்டான். அவன், 'அரசை வேண்டாம்' என்றதே பெரிய தியாகம்; இப்படி நேர்ந்து விட்டதே என்று சிந்தனையை முகத்தில் தேக்கியதோ அவன் மிகப் பெரியவன் என்பதைக் காட்டுகிறது. அதோடு அவனே மரவுரி உடுத்துக் காட்டுக்கும் புறப்பட்டு விட்டான் என்றால் அந்த உயர்குணத்தை வருணிக்கச் சொல் ஏது? மீட்டும் தன்னை வந்து அடைவதற்குரிய ஒன்றைச் சில காரணம் கருதித் தியாகம் செய்வது

பெருமையாகுல், ஒருநாளும் தனக்குக் கிடைக்காதது கிடைக்க, அதனை ஒதுக்கிவிட்டது பன்மடங்கு பெருமை அல்லவா? ஆதலின் இராமனை விடப் பரதன் பெருமை மிக்கவன் ஆகுன். இவற்றை எண்ணியே குகன், "ஆயிரம் இராமர் உனக்கு ஒப்பாவார்களோ!" என்று வியந்தான். "நீ இப்படி வந்தாய் என்பதை எண்ணும்போதுதான் உன் பெருமை தெரிகிறது" என்ருன்.

மற்ருென்று: புறநானூற்றில் ஒரு பாட்டு வருகிறது. இழிவு, இழிவில் இழிவு; உயர்வு, உயர்வில் உயர்வு என்று நான்கு கருத்துகளைப் புலவர் சொல்கிருர்.

ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று[1]

என்று வருகிறது பாட்டு.

'பிறனுடைய குறையைக் குறிப்பால் அறிந்து குறையிலாப் பொருளுடையான் ஒருவன், "இதை நீ பெற்றுக்கொள்" என்று அளிப்பது உயர்ந்த செயல். ஆனுல் அப்படி ஒருவன் கொடுப்பதைக் கண்டு. "எனக்கு அது வேண்டாம்; நான் ஏற்கமாட்டேன்" என்று சொல்வது அதைவிட உயர்ந்த பண்பைக் குறிக்கும் செயல்' என்பது பின் இரண்டடியின் பொருள்.

இதை வைத்துப் பார்த்தால், 'என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்ருே?' என்று தன் அரசைப் பரதன் கொள்க எனக் கொடுத்த இராமன் உயர்ந்தவன்தான். ஆனுல் அப்படி அவன் கொடுத்த

1. புறநா, 204

அரசைக் கொள்ளேன் என்று சொன்ன பரதன், தீவினை என்ன நீத்துப் போயின பரதன், அவனைவிட உயர்ந்தவன் ஆகிவிட்டான் அல்லவா? ஆகவே, குகன்,

> " ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ
> தெரியில் அம்மா!"

என்று வியந்து பாராட்டுவதற்கு ஏற்ற காரணங்கள் இருக்கின்றன.

இப்படிச் சொன்னதனால் குகனுக்கு இராமனிடம் உள்ள அன்பு குறைந்துவிட்டது என்பது பொருள் அன்று. பரதனுடைய பெருமையை அளக்கும் அளவு கோலாக இராமன் ஆகிவிட்டான். பொன்னின் மாற்றை அளக்கும் ஆணிப்பொன் உயர்ந்ததுதான். அப்படியே, 'ஆயிரம் இராமர் உனக்கு ஒட்பாவார்களா?' என்று பேசும் குகனுடைய உள்ளம், பரதன் பெருமைக்கு உரையாணியாக இராமனை வைத்துப் பார்க்கிறது.

முன்னே பரதனை மதியாது கோபம் பெருகிய குகன் இப்போது நேர் எதிர்த்தட்டிலே நின்று பரதனுடைய சிறந்த அன்பை உணர்ந்து வியந்து குழைந்து உருகினுன். பரதன் இராமபக்தி உருவமாக நின்ருன். இதனை உணர்ந்த குகன், இராமனைவிட அவன்பால் உள்ள அன்பு பெரிது, இராமபக்தி வலிது என்று சொல்வதாகவே கொள்ள வேண்டும். அவன் அப்படிச் சொல்லவில்லை ஆனல் உண்மை அதுதான். இராமனிடம் உள்ளத்தைப் பறி கொடுத்த குகன் இராமனிடம் பரதன் வைத்த அன்பின் வலிமையைக் கண்டு இப்போது உருகினுன்; வியந்தான்.

"இந்த ஏழை வேடனுகிய யான் உன்னை எவ்வாறு புகழவல்லேன்! கதிரவனுடைய ஒளிக்கற்றை மற்ற ஒளிகளை யெல்லாம் மங்கச் செய்வதுபோல அரசர்கள் புகழும் பெருமையை உடைய உங்கள் குலத்தில் வந்த அனைவருடைய

புகழையும் நீ உன் புகழாக்கிக் கொண்டாய்!'' என்று மேலும் குகன் பரதனைப் புகழ்ந்தான். இப்படிப் பலவற்றைச் சொல்லிப் பரதனுக்குரிய மரியாதைகளைக் குகன் செய்தான். இராமனுடைய குணங்களை உணர்ந்து அவனிடம் அன்பு செய்த குகன், பரதனுடைய நல்லியல்புகளை உணர்ந்து, அவனிடமும் பேரன்பு உடையவனானான்.

எனஇவை அன்ன மாற்றம்
இயைவன பலவும் கூறிப்
புனைகழற் புலவு வேற்கைப்
புளிஞர்கோன் பொருவில் காதல்
அனையவற் கமைவிற் செய்தான்;
ஆரவற் கன்பி லாதார்?
நினைவருங் குணங்கொ டன்றோ
இராமன்மேல் நிமிர்ந்த காதல்? [1]

[என்று இவைபோன்ற பொருத்தமான வார்த்தைகள் பலவற்றையும் சொல்லி, புனைந்த கழலையும் ஊன் நாற்றம் வீசும் வில்லையுடைய கையையும் பெற்ற வேடர் தலைவனாகிய குகன், ஒப்பில்லாத காதலையுடைய அந்தப் பரதனுக்குப் பொருத்தமாக உபசாரம் செய்தான். அவனிடத்தில் அன்பு இல்லாதார் யார்? இராமன்மேல் சிறந்து சென்ற அன்பு, நினைவதற்கரிய அவனுடைய குணங்களைக் கொண்டன்றோ?]

இவ்வாறு கவியின் கூற்றாகக் கம்பன் ஒரு பாடலை அமைக்கிறான் பரதனை, 'பொருவில் காதல் அனையவன்' என்கிறான். காதல் என்றது இராமபிரான்பால் அவனுக்கு இருந்த அன்பை. அதுதான் குகன். அவனிடம் கண்டு கொண்ட குணம்.

---

1. குகப்படலம், 37.

குகன் பண்பு

கம்பன் வால்மீகி ராமாயணத்தைத் தழுவியே தமிழில் இராமாயணம் பாடினான். அதனை அவனே நன்றியறிவுடன் தெரிவிக்கிறான். தழுவலேயன்றி வார்த்தைக்கு வார்த்தை நேர் மொழிபெயர்ப்பு என்று சொல்ல இயலாது. பல இடங்களில் அவன் மாற்றங்களைச் செய்திருக்கிறான். வால்மீகி முனிவர் ஓரிடத்தில் வைத்துள்ள கருத்தை வேறு ஓரிடத்தில் வைத்து அந்தக் கருத்துப் பின்னும் விளக்கம் பெறும்படி செய்திருக்கிறான்.

குகனுடைய படைப்பில் அத்தகைய முறையை மிகவும் நுட்பமாக மேற்கொண்டு அவனுடைய பண்புகளில் ஒன்றைக் குறிப்பினால் அறியும்படி அமைத்திருக்கிறான் கம்பன். அதை இப்போது கவனிப்போம்.

பரதனுடைய தோற்றத்தையும் பின்பு அவன் நோக்கத்தையும் அதனால் அவன் இயல்பையும் நன்கு உணர்ந்து கொண்ட குகன் வியப்பில் ஆழ்ந்தான்; உருகினான். பிறகு பரதன் குகனை, "இராமபிரான் தங்கியிருந்த இடம் எது?" என்று கேட்டான். குகன், 'வீரனே, இதோ இந்த இடந்தான்; நானே காட்டுகிறேன்" என்று சொல்லி, அப் பெருமான் கற்களினிடையே விரித்த தர்ப்பைப்புல்லின்மேல் படுத்திருந்த இடத்தைக் காட்டினான். அதைக் கண்டு கண்ணீர் விட்டுப் பதைத்து வருந்திய பரதன், "இலக்குவன் எங்கே படுத்திருந்தான்?" என்று கேட்டான். இலக்குவன் தூங்குவதாவது! அவன் அன்று இரவு முழுவதும் உறங்காமல் நின்றுகொண்டே இருந்தான். குகனும் உறங்காமல்

காவல் காத்துக்கொண் டிருந்தவனுதலால் தான் கண்டதைச் சொன்னுன்.

"இராமனும் பிராட்டியும் உறங்கவில்லை. ஊன்றிய கையோடும் பெருமூச்சோடும் அந்த வீரனை இலக்குவன் இரவின் எல்லையைக் காணும் மட்டும் நின்று கொண்டே இருந்தான். கண்ணைக் கொட்டவே இல்லை" என்ருன்.

அல்லைஆண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச
வில்லைஊன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்,
கல்லைஆண்டு உயர்ந்த தோளாய்,
கண்கள்நீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்ருன்;
இமைப்பிலன் நயனம்" என்ருன். [1]

இலக்குவன் இரவுமுழுவதும் கண்ணீரைச் சொரிந்து கொண்டே நின்ற கோலம், குகனுடைய உள்ளத்தில் நன்ருகப் பதிந்திருந்தது, அதனுல் அதைச் சொன்னுன்.

இந்தப் பாடலில் இராமபிரானை, 'அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகன்' என்ற சொற்றெடர்களால் புகழ்ந்த குகன், சீதையை அவள் என்று வெறும் சுட்டுச்சொல் ஒன்ருல் மட்டும் சுட்டிவிட்டுச் செய்தியைச் சொல்ல முற்படுகிருன். இராமனுடைய திருமேனி கரியது; ஆனுல் உலகத்துக் கரிய பொருள்கள் யாவும் ஒரே தன்மை உடையன அல்ல. இருளும் கரியது; இராமனும் கரியவன் என்று இனமாகச் சேர்த்துச் சொல்ல முடியுமா? அவன் கருஞாயிற்றை ஒத்துச் சுடர்விடும் திருமேனியை உடையவன், அவனுடைய

1. குகப்படலம், 42

திருமேனி வண்ணம் இருளை வெல்வது; அல்லை ஆள் வது. 'அப்படியானால் இருளினும் மிக்க செறிவான கருமையா? அது அவனுக்குப் பொருந்துமா?' என்ற கேள்விகள் எழலாம். ஆம்; இருளினும் மிக்க கருமை: ஆனால் அது ஒளிதரும் கருமை. இரவின் கருமை ஒளியை அவித்த கருமை. இராமன் மேனி வண்ணமோ சுடர்விடும் கருமை. நீலமணியில் திகழும் ஒளிபோல அவன் மேனியில் தேசு பொலியும் அந்தத் தேசுடன் இருப்பதால்தான் அவனுடைய எழிலுக்குப் பொருத்தமாக அக்கருமை அமைந்திருக்கிறது. அவன் அழகு, சுடர்விடும் கருவண்ணத்தால் அமைதி பெற்று நிலவுகிறது. அதனால், 'அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகன்' என்று கம்பன் பொருளுடைய சொற்களை அடுக்கி வைத்துக் காட்டுகிறான்.

அது சரி; நாயகனாகிய இராமபிரானை அவ்வளவு அழகனாகப் பல சொற்களாலே சொல்லிவிட்டு அவனுக்கு எவ்வகையிலும் ஏற்ற துணைவியாகத் திகழும் பிராட்டியை அழகி என்றேனும் சொல்லியிருக்கலாமே; அவள் என்று ஒரு சுட்டுப்பெயரால் சொல்லிவிட்டானே; இது தகுமா? நாயகனுக்கு ஏற்ற வகையில் நாயகியையும் வருணிப்பது தானே முறை? அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகன் என்று ஐந்து சொற்களால் புனைந்த இராமனுடைய எழில்தேவியை அவள் என்று மட்டும் சொல்லியிருப்பது ஒத்த நிறை உடையதென்று சொல்லமுடியாது. — இப்படி ஓர் ஐயம் எழ வகை உண்டு.

இந்தப் பாடல் குகனுடைய கூற்று. குகன், முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சியை இப்போது சொல்கிறான். இந்த இடத்தில் அவன் பண்பைக் குறிப்பாகப் பெற வைத்திருக்கிறான் கம்பன். வால்மீகி முனிவர் வேறு ஓரிடத்தில்

வைத்துக் காட்டியிருக்கும் ஓர் அரிய கருத்தைக் கம்பன் இங்கே மிக மிக நுட்பமாக அமைத்திருக்கிறான்.

இராமனுடைய சீரிய குணங்கள் பலவற்றுள்ளும் சிறந்தது, அவன் ஒரே மனைவியை உடையவன் என்பது. பிறர் மனைவியை நோக்காத பெருமான் அவன். அவனுடன் காடு போந்த இளவலாகிய இலக்குவனும் அத்தகையவனே.

கிட்கிந்தையில் அநுமன் சீதாபிராட்டி கழற்றி, முடிச்சிட்டு எறிந்த கலன்களைக் கொண்டுவந்து இராம பிரான் முன்பு வைத்தான். அவற்றைத் தன் கண்ணீரால் அலம்பிச் சீதையை நினைந்து வருந்தினான் இராமன். அப்பால் இலக்குவனை நோக்கி, "தம்பி, இந்த நகைகளை உனக்கு அடையாளம் தெரிகிறதா?" என்று கேட்டான். இலக்குவன் அவற்றை ஒவ்வொன்றாகப் பார்த்தான். எல்லா வற்றையும் ஒதுக்கிவிட்டுக் காற்சிலம்பை மாத்திரம் சுட்டிக் காட்டி, 'இது பிராட்டியினுடையதுதான். நான் தோள் வளையைக் கண்டறியேன்; குண்டலங்களையும் கண்டிலேன். தினமும் அடிபணிவதனாலே சிலம்பு ஒன்றே நான் கண்டது" என்று சொன்னான். இப்படி வால்மீகி முனிவர் சொல்கிறார்.

இலக்குவன் சீதையைத் தாய்போல வழிபட்டாலும் அவளைக் கண் எடுத்துப் பார்த்ததில்லை. அவள் திருமேனி எழிலையோ அதில் அணிந்திருந்த அணிகலன்களையோ அவன் கண்டதில்லை. திருவடி ஒன்றையே நோக்கிப் பணிந்தவன். ஆதலின் அவள் காற்சிலம்பை மட்டுமே அடையாளம் கண்டு கொண்டான்:

பிறன்மனை நோக்காத
பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ? ஆன்றஒழுக்கு. [1]

---

1. குறள், 148

என்பது திருக்குறள். ஆடவர்கள் ஆண்மை உடையவர்கள்; வீரம் உடையவர்கள்; பகையைப் போக்கி இடர்களை மாற்றும் மிடுக்கு உடையவர்கள்; அத்தகைய ஆண்மையினும் சிறந்த பேராண்மை ஒன்று உண்டு. பிறருடைய மனைவியைக் கண்ணெடுத்தும் பாராத பண்பு அது. பிறன் மனை நோக்காத பேராண்மை உடையவன் இராமன். அவன் இளவலாகிய இலக்குவனும் அத்தகையவனே. அதனை உணர்த்தவே வால்மீகி முனிவர் இந்த நிகழ்ச்சியைக் காட்டினார்.

இராமனுடன் பிறந்து, வளர்ந்து, உடன் போந்த தம்பிக்கு அவனைப்போன்ற உயர்குணம் இருந்தது வியப்பன்று. அது இயற்கை. அப்பெருமான் தம்பி என்று அன்புடன் ஏற்றுக்கொண்ட பெருமையை உடையவன் குகன். அவன் நகர வாழ்வை அறியாதவன். கொலை வேடர் குலத்தில் உதித்தவன். ஆயினும் இராமன் அவனுடைய குணங்களைக் கண்டு "நீ என் தம்பி" என்று கூறி அன்பு செய்தான். இராமனிடம் இருந்த பேராண்மை குகனிடமும் இருந்தது என்பதை அறிந்தால், இராமன் அவனைத் தம்பியாக ஏற்றுக்கொண்டது பொருத்தம் என்ற எண்ணம் நம்பால் வலிமை அடையும். ஆதலின் கம்பன் இங்கே குகனுடைய பேராண்மையைக் காட்டுகிறான். அதனைத் தனியே எடுத்துச் சொன்னால் சுவை இராது. எத்தனைக்கு எத்தனை ஒரு கருத்தைக் குறிப்பாக வைத்துக் கவிஞன் காட்டுகிறானோ, அத்தனைக்கு அத்தனை சுவை மிகுதியாகத் தேங்கும்.

குகன் இராமனுடைய திருமேனி எழிலைக் கண்டு உண்டு களித்தவன். அப்பிரானுடைய அஞ்சன வண்ணம் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ஆதலின் இராமபிரானை நினைக்கும்போதெல்லாம்

அந்த எழில் திருமேனியே அவன் அகக்கண்முன் நின்றது. அதனால், 'அல்லையாண்டு அமைந்த மேனி அழகன்' என்று வாய்விரம்பக் கூறி மகிழ்ந்தான். கண்ணை அகலத் திறந்து இராமனை ஆழ நோக்கிய குகன், பிராட்டியைக் கண்கொண்டு நோக்கவில்லை. உடம்புடன் நிழல் வருவதுபோலப்பிராட்டி வருவதை அறிந்தானே யன்றி அப்பெருமாட்டியின் திருவுரு வைக் கண்டான் இல்லை. 'பிறன் மனை நோக்காத பேராண்மை உடையவன் அவன். தான் நன்கு கண்ட அழகனை ஐந்து சொற்களால் வாய் இனிக்கக் கூறிய அவன், தான் காணாத பெருமாட்டியை 'அவள்' என்ற அளவிலே சுட்டினான். இது அவனுடைய அரிய பண் பைக் காட்டுகிறது. இலக்குவன் பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றவன் என்பதை வால்மீகி ஒரு வகையில் அமைத்துக் காட்டினார். குகனுக்கும் அத் தகுதி உண்டென்பதை கம்பன் இத்தனை நுட்பமாக இங்கே வைத்துக் காட்டினான்.

அல்லை ஆண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச,
வில்லை ஊன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்
கண்கள்நீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான்;
இமைப்பிலன் நயனம் என்றான். [1]

[அல்லை - இரவை. துஞ்ச - உறங்க. வெய்துயிர்ப்பு - பெருமூச்சு. வீரன் - இலக்குவன். தோளாய் - பரதனே. கங்குல் எல்லை காண்பளவும் - விடியும் மட்டும்.]

1. குகப்படலம் 42

ஒருவருடைய கூற்றில் வரும் சொற்கள் அவருடைய பண்பையும் உள்ளக்கிடக்கையையும் வெளிப்படுத்துவது இயல்பு. மகாகவிகள் தம்முடைய காவியங்களில் வரும் பாத்திரங்களின் கூற்றில் அவர்களுடைய உள்ளம் நிழலிடுவதைக் காட்டியிருப்பார்கள். அவ்வகையில் சீதையைப் பற்றிப் பல சொல் சொல்லாமல் இருந்ததே குகனுடைய பண்பைக் காட்டும் வண்ணம் இந்தப் பாடலை அமைத்திருக்கிறான் கம்பன்.

* * *

குகன் பரதனுடைய விருப்பப்படி அவனுடன் வந்தவர்களை யெல்லாம் ஏற்றி அக்கரைக்குக் கொண்டு போய் விடுவதற்கு ஏற்ற வகையில் பல தோணிகளைக் கொண்டு வரும்படி தன் ஏவலாளர்களுக்குச் சொன்னான். அவர்கள் ஆயிரக்கணக்கான தோணிகளைக் கொணரவே அவற்றில் யாவரும் ஏறிக்கொண்டு கங்கையைக் கடக்கலானார்கள்.

பரதனும் சத்துருக்கனனும் தாய்மார் மூவரும் சுமந்திரனும் குகனும் ஓர் ஓடத்தில் ஏறிக்கொண்டார்கள். முதலில் பரதனையும் சத்துருக்கனனையும் கண்ட குகன், இப்போது அவர்களுடைய தாய்மார்களைப் பார்த்தான். கோசலையை யாவரும் மரியாதையுடன் தொழுது நிற்பதைக் கண்டு அந்தப் பெருமாட்டி அவர்களுக்குள் தனிச் சிறப்புடையவள் என்பதை உய்த்துணர்ந்து கொண்டான். ஆதலால் முதலில் அப்பிராட்டியைத் தொழுது, பரதனிடம், "இப்பிராட்டி யார்?" என்று கேட்டான்.

சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற
கோசலையைத் தொழுது நோக்கி,
"வெற்றித்தார்க் குரிசில், இவர்
ஆர்?" என்று குகன்வினவ.[1]

1. குகப்படலம், 65

அங்கே கோசலை, சுமித்திரை, கைகேயி என்ற மூவரும் இருந்தார்கள். அந்த மூவரிலும் கோசலையை முதலில் தொழுதான் குகன். 'அவனுக்கு எப்படி அவள்தான் முதலில் தொழுவதற் குரியவள் என்று தெரிந்தது?' என்ற ஐயத்தை நீக்கவே கம்பன், 'சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற கோசலை' என்றான். தசரதனின் முதல்தேவி யாதலின் அவனைச் சேர்ந்தவர்கள் அவளைத் தொழுதார்கள். இராமனைப் பெற்றதனால் தேவர்கள் தொழும் சிறப்பை உடையவளானாள் அவள். பத்துப் பேர் ஒன்றாக உட்கார்ந் திருக்கும் ஓரிடத்தில் எல்லோரும் ஒருவரையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தால் அவரிடம் ஏதோ சிறப்பு இருக்கிறதென்று தெரிந்துகொள்ளலாம். இங்கே அருகில் உள்ளவர்கள் தொழும்படியாக நின்ற நிலையினால் கோசலை தனிச்சிறப்புடையவள் என்பதைக் குகன் உய்த்துணர்ந்து கொண்டான். அதனால் முதலில் அவளுக்கு ஒரு கும்பிடு போட்டுப் பரதனிடம் அவளைப்பற்றிக் கேட்டான். குகன் உய்த்துணரும் அறிவுடையவன் என்பதை இச்செயல் காட்டுகிறது.

அடுத்தபடியாகச் சுமித்திரையை வணங்கி, "இந்தப் பெருமாட்டி யார்?' என்று குகன் கேட்டான். தசரதன் தேவியரில் முன்னவள், பின்னவள் என்று முறை வகுக்கும் போது கோசலை, கைகேயி, சுமித்திரை என்ற வரிசையி லேயே மூவரும் நிற்பார்கள். அந்த வகையில் தலைமை யானவளுக்கு முதற்கும்பிடு போட்ட குகன் அடுத்தபடி கைகேயியைப்பற்றி அல்லவா கேட்டிருக்க வேண்டும்? சுமித்திரையைப் பற்றிப் பரதனை வினவுவது எப்படி முறையாகும்?

இந்த ஐயத்தையும் கம்பன் நீக்குகிறான். கோசலையை முதலில் தொழுவதற்குரிய காரணத்தை, அவள். பலரும்

தொழும் நிலையில் நின்றமையால் தெரிந்துகொண்டான் குகன். கோசலைக்கு அடுத்தபடி சுமித்திரை நின்றுகொண்டிருந்தாள். 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்னும்' ஆகையால் கைகேயி சற்றே ஒதுங்கி நின்றிருக்க வேண்டும். சுமித்திரை, கோசலையை ஒட்டி அயலில் நின்றாள். அதனால் குகன் கோசலையைத் தெரிந்துகொண்ட பிறகு சுமித்திரையைப் பற்றிக் கேட்டான்.

> அறந்தானே என்கின்றாள் அயல்நின்றாள்
> தனைநோக்கி "ஐய, அன்பின்
> நிறைந்தாளை உரை" [1]

என்றான்.

சுமித்திரை அன்பு நிறைந்தவள் என்பதை அவள் முகக்குறிப்பினால் உணர்ந்துகொண்டான் குகன்.

அடுத்தபடி கைகேயியைப் பார்த்து, "யார் இவர் என்று உரை?' என்று குகன் கேட்கப் பரதன் கடிய சொற்களால் அவள் செய்த செயலைச் சொன்னான்.

குகன் அதைக் கேட்டு அவளையும் தொழுதான். ஆயிரம் இராமரும் ஒப்பாகாத பரதனைப் பெற்றவள் அல்லவா?

கோசலையைப் பரதன் அறிமுகப்படுத்தியவுடன் அவள் அடியின்மிசை நெடிது வீழ்ந்து அழுதான் குகன். சுமித்திரையையும் தொழுதிருக்க வேண்டும். பின்பு கைகேயியைப் பற்றிப் பரதன் வெறுத்த சொற்களால் சொன்னதைக் கேட்டபோதும், அவளையும் குகன் தொழுதான்.

> என்னக் கேட்டவ் விரக்கம்இ லாளையும்
> தன்நற் கையில் தொழுதனன் தாயென. [2]

1. குகப்படலம் 68
2. குகப்படலம். 71

அவள் இரக்கம் இல்லாதவளானாலும் குகன் அவளைத் தாயென்றே தொழுதானாம். 'தன் நல்ல கையால் தொழுதான்' என்று கவிஞன் கூறுகிறான். அவ்வளவு நல்லவனாகிய பரதன் தன் தாயை இழித்துக் கூறினாலும் குகன் அவளை இழிவாக இப்போது கருத வில்லை என்ற குறிப்பையே அந்தச் சொற்கள் காட்டு கின்றன.

யாவரும் கரையை அடைந்தனர், குகன், பரதன் முதலியவர்களோடு சித்திர கூடத்தை அடைந்து இராமனைக் கண்டு தொழுதபின் மீளும்போது தானும் விடை பெற்றுக் கொண்டு சிருங்கிபேரபுரம் வந்தடைந்தான்.

* * *

கதைப்போக்கில், இராமபிரானுடைய காட்டு வாழ்க் கையின் தொடக்கத்தில் குகனை அறிமுகம் செய்துவைக் கிறான் கம்பன். இராமனை அவன், முதல் முதலில் கண்டு அவனிடம் ஈடுபட்டதையும், பரதனைக் கண்டு முதலில் ஐயுற்றுச் சினம் அடைந்து பின்பு அவன் மெய் இயல்பறிந்து விம்மிதம் அடைந்து உருகியதையும் பார்த் தோம்.

பிறகு சுந்தரகாண்டத்தில் சீதாபிராட்டியின் எண்ணக் கோவையிலே குகன் வருகிறான். அசோகவனத்தில் இருந்து துயர்க்கடலில் நீந்திக்கொண்டிருந்த சீதை, இராமனுடைய இயல்புகளையும் செயல்களையும் எண்ணிப் பார்க்கிறாள். பல நிகழ்ச்சிகள் அவள் உள்ளத்தே காட்சி அளிக்கின்றன, மனத்தின் இயல்பை நன்குணர்ந்த கம்பன், அவள், நிகழ்ச்சிகளை முறைப்படி எண்ணுவதாக அமைக்க வில்லை. முன்னும் பின்னும் மாறி மாறி அவள் எண்ணு கிறாள். பலருக்கும் தெரிந்தவற்றையும் தான்மாத்திரம் நுட்ப

மாக உணர்ந்தவற்றையும் எண்ணிப் பார்க்கிறாள். அவ்வாறு அவள் உள்ளத்தே படர்ந்த பழைய நினைவுகளில் குகனை இராமன் தம்பியாக ஏற்றுக்கொண்ட பெருந்தகைமைச் செயலும் ஒன்று.

> ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
> ஏழை வேடனுக்கு, 'எம்பிநின் தம்பி நீ
> தோழன்; மங்கை கொழுந்தி' எனச்சொன்ன
> வாழி நண்பினை உன்னி மயங்குவாள் [1]

[அம்பி - ஓடம். கடாவிய - செலுத்திய. எம்பி - என் தம்பி, மங்கை - சீதை. கொழுந்தி - சகோதரன் மனைவி.]

* * *

இராமன், குகனை நினைக்கின்ற நிகழ்ச்சி ஒன்று யுத்த காண்டத்தின் தொடக்கத்தில் வருகிறது. இராமன் விபீஷணனுக்குப் புகல் தருகின்றான். அவனை அடைக்கலமாக ஏற்றுக் கொள்கிறான். அப்போது அவனிடம் 'நீ என் தம்பி' என்று சொல்ல வருகிறான். காட்டு வாழ்க்கையை மேற்கொண்ட பின்பு இராமன் மூவரைத் தம்பியாக ஏற்றுத் தோழமை பூண்டான். குகன், சுக்கிரீவன், விபீஷணன் என்ற மூவரில் முதலில் நட்டவன் குகன். புதுத்தம்பியர் மூவரில் விபீஷணனும் ஒருவன் என்பதை இராமன் சொல்லும் போது முதலில் குகனை நினைக்கிறான்.

> "குகனொடும் ஐவர் ஆனோம்
> முன்பு;பின் குன்று சூழ்வான்
> மகனொடும் அறுவர் ஆனோம்;
> எம்முழை அன்பின் வந்த

1. காட்சிப்படலம். 23

அகனமர் காதல் ஐயா!
நின்னொடும் எழுவர் ஆனோம்;
புகலரும் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் உந்தை."[1]

[குன்று சூழ்வான் - மேருமலையை வலம் வரும் கதிரவன்; அவன் மகன், சுக்கிரீவன். அகன் அமர். புகல் அரும் - புகுவதற்கு அரிய. உந்தை - உன் தந்தையாகிய தசரதன்.]

புதிய தம்பியரில் முதல்வனாக நின்றவன் குகன். ஆதலின் அவனை முதலில் சொல்லி விபீடணனை ஏற்றுக் கொண்டான் இராகவன்.

இராமன், இராவணனை வீட்டி அயோத்திக்குப் புறப்பட்டான். கணக்கில்லாத வானரப்படைகள் அவனுடன் வந்தன. இடையிலே பரத்துவாசனுடைய ஆசிரமத்தில் தங்கினான் இராமன். அப்போது அவன் அநுமனை நோக்கி "என் வருகையை நீ போய்ப் பரதனிடம் சொல்வாயாக" என்று சொல்லியனுப்பினான். அவ்வாறே புறப்பட்ட அநுமன் கங்கைக் கரையில் இருந்த குகனுக்கும் இராமன் வருகையைச் சொல்லிவிட்டுச் சென்றான்.

அந்த மகிழ்ச்சிக்குரிய செய்தியைக் கேட்டுப் பேருவகை கொண்டு, தன் உடனுறையும் துணைவர்களுடன் குகன் பரத்துவாசர் ஆசிரமத்துக்கே வந்து விட்டான்.

இராமனைக் கண்டபோது அவனுடைய உணர்ச்சி கரைகடந்து பொங்கியது. நெடுந்தூரத்தில் வரும்போதே கையைக் குவித்துத் தொழுதனன். அவன் உள்ளம் நடுங்

1. வீடணன் அடைக்கலம். 146

கியது, கண் துளங்கியது. ஓடினுன். அழுதான். இராமன் காலில் விழுந்தான். இராமன் தம்பியைத் தழுவுவது போல அவனை எடுத்துத் தழுவிக்கொண்டான். "உன் மனைவி மக்கள் சௌக்கியமா?" என்று விசாரித்தான்.

தொழுதனள்; மனமும் கண்ணும்
  துளங்கினுன்: சூழ ஓடி
அழுதனன்; கமலம் அன்ன
  அடித்தல மதனின் வீழ்ந்தான்;
தழுவினன் எடுத்து மார்பில்
  தம்பியைத் தழுவு மாபோல்;
"வழுவிலா வலிய ரன்றே
  மக்களும் மனையும்?" என்ருன் [1]

[துளங்கினன் - நடுங்கினுன். தழுவுமாபோல்-எடுத்துத் தழுவினுன். வழு இலா - நோய் இல்லாத.]

குகன் இராமனை நெடுநாள் காணுமல் தவித்துப் போனவன். அந்த நீண்ட பிரிவுக்குப் பிறகு இப்போது பார்த்தான். அவன் உள்ளத்தில் பொங்கிய உணர்ச்சி வேகத்தைச் சிறு சிறு வாக்கியங்களால் கம்பன் காட்டுகிருன். தொழுது, துளங்கி, அழுது, விழ்ந்தான் என்று வினையெச்சங்களை அடுக்கி அவன் செயல்களைத் தெரிவித்திருக்கலாம். அப்படிச் சொல்வதில் வேகம் தோன்ருது. தொழுதனன், அழுதனன், வீழ்ந்தான் என்று அவற்றை முற்ருக்கி வாக்கியங்களை முடித்து அமைத்ததனுல் குகனுடைய செயல்களில் உள்ள வேகமும் அவற்றுக்குக் காரணமான உணர்ச்சியும் புலனுகின்றன.

முதலில் இராமன் அவனை, "நீ என் தம்பி" என்று சொல்லி அன்பு செய்தான். இப்போதோ அவனைத் 'தன்

1. மீட்கப். 813

மார்பார எடுத்துத் தழுவிக்கொண்டான். உடன் இருந்து பழகும் வாய்ப்புக் குகனுக்கு இல்லாவிட்டாலும் உணர்ச்சியால் அவர்களிடையே உள்ள நட்பு, வலிமை பெற்றுவிட்டது.

> " புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
> நட்பாம் கிழமை தரும்" [1]

என்று திருக்குறள் கூறுகிறதல்லவா? இராமன் குகனுடைய பேரன்பை உணர்ந்தான். அவன் செயல்கள் அந்த அன்பைப் புலப்படுத்தின. இராமனும் அவ்வன்புக்கு ஈடு செய்பவன்றானே? ஆதலால் மார்புறத் தழுவிக் கொண்டான். "உன் மக்களும் மனைவியும் நோயின்றி வலியராக இருக்கிறார்களா?" என்று கேட்டான்.

அந்தக் கேள்விக்கு விடை கூறினான் குகன். அந்த விடையில் அவனுக்கு இராமனிடம் உள்ள பேரன்பின் ஆழம் புலனாயிற்று. 'இப்படித் தழுவிக் கொள்ளும் அருளாளனோடு நாமும் போய்த் தொழும்பு செய்யமுடியாமற் போயிற்றே!' என்ற துயரம் அவனிடம் பொங்கியது.

"உன்னுடைய திருவருள் இருக்கும்போது எனக்கு என்ன குறைவு? என் மனைவி மக்களைப்பற்றி நான் கவலைப் படவில்லை. நாயேனுக்கு அவர்கள் அரிய பொருள் அல்லர். நான் இவ்வளவு காலமும் இன்புற்று வாழவில்லை. உன்னைப் பிரியாமல் உன்னைத் தொடர்ந்து சென்று தெளிவுற்ற வீரனாகிய இலக்குவன் செய்த ஏவல்களைச் செய்யும் பேறு பெறாதவனாகிய நான் மயக்கமுடைய மனத்தைப் பெற்றவன்; இங்கே நான் வாழ்ந்த வாழ்வு இனிதல்லவா?' என்று கூறுகிறான்.

1. குறள், 785.

"அருள்உனது உளது நாயேற்கு;
அவர்எலாம் அரிய வாய
பொருள்அலர்; நின்னை நீங்காப்
புணர்ப்பினுல் தொடர்ந்து போந்து
தெருள்தரும் இளைய வீரன்
செய்வன செய்க லாதேன்
மருள்தரும் மனத்தி னேனுக்கு
இனிதன்றோ வாழ்வு மன்னோ?" [1]

[உனது அருள் உளது. புணர்ப்பினுல் - பேற்றினுல். இளைய வீரன் - இலக்குவன். தெருள் - தெளிவு. மருள் - மயக்கம். இனிதன்றோ வாழ்வு என்றது இனிதன்று என்ற பொருளைத் தருவது.]

அப்படிச் சொன்ன குகனைப் பார்த்து இராமன், "இப்படி ஏன் பேசுகிறுய்? பரதனை விட நீ வேறு? போய் இனிதே இருப்பாயாக" என்று கூறினுன். பரதனும் தன்னைப் பிரிந்திருந்தான் என்ற கருத்தை எண்ணியே இராமன் கூறினுன் பின்பு இராமன் அருகில் இருந்த சுக்கிரீவன் முதலியவர்களுக்குக் குகனை அறிமுகப் படுத்திஞன்.

"இவன் கங்கையின் இருகரைக்கும் தலைவன். உயிர் களிடம் தாயை விட அன்புடையவன். குற்றம் இல்லாத வேடர் தலைவன், குகன் என்னும் வள்ளல்" என்று கூறினுன்.

தொழுதுநின் றவனை நோக்கித்
துணைவர்கள் தமையும் நோக்கி
முழுதுணர் கேள்வி மேலோன்
மொழிகுவான்; "முழுநீர்க் கங்கை

1. மீட்சிப், 314

தழுவிரு கரைக்கும் நாதன்
தாயினும் உயிர்க்கு நல்லன்;
வழுவிலா எயினர் வேந்தன்;
குகன்எனும் வள்ளல் என்பான்." [1]

[துணைவர்கள் - சுக்கிரீவன் முதலியவர்கள். மேலோன் - இராமன். எயினா வேந்தன் - வேடர்களுக்கு அரசன்.]

முன்பு இலக்குவன் குகனைப்பற்றி இராமனுக்குச் சொன்னபோது,

"உள்ளந் தூயவன் தாயின் நல்லான்"

என்று சொன்னான். இப்போது இராமனே இன்னும் ஒரு படி மேல் வைத்து, "தாயினும் உயிர்க்கு நல்லன்" என்றான். குகனுடைய உள்ள நெகிழ்ச்சியை அறிந்தே அப்படிக் கூறினான். கோசல நாடுடை வள்ளலாகிய இராமன் குகனை, "குகன் எனும் வள்ளல் என்பான்" என்று கூறுவதிலும் குகனுடைய ஏற்றத்தைக் காண்கிறோம். பரதனோடு வந்த கணக்கில்லாத சேனையை ஏற்றிக் கங்கையைத் தாண்டச் செய்தான் அவன். அந்தப் பெரிய உதவியை வழங்கினது ஒன்றே போதும், அவன் வள்ளன்மையைக் காட்ட.

இராமன் தன் திருவாக்கால் இவ்வாறு சொல்ல அதைக் கேட்டுச் சுக்கிரீவனும் பிறரும் குகனைத் தழுவிக்கொண்டு நண்பராயினர்.

அன்றை இரவிலும் இலக்குவனும் குகனும் கலக்கமில்லாமல், தூங்காமல் காத்து நின்றார்கள். 'இலக்குவனைப் போல உடன் வந்து தொண்டு செய்யும் பேறு எனக்கு இல்லையே!' என்று வருந்தும் இயல்பையுடைய குகன்,

1- மீட்சிப், 316

நேர்ந்த செவ்வியைப் பயன்படுத்திக் கொள்ளாமல் விடுவானோ?

அலங்கலந் தொடையி னானும்
அந்தியின் கடன்கள் ஆற்றிப்
பொலங்குழை மயிலி னோடு
துயிலுறப் புணரி போலும்
இலங்கிய சேனை சூழ
இளவலும் எயினர் கோனும்
கலங்கலர் காத்து நின்றார்;
கதிரவன் உதயம் செய்தான்'' [1]

[அலங்கல் அம் தொடையினான் - அசைகின்ற மாலையையுடைய இராமன். பொலங்குழை மயில் - பொன்னால் ஆன குழையை அணிந்த மயிலைப்போன்ற சீதை. புணரி - கடல். இளவல் - இலக்குவன்; கலங்கலர் - தூக்கக் கலக்கமின்றி.]

* * *

இராமன் முடிசூட்டிக் கொண்டான். அப்போது யாவரும் அவனை வணங்கி ஆசி பெற்றார்கள். குகனும் தன்னுடைய வீரர்களோடு வந்து தொழுது வலஞ் செய்தான்.

வெற்றிவெஞ் சேனை யோடும்
வெறிப்பொறிப் புலியின் வெவ்வால்
சுற்றுறத் தொடுத்து வீக்கும்
அரையினன், சுழல்செங் கண்ணன்,
கற்றிரள் வயிரத் திண்டோள்
கடுந்திறல் மடங்கல் அன்னான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்
கிறைகுகன் தொழுது சூழ்ந்தான். [2]

1. மீட்சிப், 318. 2. விடை கொடுத்த, 10.

[பொறி - புள்ளி. வீக்கும் - கட்டும். மடங்கல் - சிங்கம்.]

குகனை முதலில் எப்படி அறிமுகப்படுத்தினானோ அதே தோற்றத்தில் கதை முடியப்போகிற இந்தக் கட்டத்திலும் கம்பன் காட்டுகிறான்.

குகன் விடை பெற்றுக்கொண்டபோது இராமன், "குற்றமற்ற துணைவனாகிய உனக்கு என்ன உபசாரம் சொல்லப்போகிறேன்!" என்று சொல்லி, யானையும் குதிரையும் பொன்னும் ஆடையும் அணிகலன்களும் வழங்கினான். பிறகு யாவரும் விடைகொண்டு புறப்பட்டார்கள். விபீஷணன் தன்னுடைய விமானத்தில் யாவரையும் ஏற்றிக்கொண்டு செல்லுகையில், முதலில் குகனை அவன் பதியாகிய சிருங்கிபேரபுரத்தில் விட்டுச் சென்றான்.

இராமனுடைய பேரன்புக்கு உறைவிடமாகிய குகன் அவனால் தழுவப்பெற்ற பேறும், அவன் வழங்கிய பரிசிலும், அவன் தந்த பேரன்பும் செல்வமாகக் கொண்டு வாழ்ந்தான். அவனுடைய அழகிய ஓவியத்தைத் தன்னுடைய உயிர்த் தன்மை நிரம்பிய சொற்களால் கோலஞ்செய்து காட்டுகிறான். கம்பன்.

"குகனைத் தன் பதியின் உய்த்து. வீடணன் இலங்கை புக்கான்" என்று கம்பன் குகனைப்பற்றிய கடைசிச் செய்தியைக் கூறி முடிக்கிறான். அந்தக் குகன் நம் உள்ளத்தில் இராமனோடும பரதனோடும் அருகில் நின்று தாயினும் நல்லனாகக் காட்சி அளிக்கிறான்.

பரதனும் குகனும்

பரதனும் குகனும் கங்கைக் கரையிலே சந்திக்கிறார்கள். சந்திப்பதற்கு முன் குகனுக்குப் பரதனைப் பற்றி ஐயம் நிகழ்ந்தாலும் அவனுடைய தோற்றத்தைக் காணும் போது ஐயம் நீங்கித் தெளிகிறான். பரதனைக் காணக் குகன் வருகிறான். இருவரும் சந்திப்பதைக் குகப்படலத்தில் உள்ள பாட்டு ஒன்று கூறுகிறது. பல புலவர்களின் ஆராய்ச்சிக்கு உட்பட்டுக் கம்ப சூத்திரமாக நிற்கும் பாட்டு அது.

வந்தெதிரே தொழுதானை
வணங்கினான் மலர்இருந்த
அந்தணனும் தனைவணங்கும்
அவனும்அவன் அடிவீழ்ந்தான்
தந்தையினும் களிகூரத்
தழுவினான் தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும்
வீற்றிருக்கும் சீர்த்தியான், [1]

என்பது அந்தப் பாட்டு.

பாட்டின் சொற்களில் பொருள் விளங்காதது ஒன்றும் இல்லை. பரதனும் குகனும் தத்தமக்குள் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். யார் எப்படி வணங்கினார் என்பதைத் தெள்ளத் தெளியத் தெரிந்துகொள்ளப் பாட்டில் குகன் என்றோ பரதன் என்றோ அவரவருக்குரிய இயற்பெயரைச் சொல்லவில்லை. தொழுதானை, மலர் இருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனும், அவன்,

1. குகப்படலம். 32.

சீர்த்தியான் என்று பொதுவாகக் கம்பன் சொல்லியிருக்கிறான். அவர்களுடைய வணக்க முறைகளை மூன்று வேறு வகையில் குறிக்கிறான். தொழுதான், வணங்கினான். அடி வீழ்ந்தான் என்ற மூன்றும் வணக்க வகைகளைக் குறிக்கின்றன.

இங்கே நிகழும் நிகழ்ச்சிகள் மூன்று வகையாக இருத்தல் கூடும். குகனும் பரதனும் ஒருவர் அடியில் ஒருவர் வீழ்தல், குகன் அடியில் பரதன் மாத்திரம் வீழ்தல். பரதன் அடியில் குகன்மாத்திரம் வீழ்தல் என்ற மூன்று காட்சிகளில் ஏதாவது ஒன்று இங்கே நிகழ்ந்திருக்க வேண்டும். ஒருவரும் அடி வீழவில்லை என்று சொல்ல இயலாது. ''அடி வீழ்ந்தான்'' என்று பாட்டில் வருவதனால் யாராவது ஒருவரேனும் மற்றவர் காலில் விழுந்து பணிந்திருக்க வேண்டும்.

பின்னே, பரதன் தான் வந்த காரியத்தைச் சொன்னவுடன் அதனைக் கேட்ட குகன் உணர்ச்சி விஞ்சிப் பரதன் காலில் விழுவதாகக் கம்பன் பாடுகிறான்.

> **கேட்டனன் கிராதர் வேந்தன்**
> **கிளர்ந்தெழும் உயிர்ப்ப னாகி**
> **மீட்டும்மண் ணதனில் வீழ்ந்தான்,** [1]

என்பதில், 'மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்' என்று கூறுவதனால் முன் ஒரு முறை அவன் பரதன் அடியில் விழுந்து பணிந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. ஆகவே முன்சொன்ன மூன்று நிகழ்ச்சிகளில், பரதன் மாத்திரம் குகன் காலில் விழுவது என்பது விலக்கப் பெறுகிறது. எஞ்சியிருப்பவை இரண்டு; குகன் மாத்திரம் பரதன்

1. குகப்படலம், 34.

காலில் விழுந்தான், அல்லது இருவரும் ஒருவரை ஒருவர் அடி வீழ்ந்து பணிந்தார்கள். இந்த இரண்டு வகையிலும் இந்தப் பாட்டிற்குப் பொருள் கொள்ளலாம்.

இருவரும் அடிபணிந்து கொண்டார்கள் என்று பொருள்கொள்வோர் உரை கூறும் முறை வருமாறு:

வந்து - (ஒரு தனியே தான் வந்தவனாகிய குகன்) பரதன் அருகில் வந்து. எதிரே தொழுதானை - எதிரே திசை நோக்கித் தொழுதுகொண்டிருந்த பரதனை வணங்கினான் - காலில் விழுந்து பணிந்தான். மலர் இருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனும் - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும் தன்னை வணங்கும் சிறப்புடைய அந்தப் பரதனும். அவன் அடி வீழ்ந்தான் - குகனுடைய திருவடியில் விழுந்து பணிந்தான் தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான் - தக்கவர்களின் எண்ணத்திலும் (வணங்குவதால்) தலையிலும் வீற்றிருக்கும் சிறப்புடைய குகன். தந்தையினும் களிகூர் - தந்தையை விடக் களிப்பு மிக. தழுவினான் - பரதனைத் தழுவிக்கொண்டான்.

அடுத்த பாட்டு, "தழுவின புளினர் வேந்தன் தாமரைச் செங்கணானை"க் கேட்பதாக வருகிறது. 'தழுவின புளினர் வேந்தன்' என்று குகனைக் குறிப்பதனால் தழுவியவன் குகன் என்று தெரிந்துகொள்ளலாம் என்பர்.

இனி குகன் மாத்திரம் அடி வீழ்ந்தான் என்று பொருள் கொள்ளும் வகை வருமாறு:

வந்து எதிரே தொழுதானை - வந்து எதிரே தொழுத குகனை. மலர் இருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனும் வணங்கினான் - பிரமதேவனும் வணங்கும் பரதனும் தலைவளைந்து வணக்கம் புரிந்தான். அவன் - குகன், அடி வீழ்ந்

தான். பரதனுடைய அடியில் வீழ்ந்தான். தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான் - பரதன், தந்தையினும் களிகூரத் தழுவினன் - தந்தையைக் காட்டிலும் களிமிகத் தழுவிக்கொண்டான்.

இப்படிக் கூறினால் அடுத்த பாட்டில், "தழுவின புளினர் வேந்தன்" என்று வருவது மாறுபடாதோ என்றால், அங்கே, 'தழுவப்பட்ட வேடர் தலைவன்' என்று பொருள் கொள்ள வேண்டும். செயப்பாட்டு வினை தமிழில் மிகுதியாக வருவதில்லை.

இந்த இருவகைப் பொருளிலும் வணங்கினன் என்பதற்கு உரை வேறுபடுகிறது. இருவரும் அடிபணியும் வகைக்கு, வணங்கினன் என்பதற்கு அடி வீழ்ந்தான் என்று உரைக்கவேண்டும். மற்றொரு வகைக்கு, தலைவணங்தான் என்று கொள்ளவேண்டும். தொழுதான், வணங்கினன், அடி வீழ்ந்தான என்ற மூன்றும் முறையே கை, தலை, மெய் என்ற மூன்றின் செயல்களையும் தனித் தனியே குறிப்பன. அடி வீழ்வதைத் தெளிவாகக் குறிப்பது கம்பன் வழக்கம். ஆதலால் இங்கே வணங்கினன் என்பதற்கு அடி வீழ்ந்தான் என்று கொள்வது சரியன்று' என்பது ஒரு வாதம்.

சொற்பொருள் ஆராய்ச்சியை விட்டுவிட்டு, இந்த நிகழ்ச்சியின் தகுதியைப்பற்றி இரு வகையிலும் ஆராய்வார் இருக்கின்றனர். சக்கரவர்த்தியின் திருமகனாகிய பரதன் வேடன் காலில் விழுவது முறையன்று என்று கூறுவர் ஒரு சாரார். பரதன் குகனைத் தனக்கு மூத்தவன் என்று கூறிக் கொள்வதனாலும் திருமால் அடியார்களாகிய பாகவதர்களில் ஒருவரை ஒருவர் அடிபணிதல் முறையாத

லாலும் அது இழுக்காகாது என்று அதற்குச் சமாதானம் கூறுவர் மற்றையோர்.

2

பரதனைக் குகன் மாத்திரம் அடிவீழ்ந்து பணிந்தான். இருவரும் ஒருவர் தாளில் மற்றவர் வீழ்ந்தனர் என்ற இரண்டு செய்திகளில் எது கொள்வதற்குரியது? பாகவத சம்பிரதாயம் இருட்பினும் கம்பன் சம்பிரதாயம் என்ன என்று தெரிந்துகொள்வது நல்லது அல்லவா? இத்தகைய சந்தர்ப்பங்களில், அதாவது மதிப்பிற்குரிய இருவர் சந்திக்கும் சமயங்களில், அவர்கள் தமக்குள்ளே வணங்கிக் கொள்வதைக் கம்பன் எப்படி எப்படிக் காட்டுகிறான் என்பதைக் கவனித்தால், அவன் கருத்துக்கு ஏற்றபடி இங்கே பொருள் கொள்ள முடியலாம்.

முதல் எடுத்துக்காட்டு

தசரதன், புதல்வரை அளிக்கும் வேள்வி புரியக் கலைக்கோட்டு முனிவனை அழைத்துவரச் செல்கின்றான். அம்முனிவன் தன் மாமனாராகிய உரோமபதன் என்னும் அரசனிடம் இருப்பதாக அறிந்து அவ்வரசனை நாடிச் செல்கிறான். தசரதன் வணங்கிப் பயன் பெறுவதற்குரிய முனிவனுடைய மாமனார் உரோமபதன் ஆயினும் தசரதன் சக்கரவர்த்தி.

தசரதன் வருவதை அறிந்து உரோமபதன் அவனை எதிர்சென்று வரவேற்கச் செல்கிறான். இருவரும் சந்திக்கிறார்கள். அப்போது உரோமபதன் தசரதன் அடியில் வீழ்கிறான். அவனைத் தசரதன் தழுவிக் கொள்கிறான்.

எதிர்கொள்வான் வருகின்ற வயவேந்தன்
தனைக்கண்ணுற் றெழிலி நாண
அதிர்கின்ற பொலந்தேர்நின் றரசர்பிரான்
இழிந்துழிச்சென் றடியில் வீழ
முதிர்கின்ற பெருங்காதல் தழைத்தோங்க
எடுத்திறுக முயங்க லோடும்
கதிர்கொண்ட சுடர்வேலான் தனைநோக்கி
இவைஉரைத்தான் களிப்பின் மிக்கான்.[1]

தன்னை எதிர்கொள்ள வருகின்ற உரோமபதனைக் கண்டு மேகமும் நாணும்படி முழங்கும் தேரில் நின்றும் சக்கரவர்த்தியாகிய தசரதன் இறங்கியபொழுது உரோம பதன் தசரதன் திருவடியில் வீழ, தசரதன் எடுத்து இறுக முயங்கினான்.

இங்கே, உரோமபதன் தசரதன் அடியில் வீழ்ந்து பணிய, அவன் எதிரே தானும் வீழ்ந்து பணியாமல் எடுத்து இறுகத் தழுவிக் கொண்டான் தசரதன்.

இரண்டாவது எடுத்துக்காட்டு

மிதிலையில் திருமணத்தை எதிர்நோக்கி இராமன் இருக்கிறான். அப்போது தசரதன் மிதிலைக்கு வருகிறான். இருவரும் சந்திக்கிறார்கள்.

அளிகம்வந் தடிதொழக்
கடிதுசென் றரசர்கோன்
இனியபைங் கழல்பணிந்
தெழுதலும் தழுவினான்.

---

1. திருவவதாரப் படலம், 60. எழிலி - மேகம். இழிந்துழி - இறங்கியபொழுது. முயங்கலோடும் - தழுவியவுடன்.

மனுவெனுந் தகையன்மார்
பிடைமறைந் தனமலைத்
தனிநெடுஞ் சிலைஇறத்
தவழ்தடங் கிரிகளே. [1]

சேனைகள் தன்னைத் தொழ இராமன் விரைவிலே சென்று தசரதனுடைய காலில் விழுந்து பணிந்து எழுந்தான், உடனே தசரதன் தழுவினான். அவன் மார்பில் இராமன் தோள்கள் மறைந்தன.

இங்கே அடி வீழ்ந்தவன் இராமன்; தழுவினவன் தசரதன்.

மூன்றாவது எடுத்துக்காட்டு

அப்படியே இலக்குவன் வந்து தசரதனை அடி பணிந்து எழ, அவனைத் தசரதன் தழுவிக் கொள்கிறான்.

இளையபைங் குரிசில்வந்
தடிபணிந் தெழுதலும்
தளைவருந் தொடையல்மார்
புறஉறத் தழுவினான். [2]

நான்காவது எடுத்துக்காட்டு

சித்திர கூடத்தில் இருந்த இராமனைக் காணப் பரதன் வருகிறான். அவன் இராமன் அடியில் வந்து வீழ, இராமன் அவனைத் தழுவிக் கொள்கிறான்.

---

1. எதிர்கோட் படலம், 23. அனிகம் - படை. அரசர்கோன் - தசரதன். சிலை இற - வில் முறியும்படி.

2. எதிர்கோட் படலம், 24. இளைய பைங்குரிசில் - லட்சுமணன். தளை - கட்டுதல். தொடையல் - மாலை.

....மலரடி வந்து வீழ்ந்தனன்
இறந்தநற் றுதையை எதிர்கண் டென்னவே. [1]

அயாவுயிர்த் தழுகண்ணீர்
அருவி மார்பிடை
உயாவுறத் திருவுளம்
உருகப் புல்லினன். [2]

ஐந்தாவது எடுத்துக்காட்டு

அகத்தியனுடைய ஆசிரமத்துக்கு இராமன் வருகிறான். அவன வருவதை அறிந்து அகத்தியமுனிவன் மிக்க உவகை அடைகிறான். 'வானிலும் நிலத்திலும் பிற உலகங்களிலும் பெரிய எண்ணங்களிலும் வேதத்திலும் இருக்கும் பொருள் என்று யாரும் உள்ளத்தே நினைக்கின்ற கருத்தாகிய ஒருவனை நான் என் கண்ணினால் காணும் பேறு பெறுவேன்' என்று மனம் களிக்கிறது. அவ்வளவு ஆர்வத்தோடுள்ள அகத்தியனை இராமன் காணுகிறான். அப்போது,

நின்றவனை வந்தநெடி
யோனடி பணிந்தான்;
அன்றவனும் அன்பொடு
தழீஇயழுத கண்ணன்,
நன்றுவர வென்றுபல
நல்லுரை பகர்ந்தான்
என்றுமுள தென்றமிழ்
இயம்பிஇசை கொண்டான். [3]

1. கிளைகண்டு நீங்கு படலம், 58.

2. கிளைகண்டு நீங்கு படலம், 55. அயாவுயிர்த்து - வருந்தி.

3. அகத்தியப் படலம், 47. நெடியோன் - இராமன். அவனும் - அகத்தியனும். இசை - புகழ்.

இங்கே தெளிவாக அகத்தியனை இராமன் அடிபணிந்தான் என்றும் அகத்தியன் அவனைத் தழுவிக் கொண்டான் என்றும் கம்பன் கூறுகிறான். இராமன், தெய்வத்தின் திருவவதாரம் என்று அவன் வரவை எதிர்பார்த்து நின்ற முனிவன், இப்போது இராமன், தசரத குமாரனுதலாலும் தான் முனிவனுதலாலும் உலகியலோடு ஒப்ப நடந்தான் என்று தோன்றுகிறது. எப்படியாயினும், அகத்தியன் இராமனுடைய அடியில் விழவில்லை; இராமன் விழ அவனைத் தழுவிக்கொண்டான் என்பது தெளிவு.

இப்படியே ஒருவரை மற்றொருவர் அடிபணிந்து வீழ்ந்தால் அந்த வணக்கத்தைப் பெற்றவர் தழுவிக் கொள்ளும் காட்சியைக் கம்பராமாயணத்தில் பல இடங்களில் காணலாம்.

பிற எடுத்துக்காட்டுகள்

பின்னே, வானுலகத்திலிருந்து தசரதன் வந்து இராமனைக் காண்கிறான். வேதத்தால் அறியப்படும் இராமன் அவன் மலர்த்தாள் மிசை வீழ்கிறான்; வீழ்ந்த மைந்தனைத் தசரதன் தழுவிக்கொள்கிறான்.[1] அயோத்திக்கு இராமன் மீள்கிறான். இடையே பரத்துவாசன் ஆசிரமத்துக்குப் போகிறான். அம்முனிவன், 'என்னை ஆளுடை நாயகன் எய்தினன்' என்று மிக்க மகிழ்ச்சியோடு எதிர் கொள்கிறான். அப்போது இராமன், 'மாமறைத் தபோதனன் தாள்மிசைப் பணி'கிறான். உடனே அம்முனிவன், 'எடுத்து நல் ஆசியோடணைத்து முடியை' மோந்து பார்க்கிறான். இராமன் அடிபணிய அதன் எதிர் தான் பணியாமல் தழுவிக் கொள்கிறான்.[2]

1. மீட்சிப் படலம், 116, 117.
2. மீட்சிப் படலம், 185, 186.

இன்னும், குகனும் இராமனும் இரண்டாம் முறை சந்திக்கிறார்கள். இராமனைக் குகன் பணியக் குகனை இராமன் தழுவுகிறான்.[1] அயோத்திக்கு வந்து இராமன் வசிட்டனைப் பணிய வசிட்டன் அவனைத் தழுவுகிறான்.[2] இராமன் தாயரைக் காலுறப் பணிதலும் அவர் அவனை அன்புறத் தழுவலும்,[3] பரதன் பூவடிவீழ்ந்து பணிதலும் இராமன் தழுவலும்,[4] இலக்குவன் பரதன் விரைமலர்த் தாளின் வீழப் பரதன் தடக்கை யாரத் தழுவலும்,[5] சத்துருக்கனன் இராம லட்சுமணர்கள் தாளில் வீழ அவர்கள் எடுத்துப் புல்லுதலும்[6] பின்னே வருகின்றன.

சுமந்திரன் வருகிறான். அவன் பிராயத்திலே முதிர்ந்தவன். ஆயினும் இராமன், சக்கரவர்த்தி திருமகன். சுமந்திரன் இராமனைக் கீழ்வீழ்ந்து பணிந்து எழ, அவனை இராமன் தழுவிக் கொள்கிறான்.[7]

இவ்வளவு உதாரணங்களிலும் யார் தழுவுகிறாரோ அவர் அடிபணிவதில்லை, யார் அடிபணிகிறாரோ அவர் தழுவுவதில்லை என்ற கம்பனுடைய சம்பிரதாயம் புலப்படுகிறது. 'மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்' என்று குகப்படலத்தில் வரும் பாட்டால் குகன் முன் ஒரு முறை வீழ்ந்தான் என்பது தெளிவாகிறது. காலில் வீழ்ந்தான் தழுவுவதில்லை; தழுவினவன் காலில் வீழ்வதில்லை என்றால் பரதன் கீழ்வீழ்ந்து பணியவில்லை என்றே கொள்ள வேண்டும்.

---

1. மீட்சிப் படலம், 313.
2. ஷை 341, 342.
3. ஷை 343.
4. ஷை 345.
5. ஷை 347, 348.
6. ஷை 349.
7. ஷை 353.

3

இன்னும் சில இடங்களை இங்கே கவனிப்பது நம்முடைய கருத்துக்குத் தெளிவை உண்டாக்கும்.

இரண்டாம் முறை குகன் இராமனைச் சந்தித்துப் பணிந்த போது அவன் இன்னானென்று இராமன், உடன் வந்த சுக்கிரீவன் முதலியவர்களுக்குச் சொல்கிறான்; "கங்கையின் இருகரைக்கும் தலைவன், தாயினும் உயிர்க்கு நல்லன்" என்று கூறுகிறான். அப்போது சுக்கிரீவன் முதலியோர் குகனை அடிவீழ்ந்து பணியவில்லை; தழுவி நட்புப் பூணுகிறார்கள்.

> **அண்ணல்அஃ துரைத்த லோடும்**
> **அரிகுலத் தரசன் ஆதி**
> **நண்ணிய துணைவர் யாரும்**
> **இனிதுறத் தழுவி நட்டார்.** [1]

அயோத்திக்கு எல்லோரும் வந்த பிறகு பரதன், சத்துருக்கனன் என்னும் இருவருக்கும் தன்னுடன் வந்த சுக்கிரீவன் முதலியவர்களை இராமன் அறிமுகம் செய்து வைக்கிறான். அப்போது சுக்கிரீவன் முதலியவர்கள் அவ்விருவர் தாளிலும் வீழ்ந்து வணங்குகிறார்கள்.

> **அத்தம்பி மாருக்கு**
> **இன்னுயிர்த் துணைவர் தம்மைக்**
> **காட்டினன்; இருவர் தாளும்**
> **மன்னுயிர்க் குவகை கூர**
> **வந்தவர் வணக்கம் செய்தார்.** [2]

அப்போது பரதன் 'வெவ்வேறடைவினில் முதன்மை கூறி' நின்றான்.

---

1. மீட்சிப். 317. அரிகுலத்து அரசன் - குரங்குக் குலத்துக்கு அரசனாகிய சுக்கிரீவன்.

2. மீட்சிப். 350

குரக்கினத் தரசைச் சேயைக்
குமுதனைச் சாம்பன் றன்னைச்
செருக்கிளர் நீலன் றன்னை
மற்றும்அத் திறத்தி னோரை
அரக்கருக் கரசை வெவ்வே
றடைவினில் முதன்மை கூறி
மருக்கமழ் தொடையல் மாலை
மார்பினன் பரதன் நின்றான். [1]

அவரவர்களுக்கு ஏற்ற முறையில் முகமன் கூறினான் பரதன். அவன் அவர்களுக்கு எதிர் வீழ்ந்து பணியவில்லை. குரக்கினத்தரசனாகிய சுக்கிரீவனும் அரக்கருக்கரசனாகிய விபீஷணனும் குகனைப்போல் இராமனுக்குத் தம்பியரான வர்கள். அவர்கள் குகனைப் போலவே பரதனை அடி பணிகிறார்கள். ஆனால் பரதன் அவர்களை வீழ்ந்து பணிய வில்லை. அன்றியும் அவர்கள் தம்மோடொத்த குகனை அடி பணியவில்லை. பரதன் குகனுடைய அடியில் வீழ்ந்திருந் தால் சுக்கிரீவனையும் விபீடணனையும் அடிபணிந்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை.

பரதனே அடிபணிந்து வீழும் தகுதியுடையோன் குகன் என்னின் சுக்கிரீவன் முதலியோரும் அவனை அடிபணிந் திருக்க வேண்டும். அப்படிச் செய்ததாகக் கம்பன் பாடவில்லை.

ஆதலின் பரதனும் குகனும் சந்தித்தபோது குகன் பரதனுடைய அடியில் வீழ்ந்தான் என்றும், பரதன் குகனின் அடியில் வீழவில்லை என்றும், பரதன் குகனைத் தழுவிக் கொண்டான் என்றும் கொள்வதே கம்பனுடைய

1. மீட்சிப். 351. சேயை - அங்கதனை. அரக்கருக்கு அரசை - விபீடணனை. மரு-மணம்.

கருத்துக்கு ஒத்த பொருளாகும். இனி அந்தப் பாட்டை மீட்டும் பார்ப்போம்.

வந்தெதிரே தொழுதானை
வணங்கினன் மலர்இருந்த
அந்தணனும் தனைவணங்கும்
அவனும்; அவன் அடிவீழ்ந்தான்;
தந்தையினும் களிகூரத்
தழுவினன் தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும்
வீற்றிருக்கும் சீர்த்தியான்.

'மலர் இருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனாகிய பரதனும், வந்து எதிரே தொழுத குகனைத் தலை வணங்கினன் அந்தக் குகன் (பரதனுடைய) அடியில் வீழ்ந்தான், தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியானாகிய பரதன் தந்தையைவிடக் களிப்பு மிகத் தழுவிக்கொண்டான்' என்பதே கம்பன் கருத்துக்கு ஏற்ற பொருள்.

இந்தப் பாட்டில், 'அவன் அடி வீழ்ந்தான்' என்ற இடத்தில் இன்னாருடைய அடி என்பது விளக்கமாக இல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்தால் அவன் என்பதற்குக் குகன் என்று பொருள்கொண்டு, அச்சொல்லை எழுவாயாக் கும்போது அடி என்பது பரதனுடைய அடி என்றுதானே பொருள் கொள்ளக் கிடக்கின்றது?

"இந்தப் பாட்டில், 'மலர் இருந்த அந்தணனும் தனை வணங்கும் அவன்' என்றும், 'தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்' என்றும் இரண்டு முறை பரதனைப் புகழ்வது மிகையன்றோ? ஆளுக்கு ஒரு

புகழைக் கொடுப்பதுதானே முறை?" என்ற கேள்வி தோன்றலாம். இப்படலத்தின் பெயர், "குகப் படலம்" என்று இருந்தாலும் இது பரதனுடைய பெருமையைக் காட்டும் வகையில் அமைந்துள்ளது. பின்னாலே குகன், "ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ!" என்று வியந்து உருகப் போகிறான். அதற்கு ஏற்ற வகையில் கம்பன், பரதனது புகழைப் பாடுவது தவறன்று.

கம்பன் குகனைப்பற்றிச் சொல்லும் இடங்களில் அவனுடைய உருவத்தை வருணிக்கிறான். அவன் இயல்பு முதலிய பெருமையைச் சொல்லும் இடங்களில், "உள்ளந் தூயவன், தாயின் நல்லான்" என்று இலக்குவன் கூறுவதாக அமைக்கிறான். [1] "தீராக் காதலன்", "யாதினும் இனிய நண்பன்" [2] என்று இராமன் சொல்கிறான், மெய்யுயிரனையான், அன்பன், வாள்வீரற்கன்பன், இராமனுக்கு உயிர்த் துணைவன், கரைகாணாக் காதலான், தூய தோழன் என்று கவியின் கூற்றாகக் குகனைச் சொல்கிறான் கம்பன். இந்த அளவில் குகனுடைய பெருமையைக் கூறினவன், திடீரென்று, "தகவுடையோர் சென்னியினும் சிந்தையினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்" என்று புகழக் காரணம் இல்லை. ஆதலின் அதுவும் பரதனையே குறிக்கிறதென்பதே பொருந்தும்.

இந்தப் பாடலுக்குப் பின், "தழுவிய புளினர் வேந்தன்" என்று வருகிறது. அதற்குச் சீர்த்தியானாகிய பரதன் தழுவிய புளினர் வேந்தன் என்று பொருள் கொள்ள வேண்டும்: அல்லது தழுவப்பட்ட புளினர் வேந்தன் என்றும் கொள்ளலாம்.

இதுகாறும் காட்டியவற்றால், 'வந்தெதிரே தொழுதானை' என்ற பாட்டில் வரும் தொழுதல், வணங்குதல்,

---

1. கங்கைப். 39. 2. கங்கைப். 45.

அடிவீழ்தல் என்ற மூன்றும் மூன்று வேறு செயல்கள் என்பதும், குகன் பரதனை அடி வீழ்ந்து பணியப் பரதன் குகனைத் தழுவிக் கொண்டான் என்பதும், அடிவீழ்ந்து பணிபவரைப் பணியப்பட்டவர் தழுவுவதையும் அப்படித் தழுவுபவர், அடி வீழ்வதில்லை என்பதையும் கம்பன் பல இடங்களில் காட்டியிருக்கிறானென்பதும், இந்தப் பாட்டில் வரும் இரு பெருஞ் சிறப்பும் பரதனுக்கே உரியன என்பதும் புலனாகும்.

விதியின் பிழை

பெருங்காப்பியமாகிய இராமாயணத்தின் கதை பெரிது. அதில் வரும் பாத்திரங்களும் நிகழ்ச்சிகளும் பல. யுத்த காண்டத்தில் நிகழும் இராவணன் வதையோடு கதை முடிகிறது. பாலகாண்டம் முதல் யுத்த காண்டம் இறுதியாகக் கதையில் வரும் நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்ருகச் சங்கிலி கோத்தாற்போல வருகின்றன கதாபாத்திரங்களின் சொல்லும் செயலுமாக நிகழ்ச்சிகள் உருவாகின்றன.

இத்தனை பாத்திரங்களையும் இயக்கும் மூல ஆற்றலாக ஒன்று இருக்கிறது. அந்த ஆற்றலையே விதி என்று சொல்லுகிருேம். அது காரணமின்றித் திடீரென்று குதித்து 'இது இப்படித்தான் நிகழ வேண்டும்' என்று நாட்டுவதில்லை. நிகழ்ச்சிகளின் போக்கிலே ஒரு செயல் மற்ருென்றுக்குக் காரணமாக நிற்க, வித்தும் மரமும் ஒன்றையொன்று தொடர்ந்து வருவது போலச் செயல்கள் நிகழ்கின்றன. இந்த நிகழ்ச்சிகளின் ஒழுங்குக்குக் காரணமாக நிற்பதுவே விதி.

குறிப்பிட்ட ஒரு நிலையில், நம்முடைய அறிவைக் கொண்டு பார்த்தால் இருவேறு விதமாகவோ பல வகையாகவோ நிகழ்வதற்கு வாய்ப்பு இருந்தும், ஏதோ ஒரு வகையாகவே அது நிகழ்ந்துவிடுகிறது. அது மேலும் மேலும் பல விளைவுகளுக்குக் காரணமாகிறது. அந்த நிகழ்ச்சியை முன் நின்று நிகழ்த்துவதே விதி.

கம்பன் தான் இயற்றிய இராமாயணத்தில் இந்த விதியைப் பல இடங்களில் நினைப்பூட்டிக்கொண்டே போகிறான். கவியின் கூற்றாகச் சில இடங்களிலும் பாத்திரங்களின் கூற்றாகப் பல இடங்களிலும் சொல்லிக் காட்டுகிறான். இவ்வாறு விதி அமைக்கும் நிகழ்ச்சிச் சங்கிலியை ஒருவாறு இங்கே பார்க்கலாம்.

* * *

இராமனுக்கு முடிசூட்டுவதற்காகத் தசரதன் ஆவன செய்தான். அயோத்திமா நகரில் உள்ள மக்கள் யாவரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர். நகர் முழுவதையும் அழகு செய்தனர். அந்த அலங்காரங்களோடு விளங்கிய அந் நகரம் மண்ணின்மேல் இருக்கும் ஊராகத் தோன்றவில்லை, வானவர் வாழும் அமராவதியே இங்கே வந்து விட்டது போன்ற தோற்றத்தோடு நின்றது அது.

தசரதன், தன் அருமை மகனுக்கு முடிசூட்டித் தான் தவவாழ்வை மேற்கொள்ள வேண்டுமென்று நிமிர்ந்து நின்றான். குடிமக்கள் யாவரும், 'குணங்களால் நிறைந்த நம்பியாகிய இராமன் கோமுடி சூடப்போகிறான்' என்ற உவகையால் நிமிர்ந்து நிற்கின்றனர். இந்த நிலையில் ஒருத்தி மட்டும் நிமிர்ந்து நடக்கவில்லை. அவள் வளைந்து நடந்தாள். அவள் கூனி; நிமிர்ந்து நடக்க இயலாதவள். அவள் உடம்பு மாத்திரமா கூனையுடையது? அவள் உள்ளமும் வளைந்து கூனியது.

துன்னருங் கொடுமனக் கூனி [1]

என்று கம்பன் அவளை அறிமுகப்படுத்துகிறான். அவளுடைய மனமும் வளைந்தது; கொடுமை என்பதற்கு

1. மந்தரை சூழ்ச்சிப், 39.

வளைவு என்றும் ஒரு பொருள் உண்டு. உடம்பு வளைந்திருந்தாலும் உள்ளம் வளையாத கூனியாக அவள் இருந்திருக்கலாம். ஆனால் இங்கே விதி, அவளை மனமும் கூனியாகச் செய்து விட்டது.

விதி, காரணமின்றிச் செய்யாது. அவள் உள்ளம் கூனியதற்குக் காரணம் உண்டு. இராமன் இளம்பருவ விளையாட்டைப் பற்றுகக் கொண்டு, விதி அந்தக் காரணத்தை உண்டாக்கியது. குழந்தை இராமன் தன் வில்லில் உண்டையை வைத்து விளையாட்டாக யார் மேலேனும் எய்வான். பிறருடைய முதுகில் மொத்தென்று அந்த மண்ணுண்டை விழும்போது அவனும் சிரிப்பான்; பட்டவர்களும் சிரிப்பார்கள்.

இராமன் பெரும்பாலும் கைகேயியினிடமே வளர்ந்தான். அந்தப் பெருமாட்டியும் அவனையே தன் மகனாக எண்ணிப் பேரன்பு செய்து வளர்த்தாள். ஆதலின் அவளுடைய தோழியாகிய மந்தரையை அடிக்கடி காணும் வாய்ப்பு இராமனுக்கு இருந்தது. அவனுடைய விளையாட்டுக்கு அவளும் இலக்கானாள். இல்லை, அவள் முதுகுக் கூன் இலக்காயிற்று. அவன் உண்டையை அக் கூன்மேல் அடித்தான். அவன் வில்லிலிருந்து வீசிய உண்டையே பின்பு இராவணனைக் கொல்லும் அம்பை எய்வதற்குக் காரணமாகும் என்பதை அவன் அப்போது அறிந்தானோ இல்லையோ!

எத்தனையோ பேர் இராமன் விளையாட்டை மகிழ்ச்சியோடு ஏற்றார்கள். ஆனால் கூனி அவ்வாறு ஏற்கவில்லை. அவளுக்கு உண்டையினால் வலி மிகுதியாயிற்று என்று சொல்ல இயலாது. உறுப்புக் குறையுடையவர்களிடம் அக்குறையைச் சுட்டிப் பேசினால் அளவற்ற சினம் உண்

டாகும். இராமன் செய்த செயல் மந்தரையின் கூனைச் சுட்டிக் காட்டுவதுபோல இருந்தது. ஆதலின் அந்த உண்டை அவள் உடம்பில் மட்டும் படவில்லை; உள்ளத்திலும் பட்டது. உடம்பில் வலிக்கவில்லை; உள்ளத்தில் மிக மிக வலித்தது.

இராமன் மந்தரையின்மேல் உண்டையை வீசாமல் இருந்திருக்கலாம்; அப்படி வீசினாலும் அவள் தலையிலோ கையிலோ அடித்திருக்கலாம். கூன்மேல் அடித்தாலும் சிறு பிள்ளை விளையாட்டென்று அவளும் ஏனையோரைப்போல் அதைப் பொருட்படுத்தாமல் போயிருக்கலாம். மூன்று நிலையிலும் மூன்று வேறு போக்குகள் இருந்தன. ஆனால் விதி அந்தப் போக்கினின்றும் நிகழ்ச்சிகளை மாற்றி இழுத்து வந்தது. அவன் கூனியின் முதுகுக் கூனில் அடித்தான்; அவள் உள்ளத்தில் கனல் கொப்புளித்தது.

கூனி, கைகேயியின் அரண்மனைக்கு விரைவாகப் போகிறாள்; தன் அரிய அறிவுரையைச் சொல்லுவதற்குத் தான்! 'இதை நிறுத்திவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன்' என்ற வெகுளியோடு வாயை மடித்துக் கொண்டு போகிறாள். அந்த வெகுளித் தீக்குக் காரணமான நிகழ்ச்சி அவள் உள்ளத்தே கனலுகிறது.

தொண்டைவாய்க் கேகயன்
தோகை கோயில்மேல்
மண்டினாள், வெகுளியின்
மடித்த வாயினாள்;
பண்டைநாள் இராகவன்
பாணி வில்உமிழ்
உண்டைஉண் டதனைத்தன்
உள்ளத் துள்ளுவாள். [1]

1. மந்தரை சூழ்ச்சிப் படலம், 41.

[கோவைப்பழம் போன்ற சிவந்த வாயையுடைய கைகேயியின் அரண்மனைக்கு விரைந்து சென்றாள்; கோபத்தினால் மடித்த வாயை உடையவளாகச் சென்றாள்; பழங் காலத்தில் இராமன் கையில் இருந்த வில்விட்ட உண்டையின் தாக்குதலைப் பெற்ற செய்தியைத் தன் உள்ளத்தே நினைப்பவளாகச் சென்றாள்.]

இராமன் செயலாகக்கூட அதைச் சொல்லவில்லை. அவன் கையிலிருந்த வில் உமிழ்ந்த உண்டை என்கிறான் கவிஞன். ஏதோ ஒரு நியதியால் அந்த அந்தக் காலத்தில் அந்த அந்த நிகழ்ச்சி ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்வது போல அது உணர்த்துகிறது.

கூனி இராமாயணக் கதையரங்கிலே தோன்றுவதை ஒரு கவியில் கம்பன் சொல்கிறான்.

அந்நகர் அணிவுறும்
அமலை வானவர்
பொன்நகர் இயல்பெனப்
பொலியும் ஏல்வையில்
இன்னல்செய் இராவணன்
இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக்
கூனி தோன்றினாள். [1]

[அந்த அயோத்திமா நகரத்தை அலங்காரம் செய்யும் ஆரவாரத்தால் அது தேவர்களுடைய அமராவதி போல விளங்கிய அச்சமயத்தில், தேவர்களுக்குத் துன்பம் உண்டாக்கிய இராவணன் செய்த தீமையைப் போல் வேறு யாரிடத்தும் சேர்வதற்கரிய கொடிய மனத்தையுடைய கூனி தோன்றினாள்.]

1. மந்தரை சூழ்ச்சிப் படலம், 39.

இராமன் முடிசூட்டு விழா, வரையறையின்படி நடந்துவிட்டால் இப்போது நாம் படிக்கும் இராமாயணம் இல்லையாகி யிருக்கும். இராமாயணக் கதையில் முடிவாகிய இராவண வதம் நிகழ்வதற்கு இராமன் அயோத்தியி னின்றும் பிரிந்து காட்டுக்கு ஏகவேண்டும். இராவணன் அழிவதற்குக் காரணம் அவன் செய்த தீமையே. தெய்வம் நின்று கொல்லும் என்ற உண்மையை நிறுவும் நிகழ்ச் சிகள் அடுக்கடுக்காக நிகழ்கின்றன. அவன், தான் செய்த தீமையின் பயனை நுகர்வதுதான் முடிவு; இராமாயணக் கதையாகிய பெரிய மரத்தின் கனி அது. மரத்தின் விதை இராவணன் செய்த தீமை. அது மண்ணில் மறைந்து நீரும் உரமும் பெற்று முளைத்துக் கொம்பாகிக் கிளை யாகிப் பூத்துக் காய்த்துக் கனிய வேண்டும்.

இதோ மரத்தின் முளை தோன்றுகிறது இதுவரையில் இயல்பாக இருந்த நிலப்பரப்பில் ஒரு புதிய மரத்தின் முளை தோன்றுகிறது. கூனிதான் அந்த முளை. இராவணன் இழைத்த தீமையாகிய வித்து அயோத்தியிலே வந்து கூனி யாக முளைத்தது.

கூனி கைகேயியிடம் போகிறாள். கைகேயி கவலையின்றித் துயின்றுகொண் டிருக்கிறாள். அவளைக் கண்ட பின்பாவது கூனியின் மனம் மாறியிருக்கலாம். ஆனால் அவளை வெவ் வினையாகிய விதி தூண்டுகிறது.

முண்டெழு பெரும்பழி
முடிக்கும் வெவ்வினை
தூண்டிடக் கட்டுரை
சொல்லல் மேயினாள். [1]

1. மந்தரை சூழ்ச்சிப் படலம், 41.

[வளர்ந்து எழுகின்ற பெரிய பழியாகிய செயலை முடிப்பதற்குக் காரணமான வெய்ய விதி தூண்டத் தன் சொல்லைச் சொல்லத் தொடங்கினாள்]

உறங்கும் கைகேயியை எழுப்பாமல் அவள் போயிருக்கலாம். பின்பு சொல்லலாம் என்ற எண்ணத்தோடு அவள் போயிருந்தால், அவள் உள்ளம் பின்பு ஆறியிருக்கலாம். ஆனால் விதி அவ்வண்ணம் உள்ள வேறு வழியில் நிகழ்ச்சிகளைச் சொல்லவொட்டாமல் தடுக்கிறது; சொல், சொல் என்று அவளைத் தூண்டுகிறது.

"உனக்குப் பெரிய துன்பம் வந்திருக்கவும் நீ வருந்தாமல் தூங்குகிறாயே!" என்கிறாள் கூனி,

"என் குழந்தைகள் செவ்வியராக இருக்கின்றனர். இராமனைப் பெற்ற எனக்கு இடர் உண்டோ?" என்று தூயவளாகிய கைகேயி சொல்கிறாள்.

அந்த நிலையிலும் கூனியின் மனம் மாறுவதற்கு இடம் இருந்தது. 'இராமனைத் தானே பெற்றதாக அல்லவா இவள் எண்ணி அன்பு செய்கிறாள்? இவள் அன்பு வாழட்டும்' என்று அவள் நினைத்திருக்கலாம். அப்படி நினைப்பதுதான் சாதாரண நிலையில் நிகழத் தக்கது. ஆனால் இப்போது, அந்த நேர்வழியை மாற்றி, வளைந்த வழியிலே, பிழையான வழியிலே, கதையை நடத்தும் சூத்திரதாரனாகிய விதி தூண்டுகிறது.

ஆழ்ந்தபே ரன்பினாள்
அனைய கூறலும்
சூழ்ந்தத் தீ வினைநிகர்
கூனி சொல்லுவாள்:

"வீழ்ந்தது நின்னலம்
திருவும் வீழ்ந்தது;
வாழ்ந்தனள் கோசலை
மதியினால்" என்றாள். [1]

கைகேயி இராமனைத் தான் பெற்ற மகனாகச் சொன்னது சம்பிரதாயத்துக்கு அன்று; ஆழ்ந்த பேரன்போடு சொன்னாள். அந்த அன்பின் ஆழத்தை அவளுடன் நெருங்கிப் பழகும் கூனி நன்கு அறிந்திருப்பாள். ஆயினும் அவள் கைகேயியின் மனத்தை மாற்றிப் பழி முடிக்கவே எண்ணினாள். "உன்னுடைய நன்மை விழுந்தது; செல்வ வாழ்வு அழிந்தது; கோசலை கெட்டிக்காரி; அவள் தன் சாமர்த்தியத்தால் வாழ்வு பெற்றாள்" என்று கோபத்தின் விரைவு தோன்றப் பேசுகிறாள். அவள் பேசுகிறாளா? விதியே அப்படிப் பேசுகிறது. இதனை நினைவுறுத்தவே,

சூழ்ந்ததீ வினைநிகர் கூனி

என்று பாடுகிறான் கம்பன்.

இன்னும் செய்தி இன்னதென்று சொல்லாமலே கூனி பயங்கரமான நிலைக்களத்தை அமைக்கிறாள். பிறகு செய்தியைத் தன் கொடுமனத்துக் கேற்ற வண்ணம் கூட்டிச் சொல்கிறாள். "ஆண்களெல்லாம் சிரிக்க, வீரம் மாசுபட, தாடகை என்னும் பெயரையுடைய பெண் இறந்துபட, வளைத்த வில்லையுடைய இராமன் நாளைக்கு அரசர் புனையும் முடியைச் சூடப்போகிறான்; இந்த வாழ்வு நமக்கு வந்திருக்கிறது!" என்று உலகம் உவத்தற்குரிய செய்தியை இழிவு தொனிக்கும் முறையில் சொல்கிறாள். இராமன், பெண் கொலை செய்தவன், ஆண்கள் நகைப்புக்கு ஆளானவன் என்று சொல்கிறாள்.

---

1. மந்தரை சூழ்ச்சிப் படலம், 48.

வன்மனத்து அரக்கியைக் கொன்று மாமுனிவர் வாழச் செய்த வீரச் செயலை அவள் மறைத்துக் காட்டுகிருள். தாடகையின் தீய செயல் இன்னதென்று சொல்லவில்லை; அவளை அரக்கி என்றும் கூறவில்லை; 'தாடகை எனும் பெயர்த் தையலாள்' என்கிருள்.

நேரான செய்தியைக் கூருக்கி வளைத்து அவள் சொன்ஞலும், கைகேயி அவள் குறிப்பை உணரவில்லை. இராமன் முடிசூடப்போகிருன் என்ற செய்தி தெரிந்ததோ இல்லையோ அவளுக்கு உவகை பொங்கியது. உள்ளத்தில் உள்ள அன்பு இப்போது ஆர்த்தெழுந்தது மிகவும் பேரொளி வீசும் ஒரு மாலையை அவளுக்கு வழங்கிஞள்.

ஆயபே ரன்பெனும்
அளக்கர் ஆர்த்தெழத்
தேய்விலா முகமதி
விளங்கித் தேசுறத்
தூயவள் உவகைபோய்
மிகச்சு டர்க்கெலாம்
நாயகம் அனையதோர்
மாலை நல்கிஞள்.

கைகேயி, உள்ளத்தால் தூயவள். அவள் உள்ளத்தில் பேரன்பெனும் கடல் கிடக்கிறது. இப்போது அது ஆலித்துப் பாயும் வண்ணம் மந்தரை ஒரு செய்தியைச் சொல்லிவிட்டாள். அதஞல் அந்த அன்பென்னும் கடல் ஆர்த்து எழுந்தது. அவள் முகமாகிய மதி பொலிவுபெற்றது அவளுக்கு உண்டான உவகை சொல்லி முடியாது.

இப்போதாவது கூனி தன் சூழ்ச்சியை மாற்றியிருக்கலாம். அவள் அவ்வாறு செய்யவில்லை. அவள் தன் சினத்

1. மந்தரை சூழ்ச்சிப் படலம், 52.

தைக் காட்டுகிருள். மெல்ல மெல்லத் தன் கருத்தைச் சொல்கிருள். அப்போதும் கைகேயி அவள் கருத்தை ஏற்க வில்லை. தன் தோழி தனக்கு இனியதைச் சொல்லாமல் இப்படிச் சொல்வதற்குக் காரணம் விதி என்பதை அவள் உணர்கிருள்.

"என்ன உளறுகிருய்? யாருக்கும் நல்லதை நீ சொல்ல வில்லை. இது உனக்கே நல்லதன்று. நீ உன் இயல்பான அறிவோடு இதைச் சொல்கிருய் என்று நான் நினைக்க வில்லை. ஊழ்வினை உன்னைத் தூண்டுகிறது. அதனுல்தான் உன் மனம் போனபடி, மனத்துக்கு நல்லனவென்று தோன்றி யவற்றை யெல்லாம் சொல்லுகிருய்" என்று சினத்தோடு பேசுகிருள் கைகேயி.

" உனக்கு நல்லையும் அல்லை. வந்து
ஊழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை;
மதியிலா மனத்தோய்," [2]

[மனக்கு - மனத்துக்கு.]

மந்தரை அப்போதும் தன் உரையை நிறுத்தவில்லை. கெஞ்சியும், மிஞ்சியும், சினந்தும், இரங்கியும் பேசுகிருள். கைகேயியின் இயல்பறிந்து பழகியவளாதலின், எப்படிச் சொன்னுல் அவள் உள்ளம் கொள்ளும் என்று சிந்தித்து மெல்ல மெல்லத் தன் கருத்தைப் புகுத்துகிருள்.

கைகேயி இராமனிடம் இணையில்லாத அன்பு பூண்ட வள். இராமனுக்கும் அவளிடம் அன்பு மிகுதியாக இருந்தது. தாயன்பு எல்லாவற்றினும் வலியது. அன்றியும் கைகேயியோ தூயவள். அவள் சிந்தை தூயது; இராம னிடம் ஆழ்ந்த அன்புடையது. அவள் தூய மொழியையே பேசுபவள்; மடமான் போன்ற மெல்லியல்.

---

1. மந்தரை சூழ்ச்சிப் படலம். 65.

இத்தனை இயல்புகளும் மந்தரையின் சொல்லைத் தள்ளுவதற்கும், அவளை ஒறுப்பதற்கும் தக்க காரணமாக நின்று, இராமன் முடிசூடும் நிகழ்ச்சிக்குத் தடை நேராமல் செய்திருக்கலாம். அதுவே நேரான, இயல்பான விளைவு. ஆனால் முதலிலே கோணல் வந்து விட்டது; கூன் விழுந்து விட்டது. விதி வந்து அழுக்குவதால் இந்தக் கோணல் வந்த பிறகு அதனை நிமிர்த்துவதற்குரிய வாய்ப்புகள் இருந்தாலும் மீண்டும் மீண்டும் அவ்விதியின் பாரம் அதை நிமிர வொட்டாமல் செய்துகொண்டே யிருக்கிறது. வளைந்த உடம்பும் வளைந்த உள்ளமும் வளைந்த மொழியும் உடைய கூனியின் உருவிலே விதி விளையாடுகிறது. தூய சிந்தையும் தூயமொழியும் உடைய கைகேயி, தன் இயல்புக்கு மாறாக வளைந்தாள்; அவள் சிந்தை திரிந்தது.

தீய மந்தரை அவ்வுரை
செப்பலும் தேவி
தூய சிந்தையும் திரிந்தது. [1]

ஆம்! அவள் சிந்தை தூயது; நேரானது; வளையாதது. அதைக் கூனி வந்து தீயதாக்கினாள்; வளைத்தாள்; திறம் பிடச் செய்தாள். கூனியா செய்தாள்? இல்லை, இல்லை; விதிதான் அப்படிச் செய்தது.

யாருடைய விதி? விதி என்பது உலகில் அவரவர்கள் செய்த நல்வினை தீவினைகளுக்குரிய இன்ப துன்பங்களை ஊட்டுவது. ஒவ்வொருவரிடத்தும் விதி வெவ்வேறு பகுதியாக நிற்கிறது. சமஷ்டியாக அல்லது பிழம்பாக நிற்பதையும் விதி என்கிறோம்; முறையென்றும் ஊழ் என்றும் இதைச் சொல்வார்கள். ஒருவனுடைய பகுதியாக, வியஷ்டியாக, தனியாக, நிற்பதும் ஊழ்தான்; அதனை அவன் தலைவிதி என்றும் சொல்வது உண்டு.

---

1. மந்தரை சூழ்ச்சிப் படலம், 77.

இங்கே இராமயணக் கதையை நடத்தும் விதி யாருடையது? விதியினால் விளையப்போகிற நலமும் தீங்கும் யாரைச் சார்கின்றனவோ அவருடைய விதியென்று சொல்லலாம். இராவணன், தான் செய்த தீமையினால் அழியப் போகிறான். அவனது விதி என்று சொல்வதுதான் பொருந்தும். அவனுக்கு மாத்திரம் அழிவு வருகிறதா? அவனோடு சேர்ந்த அரக்கர் குலம் அத்தனைக்கும் அழிவு வருகிறது. ஆகவே அந்த விதி, அரக்கருடைய தலைவிதி என்றே சொல்லலாம்.

விதியின் விளைவுக்கு இரு புறம் உண்டு. வயலில் களை எடுக்கிறார்கள்; களையாக முளைத்த செடிக்குத் தீங்கு நேர்கிறது; ஆனால் அதே சமயத்தில் பயிராக விளைந்த செடிக்கு நன்மை உண்டாகிறது. அவ்வாறே இராவணன் தீமை விளைத்ததனால் துன்புற்ற தேவரும் முனிவரும் இராவண வதத்தால் நலம் பெறுகிறார்கள். அரக்கருக்குத் தீங்கும் அல்லவருக்கு நலமும் விளைகின்றன. இந்த விளைவுக்குக் காரணம் இராவணனும் பிற அரக்கரும் செய்த தீமை மட்டும் அன்று; அவர்களால் அல்லலுற்ற தேவர் முதலியோர் செய்த நன்மையும் காரணமாகும். அரக்கர் பாவம், அல்லவர் இயற்றிய அறம் ஆகிய இரண்டையுமே பற்றுக்கோடாகக் கொண்டு விதி கதையை நடத்துகிறது.

ஆதலின் கைகேயி மனம் திறம்ப, மெல்லியலாகிய அவள் உள்ளம் சிறிதும் இரக்கமின்றிக் கடுமையைப் பெற்றதாகிய செயலுக்கு விதி காரணமானாலும், அந்த விதி செயலாற்ற இரண்டு பற்றுக் கோடுகளைக் கொண்டிருக்கிறது. அவை அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய புண்ணியமுமே யாகும்.

கைகேயியின் உள்ளத்தில் இயல்பாக இருந்த அருளை அவள் துறந்தாள். அவள் இயல்பாகத் துறக்க

வில்லை. அரக்கர் பாவம் முன்னே ஈர்க்க, தேவரும் முனிவரும் மண்ணவருமாகிய ஏனையோர் செய்த புண்ணியம் பின் இருந்து தள்ள அவள் அருளைத் துறந்தாள்.

அப்படி அவள் துறந்ததனால் இராமாயணக் கதை விரிந்தது; இராமன் புகழ் பெற்றான். அவன் புகழை உலகங்களெல்லாம் நெடுநாட்களாக அமுதத்தைப் போலப் பருகி வருகின்றன.

அரக்கர் பாவமும் அல்லவர்
இயற்றிய அறமும்
துரக்க, நல்அருள் துறந்தனள்
தூமொழி மடமான்;
இரக்கம் இன்மையன் றோஇன்றிவ்
வுலங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப்
பருகுகின் றதுவே! [1]

என்று இந்த உண்மையை அழகாக எடுத்துச் சொல்கிறான் கம்பன். விதி இரு வேறு கயிற்றைத் துணையாகக் கொண்டு கதையை நடத்துகிறது என்பதை நாம் உணர்கிறோம்.

பின்னால் பல இடங்களில் விதியின் செயலை நினைப் பூட்டிக்கொண்டு போகிறான் கம்பன்.

இன்னும் இரண்டு இடங்களை மாத்திரம் பார்த்து இப்போதைக்கு நாம் நிற்கலாம்.

* * *

கைகேயி தசரதனிடம் வரம் பெற்றாள். தானே இராமனை அழைத்து,பரதன் நாடாள்வானென்றும், அவன்

---

1. மந்தரை சூழ்ச்சி. 78

காடாள வேண்டுமென்றும் சொன்னாள். அதைக் கேட்டு அவ்வாறே செய்யத் துணிந்த இராமன், "இழைக்கின்ற விதி முன் செல்லத் தருமம் பின் இரங்கி ஏக"[1]க் கோசலையை அணுகினான். கோசலையினிடம் செய்தியைக் கூறித் தேற்றிச் சுமித்திரையைக் காணச் சென்றான்.

இந்தச் செய்தியைக் கேட்ட இலக்குவன் காலத்தீயென மூண்டு எழுந்தான். கையில் வில்லை எடுத்து நாணேற்றினான். அதன் ஒலியைக் கேட்ட இராமன் அவனிடம் வந்து பேசுகிறான். அவன் சினத் தீயை அவிக்கின்ற அஞ்சன மேகம் என்ன வந்து சொற்றுளி மாரி வழங்குகிறான். பல நியாயங்களைக் கூறி, "தம்பி, ஆற்றில் தண்ணீர் இல்லை என்றால், அது ஆற்றின் பிழையா? நம்முடைய தந்தை பிழையா இது? அன்று; நம்மைப் பெற்றுப் புரந்தவளுடைய பிழையும் அன்று; மகனாகிய பரதனுடைய பிழையும் அன்று; மைந்த, அவர்களைச் சினந்து பயன் இல்லை. இது விதியின் பிழை அப்பா! அதை உணராமல் இதற்கு இப்படிக் கோபிப்பது எதற்காக?" என்று கேட்கிறான்.

"நதியின் பிழைஅன்று நறும்புனல்
இன்மை; அற்றே
பதியின் பிழைஅன்று; பயந்து
நமைப்பு ரந்தாள்
மதியின் பிழைஅன்று; மகன்பிழை
அன்று; மைந்த,
விதியின் பிழை;நீ இதற்கென்னை
வெகுண்டது?" என்றான். [2]

எல்லாரும் விரும்பும் வகையில் விதி கோணலாகாமல் நிகழ்ச்சிகளை நடத்தியிருந்தால் இது நேர்ந்திருக்காது.

---

1. நகர் நீங்கு. 2
2. நகர் நீங்கு. 133

ஆனால், அது கோணலாகி விட்டது, அதனால்தான் இந்தக் கோணல் விளைவு

இலக்குவன் சீற்றம் மாறினான், கைகேயி மரவுரியைக் கொடுத்தனுப்பினாள். அதை இராமன் அணிந்து கொண்டான். இராமனுக்கு முடி சூட்ட வேண்டுமென்று வகுத்த நாள் அது; உலக முழுவதும் இராமனை முடியணிந்த மன்னனாகக் காண வேண்டுமென்று எதிர்பார்த்த நாள். ஆனால் அந்த நாளில் இராமன் முடியை அணியாமல் மரவுரியை அணிந்தான். விதியின் விளையாட்டு எத்தனை விசித்திரம்! இதைக் கம்பனே கவியின் கூற்றாகச் சொல்லிப் பொருமுகிறான்.

வாழ்வினை நுதலிய
    மங்க லத்துநாள்
தாழ்வினை யதுவரக்
    சீரை சாத்தினான்;
சூழ்வினை நான்முகத்
    தொருவற் சூழினும்
ஊழ்வினை ஒருவரால்
    ஒழிக்கற் பாலதோ? [1]

விதிக்கும் கடவுளாகிய நான்முகனைக்கூட அந்த விதி விடாது என்று சொல்கிறான் கவிஞன்.

இந்தப் பெரிய நாடகத்தில் முதல் கோணல் கூனி உருவிலே தோன்றியது. அப்போது விதியின் ஒரு பகுதியாகிய இராவணன் இழைத்த தீமையை நினைவுறுத்தினான் கம்பன். பின்பு சரியான திருப்பம் வரும்போது, 'அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்' என்ற காரணங்களை நினைவு கூர்ந்தான்.

1. நகர்நீங்கு. 163

இறுதியில் இராவணன் இறந்து கிடக்கும்போது மண்டோதரி வந்து புலம்புகிறாள். அவள் அறிவுடையவள். அவள் இவ்வளவு காலமாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளுக்கு மூலகாரணம் விதியென்பதை நன்கு உணர்ந்தவள். விதியின் ஒரு வேர் அரக்கர் பாவம்: அதில் தலைமையானது இராவணன் இழைத்த தீமை. அது யாருக்கும் தெரியும். கண்முன் தெரியாத மற்றொரு வேர் அமரர் நல்வினை; அறிவுடையவளாகிய மண்டோதரி அதை நினைக்கிறாள். அமரர் நல்வினையில் தலைமையானது இந்திரன் தவம். விதியின் ஒரு வேராகிய அதுவே இவ்வளவு நிகழ்ச்சிகளுக்கும் தூண்டுகோலாக இருப்பது என்று அவள் சொல்கிறாள்.

சானகி அழகியாகப் பிறந்ததும், கற்புடையவளானதும், இராவணன் அவளைக் காமுற்றதும், சூர்ப்பனகை மூக்கிழந்ததும், இராமன் காட்டுக்கு வந்ததும் ஆகிய எல்லாம் புரந்தரனார் தவம் விளைவதற்கு உறுதுணையாக நின்றன. இராவணன் தீமைக்கும் புரந்தரனார் தவத்துக்கும் உரிய விளைவு இப்போது விளைந்துவிட்டது. அவள் புலம்புகிறாள்,

"காந்தையருக் கணியனைய சானகியார்
பேரழகும் அவர்தம் கற்பும்
ஏந்துபுயத் திராவணனார் காதலும்அச்
சூர்ப்பனகை இழந்த மூக்கும்
வேந்தர்பிரான் தயரதனார் பணியதனால்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவும் கடைமுறையே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற் றம்மா!" [1]

---

1. இராவணன் வதை. 241.

யாவும் புரந்தரனுர் தவம் என்று சொல்லி அழுகிருள் மண்டோதரி. விதி நேராகச் செல்லாமல் வளைந்து சென்று முடித்த செயல் இது.

இரண்டு தண்டவாளத்தில் இயங்கும் வண்டியைப் போல இராவணன் தீமையும் இந்திரன் தவமும் பற்றுக் கோடாக விதி ஓடியது; கதையை நடத்தியது. விதியின் இரு வேறு பக்கங்களாகிய அவற்றில், ஒன்றைக் கதையின் தொடக்கத்தில், "இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல், துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினுள்" என்று கவியின் கூற்ருகச் சொன்ன கம்பன் மற்ெருன்றைக் கதையின் இறுதியில், "கடைமுறையே புரந்தரனுர் பெருந் தவமாய்ப் போயிற்றம்மா!" என்று மண்டோதரியின் கூற்ருக வைத்துக் காட்டுகிருன்.

ஒரே நினைப்பு

தமிழ் நாட்டில் உள்ள திருக்கோயிலுக்குச் சென்று பிராகாரத்தை வலம் செய்யும்போதே அது இன்ன கோயில் என்று சொல்லி விடலாம். மூலமூர்த்திக்கு ஏற்ற வகையில் பரிவார தேவதைகளைக் கண்டால், 'இது சிவன்கோயில், இது பெருமாள் கோயில்' என்று வேறு காண முடியும். மூலமூர்த்திக்கு ஏற்ற வகையில் பரிவார தேவதைகளைத் திருக்கோயிலில் நிறுவியிருப்பார்கள்.

கற்கோயில்களில் இருக்கும் இந்த முறையை ஒரு வகையில் சொற்கோயிலிலும் காணலாம். சொற்கோயிலாகிய காப்பியத்தின் மூலமூர்த்தி, காப்பியத்தின் நாயகன். அந்த நாயகனுக்குத் துணைவராகப் பலர் இருப்பார்கள். அவனுடைய மாற்றானுக்குத் துணைவராக இருப்பவர்களும் பலர் உண்டு. இந்த இருவகைக் கட்சியினரிலும் அவரவர்கள் குணத்துக்கு ஏற்றபடி சுற்றத்தினரும் நட்பினரும் கூடியிருப்பார்கள்.

நாயகன் நினைத்தவாறே நினைப்பதும், நாயகன் பேசியவாறே பேசுவதும், அவன் செய்யுமாறே செய்வதும் அவனைச் சார்ந்தவர்களுக்கு இயல்பு. நாயகனுடைய குணநலங்களின் பேரொளி அவர்கள் வாயிலாகவும் ஒளிரும். இந்தப் போக்கைக் காப்பியக் கவிஞர்கள் தம்முடைய காவியங்களில் ஆங்காங்கே புலப்படுத்தியிருப்பார்கள்.

கம்பன், தான் கட்டிய இராமாயணமென்னும் சொற்கோயிலில் இராமன் என்னும் மூர்த்தியை நாயகனாக நிறுவி அவனுக்கேற்ற பரிவார தேவதைகளையும் அமைத்திருக்கிறான். இராமனுடைய பண்பு அவனுடைய நினைப்பிலும்

பேச்சிலும் மலர்வதோடு அவனுடைய சார்புடையவர்களிடத்திலும் அது புலனாகிறது. யாவரும் ஒரே நினைப்பையுடையவர்கள் என்பதைக் காட்டப் பல நுட்பமான நிகழ்ச்சிகளை அவன் அமைத்திருக்கிறான். யாவரும் ஒரே சுருதியில் பேசுகிறார்கள். இதைச் சில உதாரணங்களால் பார்க்கலாம்.

இராமன் அயோத்திமா நகரை விட்டுக் காடு செல்லத் தொடங்கிக் கங்கையைக் கடக்கிறான். அப்பொழுது குகன் எதிர்ப்படுகிறான். இராமனுடன் பிறந்த தம்பியர் மூவர். அவனுடன் பிறவாத தம்பியர் மூவர். பின் மூவரில் முதல்வன் குகன். அவனைச் சந்தித்து அவனுடைய அன்பின் வலிமையைக் கண்டு மனமுருகி, "நீ என் தம்பி" என்று இராமன் கூறுகிறான். "நானும் உன்னுடன் வருகிறேன்" என்று கூறிய குகனைப் பார்த்து, "நீ என் உயிரனைய தம்பி; இதோ இருக்கும் லட்சுமணன் உன் தம்பி, சீதை உன் அண்ணன் மனைவி; இந்த உலக முழுவதும் ஆளும் உரிமை உனக்கும் உண்டு; அந்தத் தொழிலுரிமையில் பங்கு கொள்பவன் நான்" என்று நெருங்கிப் பேசுகிறான்.

அன்னவன் உரைகேளா
அமலனும் உரைநேர்வான்:
"என்உயிர் அனையாய்நீ;
இளவல்உன் இளையான்; இந்
நன்னுத லவள்நின்கேள்;
நளிர்கடல் நிலம்எல்லாம்
உன்னுடை யது; நான்உன்
தொழிலுரி மையின்உள்ளேன்." 1

1. கங்கைப் படலம், 68. அன்னவன் - குகன். அமலன் - இராமன். நன்னுதல் - சீதை. கேள் - உறவினள். நளிர் கடல் - குளிர்ச்சியையுடைய கடல்.

காட்டு வாழ்க்கையையுடைய பேதையாகிய குகனைக் கண்டு, "நீ என் தம்பி" என்று மனமார ஏற்றுக்கொண்ட செய்தி இராமனுடைய கருணைக்கு அடையாளம். இந்த அரிய பண்பைச் சீதை அசோகவனத்தில் தனியே இருக்கை யில் நினைந்து உருகுகிறாள்.

ஆழ நீர்க்கடல் அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் தம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி எனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள். [1]

திருமங்கையாழ்வாருடைய உள்ளம் கொள்ளை கொண்ட நலங்களுள் இந்தப் பண்பும் ஒன்று. ஆதலால்,

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்றவர்க் கின்னருள் சுரந்து,
'மாழை மான்மட நோக்கிஉன் தோழி;
உம்பி எம்பிஎன் றொழிந்திலே; உகந்து,
'தோழன் நீஎனக் கிங்கொழி' என்ற
சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட
ஆழி வண்ணநின் அடியிணை அடைந்தேன்;
அணிபொ ழில்திரு அரங்கத்தம் மானே" [2]

என்று பாடி ஈடுபடுகிறார்.

"முன்பு நாங்கள் நான்கு பேர் சகோதரர்கள்; இப் போது உன்னோடு ஐந்து பேர் ஆகிவிட்டோம்" என்று விளக்கமாகவே இராமன் அவனைத் தம்பியர் வரிசையில் வைத்துப் பேசுகிறான்.

1. காட்சிப் படலம், 23. அம்பி - ஓடம். கடாவிய - தள்ளிய. எம்பி - என் தம்பி. கொழுந்தி - அண்ணன் மனைவி.

2. பெரிய திருமொழி, 5. 8: 1

"முன்புளெம் ஒருநால்வேம்;
முடிவுள தெனஉன்னு
அன்புள; இனிநாம்ஓர்
ஐவர்கள் உளரானோம்," [1]

இதனைக் குகனும் நினைத்து இன்புறுகிறான்.

"தோழமை என்றவர் சொல்லிய சொல்ஒரு
சொல்அன்றோ?" [2]

என்று மிடுக்குடன் பேசுகிறான் அவன்.

இது நாயகனாகிய இராமன் பண்பு. அவன் குகனைத் தன் தம்பியாக ஏற்றுக்கொண்ட செய்தியை லட்சுமணனும் சீதையுமே அறிவார்கள்.

இராமன் போனபிறகு பரதன் வருகிறான். அவன் இராமனை மீட்டும் அயோத்திக்கு அழைத்து வந்துவிட வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தோடு வருகிறான். இடையிலே கங்கை குறுக்கிடுகிறது. கங்கைக் கரையில் குகன் இருக்கிறான். சுமந்திரன் அவனை அறிந்தவனாகையால் பரதனுக்கு அவன் இயல்பைக் கூறுகிறான். "அவன் கங்கையின் இரு கரைக்கும் சொந்தககாரன்; கணக்கில்லாத ஓடங்களை வைத்திருக்கிறான்; உங்கள் குலத்தின் தனி நாயகனாகிய இராமனுக்கு உயிர்த்துணைவன்; உயர்ந்த தோளையுடையவன்; ஆண் யானை போன்ற தோற்றத்தைப் பெற்றவன்; வில்லும் கையுமாக நிற்கும் ஏவலாளர்கள் ஒரு கடலைப்போல இருக்கிறார்கள். குகன் என்பது அவன் பெயர்" என்று சொல்லுகிறான்.

---

1. கங்கைப் படலம், 69.
2. குகப் படலம், 15

"கங்கைஇரு கரையுடையான்;
கணக்கிறந்த நாவாயான்;
உங்கள்குலத் தனிநாதற்
குயிர்த்துணைவன்; உயர்தோளான்;
வெங்கரியின் ஏறனையான்;
விற்பிடித்த வேலையினான்;
கொங்கலரும் நறுந்தண்டார்க்
குகன்என்னும் குறியுடையான்." [1]

சுமந்திரன் மதியமைச்சனாதலின் அப்பொழுதைக்குக் குகனால் ஆகும் காரியம் உண்டென்பதை உணர்த்துவதற்காக, எடுத்தவுடன் அவன் பெயரைக் கூடச் சொல்லாமல், "கங்கையின் இரு கரைக்கும் சொந்தக்காரன்; கணக்கில்லாத ஓடத்தை உடையவன்" என்று சொல்லுகிறான். அத்தனை பேரும் கங்கையைத் தாண்டவேண்டும் அல்லவா? பரதனோ எப்போது இராமனைக் காண்போம் என்று துடித்துக் கொண்டிருக்கிறான்; அவன் எண்ணமெல்லாம் இராமனிடத்திலே இருக்கிறது. மண்ணிலே காந்தத்தைச் செருகினால் அது இரும்புப் பொடியை மாத்திரம் இழுக்கும். அது போலக் குகனுடைய இயல்புகளைச் சுமந்திரன் சொன்ன போது, அவன் கங்கைக் கரைக்குரியவன், ஓடக்காரன் என்பவற்றைப் பரதன் காது வாங்கிக்கொள்ளவில்லை. "உங்கள் குலத் தனிநாதற் குயிர்த்துணைவன்" என்று சொன்னதை மாத்திரம் பற்றிக்கொண்டது. உடனே, "அப்படியா? இராமனுக்கு உரிய துணைவனா? அப்படியானால் அவன் எனக்குத் தமையனே; நானே போய் அவனைப் பார்ப்பேன்" என்று சொல்லி எழுந்து விட்டான்.

---

1. குகப். 25. நாவாய் - ஓடம். விற்பிடித்த வேலையினான் - வில்லைப்பிடித்த ஏவலர் கூட்டமாகிய சமுத்திரத்தையுடையவன் கொங்கு - வாசனை. குறி - பெயர்.

தன்முன்னே அவன்தன்மை
　　தன்துணைவன் முந்துரைத்த
சொன்முன்னே உவக்கின்ற
　　துரிசிலாத் திருமனத்தான்,
"மன்முன்னே தழீஇக்கொண்ட
　　மனக்கினிய துணைவனேல்
என்முன்னே; அவற்காண்பேன்
　　யானேசென்று" எனஎழுந்தான்.[1]

பரதன் இராமனுடைய தம்பி; துரிசு இல்லாத மனத்தை உடையவன். இராமன், குகனைத் தம்பி என்று சொன்னதைக் கேளாதவன். அவன் குகனிடம் இராமனுக்கு அன்பு உண்டு என்பதை உணர்ந்த அளவில் அவன் உணர்ச்சி விஞ்சி, "அவன் என் தமையன்தான்" என்று சொல்கிறான். மூலநாயகன் பேசிய குரலோடு ஒத்த சுருதியில் இவன் குரலும் அமைகிறது.

பின்பு இருவரும் சந்தித்து அளவளாவுகிறார்கள். பரதன் தன்னுடன் வந்த தாய்மார்களைக் குகனுக்கு அறிமுகம் செய்து வைக்கிறான். முதலில் கோசலையைக் காட்டி அவள் பெருமையைக் கூறுகிறான்.

அதைக் கேட்டவுடன் குகன் அப் பெருமாட்டியின் திருவடிகளில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து அழுகிறான். அப்போது அவள் பரதனை நோக்கி, "இவன் யார்?" என்று கேட்கப் பரதன் சொல்கிறான்: "இவன் இராகவனுக்குத் துணைவன்; லட்சுமணனுக்கும் சத்துருக்கனனுக்கும் எனக்கும் மூத்த தமையன்; குகன் என்பது இவன் பேர்" என்று அறிமுகம் செய்து வைக்கிறான்.

---

1. குகப்படலம், 27. அவன் தன்மை-குகனுடைய இயல்புகளை. துணைவன்-சுமந்திரன். துரிசு - குற்றம். மன்-அரசனாகிய இராமன். மனக்கு இனிய - திருவுள்ளத்துக்கு உவப்பான. முன்னே-தமையன் தான்.

என்றலுமே அடியின்மிசை நெடிதுவீழ்ந்
தழுவானை, "இவன்யார்?" என்று
கன்றுபிரி காராவின் துயருடைய
கொடிவினவக் கழற்கால் மைந்தன்,
"இன்றுணைவன் இராகவனுக்கு; இலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான்;
குன்றனைய திருநெடுந்தோட் குகன்என்பான்.
இந்நின்ற குரிசில்" என்றான். [1]

சுமந்திரனிடம், "என் முன்னே" என்று சொன்னதை ரித்துச் சொல்பவனைப் போல இங்கே பேசுகிறான். இராமனைப் பெற்ற திருவயிறுடையாளிடமே, "இவன் இராமனுக்குத் தம்பி" என்றும், "மற்றச் சகோதரர்களுக்கு அண்ணன்" என்றும் சொல்லி அக் கருத்துக்கு அரண் செய்கிறான்.

இராமன், குகனைத் தம்பி என்றான். அவன் கூறியதை அவன் தம்பியர் ஏற்றுக்கொண்டால் அல்லவா அச்சொல் பொருளுடையதாகும்? இராமனுடன் இருந்த லட்சுமணன் அதனை ஏற்றுக்கொண்டான் என்பதைச் சொல்லவேண்டியது இல்லை. இங்கே பரதனும் ஏற்றுக்கொண்டான்; சத்துருக்கனனுடைய பிரதிநிதியாகவும் இருந்து, "இளையவற்கும் எனக்கும் மூத்தான்" என்று சொல்லிவிட்டான். குகன் பெற்ற உரிமையை இந்த வாசகங்கள் வலியுறுத்துகின்றன. இதோடு நின்றதா?

கோசலை தன் காலில் விழுந்த குகனைப் பார்க்கிறாள். 'இவனையா இராமன் தம்பி என்றான்? இந்த அசடன் பரதனும் அண்ணன் என்கிறானே!' என்று எண்ணும் தாய் அல்ல அவள். இராமன் பிறந்த திருக்கோயில் ஆதலின்

1. குகப். 66. கொடி - கோசலை. இளையவற்கும் - சத்துருக்கனனுக்கும்.

அங்கும் ஒரே வகையான குரல் எழுகிறது. குகனையும் தன் மகனாக அவள் ஏற்றுக்கொண்டு, அங்கே நின்ற மூன்று சகோதரர்களையும் ஆசீர்வாதம் செய்கிறாள். "நீங்கள் இனித் துயரங்கொண்டு வருந்தவேண்டாம். அந்த வீரர்கள் இருவரும் நாட்டை விட்டுக் காட்டுக்குப் போனதும் நல்ல தாயிற்று. ஆண்யானை போன்ற இந்தக் குகனோடு நீங்கள் ஐந்து பேரும் நீங்காமல் ஒன்றுபட்டு உலகத்தை ஆட்சி செய்யுங்கள்" என்கிறாள்.

" நைவீர லீர்மைந்தீர், இனித்துயரால்;
நாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்
றுமன்றே; விலங்கல் திண்டோள்
கைவீரக் களிறனைய காளைஇவன
தன்னோடும் கலந்து நீவிர்
ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை
நெடுங்காலம் அளித்திர்" என்றாள். [1]

நாயகனாகிய இராமனுடைய குரலின் எதிரொலியையே கோசலையினிடமும் கேட்கிறோம். பெற்ற தாயே ஒப்புக் கொண்ட பிறகு குகன் பெற்ற உரிமை பறிபோக இடம் இல்லையல்லவா? இராமனும் பரதனும் கோசலையும் ஒரே நினைப்பு நினைத்து ஒரே குரலில் பேசுகிறார்கள்.

2

மற்றோர் எடுத்துக் காட்டு.

அநுமன் இலங்கைக்குச் சென்று சீதையைத் தேடுகிறான். ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் சென்று சென்று தேடி

1. குகப்படலம், 67. நைவீரலீர் - நீங்கள் வருந்தாதீர்கள். விலங்கல் - மலையைப் போன்ற. கை - துதிக்கையுடைய. ஒருவீராய் - நீங்காதவர்களாகி. அகலிடத்தை- உலகத்தை. அளித்திர்- பாதுகாப்பீர்களாக.

அலைகிறான். இராவணனது மாளிகையிற் புகுந்து பார்க்கிறான். ஒரு பெரிய கடல் கிடப்பதைப் போலத் துயில்கின்றான் இராவணன். அந்தக் காட்சியைப் பன்னிரண்டு பாட்டுக்களால் விரிவாகக் கம்பன் பாடுகிறான். பாட்டுப் பன்னிரண்டானாலும் எல்லாம் ஒன்றையே குறிப்பன என்பதற்கு அடையாளமாகப் பதின்மூன்றாவது பாட்டில் தான் வாக்கியம் முடிவு பெறுகிறது. அவ்வளவு பாட்டால் பாடினால்தான் அந்த இராட்சசக் காட்சியை உணர்ந்து கொள்ள முடியும் போலும்!

தன் உருவத்தை அநுமன் குறுக்கிக் கொண்டு, பேருருவம் படைத்த இராவணன் முன் நின்று அவனுடைய பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் பார்த்தான். அவனுடைய கண்ணிலே பிரளயகாலத் தீ விண்டு எழுந்தது. "இந்தக் கணத்தில் இங்கேயே இவனை நசுக்கி விடுகிறேன்" என்று பல்லைக் கடித்து, இரண்டு கரங்களையும் பிசைந்துகொண்டு எழுந்தான். அதற்குள் சற்றே யோசனை உண்டாயிற்று 'சே! என்ன காரியம் செய்யத் துணிந்தோம்! நமக்கு இராமன் இட்ட கட்டளை என்ன? இவனைக் கொல்லும்படி சொல்லவில்லையே! ஒரு காரியத்துக்காக வந்து மற்றொன்று செய்தல் அறிவுக்கு அழகன்று. அவசரப்பட்டு இதைச் செய்துவிட்டால் பிறகு இது பிழை என்று உணர்ந்து வருந்த நேரும்' என்று எண்ணினான். காலத்தை எதிர்பார்த்துக் கரையை மீறாத கடலைப்போல அவன் அடங்கினான். பிறகு மற்றொன்றை எண்ணினான். 'இன்று எனக்கு வந்த கோபம் என்னோடு நிற்கட்டும். இந்தப் பைத்தியக்காரக் கோபம் என்னைப் போன்றவர் யாருக்கும் வரவேண்டாம். "சீதாபிராட்டியைச் சிறையில் வைத்த கொடிய இராவணனைக் கொன்று போருக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டது ஒரு குரங்கு" என்ற வார்த்தை எழுமானால் பெருவீரனாகிய இராமனுடைய

வெற்றி வில்லுக்குக் குறைவாகாதோ?' என்று நினைத்த போது அவன் கூசிக் குறுகினான்.

"இற்றைப்போர்ப் பெருஞ்சீற்றம்
என்னோடு முடிந்திடுக;
கற்றைப்பூங் குழலாளைச்
சிறைவைத்த கண்டகனை
முற்றப்போர் முடித்ததொரு
குரங்கென்றால், முனைவீரன்
கொற்றப்போர்ச் சிலைத்தொழிற்குக்
குறைவுண்டாம்'' எனக்குறைந்தான். [1]

இராமனுடைய ஏவலாளனாக வந்தவன் அநுமன். அவன் தன் நாயகன் புகழைப் பரப்ப வேண்டியவன். அதற்கு மாறாக, "கையாலாகாத இராமன் ஒரு குரங்கை விட்டுத் தூங்கிக்கொண் டிருந்த இராவணனைக் கொன்று விட்டான்'' என்ற பழிச்சொல் வருமே என்று அவன் அஞ்சினான். இராமனுடைய வில் வீரத்துக்கு இழுக்கு உண்டாகிவிடும் என்ற எண்ணம் அப்போது அவனுக்கு உண்டாயிற்று.

இந்த நினைப்பு வேறு இடங்களிலும் எழுவதைக் கம்பன் அழகாகக் காட்டுகிறான்.

அநுமன் சீதையைக் கண்டு, தான் இராகவன் தூதன் என்று சொல்லி, வந்த காரியத்தைக் கூறினான். அவளுடைய துயரத்தைக் கண்டு, 'இப்பெருமாட்டியை நாம் கொண்டு அகல்வதே கடமை' என்று எண்ணினான்.

"அடியேன் சொல்வதைக் கேட்டுக் கோபம் கொள்ளாதே. உன்னை எடுத்துச் சென்று இராமனிடம் காட்டி

1. ஊர்தேடு. 223. குழலாள்-சீதை. கண்டகனை-கொடியவனை. முனைவீரன் - போர்க்களத்தில் வீரங்காட்டுபவன். சிலைத் தொழிற்கு- வில்லின் செயலுக்கு. குறைந்தான் - நாணினான்.

அவன் அடியைப் பணிவேன். அதற்கு ஏற்ற காலம் இது. என் தோளில் ஏறிக்கொண்டால் எத்தகைய ஊறுபாடும் இல்லாமல் இராமனிடம் சேர்த்துவிடுவேன்'' என்று சீதையைப் பணிந்து விண்ணப்பித்துக் கொண்டான்.

அதைக் கேட்ட சீதை அதற்கு இணங்கவில்லை. "அப்பா, உன் ஆற்றலுக்கு ஏற்றபடியே நீ பேசுகிறாய். நீ சொன்னபடியே செய்து விடுவாய். அதில் ஐயம் இல்லை. ஆனால் என்னுடைய பெண்புத்திக்கு அது நியாயமன்று என்று தோன்றுகிறது'' என்று சொல்லிப் பல காரணங்களை எடுத்துரைத்தாள்.

"நீ எந்த வஞ்சனையான எண்ணமும் உடையவன் அல்ல. என்னை மாற்றான் எடுத்துச் சென்று சிறைவைக்க, அவனைத் தண்டித்து என்னை மீட்டுச் செல்வது இராமனுடைய கடமை. அதனை அவன் செய்யாவிட்டால் அவனுடைய வில்லுக்கு இழுக்கு உண்டாகும்'' என்பது ஒரு காரணம்.

" அன்றி யும்பிறி துள்ளதொன் றுரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும், '' [1]

இராமனுடைய வில்லுக்கு மாசு உண்டாகும் என்று முன்பு அநுமன் நினைத்ததையே இங்கே சீதை கூறுகிறாள். பின்னும் அவள், "நான் நினைத்திருந்தால் இந்த இலங்கை மாத்திரமா, உலகங்கள் யாவற்றையும் என் சொல்லினால் சுட்டு விடுவேன். அப்படிச் செய்தால், இராமனுடைய வில்லின் ஆற்றலுக்கு மாசு உண்டாகும் என்ற நினைவால், அந்த எண்ணத்தை, தகாத பொருள் கையில் கிடைத்தால் உடனே வீசி எறிவதுபோலப் போக்கி விட்டேன்'' என்கிறாள்.

1. சூடாமணிப், 11.

"அல்லல் மாக்கள் இலங்கைய தாகுமோ?
எல்லை நீத்த உலகங்கள் யாவும்என்
சொல்லி னாற்சுடு வேன்; அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்."[1]

'இராமன் தன் மனைவியைத் தான் மீட்டுக் கொள்ள வகையின்றி, அந்தப் பெண்ணை தன்னைச் சிறை வைத்தவனைக் கொன்றாள் என்று உலகம் கூறுமே' என அஞ்சினாள் பிராட்டி. அநுமன் இராவணனைக் கொல்ல எண்ணியபோது, அது தனக்குப் புகழாகும் என்று நினைக்காமல் இராமனுடைய வில்லுக்கு மாசாய் முடியும் என்று நினைக்கிற நினைப்பும், இங்கே சீதை நினைப்பதும் ஒரே சுருதியில் அமைகின்றன.

இந்தக் குரலை இராமனிடமே கேட்கும்படி ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்குகிறான் கம்பன்.

இராவணனுக்கு நல்லுரை கூறியும் அவன் கேளாமையால் விபீடணன் அவனை விட்டு இராமனிடம் சரண் புகுந்தான். அவன் தன் மாற்றானுக்குத் தம்பியாயிற்றே என்று கருதாமல், அடைக்கலமென்று வந்தவனை அஞ்சலென்று காத்தல் அறமென்று எண்ணி ஏற்றுக் கொண்டான் இராமன்.

பிறகு இராவணனுடைய படைப்பலத்தையும் இலங்கை நகரின் அமைப்பையும் பற்றி இராமன் விபீடணனை வினவினான். அவன் அவற்றை விரிவாகச் சொன்னான். அதோடு அநுமன் இலங்கைக்கு வந்தபோது போர் செய்து அட்சகுமாரன், பஞ்ச சேனாதிபதிகள் முதலியவர்களை வதைத்ததையும் இலங்கையை எரியூட்டியதையும் சொல்லி வியந்து பாராட்டினான். அநுமன், தான்

---

1. சூடாமணிப், 18. அல்லல் இலங்கையது ஆகுமோ? தூயவன்- இராமன், வீசினேன்-நழுவவிட்டேன்

புரிந்த வீரச் செயல்களை இராமனிடம் இதுகாறும் சொல்ல வில்லை. அவற்றை இப்போது விபீடணன் சொன்னபோது இராமனுக்கு வியப்பும் அநுமனிடம் பெருமதிப்பும் உண்டாயின. அவனுடைய தோள்கள் பூரித்தன. தனக்குத் தூதனாகச் சென்ற அநுமனைப் பார்க்கிறான்.

"இராவணனுடைய சேனைகளில் பாதிக்குமேல் நீ கொன்றுவிட்டாய். ஊர் முழுவதும் எரி ஊட்டி விட்டாய். இனி அங்கே என்ன இருக்கிறது? நீ செய்த காரியத்தை அடியாகக் கொண்டு புகழுடைய நாங்கள் வந்திருக்கிறோம். நீ நினைத்திருந்தால் அப்போதே சீதையை மீட்டுக்கொண்டு வந்திருப்பாய். என் வில்லின் தொழிலைக் காட்டவோ, வீரனாகிய நீ அப்படிச் செய்யவில்லை?" என்று மனமுருகிப் பேசுகிறான்.

" கூட்டி னார்படை பாகத்தின்
மேற்படக் கொன்றாய்;
ஊட்டி னாய்எரி ஊர்முற்றும்;
இனிஅங்கொன் றுண்டோ?
கேட்ட ஆற்றினால், கிளிமொழிச்
சீதையைக் கிடைத்தும்
மீட்டி லாததென் விற்றொழில்
காட்டக்கொல் வீர!" [1]

"என் வில்லுக்கும் மதிப்பு இருக்கட்டும் என்று நீ விட்டு வைத்தாயோ?" என்று கேட்பதுபோல இருக்கிறது இராமனுடைய பேச்சு.

அநுமன் நினைத்த நினைப்பிலும் சீதையின் நினைப் பிலும் இராமனுடைய நினைப்பிலும் ஒருமைப்பாடு இருப் பதை இந்தப் பாடல்கள் காட்டுகின்றன.

1. இலங்கை கேள்விப் படலம், 71. கூட்டினார் - தொகுத்தவர்களுடைய. பாகம்-பாதி. கிடைத்தும்-கண்டுபிடித்தும்.

முதல் உதாரணம் இராமன் கூறிய ஒன்றை அவனைச் சார்ந்தவர்களும் கூறி ஒரே நினைப்பாக நிற்கிறார்கள் என்பதைக் காட்டும். இரண்டாவதோ மற்றவர்கள் நினைக்கும் நினைப்பை இராமனும் நினைக்கிறான் என்பதைக் காட்டுகிறது. மூல மூர்த்தியும் பரிவார தேவதைகளும் ஒரே குரலில் பேசுகின்றனர்; ஒரே நினைப்பை வெளிப் படுத்துகிறார்கள்.

காந்த மாமணி

அநுமன் சீதாபிராட்டியைத் தேடி இலங்கை முழுவதும் திரிந்து பார்க்கிறான்; புகைபுகா வாயிலிலும் புகுந்து ஆராய்கிறான். பிராட்டியை எங்கும் காணாமல் ஏங்குகிறான். கடைசியில் அசோகவனத்துக்கு வருகிறான்.

அரக்கியர் பலரினிடையில் சீதை சோகமே வடிவாக இருக்கிறாள். இராமன் வருவான், வருவான் என்ற நம்பிக்கையோடு ஒவ்வொரு கணமும் அவனை எதிர்பார்த்துக் கொண்டு உயிரை வைத்திருக்கிறாள். பல இடங்களிலும் அவளைத் தேடிக் காணாமல் சோர்ந்த உள்ளத்தோடு அசோகவனத்துக்கு வந்த அநுமன் அவளைக் காண்கிறான். அப்பிராட்டியை முன்பு கண்டறியாவிட்டாலும், அவளுடைய நிலையினாலும் திருமேனியினாலும் கருத்துக்கு வாயிலாகிய கண்களாலும் அவளே சீதையென்று தெளிந்து கொள்கிறான். பிறகு இராமன் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டு அவளை அணுகுகிறான். அவள் முதலில் ஐயுற்றாலும் பின்பு மனம் தேறுகிறாள். அநுமன், தான் இராகவன் தூதனாக வந்த செய்தியைக் கூறி இராமனுடைய நிலையையும் கூறுகிறான். இராமனுடைய எழிலையும் அவன் கூறிய அடையாளங்களையும் எடுத்துச் சொல்லி அப் பெருமானுடைய கணையாழியைக் காட்டுகிறான். அதுகண்டு உவகை மீதூர்ந்த பிராட்டி அவனோடு பல செய்திகளைச் சொல்லித் தன் சூடாமணியை அவன்பால் அளிக்கிறாள்.

அப்பால் அநுமன் அரக்கரோடு போர் செய்து இலங்கையை எரித்துவிட்டு இராமனிடம் சென்று தான்

சீதையைக் கண்ட செய்தியைத் தெரிவிக்கிறான். இது சுந்தர காண்டத்தில் உள்ள வரலாறு.

கடல் தாவு படலம் முதல் திருவடி தொழுத படலம் வரையில் கவிஞன் அநுமனோடு உலவுகிறான். நாமும் அநுமனோடு சென்று இலங்கையைப் பார்க்கிறோம்; இராவணனைப் பார்க்கிறோம்; சீதையைப் பார்க்கிறோம்.

'சீதையை இன்னும் காணவில்லையே! அவள் உயிருடன் இருக்கிறாளோ!' என்று ஏங்கிய நிலையிலிருந்த அநுமன் சீதையைக் காணுவது கதையில் ஒரு முக்கியமான இடம். அநுமன் சீதையைக் கண்ட செய்திக்குத் தலைமை கொடுக்க எண்ணியே கம்பன் அப்படலத்துக்கு, 'காட்சிப் படலம்' என்ற பெயரை அமைத்திருக்கிறான். அநுமன் காண்பதற்கு முன், சீதை திரிசடையோடு பேசுவது, பல பலவற்றை எண்ணிக் கவல்வது, அவளுடைய உடல், உள்ளம், உணர்ச்சி ஆகியவற்றின் நிலை முதலியவை வருகின்றன. கண்டபின் அநுமனுக்கு உண்டாகிய உவகையையும் கவிஞன் சொல்கிறான். இந்த இருவகைப் பகுதிகளுக்கும் இடையிலே அநுமன் சீதையைக் கண்ட செய்தியாகிய காட்சியை ஒரு பாடலில் கம்பன் சொல்லியிருக்கிறான். அது பின் வருமாறு:

விரிமழைக் குலம்கிழித்து
ஒளிரும் மின்னனக்
கருநிறத்து அரக்கியர்
குழுவிற் கண்டனன்
உருநிறத்து ஒருதனிக்
கொண்டல் ஊழியான்
இருநிறத்து உற்றவெற்
கியைந்த காந்தத்தை. [1]

---

1. காட்சிப். 63.

அரக்கியர் குழுவுக்கு நடுவே சீதை இருப்பதைக் கண்டான் அநுமன். அரக்கியர் கரிய பெரிய உடம்பை உடையவர்கள். சீதையோ இயற்கையாகவே மெல்லிய உருவத்தை உடையவள். இப்போது மிகவும் மெலிந்திருக்கிறாள்.

மென்ம ருங்குல்போல்
வேறுள அங்கமும் மெலிந்தாள். [1]

என்று கம்பன் பாடுகிறான். உடம்பு மெலிந்திருந்தாலும் அதில் உள்ள தேசு பங்கவில்லை. ஊன் உருகினாலும் உள்ளொளி பெருகியிருக்கிறது. அது புறம் பொசிகிறது. கூட்டமாக அரக்கியர் இருக்க, அவர்களுடைய பெரிய உடம்புகளுக்கிடையே அந்த மெல்லிய சீதையின் உருவம் சிறியதாக இருந்தாலும் பளிச்சென்று விட்டு விளங்குகிறது. விரிந்து படர்ந்த மேகக் கூட்டத்துக்கு நடுவே பளிச்சென்று ஒரு மின்னலிழை ஓடினால் எப்படித் தெளிவாகத் தெரியும்! அப்படித் தெரிகிறது சீதையின் வடிவம். கரிய நிறம் பெற்ற அரக்கியர் குழுவில், விரிந்த மேகக் குலத்தைக் கிழித்துக்கொண்டு விளங்கும் மின்னற் கொடியைப் போலச் சீதை இருப்பதைக் கண்டானாம். இதையே இந்தப் பாட்டின் முதல் இரண்டடிகள் சொல்கின்றன

விரிமழைக் குலம்கிழித்து
ஒளிரும் மின்னெனக்
கருநிறத்து அரக்கியர்
குழுவிற் கண்டனன்.

யாரைக் கண்டான்? இதற்குரிய விடையைப் பின் இரண்டடிகளில் காண்கிறோம். இராமபிரானுடைய தேவியாகிய சீதையைக் கண்டான் என்று சொல்ல வருகிறான்

1. காட்சிப். 67.

கம்பன். சீதை என்று பெயர் சொல்லவில்லை; இராமனைச் சொல்லி அவனுக்கு ஏற்ற தேவி என்று சொல்கிறான். இராமனைச் சொல்லுகையில், உரு நிறத்து ஒரு தனிக் கொண்டல் என்றும், ஊழியான் என்றும் இரண்டு சிறப்புக்களால் சுட்டுகிறான். திருமேனியின் நிறத்திலே ஒப்பற்ற சிறப்பான மேகம் போல விளங்குகிறவன், நீடூழி காலம் வாழ்பவன் என்பது அந்த இரண்டுக்கும் பொருள். அந்தப் பெருமானுக்கும் சீதைக்கும் உள்ள தொடர்பு பின்பு வருகிறது.

> உருநிறத் தொருதனிக்
> கொண்டல், ஊழியான்
> இருநிறத்து உற்றவெற்
> கியைந்த காந்தத்தை.

'இராமனுடைய விசாலமான மார்பிலே பொருந்திய ஒளிக்குப் பொருத்தமான காந்தமணியை' என்று பொருள் கொள்ள வேண்டும். இராமனுடைய திருமேனி ஒளியைக் கண்டு தன் கண்களால் மொண்டு உண்ட அநுமன், அவனுடைய திருமார்பின் ஒளிக்கு ஏற்ற ஒளியும் சிறப்பும் உடைய காந்தமணியாக இருக்கும் சீதையைக் கண்டான்.

'இரு நிறத்து உற்ற எற்கு இயைந்த காந்தத்தை' என்று பிரித்துப் பொருள் கொள்ளும்போது இவ்வாறு கொள்வது ஒரு முறை ஆனால் சீதையைக் காந்தம் என்று உருவகம் செய்வதற்குச் சிறப்பான பயன் ஒன்றும் இல்லை. மார்பின் மணி என்று சொல்லலாம். காந்தமணி என்று சொல்வதற்கு ஏற்றபடி அங்கே இரும்பாக எதையேனும் உருவகம் செய்திருந்தால் பொருத்தமாக இருக்கும், அப்படி ஒன்றும் அங்கே இல்லை. இராமனுக்கு ஏற்றவள் சீதை என்பதையே இராமனது திருமார்புக்கு ஏற்ற மணி என்று சொன்னான் கவிஞன் என்று கூறி அமைந்து

விடலாம். ஆனால் காந்தம் என்று சொன்னதில் ஏதோ ஒரு குறிப்பு இருக்கக்கூடும் என்ற நினைவு இடையிடையே தோன்றுவதை மாற்ற முடியாது.

அங்கே இரும்பைப் புகுத்துவதற்கு வழி உண்டா? இருந்தால் காந்தம் பொருந்திவிடும். இந்த எண்ணத்தோடு கடைசி அடிக்கு வேறு வகையில் பொருள் சொல்வதும் உண்டு. 'இரு நிறத்து உற்ற எற்கு இயைந்த காந்தத்தை - விசாலமான திருமார்பிலே பொருந்திய, அடியேனுக்கு இசைந்த காந்தத்தை' என்று பொருள் கூறுவர் சிலர். இங்கே எற்கு என்னும் சொல்லுக்கு எனக்கு என்று பொருள் கொள்ளவேண்டும். இரு நிறத்து உற்ற காந்தம், எற்கு இயைந்த காந்தம் என்று இரண்டு பகுதியாக்கிப் பொருள் கொள்ளுகையில், இராமபிரானுடைய திருமார்பில் உற்ற திருமகளாகிய சீதையை, அடியேனுடைய உள்ளமாகிய இரும்பை இழுக்கும் காந்தம் போன்ற பிராட்டியை என்று வேண்டிய சொற்களைப் பெய்து கொள்ள வேண்டும்.

இந்தப் பாட்டு அநுமன் கூற்றன்று; கவிஞன் கூற்று. ஆகவே கவிஞன் தன் உள்ளத்தை இழுக்கும் காந்தமாகச் சீதையை இங்கே சொல்கிறான் என்று கொள்ள வேண்டும். கம்பன் இந்த இடத்தில் தனக்குப் பிராட்டியினிடம் இருக்கும் பக்தியைக் காட்டவேண்டிய அவசியம் என்ன? வேறு எவ்வளவோ இடங்கள் இருக்க, அவற்றை விட்டு இந்த அவசரத்தில் சொல்வதற்கு நியாயம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. காந்தம் என்று சீதையைச் சொல்லிவிட்டபடியால், அதற்கு ஓர் இரும்பைக் கண்டு பிடிக்க வேண்டுமே என்ற எண்ணம் தோன்ற, கம்பனுக்குப் பிராட்டியிடம் உள்ள ஈடுபாட்டை இங்கே திணிக்க வேண்டியிருக்கிறது. இப்படிப் பொருள் கொள்வதில்

காந்தத்துக்குப் பொருத்தம் வந்தாலும், இயல்பாக உள்ள ஆற்றொழுக்குப் போன்ற போக்குக்குத் தடை உண்டாகிறது. இதைவிட எல் என்பதற்கு ஒளி என்று பொருள் கொள்வதே சிறந்ததாகத் தோன்றுகிறது. ஆனால் அங்கே காந்தம் என்று சொன்னதற்கு ஒரு பயனும் இல்லாமல் போய்விடுகிறது.

இந்த இரண்டுவகைப் பொருளிலும் சங்கடம் இருப்பதைத் தெரிந்த சில பதிப்பாசிரியர்கள் ஏட்டுச் சுவடிகளில் கண்ட வேறு பாடங்களை மேற்கொண்டு பதிப்பித்தனர். ஆழ்வார் திருநகரிப் பதிப்பில் உள்ள பாடம் வருமாறு;

குருநிறத் தொருதனிக் கொண்டல் ஆமென
அருநிறத் தழகனுக் கமைந்த காந்தையை.

முன் இரண்டடிகளில் மாற்றம் இல்லை. அவற்றில் இடர்ப்பாடு ஏதும் இல்லை அல்லவா? நான்காவது அடியில் காந்தமே மறைந்து காந்தை வந்து விட்டது.

அணிமையில் அடையாறு, டாக்டர் ஐயரவர்கள் நூல் நிலையத்தில் வெளியான சுந்தரகாண்டப் பதிப்பில் உள்ள பின் இரண்டடிகளின் பாடம் வருமாறு:

குருநிறத் தொருதனிக் கொண்ட லாமெனத்
திருவுறப் பொலியுமோர் செல்வன் தேவியை,

இங்கே அடி முழுவதுமே வேறு உருவம் பெற்று விட்டது.

ஆனால் இதுகாறும் தமிழ்நாட்டில் வழங்கிவரும் பதிப்புக்களில் எல்லாம்,

உருநிறத் தொருதனிக் கொண்டல் ஊழியான்
இருநிறத் துற்றவெற் கியைந்த காந்தத்தை

என்ற பாடமே காணப்படுகிறது. அதற்கு இருவகையில் பொருள் கொண்டும் சிறப்புற அமையாமையினால்தான் வேறு பாடங்களைச் சில புலவர்கள் ஏற்றுக்கொண்டு பதிப்பித்திருக்கிறார்கள்.

2

பெரும்பான்மையாக வழங்கும் பாடத்தில் தெளிவு இல்லாமல் இருக்கிறது. காந்தம் என்ற சொல் பொருத்தமின்றி விழுந்திருப்பது போலத் தோன்றுகிறது. கம்பன் வேறு எங்கேனும் காந்தத்தைச் சொல்லியிருக்கிறானா? தேடிப் பார்க்கலாம் என்று தோன்றியது. 'அநுமன் இந்தக் காந்தத்தைக் கண்டதுபோல நாமும் வேறு காந்தத்தைக் காண முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!' என்று நினைத்துப் பார்த்தேன்.

ஒரு நாள் நான் தேடிய காந்தம் அகப்பட்டு விட்டது. மயக்கம் தந்த காந்தம் சுந்தரகாண்டத்தில் காட்சிப் படலத்தில் இருக்கிறது. மயக்கத்தைத் தெளிவித்த காந்தம் யுத்தகாண்டத்தில் மீட்சிப் படலத்தில் இருக்கிறது. அதைப் பார்க்கலாம்.

இராமன் இராவணனைச் சங்காரம் பண்ணியாயிற்று. சீதையைத் தீயில் முழுகச் சொல்கிறான். யாவரும் கவலையோடிருக்கும் போது சீதை தீயில் குளிக்கிறாள். அவள் கற்புத் தீ எரியையும் சுடுகிறது. தீக்கடவுள் அப்பெருமாட்டியை ஏந்தி வந்து இராமனுக்கு முன் இட்டு அவளது பெருமையைப் பாராட்டி உரைக்கிறான். பிறகு நான்முகன் இராமனைத் துதித்துச் சீதையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கிறான்.

பின்பு ஏறமர் கடவுளாகிய சிவபிரானும் சீதையைத் துறவாமல் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறுகிறான்.

தன் மகனுடைய பிரிவினால் உயிரை நீத்துத் துறக்கத்தில் இருந்த தசரதனிடம் அப்பெருமான், "நீ போய் இராம னுக்குச் சொல்" என்று சொல்ல, அரசருக்கரசனாகிய அவன் தன் காதல் மைந்தனைக் காணும்பொருட்டு வருகிறான். அவனைக் கண்டவுடனே இராமன் அவன் மலர்த்தாள்மிசை வீழ்கிறான். அப்படி விழுந்த மைந்தனை எடுத்துத் தன் மார்பில் இறுகத் தழுவித் தன் கண்ணீரால் ஆட்டி எல்லை யற்ற களிப்புண்டாகத் துன்பங்கள் யாவும் போகச் சில சொற்கள் புகல்கிறான்.

இங்கே கம்பன் தசரதன் கூற்றாக மூன்று பாடல் களை அமைத்திருக்கிறான். அவற்றின் முதற்பாடலே, தெளிவு தந்த காந்தத்தை உடைய பாடல். தசரதன் சொல்கிறான்: "அப்பா, அன்றைக்குக் கைகேயி என்னிடம் வலிந்து பெற்றுக்கொண்ட வரம் என்ற கூர்மையான வேல் என் இதயத்திலே பாய்ந்தது. அது என்னைக் கொன்ற பிறகும் என்னிடமிருந்து நீங்காமல் வேதனையைக் கொடுத் துக் கொண்டிருந்தது. இப்போது அது அகன்றது. எதனால் தெரியுமா? உன்னுடைய மேன்மையான அணிகளை அணிந்த நறுமணம் கமழும் மார்பை நான் அணைந்தேன் அல்லவா? அந்த மார்பு என்னும் காந்த மாமணி என் மார்பில் ஆழ்ந் திருந்த வேலை வாங்கி விட்டது. அதனால் இப்போது அது போன இடம் தெரியவில்லை!" என்று உவகை மீக்கூர உரைக்கிறான்,

"அன்று கேகயன் மகள்கொண்ட
வரம்என்னும் அயில்வேல்
இன்று காறும்என் இதயத்தி
னிடைநின்றது; என்னைக்

கொன்றும் நீங்கலது; இப்பொழுது
அகன்றது. உன் குலப்பூண்
மன்றல் ஆகமாம் காந்தமா
மணிஇன்று வாங்க.'[1]

நெடுநாட்களாகத் தரசதன் மார்பிலே ஒரு வேல் புதைந்திருந்ததாம்; அதை இப்போது ஒரு காந்த மாமணி வாங்கிவிட்டதாம். கைகேயியின் வரத்தை வேலாகவும் இராகவன் மார்பைக் காந்தமணியாகவும் உருவகம் செய்திருக்கிறான் கம்பன்.

பழங்காலத்தில் போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்குப் போர் நின்றவுடன் மருத்துவம் செய்வார்களாம். அவர்கள் உடம்பில் வேலின் முனையோ, வேறு படைகளின் துணுக்குகளோ புகுந்திருந்தால் அவற்றை வெளியிலே எடுக்க ஒரு தந்திரம் செய்வார்களாம். இரும்பைக் காந்தம் இழுக்கும் அல்லவா? காந்தமணியைப் புண்ணுள்ள இடங்களில் வைத்தால் உள்ளே ஓடிந்து புதைந்திருக்கும் இரும்புப் படைகளின் பகுதிகளை அந்த மணி இழுத்துவிடுமாம் — இப்படி யாரோ ஒருவர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். தசரதனுக்கும் அதுபோல ஒருவகை மருத்துவம் அல்லவா இங்கே நிகழ்கிறது? கம்பன் அமைக்கும் உருவகத்திலே அந்த மருத்துவ நுட்பம் வெளியாகிறது. மார்பில் புதைந்த வேலைக் காந்த மாமணி வாங்கிவிட்டதாக உருவகம் செய்திருக்கிறான்.

இந்தச் செய்தியோடு முன்னே மயக்கத்தைத் தந்த பாட்டை ஒப்பு நோக்கினேன். இங்கே, புதைந்த வேலைக் காந்த மாமணி வாங்கிய செய்தி வருகிறது. காந்த மாமணி என்று சொன்னது மிகவும் பொருத்தமாக அமைந்து

1. மீட்சி. 48.

இடம் இது. அங்கேயோ காந்தம் இருக்கிறது. வேலும் இருந்தால் எவ்வளவு பொருத்தமாக இருக்கும்!

பாட்டைக் கூர்ந்து பார்த்தேன்! ஆ! இதோ வேல் அகப்பட்டு விட்டது. ஆம், அந்தப் பாட்டுக்குள் அது புதையுண்டு குறுகி வடிவிழந்து நிற்கிறது.

இருநிறத் துற்றவெற்
கியைந்த காந்தத்தை

என்பதல்லவா இதுவரையில் பார்த்த பாடம்? 'உற்ற வெற்கு' என்பதை, 'உற்ற எற்கு' என்று பிரித்துத் தடுமாறினோம். 'உற்ற வெற்கு' என்று பிரித்தால் பொருளில்லை என்பதனால் எற்கு என்று பிரிக்கவேண்டியிருந்தது. அதை வேற்கு என்று வைத்துப் பாருங்கள்; பாட்டு எவ்வளவு பொருத்தமாகப் பொருட் சிறப்புடன் அமைந்துவிடுகிறது!

இருநிறத்து உற்றவேற்கு
இயைந்த காந்தத்தை.

'விரிந்த மார்பில் பதிந்த வேலுக்குப் பொருத்தமான காந்தத்தை' என்று பொருள்கொள்ளவேண்டும். பசிக்கு இயைந்த உணவு என்பதுபோல இங்கே, வேலை வாங்குவதற்கு இசைந்த காந்த மாமணியை என்பது பொருள். எவ்வளவு பொருத்தமானது!

சீதையைப் பிரிந்த பிரிவினால் துன்புறுகிறான் இராமன். அந்தப் பிரிவை அவன் உள்ளம் எண்ணி எண்ணி வாடுகிறது. பிரிவுத் துன்பமாகிய வேல் அவன் மார்பிலே பாய்ந்து பதிந்திருக்கிறது. அதை வாங்கக் காந்த மாமணி வேண்டும். அந்த மணி எங்கே இருக்கிறது என்று தேடினான் அநுமன். எங்கும் காணவில்லை. கடைசியில் அசோகவனத்தில் அரக்கியர் கூட்டத்திடையே

கண்டனன். உரு நிறத்து ஒரு தனிக் கொண்டலும் ஊழி யானுமாகிய இராமனுடைய இரு நிறத்தில் உற்ற வேலை வாங்குவதற்கு இயைந்த காந்தமணியாகிய சீதையைக் கண்டான்.

'வேற்கு' என்ற பாடம் ஏட்டுச்சுவடிகளில் இருக்கிறதா?-இந்தக் கேள்வி எழுவது முறை. பழங்காலத்தில் எ, ஏ என்னும் இரண்டுக்கும் ஏட்டுச்சுவடிகளில் வேறுபாடு தோன்ருது. வெல், வேல் என்ற இரண்டையும் வெல் என்றே எழுதியிருப்பார்கள். மீட்சிப்படலத்தில் வரும் பாட்டிலுள்ள, "அயில்வேல்" என்ற தொடரும் ஏட்டுச் சுவடியில், "அயில்வெல்" என்றுதான் இருக்கும். படிக்கிறவர்கள் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி வெல்லா, வேலா என்பதை அறிந்து படிப்பார்கள், இங்கே 'அயில்வேல்' என்று படித்தவர்கள் காட்சிப் படலத்தில் 'வெற்கியைந்த' என்று படித்து எழுதிப் பதிப்பித்து விட்டார்கள். ஆகையால் இது பாடபேதமே யன்று; ஏடு படித்தவர்களால் உண்டான பிழையே யாகும்.

கம்பனுக்கு, மார்பில் புதைந்த வேலைக் காந்தமணி கொண்டு எடுக்கும் வழக்கம் நன்ருகத் தெரிந்திருக்கிறது. அதனை இரண்டு இடங்களில் வைத்திருக்கிருன். காட்சிப் படலத்தில் கவிஞன் கூற்றிலும், மீட்சிப் படலத்தில் தசரதன் கூற்றிலும் காந்தமாமணி சுடர்விடுகிறது. பிரிவுத் துன்பமாகிய வேலை வாங்கும் காந்த மாமணியாகச் சீதை தோன்றுகிருள், சுந்தரகாண்டத்தில். கைகேயியின் வரத்தினுல் பெற்ற துன்பமாகிய வேலை வாங்கும் காந்தமாமணியாக விளங்குகிறது,இராமன் திருமார்பு, யுத்தகாண்டத்தில். இரண்டு பாடலையும் பார்த்தால் வேலும் காந்தமா

மணியும் இரண்டிடத்திலும் தெளிவாக இருப்பதைக் காணலாம். இப்பொழுது திருத்தமான பாடல் வருமாறு.

விரிமழைக் குலம்கிழித்
தொளிரும் மின்னெனத்
கருநிறத் தரக்கியர்
குழுவிற் கண்டனன்.
உருநிறத் தொருதனிக்
கொண்டல் ஊழியான்
இருநிறத் துற்றவேற்
கியைந்த காந்தத்தை.

கண்டதும் காணாததும்

மன்மதன் ஓவியம் வரைய உட்கார்ந்தான். தன்னுடைய தாயின் உருவத்தையே உயிரோவியமாக எழுத வேண்டும் என்பது அவன் விருப்பம். மற்ற ஓவியர்கள் வைத்துக்கொள்ளும் வண்ணங்கள் இருந்தால் போதா என்று எண்ணி அமுதத்தையே வண்ணமாக்கினான், அப்போதுதானே ஓவியத்தில் உயிர்த்தன்மை சாரும்? கிண்ணமும் வண்ணமும் வைத்துக்கொண்டான். கையில் தூரிகையை எடுத்தான். ஓவியம் தீட்ட முயன்றான். இதுவரையில் வண்ணமும் கிண்ணமும் இருந்தனவே அன்றி, எண்ணம் சிறக்கவில்லை. இப்போதுதான் சற்றே எண்ணினான்.

திருமகளுடைய குமாரனாகிய மாரனுக்கு இந்த ஆசை தோன்றியது வியப்பன்று. ஆனால் இப்போது அந்தத் திருமகளின் மூல ஓவியத்தைத் தீட்ட முற்படவில்லை. அவள் சீதையாகப் பிறந்திருக்கிறாள். சீதையின் திருவுருவத்தை ஓவியம் ஆக்கவேண்டும் என்றே இன்று தொடங்கியிருக்கிறான்.

எண்ணம் மதனன் உள்ளத்திலே சுழன்றது. முதலில் எண்ணத்தில் ஆழ்ந்து, உள்ளத்தில் உரு எழுதி, அப்பால் அதனைக் கிழியில் வடிப்பது கலைஞன் பண்பு. இங்கே மதனனுக்கு ஆசை இருந்ததே ஒழிய ஆற்றல் இல்லை. கருவிகளை வைத்துக்கொண்டு தீட்டப் புறப்பட்டு விட்டான்.

> "கருத்திலான் கண்ணிலான் ஒருவன்
> கைகொடு
> திருத்துவான் சித்திரம் அனைய
> செப்புவாய்". [1]

என்று கம்பன் பிறிதோரிடத்தில் சொல்வதுபோல இவனுக்குக் கருத்து வளம் இல்லை. கருத்தினால் கற்பனை செய்வது முதல் வேலையாக இருக்கவேண்டும். மன்மதன் அதை இறுதியில் செய்தான்.

அப்படி எண்ணத் தொடங்கினானே, அதையாவது சரியாகச் செய்தானா? சீதையைப் புறக்கண் கொண்டு பார்த்து அவள் திருமேனி அழகைத் தெரிந்துகொள்வது எளிதன்று. அப்பிராட்டி வெளியழகில் மாத்திரம் அடங்கி விடுபவள் அல்ல. சீதையின் உருவம் புறவடிவிலும் அக உருவமாகிய பண்பிலும் இருக்கிறது. பிராட்டியின் முகத்தில் அவள் அகத்தைக் காண வேண்டும். அவள் கண்ணில் அவள் கருத்தைக் காண வேண்டும். அப்போது தான் அவளை முற்றும் கண்டதாக முடியும். ஓவியக் கலைஞன் தீட்டும் ஓவியம் அந்த ஓவியத்தினால் காட்டப் பெறுபவருடைய இயல்புகளையும் உணர்த்தவேண்டும். அப்போது தான் அது சிறந்த ஓவியமாக அமையும். அப்படி அமைவதற்கு ஓவியன் தான் படைக்கும் படைப்புக்குரிய மூலப் பொருளின் குண நலங்களை நன்கு ஆராய்ந்து தெளிய வேண்டும். அப்பால் புறக்கோலத்தையும் காணவேண்டும்.

மதனன் அவ்வாறு செய்யவில்லை. அவன் சீதையை வெறும் அவயவங்களின் குவியலாகவே எண்ணினான். அவள் பண்பைச் சிறிதும் எண்ணவில்லை. எந்த அவயவத்தை

---

1. இராவணன் மந்திரப்படலம், 67

முதலில் தொடங்கலாம் என்றே எண்ணினான். 'அவயவம் அமைக்கும் தன்மை யாது?' என்று நாடினான். அவன் நல்ல கலைஞன் அல்லன்; அவனுக்குச் சீதையின் ஓவியம் எழுதும் தகுதி இல்லை.

அதற்கு மற்றொரு காரணமும் உண்டு. சீதைக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. கன்னியாகவே இருக்கிறாள். பிறர் நெஞ்சு புகாத இயல்பினள் அவள். திருமகளாக இருக்கும்போது மதனன் அன்னை என்று உறவு கொண்டாடலாம். அந்த எண்ணத்தை மேற்கொண்டு தான் இந்தப் பைத்தியக்கார வேலையைத் தொடங்கியிருக்கிறான். இப்போது சீதையாக வந்திருக்கும் கன்னி எளிதிலே பிறர் உள்ளம் புகாதவள் என்பதை அவன் அறியான். அவள் இன்னும் இராமனுடைய உள்ளத்திலும் புகாத புது மலராக இருக்கிறாள். இனிமேல்தான் இராமன் வரப் போகிறான். இந்த நிலையில் வெளியே புறப்படாத அப் பெருமாட்டியின் பண்பை அறியாமல், நிலை அறியாமல், அவளை ஓவியமாகத் தீட்ட வருமா?

மூன்றால் வண்ணம் நிறைந்த கிண்ணங்கள்; அமுதத்தையே வண்ணமாக்கிக் குழைத்திருக்கிறான்; கையிலே தூரிகை; எதிரே கிழி; யோசனையில் ஆழ்ந்துவிட்டான் மதனன். அவனுடைய கருத்திலே சீதை பிடிபடவில்லை. 'நான் எப்படி எழுதப் போகிறேன்!' என்று திகைத்துப் போய்த் தூரிகையைக் கீழே வீசிவிடுகிறான்.

கம்பன் இப்படி ஒரு கற்பனையைச் செய்கிறான். இராமனும் இலக்குவனும் விசுவாமித்திர முனிவருடன் மிதிலைக்குச் செல்கிறார்கள். அதை அணுகிக்கொண்டிருக்கிறார்கள். "சீதை இருக்கும் பொன்மதில் மிதிலைக்குள் அவர்கள் புகுந்தார்கள்" என்று சொல்லும் இடத்தில் சீதை இத் தகையவள் என்று பாடுகிறான்.

ஆதரித் தமுதில் கோல்தோய்த்து
அவயவம் அமைக்கும் தன்மை
யாதெனத் திகைக்கும் அல்லால்
மதனற்கும் எழுத ஒண்ணாச்
சீதையைத் தருத லாலே
திருமகள் இருந்த செய்ய
போதெனப் பொலிந்து தோன்றும்
பொன்மதில் மிதிலை புக்கார். [1]

[ஆதரித்து - ஆசைப்பட்டு. செய்ய போது - செந்தாமரை.]

மதனனுக்கு எழுதவேண்டும் என்னும் ஆசையிலே குறைவு இல்லை; அவன் ஆதரித்தான். கருவிகளிலும் குறைவு இல்லை; அமுதில் கோல் தோய்த்தான். அதற்கு மேலேதான் ஓடவில்லை. புற அழகினாலே மயங்கச் செய்து தன் ஆட்சியை நடத்தும் மதனன், அவயவத்தை எண்ணினானே யன்றி அரிய பண்புகளை எண்ணவில்லை. சீதையைக் காணவும் கருதவும் அவனுக்குத் தகுதி இல்லை.

இத்தகைய சீதை அழகே உருவாக அருங்குணமே உயிராக மிதிலையில் இருக்கிறாள். அவளுடைய வடிவ எழிலுக்கு இணையே இல்லை. மற்ற மகளிருக்கு ஒவ்வோர் அழகு இருக்கும். பிராட்டியினிடமோ எல்லா அழகுகளும் ஒருங்கே அமைந்திருக்கின்றன.

உழைகுலாம் நயனத் தார்மாட்டு
ஒன்றொன்றே விரும்பற் கொத்தது;
அழகெலாம் ஒருங்கே கண்டால்
யாவரே ஆற்ற வல்லார்! [2]

---

1. மிதிலைக்காட்சிப் படலம், 5.
2. கோலங்காண் படலம், 20.

[மானைப்போன்ற கண்ணையுடைய மகளிரிடம் ஒவ்வோர் அழகே விரும்புவதற்கு உரியதாக இருக்கும். எல்லா அழகையும் ஒருங்கே கண்டால் யார் அதைத் தாங்க வல்லவர்?]

கம்பன் இந்தப் பேரழகை வேறு ஓரிடத்திலும் பாராட்டுகிறான். எல்லா மகளிரிடமும் தனித் தனியே காணும் அழகை ஒருங்கே அவளிடம் காண்பது மாத்திரம் அன்று. அதற்கு மேலும் ஒன்று உண்டு. அவளைப் போன்று குணங்களிற் சிறந்தார் வேறு ஒருவரும் இல்லை. 'குணங்களாற் சிறந்த நம்பி' யாகிய இராமனுக்கு ஏற்ற குணச்சிறப்புடைய நங்கை அவள்.

பண்களால் கிளவி செய்து
பவளத்தால் அதர மாக்கிப்
பெண்களா ணர்க்குள் நல்ல
உறுப்பெலாம் பெருக்கி, நீட்ட
எண்களால் அளவா மானக்
குணம்தொகுத் தியற்றி ஞளைக்
கண்களால் அரக்கன் கண்டான். [1]

என்பது சீதையின் முழு உருவத்தையும் காட்டும் பாட்டு. அவள் புற எழில், பிற மகளிரிடம் தனித்தனியே காணும் நல்ல உறுப்புக்களெல்லாம் இணைந்து பிறந்த அழகுப் பிழம்பு. அவள் குணமோ மிகவும்பெருமையுடையது; எண்ணத்திற்கு அளவுபடாதது வடிவ எழிலும் பண்பெழிலும் ஒருங்கே உடைய அழகுருவம் சீதை. இந்த இரு திறமும் காண்பார் யாரோ அவரே சீதையை நன்றாக அறிந்தார் ஆவர்.

சூர்ப்பனகை சீதையைக் காண்கிருள். அவள் இராமனிடம் தனக்கு உண்டான ஆசையைச் சொல்லிக்கொண்

1. இசைகளால் மொழிகளை அமைத்து, நீட்ட எண்களால் அளவா - மிகவும் நீளமாக உள்ள எண்ணிக்கையால் அளவுபடாத. மானம் - பெருமை.

டிருந்தபோது அவர்கள் தங்கியிருந்த குடிலிலிருந்து சீதை வெளிவருகிறாள். அவளைக் கண்டவுடன் அவளுடைய பேரெழிலில் சொக்கிப் போகிறாள் அரக்கி. இராமனையும் சீதையையும் மாறி மாறிப் பார்க்கிறாள். "ஆணழகுக்கும் பெண்ணழகுக்கும் தலைவரம்பாகப் பிரமன் படைத்த அற்புதப் படைப்பு இவர்கள்" என்று வியக்கிறாள்.

பொருதிறத் தானை நோக்கிப்
    பூவையை நோக்கி நின்றாள்;
"கருதமற் றினிவே றில்லை;
    கமலத்துக் கடவுள் தானே
ஒருதிறத் துணர நோக்கி
    உருவினுக் குலக மூன்றின்
இருதிறத் தார்க்கும் செய்த
    வரம்பிவர் இருவர்" என்றாள். [1]

இராமனையும் சீதையையும் மாறி மாறிப் பார்த்து, வியந்து, அப்படியே நின்றுவிடுகிறாள். பிரமன் படைத்த தலைவரம்பு என்று தனக்குள்ளே சொல்லிக் கொள்கிறாள். எதற்கு வரம்பு? அவள் அவர்களின் ஒழுக்கத்தை எண்ணவில்லை; பண்பை நினைக்கவில்லை. புறவடிவாகிய உருவினைத் தான் நோக்கினாள். 'உருவினுக்கு உலக மூன்றின் இருதிறத் தார்க்கும் செய்த வரம்பு' என்றுதான் அவளுக்குத் தோன்றுகிறது. பாவம்! அவர்கள் குண உருவத்தை உணரும் பாக்கியம் அவளுக்கு இல்லை!

2

இராவணன் சீதையை நிலத்தொடும் பறித்துச் சென்று அசோகவனத்தில் வைத்துவிடுகிறான். இராமன்

---

1. சூர்ப்பனகைப் படலம், 61.

சீதையைப் பிரிந்து புலம்புகிறான். கிட்கிந்தைக்கு வந்து அநுமனைக் கண்டு, சுக்கிரீவனை நண்பனாக்கிக் கொண்டு வாலியை வதம் செய்கிறான். இனிச் சீதையைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் வருகிறது.

வானர மன்னனாகிய சுக்கிரீவன் தன் படைகளாகிய குரங்குகளைப் பல திசைக்கும் சென்று சீதையைத் தேடும்படி ஏவுகிறான். அநுமனையும் வேறு சிலரையும் தென் திசைக்குப் போகச் சொல்லுகிறான். அவன் அவ்வாறு ஏவின பிறகு இராமன் அநுமனைத் தனியே அழைத்துச் சீதையின் அங்க அடையாளங்களையும், அவளைச் சந்தித்தால் அவளுக்கு நினைப்பூட்டும் அடையாளங்களையும் கூறித் தன் கணையாழியையும் கொடுக்கிறான்.

இங்கே இராமன் அடிமுதல் முடியின்காறும் சீதையின் எழிலை வருணிக்கிறான். இராமனோடு இணைபிரியாது வாழ்ந்த காலத்தில் சீதை எழில் நிரம்பியவளாக இருந்தாள். காட்டுக்கு வந்ததனால் அவளுடைய வாழ்க்கையில் அதிக வேறுபாடில்லை. அயோத்தி வாழ்க்கையைவிட ஆரணிய வாழ்க்கை இராமனையும் சீதையையும் பின்னும் நெருங்கச் செய்தது. எனவே அவளுக்குக் கவலையும் குறையும் இல்லை. அவள் தன் முழு அழகின் பொலிவோடும் விளங்கினாள். அந்தப் பூரணப் பேரெழிற் கோலத்தில் சீதையைப் பார்த்தவன் இராமன். அந்த எழிலையே அநுமனுக்கு விரித்துச் சொல்கிறான்.

இராமன் தன் மனைவியின் உடல்நலங்கள் யாவற்றையும் வேறு ஓர் ஆண்மகனுக்கு இப்படி எடுத்துச் சொல்லலாமா என்ற ஐயம் சிலருக்கு எழலாம். அதற்கு இரண்டு வகையில் சமாதானம் உண்டு. ஒன்று அநுமனுடைய இயல்பு பற்றியது. மற்றொன்று இராமனுடைய

மனநிலையைச் சார்ந்தது. மருத்துவனுக்கு ஒன்றும் ஒளிக்கக் கூடாது என்பார்கள். அவ்வாறு, கெட்டுப்போன பொருளைத் தேடச் செல்லும் அநுமனுக்கு அடையாளம் முழுவதும் தெரியவேண்டும் என்று கூறப் புகுகிருன் இராமன். அவற்றைக் கேட்கிற அநுமன் இந்திரிய நிக்கிரகம் செய்த ஞானி.

ஆறும் ஐம்பொறி நின்னையும் [1]

என்று சீதாபிராட்டியே சொல்லும்படி பொறிகள் அடங்கிய தூயவன் அவன். ஆதலின் அவனை மட்டும் தனியே அழைத்து இராமன் சொல்கிருன்.

நீண்டவனும் மாருதியை நிறையருளால்
உறநோக்கி, "நீதி வல்லோய்,
காண்டியெனிற் குறிகேட்டி" எனவேறு
கொண்டிருந்து கழற லுற்ருன் [2]

என்பதில், "வேறு கொண்டிருந்து கழறலுற்ருன்" என்று இதனைத் தெளிவாகக் கம்பன் புலப்படுத்துகிருன். இது மாருதியின் பண்பு பற்றிய சமாதானம்.

இராமன் சீதையைப் பிரிந்த துயரத்தில் ஆழ்ந்திருக்கிருன். சீதையை நினைப்பூட்டும் எந்தப் பொருளைக் கண்டாலும் குமைந்து வாடிப் புலம்புகிருன். துயரில் ஆழ்ந்தவர்களுக்குத் தம் துயர்க்காரணத்தை யாரிடமேனும் சொல்லும் வாய்ப்புக் கிடைக்குமானல், கடல்மடை திறந்தாற்போல் அவ்வளவையும் கொட்டிவிடுவார்கள். அவ்வாறு சீதையைப்பற்றிச் சொல்லத் தொடங்கிய இராமன் முறுகிய துயர நிலையில் இது சொன்னுல் போதும் என்று எண்ணுமல் முழு அடையாளங்களையும் கொட்டிவிடுகிருன்.

---

1. சூடாமணிப்படலம், 19.
2. நாடவிட்ட. 32.

இராமன் கூறிய அடையாளங்களை அநுமன் கேட்கிருன். கெட்டுப்போனவரைத் தேடுபவர்களிடம் அவருடைய நிழற்படத்தை அடையாளம் காணக் கொடுப்பது போலத் தன் சொல்லாலே ஓர் ஓவியத்தை அநுமன் உள்ளத்தில் தீட்டிவிடுகிருன் இராகவன். அதனைத் தன் கருத்தில் வைத்துக்கொண்டு இலங்கை செல்கிருன் அநுமன்.

3

இலங்கையில் பல இடங்களிலும் அவன் தேடுகிருன். புகை புகா வாயிலெல்லாம் புகுந்து தேடுகிருன். சீதையைக் காணவில்லை. இராவணன் அரண்மனைக்கு வருகிருன். அந்தப்புரத்தில் மண்டோதரி படுத்திருக்கும் இடம் சென்று பார்க்கிருன். புறக்கண்ணைக் கொண்டு பார்க்கையில் அவள்தான் சீதையோ என்று ஒரு கணம் எண்ணிப் பதறிப் போகிருன், பின்பு சற்றே நிதானிக்கிருன். "கண்டு கண்ணெடு கருத்தொடு உசாவினன்." [1] 'இவள் மனித உருவுடையவள் அல்லள். கனவில் ஏதோ உளறுகிருள். சீதை இப்படி இருக்கமாட்டாள்' என்று தெளிகிருன். அவன் உள்ளத்தே எடுத்துச் சென்ற சீதையின் படத்திற்கும் மண்டோதரியின் உருவத்திற்கும் சில ஒப்புமைகள் இருந்தமையால்தான் அவன் முதலில் ஏமாந்து போனுன்.

"இலக்கணங்களும் சில உள." [2]

என்று அவன் எண்ணுவதாகக் கம்பன் சொல்கிருன்.

அநுமன் மீண்டும் தேடத் தொடங்கிக் கடைசியில் அசோகவனத்தை அடைகிருன். அங்கே சீதையைக் காண்கிருன். இராமன் கூறிய சீதையா அங்கே இருக்கிருள்?

1. ஊர்தேடு, 196.
2. ஊர்தேடு, 202.

பெண்மொழியின் முழுமையை இராமன் காட்டினுன்; அவளுடைய வளமிகுந்த அவயவ நலன்களை எடுத்துச் சொன்னுன். இங்கே, 'மென்மருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்தா'ளாக இருக்கிறுள் சீதை. இராமன் கொடுத்த படத்தில் சீதையின் அளகம், வனைபவர் இல்லாவிடினும் தன் அழகுக்கு ஓர் அழிவு காணுதது; மேகத்தின் குழவியைப் போலப் படிந்திருப்பது; மேகத்தைச் செதுக்கி ஒன்றுகக் கட்டித் தேனையும் அகில் முதலியவற்றின் புகையையும் ஊட்டிப் பேரிருட் பிழம்பிலே தோய்த்துப் படிப்படியான நெறியமையச் செய்து சுமையாகச் செய்ததுபோல ஒளிர்வது. அநுமன் காணும்போதோ அவள் கூந்தல் 'திரண்டு ஒரே சடையாகிய குழ'லாக இருக்கிறது.

இங்கே கம்பன் முன்பு சொன்ன ஒன்றை நினைக்கும் வண்ணம் ஒரு பாடலை அமைக்கிறுன். இராமன் மிதிலைமா நகர் புகும்போது சீதாபிராட்டி மதனுல் ஓவியத்தில் எழுதவொண்ணுதவளாக இருந்தாள். அப்பால் அவள் இராமனுடைய உள்ளத்தில் புகுந்தாள். இராவணனும் அவளைத் தன் நெஞ்சமாம் சிறையில் வைத்தான். இந்தச் சமயம் பார்த்து மன்மதன் அவள் உருவத்தை எழுதிவிட்டான். அன்று எதை வண்ணமாக்கி வைத்து எழுதக் கருதினுனே அதே அழுதத்தைக்கொண்டே எழுதிவிட்டான். அப்படி அவனுல் எழுத முடிந்ததற்கு இரண்டு காரணங்கள்; ஒன்று சீதை இப்போது முன்னினும் எளியளானுள். இவனும் அவள் அங்கத்தை மட்டும் எண்ணுமல் பண்புகளையும் எண்ணும் திறம் பெற்றுன். முன்பு மனத்துக்குக் கிளர்ச்சியை உண்டுபண்ணும் மதனுக இருந்து எழுதப் புகுந்தபோது அவனுல் முடியவில்லை. இப்போது தானே அங்கத்தை இழந்து அங்கத் தொடர்பின்றித் தூயவனுக, அனங்கனுக நின்று சீதையைக் கண்டான்; அழகிய உருவத்தை எழுதிவிட்டான். அவன் எழுதின

படம் எழுதின அழகோடு பார்க்க ஒருவருக்கும் கிடைக்க வில்லை.

அநுமன் சீதையைப் பார்த்தபோது அவள் உருவம் இன்னபடி இருந்தது என்பதைக் கூறுகையில் கம்பன் சொல்லும் உவமை கூர்ந்து அறிவதற்கு உரியது. முன்பு எழுத இயலாமல் திகைத்த மதனன் பின்பு தகுதியினால் உயர்ந்து அநங்கனாகிச் சீதையை ஓவியத்தில் எழுதிவிட்டான். அந்த அழகான ஓவியம் கவனக் குறைவினால் புகைமண்டிய ஓரிடத்தில் இருந்தது. ஓரேயடியாகப் புகை படிந்து அது மங்கிவிட்டது. கண்டவுடனே விளக்கமாகக் கண்ணைக் கவர்ந்து, இன்னாள் என உணரும் வண்ணம் இருந்த ஓவியம், கூர்ந்து கவனித்தாலன்றிப் புலப்படாதபடி மாசுபடிந்து ஒளியிழந்திருந்தது. 'அந்த ஓவியந்தானோ இது என்று எண்ணும்படி இருந்தாள் சீதை' என்கிறான் கம்பன்.

ஆவி யந்துகில் புனைவதொன்
றன்றிவேறு அறியாள்;
தூவி அன்னமென் புனலிடைத்
தோய்கிலா மெய்யாள்;
தேவு தெண்கடல் அமிழ்துகொண்டு
அனங்கவேள் செய்த
ஓவி யம்புகை உண்டதே
ஒக்கின்ற உருவாள். [1]

[ஆவி அம் துகில் - பாலாவியைப் போன்ற அழகிய மெல்லிய ஆடை. தூவி அன்னம் மென்புனல் - மெல்லிய சிறகுகளை உடைய அன்னங்கள் விளையாடும் மெல்லிய நீரில். தேவு - முகக்கும்.]

சீதையின் உடம்பு ஒரு காலைக்கு ஒரு கால் மெலிந்து கொண்டே வருகிறது. இதனைக் கவிஞன் நுட்பமாகப்

1. காட்சிப் 11.

புலப்படுத்துகிறான். அவள் அணிந்த மெல்லிய துகில் கணத்துக்குக் கணம் நெகிழும் உடல் மெலிவால் நெகிழ, அதனை இறுகக் கட்டிக்கொள்ளும் செயலையே எப்போதும் செய்துகொண்டிருக்கிறாளாம். நீராடாமல் மாசுண்ட மேனியோடு அமர்ந்திருக்கிறாள். அனங்கவேள் கடலிலே தோன்றிய அமுது கொண்டு செய்த ஓவியம் புகையுண்டாற் போன்ற உருவத்தை உடையவளாகத் தோன்றுகிறாளாம்.

முன்பு எழுதாமல் திகைத்தவன் மதனன்; இப்போது எழுதியவன் அனங்கவேள். முன்பு அவள் உருவைக் கையால் எழுத எண்ணினான்; இப்போது உள்ளத்தால் உன்னி முயன்று ஒரு படைப்பைச் செய்வது போலச் செய்தான். இரண்டுக்கும் வேறுபாடு நுட்பமாகத் தெரியும்படி பாடுகிறான் கவிஞன்.

இந்த மங்கிய உருவத்தைப் பார்க்கிறான் அநுமன். அவன் உள்ளத்தே மாட்டியுள்ள படம், வண்ணச் சிறப்புள்ள படம். இங்குள்ள படமோ புகையுண்ட படம். கண்ணினால் மேலெழுந்தபடியே பார்த்தால் அதற்கும் இதற்கும் ஒப்புமை இல்லை என்றுதான் தோன்றும். கூர்ந்து கவனித்தால், கருத்தோடு கவனித்தால்தான், ஒற்றுமை தெரியும். கண்ணளவிலே காண்பவனாக இருந்தால் மண்டோதரியையே சீதை என்று துணியவேண்டும்; சீதையை நிச்சயமாகச் சீதையல்ல வென்று புறக்கணிக்க வேண்டும்.

பேரறிவு படைத்த அநுமன் அப்படிச் செய்வானா? அங்கம் இளைத்த சீதையை அவன் கண்டாலும் அவள் உள்ளத்தைக் காணும் வழி தெரிந்தவன். கருத்துக்குச் சாளரமாகிய கண்ணைக் கண்டால் அடையாளம் புலனாகும் என்பதை உணர்ந்தவன். உடம்பு இளைத்தாலும் கண்

இளைக்காது. சீதையின் கண்கள் இன்னும் நெடியனவாகவே இருந்தன. ஆனால் அவள் உள்ளத்தில் நின்ற துயரை வெள்ளமாக வடித்துக் கொண்டிருந்தன. 'கடலளவு ஆழமும் அகலமும் உடைய கண்ணிலிருந்து பெருகிய நீர் நிரம்பிய தடாகத்தினிடையே அன்னம் போல இருந்தாள் சீதை.'

கடல்துணை நெடியதன் கண்ணின் நீர்ப்பெருந்
தடத்திடை இருந்ததோர் அன்னத் தன்மையாள். [1]

கண்ணின் அடையாளத்தைக் கொண்டு இவள்தான் சீதை என்பதைக் கண்டுகொண்டான். பின்னே இந்தச் செய்தியை இராகவனுக்குச் சொல்லும் போது,

"கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்" [2]

என்று உணர்த்துகிறான்

கண்ணைக் கொண்டு அடையாளம் கண்டு கொண்டவன், இராமன் தந்த படத்தோடு ஒப்பு நோக்குகிறான். அதே படம் இங்கே இல்லை. ஆனால் அதில் உள்ள அமைப்புக்கு மாறாகவும் இல்லை. அந்த வண்ணம் இல்லை; வடிவு இருக்கிறது. மெருகு இல்லை; வரைகள் உள்ளன. பூரிப்பு இல்லை; குறிப்புகள் இருக்கின்றன.

"எள்ளரும் உருவில்நல் இலக்க ணங்களும்
வள்ளல்தன் உரையொடு மாறு கொண்டில" [3]

என்று ஆறுதல் பெறுகிறான். "அடடா! அவன் சொன்னவை அப்படி அப்படியே இருக்கின்றனவே!" என்று வியந்துகொள்ள இடம் இல்லை; "அவன் சொன்ன இலக்கணங்களுக்கு மாறாக இல்லை" என்று எதிர்மறை வாய்பாட்டில் அவன் திருப்தி அடைகிறான்.

---

1. காட்சிப் படலம், 64.
2. திருவடி தொழுத. 58.
3. காட்சிப். 66.

'இராமன் கண்டதும் நமக்குச் சொன்னதுமான வள வெழில் உருவம் இங்கே இல்லை. இங்கே உள்ள எழிலை அவன் காணவில்லை. அவன் சொன்ன உருவமே இங்கே இல்லை. சீதையின் பண்புருவத்தைத்தான் இங்கே காண்கி றோம். இந்தப் பண்பின் தனி உருவத்தை அவன் கண்டிருந் தால் அவன் வேறு வகையில் வருணித்திருப்பான். அந்தப் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவனுக்குக் கிடைக்க வில்லை' என்று அவன் எண்ணமிடுகிறான்.

"பேணநோற் றதுமனைப்
பிறவி; பெண்மைபோல்
நாணம்நோற்று உயர்ந்தது
நங்கை தோன்றலால்;
மாணநோற்று ஈண்டிவள்
இருந்த வாறெலாம்
காணநோற் றிலன்அவன்
கமலக் கண்களால்." [1]

'குணஞ்சிறந்த இந்தப் பெருமாட்டி அவதாரம் செய்த லால் நல்ல இல்லில் பிறந்த குடிப் பெருமை எல்லோராலும் பாராட்டிப் போற்றுவதற்குரிய தவத்தைச் செய்திருக் கிறது. பெண் இயல்பும் தவஞ்செய்து உயர்ந்திருக்கிறது. அதுபோலவே நாணமும் உயர்ந்து விட்டது. தன் உடல் வளம் சுருங்கியும் மேலும் மேலும் பண்பினால் மாட்சிமை பெறத் தவம் புரிந்து இங்கே இப்பெருமாட்டி இருக்கும் வண்ணத்தையெல்லாம் அந்த இராமன் தன் கமலம் போன்ற கண்களால் காணத் தவஞ்செய்யவில்லை' என்று அநுமனுடைய உள்ளம் எண்ணிப் பார்க்கிறது.

அநுமன், சீதையிடம் தன்னை இன்னானென்று கூறி, இராமன் கூறியவற்றையும் சொல்கிறான். பின்பு அசோக

---

1. காட்சிப். 73.

வனத்தை அழித்து, அரக்கர் பலரைப் பொருது அழித்து, இலங்கையை எரியூட்டி இராமனிடம் வருகிறான்.

இராமனிடம் தான் சீதையைக் கண்ட செய்தியைச் சொல்கிறான், அப்பெருமானுக்கு இருந்த ஆர்வத்தை உணர்ந்தவன் ஆதலின் எடுத்தவுடன், "கண்டேன் சீதையை" என்கிறான். பின்பு விரிவாகச் சொல்கிறான்.

அப்போது, "நான் அங்கே சீதையைக் காணவில்லை" என்று சொல்லிக் காரணமும் சொல்கிறான். "நீ சொல்லோவியத்தால் குறித்த பெண் அங்கே இல்லை" என்பான் போல,

"விற்பெருந் தடந்தோள் வீர
வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டேன் அல்லேன்" [1]

என்கிறான். நல்ல வேளை! "கண்டனென் கற்பினுக்கு அணியை" என்று முதலில் சொல்லியபிறகே இப்படிச் சொல்வதனால் தீங்கு ஒன்றும் நேரவில்லை, இல்லையானால் இராமன் உணர்விழந்திருத்தல் கூடும். சொல்லின் செல்வனாகிய அநுமன் ஏதோ ஒரு குறிப்புடன்தான் இப்படிச் சொல்கிறான் என்று இராமன் தெரிந்து கொண்டான். "பின் என்ன கண்டாய்?" என்று அவன் கேளாவிட்டாலும் அவன் கண்கள் கேட்டிருக்க வேண்டும்.

அநுமன் தான் காணாததைச் சொன்னவன் பின்பு கண்டதைச் சொல்கிறான்.

---

1. சுந்தர. திருவடி தொழுத. 29.

"இற்பிறப்பு என்ப தொன்றும்
இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்." [1]

'நற்குடிப் பிறப்பும், பெரிய பொறுமையும், கற்பென்று புகழுடைய ஒன்றும் ஆகிய மூன்று குணங்களும் களிக் கூத்தாடிக் கொண்டிருப்பதைக் கண்டேன்' என்கிறுன்.

'புறக்கண்ணுல் காணும் காட்சியிஞல் சீதையை அடையாளம் கண்டுகொள்ள நீ கொடுத்தாயே, அந்தப் படம் அங்கே பயன்படவில்லை. அகக் கண்ணுல் அவளைப் பார்த்தேன். கண்ணெனும் பலகணி வழியே பார்த்தேன். உள்ளுறை உருவைக் கண்டேன். இற்பிறப்பு, பொறை, கற்பு என்ற மூன்றையும் கண்டேன்' என்பது போலச் சொல்கிறுன்.

புறக்கண்ணிலே கண்ட சீதையின் உருவம் மெருகழிந்து பொலிவிழந்து துயரமே கோலமாக இருந்தது. ஆனல் அகக்கண்ணிலே கண்ட சீதையின் பண்புகளோ முன்னையினும் பொலிவு பெற்று விளங்கின. இப்போது களிநடம் ஆடின. ஊன் உருக உருக, உள் ஒளி பெருகியது ஆகவே அவன் கண்டது குணியை அல்ல; குணத்தையே கண்டான். புற உறையை அன்று; உள் இருந்த மணியையே கண்டான்.

'எப்படிக் கண்டாய்?" என்ற கேள்விக்கு முன்பே "கண்களால் கண்டேன்" என்று சொல்லிவிட்டான். அந்தக் கண்களில் இராமனையே எதிர்நோக்கும் கற்பைக் கண்டான்; அப்படிக் கண்ணின் வழியே கருத்தைக் காணுகையில் அங்கும் இராமன் வீற்றிருப்பதைக் கண்டானும்.

1. சுந்தர. திருவடி தொழுத. 29.

"கண்ணிலும் உளைநீ; தையல்
கருத்திலும் உளைநீ; வாயின்
எண்ணிலும் உளைநீ" [1]

என்று அதனை இராமனிடம் கூறுகிறான்.

மதனன், வெறும் அவயவப் பிழம்பாகிய வடிவைக் கண்டு சீதையை எழுதமாட்டாமல் திகைத்தான், இராமன், வடிவையும் பண்பையும் கண்டு இன்புற்றான். அநுமனோ வடிவ வளத்தைக் காணாமல் பண்புருவப் பொலிவைக் கண்டு வணங்கினான். வடிவைக் காணவிட்டாலும் பண்புகளால் கண்டு கொள்ளலாம் என்பதை அப்படிக் காணும் அகக் கண்ணைப் பெற்ற அநுமன் உணர்த்திவிட்டான்,

---

1. சுந்தர. திருவடி தொழுத. 30.

கி. வா. ஜகந்நாதன் எழுதிய நூல்கள்

1. **தமிழ் நூல் அறிமுகம்** ரூ. 9-00

தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்ற நூல்களைப் பற்றிய சுருக்கமான விளக்கம். ஓரளவு அந்த நூல் களின் திட்பநுட்பங்களை அறியக் கண்ணாடி போல உதவுவது.

2. **விடையவன் விடைகள்—பகுதி-1** ரூ. 5-00
3. **விடையவன் விடைகள்—பகுதி-2** ரூ. 5-00

இலக்கிய இலக்கணங்கள், சமய நூல்கள் ஆகிய வற்றிலும் பழமொழி முதலியவற்றிலும் எழும் பல ஐயங்களுக்குத் தெளிவாகவும் சுருக்கமாகவும் அமைந்த விடைகள் அடங்கிய தொகுதிகள். இவற்றைப் படித்தால் பல துறைகளிலும் சிறந்த அறிவைப் பெறலாம்.

4. **கி. வா. ஜ. வின் சிலேடைகள்** ரூ. 5-00

சிலேடை மன்னராகிய கி. வா. ஜ. அவ்வப்போது சொன்ன சிலேடைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ள நூல், படிக்கப் படிக்க இன்பமும் நகைச் சுவையும் தருவது.

5. **கன்னித் தமிழ்** ரூ. 7-50

தமிழின் வரலாற்றைப் பற்றிய கட்டுரைகளும் இலக்கியச் சுவையை எடுத்துக்காட்டும் கட்டுரை களும் அடங்கியவை.

6. **வாழ்வரசி** ரூ. 2-50

இலக்கியங்களிலுள்ள கருத்துக்களைச் சுவைபட விரித்து விளக்கும் கட்டுரைகளின் தொகுதி. தமிழ் நாகரிகத்தைக் காட்டும் கட்டுரைகள் இவை.

7. **முல்லை மணம்** ரூ. 2-25

இலக்கியங்களில் நுட்பமாக அமைந்த பல அரிய கருத்துக்களைச் சுவைபடச் சொல்லும் கட்டுரைகள் அடங்கிய தொகுதி.

8. **பேசாத பேச்சு** ரூ. 1-50

காப்பியம், வாழ்க்கை, கலைகள், தத்துவம் ஆகிய வற்றில் பேசாத பேச்சுக்களாக உள்ள நிகழ்ச்சிகளை எடுத்து விளக்கும் கட்டுரைகளின் தொகுதி. பேசும்

பேச்சிலும் பேசாத பேச்சு எப்படிக் கருத்தைத் தெளிவிக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டும் கட்டுரைகள்.

9. திருமுருகாற்றுப்படை விளக்கம் ரூ. 15-00

இந்த நூலைப் படித்துவிட்டால் பிறகு திருமுருகாற்றுப்படையின் பொருளை எளிதில் தெரிந்துகொள்ளலாம். திருமுருகாற்றுப் படையில் வரும் சமயக் கருத்துகளையும் இலக்கிய மரபுகளையும் விரிவாக விளக்கியமைத்த நூல் இது.

10. தமிழ்க் காப்பியங்கள் ரூ. 7-50

தொல்காப்பியர் காலமுதல் காப்பியங்கள் எப்படித் தமிழில் தோன்றி வளர்ந்தன என்பதையும், காப்பிய இலக்கணங்கள் நாளடைவில் விரிந்து வளர்ந்ததையும் எடுத்துக் காட்டும் ஆராய்ச்சி நூல்.

11. திருக்குறள் விளக்கு ரூ. 0-75

திருக்குறளின் பெருமையை மேல் நாட்டு அறிஞர்கள் எவ்வாறு போற்றுகிறார்கள், திருக்குறளின் கவிச்சுவை, திருக்குறளில் வரும் அரிய காட்சிகள் இவற்றைக் கதை போலத் தொகுத்துக் காட்டும் நூல்.

12. சங்கநூற் காட்சிகள் ரூ. 30-00

எட்டுத்தொகை நூல்களிலிருந்து தேர்ந்தெடுத்த பாடல்களை மையமாகக் கொண்டு எழுதிய விளக்கக் கட்டுரைகள். கதை போலவும் நாடகம் போலவும் அமைந்த விளக்கங்கள். எட்டு நூல்களும் ஒரே தொகுதியாகக் கிடைக்கும்.

தனித்தனியாகவும் பெறலாம். விலை ரூ. 4

மணிவிளக்கு (நற்றிணை)
குறிஞ்சித் தேன் (குறுந்தொகை)
தாமரைப் பொய்கை (ஐங்குறு நூறு)
பிடியும் களிறும் (கலித்தொகை)
அறப்போர் (புறநானூறு)
இன்பமலை (அகநானூறு)
புதுவெள்ளம் (பதிற்றுப் பத்து)
தமிழ் வையை (பரிபாடல்)